உ

காரைநகர் சிவன் கோவில்

(ஈழத்துச் சிதம்பரம்)

# மஹா கும்பாபிஷேக மலர்



2
ரை
PR

உ
சிவமயம்

# காரைநகர் சிவன் கோவில்
## (ஈழத்துச் சிதம்பரம்)
# மஹா கும்பாபிஷேக மலர்
# 1998

*மஹா கும்பாபிஷேக தினம்:*

**வெகுதானிய வருடம் வைகாசித் திங்கள் 24ம் நாள்**
**(07-06-1998) ஞாயிற்றுக்கிழமை**

*மண்டலாபிஷேக தினம்:*

**வெகுதானிய வருடம் ஆடித்திங்கள் 05ம் நாள்**
**(21-07-1998) செவ்வாய்க்கிழமை**

*வெளியீடு:*

**காரைநகர் சிவன் கோவில் திருப்பணிச் சபை**

உ

சிவமயம்

# காரைநகர் சிவன் கோவில்

## (ஈழத்துச் சிதம்பரம்)

# மஹா கும்பாபிஷேக மலர் 1998

*மலர் ஆசிரியர்:*

**திரு. நவரத்தினம் பாக்கியராஜா அவர்கள்**

(இளைப்பாறிய ஆசிரியர் - கொழும்பு இந்துக் கல்லூரி)

*உதவி ஆசிரியர்கள்:*

**1. திரு. அ. நமசிவாயம்பிள்ளை அவர்கள்**

(ஆசிரியர், காரைநகர்)

**2. திரு. வே. குமாரசாமி அவர்கள்**

(கச்சேரி, யாழ்ப்பாணம்)

**3. கவிஞர். சி. பொன்னம்பலம் அவர்கள்**

(உபஅதிபர், காரைநகர்)

**4. திரு. வே. செல்வநாயகம் அவர்கள்**

(செயலாளர், திருப்பணிச் சபை)

*அச்சு*


காரைநகர் பாலா அச்சகம் - வத்தளை

உ
ஓம்
சிவசிவ



மண்ணுலக கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்தம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்





# பதிப்புரை



காரைநகர் சிவன்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்) சிவன் ஐயனார் இராஜகோபுர மகா கும்பாபிஷேகப் பெரும் சாந்தி விழாவைக் கண்குளிரக் கண்டு இன்புற்றிருக்கும் அடியவர்கள், தரிசனம் பெறமுடியாது நாட்டின் எல்லாப்புறங்களிலும் நின்று அன்போடு எம்பெருமானைத் தொழுது நிற்கும் அடியவர்கள் எல்லோரது கையிலும், உளம் பூரிக்கும் திருவருட் பிரசாதமாக திருவருட் சின்னமாக வெகுமானப் பொருள் ஒன்று வழங்கப்பட வேண்டுமென காரைநகர் சிவன் கோயில் திருப்பணிச்சபையினர் விரும்பினர். அதற்கமைய கும்பாபிஷேக மலர் ஒன்றை மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா அன்று மலர வைப்பதென முடிவு செய்தனர். திருப்பணிச் சபைச் செயலாளருக்கு உறுதுணையாக நின்று கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடந்தேற உதவியவன் என்றதனால் மலர் ஆசிரியர் என்ற பெரும் பொறுப்பை அடியேனிடம் ஒப்படைத்தனர். அடியேனுக்கு உதவியாக திரு. அ. நமசிவாயம்பிள்ளை (ஆசிரியர்) திரு. சி. பொன்னம்பலம் (உப அதிபர்) திரு. வே. குமாரசுவாமி (யாழ் செயலகம்) ஆகிய நண்பர்களும் திருப்பணிச் சபை செயலாளர் திரு வே. செல்வநாயகமும் மலர்த் துணை ஆசிரியர்களாக இருந்து உதவி செய்தனர்.

அடியேன் இம்மலரை உரிய நேரத்தில் மலர விட வேண்டும் என்ற ஆசையுடன் அயராது உழைத்தேன். அவ் ஆசை காலத்தின் கோலத்தால் நிறைவேறாது போய் விட்டது. நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக போக்குவரத்துச் சீர்குலைந்தது. காரைநகர் விலாசத்திற்கும், கொழும்பு விலாசத்திற்கும் கட்டுரைகள் ஆசி உரைகள் வந்து சேர்ந்தன. திருப்பணி வேலை சம்பந்தமாக காரைநகர் சென்ற செயலாளர் திரு. வே. செல்வநாயகம் ஐந்து மாதங்களாக கொழும்பிற்குத் திரும்பி வர முடியவில்லை. உரியநேரத்தில் அடியவர்கள் கைகளில் மலர் கிடைக்காததையிட்டு மனம் வருந்தி உங்களிடம் முதற்கண் மன்னிப்புக் கோருகிறேன்.

இம்மலர் ஒளிவிட அருளாசியுரை வழங்கியுதவிய ஆதீனமுதல்வர்கள், சிவாச்சாரியர்கள் மற்றும் கல்விமான்களுக்கும் நன்றி கூறுவதுடன் தம் இடர்களையும் நோக்காது தம்மை அர்ப்பணித்து நல்ல கருத்துக்களை உள்ளடக்கியதும் உயர்கல்வி பெறும் இந்து காலாச்சார மாணவர்களுக்கும் சைவப் பெரியார்களும் பயன்படுமாறு மான நல்ல கட்டுரைகளை எழுதி அனுப்பிய அன்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறக்கடமைப் பட்டுள்ளேன். மேலும் இதனை நல்ல முறையில் ஆக்கி எடுப்பதற்காகக் கட்டுரைகளைப் படித்து அவற்றில் உள்ள வழுக்களைச் செம்மை செய்வதிலும் அச்சுப்பிழைகளைத் திருத்தஞ் செய்வதிலும் உதவியாக நின்று அயராது உழைத்த உதவி ஆசிரியர்கள் திரு. அ. நமசிவாயம்பிள்ளை, திரு. சி. பொன்னம்பலம், திரு வே. குமாரசாமி திரு. வே. செல்வநாயகம் ஆகியோருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இப்பெரு வேலையைப் பிழையின்றியும் படங்களை வர்ணத்திலும், கறுப்பு வெள்ளையிலும் நல்லமுறையில் அச்சிட உதவிய பாலா அச்சக உரிமையளர் திரு. ச. பாலகிருஷ்ணனுக்கும் நன்றி கூறுகின்றேன். இன்னும் இம்மலரில் தேன் பருக இருக்கும் அன்பராம் அடியார்கள் அனைவரையும் நல்லுலகுக்காளாக்க வேண்டும் என சவுந்தாரம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானின் இணையடிகளை தொழுது நிற்கின்றேன்.

*சுபம்*

**ந. பாக்கியராஜா**
மலர் ஆசிரியர்



# முன்னுரை

இலங்கையில் உள்ள பழம் பெரும் ஆலயங்களுள் காரைநகர் திண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள சுந்தரேஸ்வரப் பெருமானின் ஆலயமும் ஒன்றாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய ஸ்தல சிறப்புகளைப் பெற்ற இவ்வாலயம் தென்னகத்தில் தலமகிமை பெற்று விளங்கும் சிதம்பரத்தில் நிகழும் கிரியை மரபுகளைப் பின்பற்றும் பாரம்பரியச் சிறப்புப் பெற்றது. இவ்வகையால் இத்தலத்திற்கு "ஈழத்துச் சிதம்பரம்" என்ற பெயரும் உரியதாயிற்று.

ஆதியிலே அரசமரத்திற்கு சமீபமாக ஆண்டி என்னும் பெரியாரால் அகழுந்து எடுக்கப்பட்ட பூரணை, புட்கலை சமேத ஐயனார் திருவுருவே முதன் முதலில் இக்கோவிலில் ஸ்தாபிக்கப்பட்டதாகும். அப்போது இக்கோவிலின் பெயர் ஆண்டிகேணி ஐயனார் கோவில், ஐயனாரும் சிவனும் அருகருகே கிழக்கு நோக்கி அமர்ந்திருந்து அருளாட்சி செய்வது வேறு எங்கும் காணாத இவ்வூருக்குரிய தனிச் சிறப்பாகும்.

இக்கோவில் வரலாற்றிலே பெரும்பாலான திருப்பணிகள் ஆதீனகர்த்தாக்களாகிய அம்பலவிமுருகர், சண்முகத்தார் சின்னத்தம்பியார், மாசிலாமணி என்போரினால் செய்யப்பட்டு வந்தன. இவர்களுக்குப் பின் கோவிலை கருங்கல்லினாற் அமைக்கும் நோக்குடன் அப்போதய ஆதீனகர்த்தாக்களாகிய ஆண்டிஐயா, முருகேசு ஆகியோரது அனுசரணையோடு இவ்வூர் சிவநேயர்கள் 15.04.1963ம் ஆண்டு காரைநகர் சிவன் கோவில் திருப்பணிச்சபையை அமைத்தனர். இவர்களது முயற்சியினால் சிவன் அம்பாள் கற்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஆகியன சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டன. இன்னும் விநாயகர், சுப்பிரமணியர், சண்டேஸ்வரர், நால்வர் கோவில்கள் புதிதாகக் கட்டப்பட்டதுடன் நடேசர் கோவிலும் திருத்தி அமைக்கப்பட்டது. மற்றும் திருத்த வேலைகளும் செய்யப்பட்டன.

திருவருட்கடாட்சத்தாலும் திருப்பணிச்சபையினரின் அயராத உழைப்பினாலும் அழகுற அமைந்த கோவிலில் ஜிர்ணோத்தாரண அஸ்டபந்தன ஐந்தாவது மகா கும்பாபிஷேகம் 10.07.1970 இல் நிறைவேறியது.

**திருப்பணிச் சபை:**

*"நீறிருக்கும் நெற்றியும்*
*ஆறிருக்கும் ஊரும்*
*கோபுரமிருக்கும் கோவிலும்"*

பேரளகானவை.

ஈழத்துச் சிதம்பரம் என்ற திண்ணபுரச் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரன் ஆலயம் ஸ்தூலலிங்கமாகிய இராஜ கோபுரத்தை தன்னகத்தே அடக்காமலிருந்தது ஒரு பெருங்குறையாகும். அக்குறையை நீக்குவதற்கு திருவருள் பாலித்து முன்னய திருப்பணிச்சபையினரால் 08.09.1965ம் ஆண்டு சிவன்கோபுரத்துக்கான அத்திவாரம் இடப்பட்டது. சிவன் கோபுரத்தோடு சேர்ந்து ஐயனாருக்கும் கோபுரம் அமைக்க வேண்டும் என்று பல அடியார்கள் வற்புறுத்தியமையினால் கோபுரவேலை தடைப்பட்டது. திருவருள் வழிகாட்ட ஐயனார் கோபுரத்திற்கு 07.02.1979ம் ஆண்டு இவ்வூர் வர்த்தகப் பெருமகனும் சிறந்த ஐயனார் பக்தருமாகிய திரு. கந்தையா பொன்னம்பலம் தமது உபயமாக அத்திவாரம் இட்டு நில மட்டம்வரை கட்டுவித்தார். ஆனால் கோபுர கட்டுமான வேலை சிலகருத்து வேறுபாடுகள் காரணமாக நடைபெறவில்லை.

யாம் எமது குலதெய்வமாகிய மருதடி வீரகத்தி விநாயகப்பெருமான் கோயிலை மற்றும் பல அன்பர்களோடு சேர்ந்து 13.06.1982ம் ஆண்டு ஜீர்ணோத்தாரண குடமுழுக்கு விழா கண்டுகளித்துக் கொண்டு இருந்தோம். அப்போது தோன்றிய திருவருளின் உந்துதலினால் 27.06.1982ம் ஆண்டு தற்போதைய புதிய காரைநகர் சிவன் கோவில் திருப்பணிச் சபை தெரிவு செய்யப்பட்டு 13.09.1982ம் திகதியில் ஐயனார் சிவன் கோபுரக் கட்டுமான வேலையை தாமதமின்றி ஆரம்பித்தோம்.

"கற்பனையான கோபுரங்கள்தான் அமைக்கப் போகிறார்களோ?
எங்ஙனம் கும்பாபிஷேகம் செய்விக்கப் போகிறார்கள்
இவற்றிற்கு பெருநிதி கிடைக்குமா?
எல்லோரும் ஏறிய குதிரையில் ஏறி இடறி விழுவார்களோ?
என்று அச்சம் சிலர் உள்ளத்தில் எழுந்தது

*"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்து*
*அதனை அவன் கண்விடல்* ..........(திருக்குறள்)

ஒரு சபையானது அதன் செயலாளரின் திறமையிலே தங்கி இருக்கின்றது. ஆண்டிகேணி ஐயனாரின் கிருபையால் ஐயப்ப பக்தர் வே. செல்வநாயகம் இந்தச் சபையில் இருந்தது நாம் செய்த பெரும் பாக்கியம். அவர் ஐயனார் மேல் அளவிலா அன்பு பூண்டு தொண்டு செய்பவர். ஆண்டுதோறும் ஐயப்பவிரத மனுஸ்டித்து இந்தியா சென்று சபரிமலை ஐயப்பனை தரிசிப்பவர். ஐயப்பன் பேரில் நம்பிக்கையோடு அவர் எத்தொழிலையும் தொடங்கினால் அது நிறைவேறுவதை அவரோடு இரட்டையாக இணைந்து சிவதொண்டு செய்யப்பாக்கியம் பெற்ற அடியேனது அனுபவம். திருவருள் வழிகாட்ட ஐயனாரின் திரிதள இராஜகோபுரமும் சிவனின் பஞ்சதள இராஜ கோபுரமும் ஒரேநேரத்தில் பூர்த்தியாகியது. மூலமூர்த்திகளும் - 1988ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு உட்கோவில்கள் வெளிக்கோவில்கள் புதுப்பிக்கப்பட்டன. 1991ம் ஆண்டு குடமுழுக்கிற்கு ஆயத்தம் செய்த பொழுது ஏற்பட்ட இடப்பெயர்வினால் யாவும் செயலற்றுத் தடைப்பட்டன. பெரும்பாலான மக்கள் வெளியூர்களுக்கு இடம் பெயர்ந்து சென்று வதிந்தனர். இப்படியாக ஏழு வருடங்கள் கழிந்த பின்னர் இப்போ மக்களில் மூன்றிலொரு பங்கினரே மீளக் குடியமர்ந்துள்ளனர். மீண்டும் (1998ம் ஆண்டு) உட்கோவில்கள்

வெளிக்கோவில்கள் திருத்த வேலைகள் செய்து வர்ணங்கள் பூசி அழகுறச் செய்து இப்பெருஞ் சாந்தி விழாவைக் காரைநகரில் என்றும் காணாத பக்த ஜனத்திரள் கண்டுகளிக்க பெருவிழாவாக நடாத்திய திருவருள் அற்புதத்தில் அற்புதமே!

யாம் திருப்பணி ஆரம்பித்த நாள் தொடக்கம் தேவையான நிதி மக்களிடமிருந்து நன்கொடையாக வந்து சேர்ந்தன. இவற்றிற்குரிய வரவு-செலவு கணக்கறிக்கை இலங்கையில் மிகப் பிரபலமான வி. மு. பேரம்பலம் பட்டயக்கணக்காளர் நிறுவனத்தால் அவ்வவ் நிதியாண்டு முடிவில் பரீட்சிக்கப்பட்ட பின்னர் திருப்பணிச் சபையினரால் இன்றுவரை கிரமமாக "நிதி அறிக்கை" என்ற பெயரில் சமர்பித்து வருகிறோம் என்பது யாவரும் அறிந்ததே.

இத்திருப்பணிக்கு செம்பொருளீந்த ஊரவர்களுக்கும் வெளிநாடுகளில் வதியும் இவ்வூரவர்களுக்கும் எமது சிரம் தாழ்ந்த வணக்கம். கருங்கல்லினாலான கோபுரக் கட்டுமான வேலைகளையும், செங்கல், சீமெந்தினாலான கட்டுமான வேலைகளையும், பொம்மை வேலைகளையும் சிறப்பாக நிறைவேற்றித் தந்த ஸ்தபதிகள் அராலி நாகமுத்து அவர் மகன் கோபாலரத்தினம், திருப்புல்லானை நாகலிங்கம், சந்திரன் ஆகியோருக்கும் என்றும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.


சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் குடமுழுக்கு செய்யக்கிடைத்ததும் எமது புண்ணியமும், பாக்கியமும் ஆகும். இப்பெரிய திருப்பணிக்கு ஒத்துழைப்பு நல்கிய ஆதீன கர்த்தாக்களாகிய அம்பலவிமுருகன், சுந்தரலிங்கம் ஆகிய இருவருக்கும் எமது நன்றி.

கும்பாபிஷேக நிறைவினையொட்டி திருப்பணிச்சபையினரால் வெளியிடப்படும் சிறப்புமலர் தலவரலாற்றுப் பெருமைகளையும், இவ்வூர் சிறப்புகளையும், சைவதத்துவங்களையும் எடுத்தியம்பும் நறுமலராக அருள்பாலிக்க வேண்டுமென கூத்தபிரானைப் பிரார்த்திக்கின்றேன்.


*"மழை வழங்குக மன்ன னோங்குக*
*பிழையில் பல்வள மெங்கும் பெருகுக*
*தழைக வஞ்செழு த்தோசை தரையெலாம்*
*பழைய வைதீக சைவம் பரக்கவே"*

**சு. முருகேசு**
தலைவர்


திருப்பணிச் சபை
காரைநகர் சிவன்கோவில்



மூலஸ்தானத்தில் சிவலிங்கம்



மூலஸ்தானத்தில் பூரணை புட்கலை சமேத ஐயனார்



# செயலாளர் அறிக்கை

ஈழத்திலே சிறப்பு மிகுந்த தலங்களில் ஒன்றான ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன்கோவில் திருப்பணிச் சபையின் பரிபாலனத்தை 1982-1998 ஆண்டு வரை திருவருள் வழிகாட்ட நிறைவேற்றியதுடன் ஐயனார் சிவன் இராஜகோபுரங்களை சிறப்புடன் அமைத்து மகா கும்பாபிஷேகத்துடன் இராஜகோபுரங்களின் கும்பாபிஷேகத் தினையும் திருவருள் துணையுடன் நிறைவேற்றிய பெருமகிழ்ச்சியுடன் சுருக்கமான அறிக்கையை தங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

பெருஞ்சிறப்புடன் திகழும் இக்கோவிலில் தூலலிங்கம் எனக் கூறப்படும் வாயிற்கோபுரம் இல்லாமல் இருந்தது பெருங் குறையாகும். கோபுரம் பல தத்துவ உண்மைகளை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாது கோவிலுக்கும் பேரழகைக் கொடுத்து புதுப்பொலிவை ஊட்டுவதாகும்.

"கோபுரதரிசனம் கோடி புண்ணியம்" என்றதன் பொருளை உணர்ந்த அன்றைய திருப்பணிச் சபையினர் 1965-09-08ம் திகதி சிவன் கோபுரத்திற்கான அத்திவாரத்தினை இட்டார்கள். சில கருத்து வேறுபாடுகள் காரணமாக வேலைகள் தொடர்ந்து நடைபெறவில்லை. பின்னர் இவ்வூர் வர்த்தகப் பிரமுகரும் ஐயப்ப பக்தருமான திரு. க. பொன்னம்பலம் அவர்கள் 7.2.1979ம் ஆண்டு முன்வந்து ஐயனார் கோபுரத்திற்கான அத்திவாரத்தினை இட்டு கட்டுமான வேலையை ஆரம்பித்தார். இவ்வேலையும் தொடர்ந்து நடைபெறவில்லை. இந்நிலையில் 1982.6.27ந் திகதி காரைநகர் மக்கள் ஒன்றிணைந்து புதிய திருப்பணிச் சபையை உருவாக்கினார்கள். புதிய திருப்பணிச் சபையானது ஐயனார் மீது நேர்த்தி வைத்து 1982.09.13ம் திகதி ஐயனார், சிவன் கோபுரக் கட்டுமானப் பணிகள் ஆரம்பித்து விரைவாக நடைபெற்றது.

காரைநகர் மக்களும் வர்த்தகர்களும் மற்றும் மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, சாம்பியா, சவூதி அரேபியா, கனடா, ஜேர்மனி, அமெரிக்கா, சுவிற்சலாந்து, பிரான்ஸ், அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் வதியும் இவ்வூரவர்களும் பெருநிதியினை வழங்கி இத்திருப்பணியினை ஊக்குவித்தனர். இராஜகோபுரங்களின் நிர்மாண வேலைகளுடன் 1988ம் ஆண்டு மூலமூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு உட்கோவில்கள், தூபிகள் புதுப்பிக்கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டு 1991ம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்திற்கான ஆயத்தங்களையும் மேற் கொண்டோம். அவ்வேளையில் தோன்றிய அசாதாரண நிலையினால் இவ்வூர் மக்களில் பெரும்பான்மையோர் 1991-04-25ம் திகதி வேறு ஊர்களுக்கு இடம் பெயர்ந்து சென்றனர். இந்த நிலையிலும் ஊரிலே தங்கியிருந்த கோவில் ஆதீனகர்த்தாக்களில் ஒருவரான அமரர் து. முருகேசு அவர்கள் மணற்காடு கும்பநாயகி அம்மன் கோவில் பிரதம குருக்களாக இருந்த சிவஸ்ரீ நா. ஞானசம்பந்தக் குருக்களினதும் சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்களினதும் உதவியுடன் கோவில் நித்திய பூசைகளை நடாத்திவித்து வந்தார். 1993,1994ம் ஆண்டுகளில் திருப்பணிச்


சபையினர் சார்பில் யாம் திருகோணமலையூடாக கப்பல் மார்க்கமாக இங்கு வந்து அந்நேரத்தில் தேவைப்பட்ட சில திருப்பணிகளை நிறைவேற்றி வைத்தோம்.

ஐந்து வருடங்கள் சென்ற பின்னர் 1996 சித்திரையில் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஊர்காவற்றுறையூடாக மீளக் குடியேறிக் கொண்டு .இருந்தனர். 1997.12.01ம் திகதி பொன்னாலை ஊடான போக்குவரவு அனுமதிக்கபட்டது. இந்நிலையில் இலங்கையின் பலபாகங்களிலும் தங்கியிருந்த திருப்பணிச் சபை செயற்குழு உறுப்பினர்களினதும் சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்களினதும், பல பெரியார்களினதும், ஆதீன கர்த்தாக்கங்களினதும் ஊரில் வாழ்ந்த மக்களினதும் ஆலோசனையின்படியும் கருத்துக்களின் படியும் 1998ம் ஆண்டு ஆனி மாதத்தில் கும்பாபிஷேகத்தை நடாத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான செயற்பாட்டில் செயலாளரான என்னுடன் ஆதீனகர்த்தாக்களின் உறவினரும் இளைப்பாறிய ஆசிரியருமான திரு. ந. பாக்கியராஜா அவர்கள் செய்த தொண்டு இங்கு குறிப்பிடத்தக்கது.


இதனைத் தொடர்ந்து யாம் உட்கோவில், தூபிகள், திருக்குளங்கள், சுற்றுப் பிரகாரம் திருத்தவேலைகள் மேற்கொண்டு வர்ண மை பூசி புதுப்பொலிவு ஊட்டியுள்ளோம். கும்பாபிஷேக நாள் நிர்ணயிக்கப்பட்டு 1998.6.7 ஞாயிற்றுக்கிழமை சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் பிரதம சிவாச்சாரியராக அவரது தலைமையில் தமிழகத்திலும் இலங்கையிலும் தலை சிறந்த அறுபதிற்கும் மேற்பட்ட அந்தண குருமார்களினால் ஆறாவது மகா கும்பாபிஷேகமும் ஐயனார் சிவன் இராஜ கோபுர கும்பாபிஷேகமும் ஒன்றாக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கண்டுகளிக்க வெகு சிறப்பாக திருவருளின் துணையுடன் நிறைவேறியது. கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து 43 நாட்கள் தினமும் அபிஷேகம் நடைபெற்றது. 45வது நாள் சங்காபிஷேகத்துடன் மண்டலாபிஷேகம் இனிது நிறைவேறியது. மண்டலாபிஷேகப் பூர்த்தியிலன்று இந்த கும்பாபிஷேக மலரை வெளியிட எண்ணியிருந்தும் நாட்டில் உள்ள நிலைமைகளினால் இது கை கூடவில்லை. காலங்கடந்தாவது கருத்துச் செறிவு மிக்க மலராக வெளியிடுவதினையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம்.

ஆதீனகர்த்தாக்களின் வேண்டுதலின் பிரகாரம் வடபகுதிக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஊடாக ரூபா11,12,247/50 சதத்தினை தேர்கள் புனரமைப்புக்காக 1998ம் ஆண்டில் வழங்கியது இங்கு குறிப்பிடத்தக்கது. நடப்பு ஆண்டிலும் மேலும் 30 இலட்சம் ரூபா எமது கோவில் புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். இந்த நிதிக்கான புனரமைப்பு வேலைகளையும் நிறைவேற்றும் பொறுப்பையும் ஆதீனகர்த்தாக்கள் திருப்பணிச் சபையிடமே ஒப்படைத்துள்ளார்கள். இந்த நிதிகள் கிடைப்பதற்கு தூண்டுகோலாக விளங்கியவர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் நாம் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

திருப்பணிவேலைகள் நடைபெற்ற காலத்தில் ஆதீன கர்த்தாக்களாகவிருந்த அமரர் அ. ஆண்டிஐயாவும் அமரர் து. முருகேசுவும் அளித்த ஆலோசனைகளையும் ஆதரவையும்



ஆலய முன்னாள் ஆதீனகர்த்தாக்கள்
அமரர் அ. ஆண்டிஐயா,
அமரர் து. முருகேசு



ஆலய ஆதீனகர்த்தாக்கள்
திரு. ஆ. அம்பலவிமுருகன்,
திரு. மு. சுந்தரலிங்கம்

யாம் என்றும் மறக்க முடியாது. இதே போன்று திருப்பணிகள் நடைபெற்ற காலத்தில் அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கிய கோவில் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக் குருக்கள் அவர்களையும் யாம் என்றும் மறக்க முடியாது.

அமரர்களான மு. பொன்னுத்துரை, க. சிற்றம்பலம், வி. மு. சண்முகம், மா. சண்முகநாதனும் சபையில் இருந்து இத் திருப்பணிக்கு தொண்டாற்றியமையும் நாம் நினைவு கூரத்தக்கதாகும்.

திருப்பணிவேலைகள் நடைபெறும் காலத்தில் நிதிசேர்த்து அனுப்புவதில் ஆர்வமாக முன்னின்று உழைத்த வெளியூர், உள்ளூர் அன்பர்கள், நிதியுதவிகளை வாரிவழங்கியவர்கள், மகாகும்பாபிஷேகத்தினை சிறப்புடன் நிறைவேற்றுவதற்கு பெரும் நிதியினைத் தந்தவர்கள், பெரும் நிதியினைச் சேர்த்து அனுப்பிய வெளியூர் உள்ளூர் அன்பர்கள், சென்னையில் இருந்து சிவாச்சாரியார் கொழும்பு வருவதற்கு போக்குவரத்து வசதியினை ஏற்படுத்திய அன்பர், பிரதம சிவாச்சாரியர் தலைமையில் ஏனைய சிவாச்சாரியர்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்று திரும்புவதற்கு வேண்டிய போக்குவரத்து வசதிகளையும் கும்பாபிஷேக பொருட்களை இலவசமாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் எடுத்துச் சென்று உதவிய தனியார் நிறுவனத்தினர், கும்பாபிஷேகத்திற்கு தேவையான குருக்கள் வேட்டி சால்வை உட்பட சகல துணிவகைகளை தந்துதவிய தனியார் நிறுவனத்தினர்,இராஜ கோபுர வேலைகளைச் செய்த சிற்பாச்சாரியார்கள், ஆசாரிமார்கள், மற்றும் உதவியாளர்கள், மகாகும்பாபிஷேகத்தினை செவ்வனே நிறைவேற்றிய சிவாச்சாரியர்கள், கும்பாபிஷேக காலத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்குதவியாக பொருளுதவி, வாகன உதவி புரிந்த யாழ். வர்த்தகப் பெருமக்கள், அன்னதானத்தை முன்னின்று நடாத்தியவர்கள், கும்பாபிஷேகத்தை சிறப்பிக்க உதவிய பக்தர்கள், பெரியோர்கள், கும்பாபிஷேகத்தை கண்டு களித்த பக்த கோடிகள் அனைவருக்கும் ஐயனார், சௌந்தாரம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் திருவருள் கடாச்சம் கிட்டுவதாக

மேலும் திருப்பணிச் சபையினரின் வேண்டுதலையேற்று இம்மலரின் ஆசிரியராக பணிபுரிந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு. ந. பாக்கியராசா அவர்கட்கும் மற்றும் துணை ஆசிரியர்கட்கும் மலரினை சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த காரைநகர் பாலா அச்சக உரிமையாளருக்கும் எமது நன்றியைக் கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

திருப்பணிச் சபையினரின் கடந்த கால செயற்பாடுகளில் ஏதேனும் தவறுகள் காணப்படின் அவற்றை மன்னித்து இத்திருப்பணியை புனிதமாக்கி ஏற்றுக் கொள்ளும்படி ஐயனார் சௌந்தராம்பிகை சுந்தரேஸ்வரப் பெருமானைப் பணிகின்றோம்.

வணக்கம்

**வே. செல்வநாயகம்**
செயலாளர்

**திருப்பணிச் சபை,**
**காரைநகர் சிவன் கோவில்**

# பொருளாளர் அறிக்கை



ஈழத்துச் சிதம்பரம் என எல்லோராலும் போற்றப்படும் காரைநகர் சிவன் கோவில் திருப்பணிச் சபையின் பொருளாளராக கடந்த பதினெட்டு வருடங்கள் தொண்டாற்றும் பெரும்பாக்கியத்தை எனக்களித்த காரைநகர் மக்களுக்கு எனது அன்பார்ந்த நன்றியை இவ்வறிக்கை மூலமாக தெரிவிக்கின்றேன்.

காரைநகர் சிவன் கோவில் ஐயனார் சிவன் இராஜகோபுரத் திருப்பணிக்கென நாம் நிதிகேட்ட பொழுது மனமுவந்து நிதியுதவி, பொருளுதவிகளை வாரிவழங்கிய அன்பர்களுக்கு அதற்குரிய வரவு செலவுக் கணக்கு விபரங்களை 1982 இல் இருந்து 1997 வரைக்கும் ஒவ்வொரு வருடமாக எண்பார்வை செய்யப்பட்டு ஏற்கனவே வழங்கியுள்ளோம். இதே போன்று 1998ல் மகா கும்பாபிஷேகத்திற்கும் பெருநிதியினை வாரிவழங்கியுள்ளீர்கள். இதற்கான வரவு செலவுக் கணக்கறிக்கை தற்சமயம் எண்பார்வை செய்யப்படுகிறது. எண்பார்வை செய்யப்பட்ட கணக்குவிபரங்கள் கூடிய விரைவில் வெளியிடப்படும் என்பதையும் மிக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

ஐயனார் சிவன் திருப்பணிக்கென 1982-6-27ம் திகதி முதல் 1997-12-31ம் திகதி வரை ரூபா 52,06,600/59 சதம் சேர்ந்தது. இதில் ரூபா 48,21,345/30 சதம் ஐயனார், சிவன் இராஜ கோபுரத் திருப்பணிக்கும் மற்றும் திருப்பணிகளுக்கும் செலவிடப்பட்டது. 1997.12.31ல் மீதி இருப்பு ரூபா 3,85,255/29 சதமாகும்.

1998ம் ஆண்டில் மகாகும்பாபிஷேக நிதி, வடபகுதிக்கான புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை வழங்கிய நிதி, மற்றும் பலவிதமான திருப்பணி நிதிகள் உட்பட மொத்தமாக ரூபா 66,30,306/46 சதம் சேர்ந்தது பெருமகிழ்ச்சிக்குரிய விடயமாகும். மிகக் குறுகிய காலத்தில் இப்பெருநிதி கிடைத்ததென்றால் இது மக்கள் எமது கோவில் மேல் வைத்துள்ள பக்தியும் அன்புமே காரணமாகும். மகா கும்பாபிஷேகத்திற்கு ரூபா 15,46,065/65 சதமும் அதனுடன் இணைந்த திருப்பணிகளுக்கு ரூபா 8,29,538/25 சதமும் மாணிக்கவாசகர் மடாலயம் முழு அளவில் புனரமைக்கப்பட்டது, 1998 ஆவணியில் இருந்து நித்திய பூசையுடன் தொடர்புடைய கருமங்களுக்கு உதவுவது போன்ற மற்றைய திருப்பணிகளுக்கு ரூபா 25,02,494/21 சதமும் செலவிடப்பட்ட பின்னர் மீதியாக 31.12.98 ல் ரூபா 21,37,463/64 சதம் சபையின் கணக்கில் உள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

இப்பாரிய பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு எனக்கு உதவியாக இருந்த சபையின் தலைவர் திரு. சு. முருகேசு, செயலாளர், திரு. வே. செல்வநாயகம், உபபொருளாளர் திரு. அ. சி. சிவலிங்கம் ஆகியோரின் சேவை அளப்பரியது. நாமெல்லாம் இடம்பெயர்ந்து காரைநகரை விட்டு வெளியேறிய பொழுது தமது உடமைகளையும் பொருட்படுத்தாது திருப்பணிச்சபையின் கணக்குப் புத்தகங்களையெல்லாம் கடலினூடாக எடுத்துவந்த சபையின் செயலாளர் திரு. வே. செல்வநாயகத்தின் கடமையுணர்வை நாம் என்னவென்று பாராட்டுவது.

இத்திருப்பணிகளுக்கு பெருநிதியினை வாரிவழங்கியவர்களுக்கும் திருப்பணிகளை சிறப்புடன் நிறைவேற்ற உதவிய சகலருக்கும் எல்லாம் வல்ல திருவருளின் அருட்பார்வை கிடைப்பதாக.

திருப்பணிச் சபை,<br>
காரைநகர் சிவன் கோவில்

**வே. சிவசுப்பிரமணியம்**<br>
பொருளாளர்

உ
சிவமயம்

# காரைநகர் சிவன் கோவில்

(ஈழத்துச் சிதம்பரம்)

## திருப்பணிச் சபை 1982 - 1999



திரு. சு. முருகேசு
தலைவர்



திரு. வே. செல்வநாயகம்
செயலாளர்



திரு. வே. சிவசுப்பிரமணியம்
பொருளாளர்



திரு. ச. பாலச்சந்திரன்
உப தலைவர்




திரு. நா. பொன்னையா
உப செயலாளர்



திரு. அ. சி. சிவலிங்கம்
உப பொருளாளர்



திரு. வி. கனகேந்திரம்
செயற்குழு உறுப்பினர்




திரு. மு. வேலுப்பிள்ளை
செயற்குழு உறுப்பினர்



திரு. வே. சிவகுருநாதன்
செயற்குழு உறுப்பினர்

உ
சிவமயம்

# திருப்பணிச் சபையில் இருந்து இராஜ கோபுரத் திருப்பணிக்கு அருந்தொண்டாற்றி சிவபதமடைந்த பெரியார்கள்



அமரர். மு. பொன்னுத்துரை
தலைவர்
(1982-1990)



அமரர். க. சிற்றம்பலம்
உப தலைவர்
(1982-1984)



அமரர் மா. சண்முகநாதன்
செயற்குழு உறுப்பினர்
(1982-1998)



அமரர். வி.மு. சண்முகம்
செயற்குழு உறுப்பினர்
(1984-1990)

# காரைநகர் சிவன் கோவில்
# திருப்பணிச் சபை
## நிர்வாக சபை 1982—1998

**தலைவர்**

| | |
|---|---|
| திரு. சு. முருகேசு | 1.12.90ல் இருந்து |
| அமரர் மு. பொன்னுத்துரை | 3.09.90 வரை |

**உபதலைவர்**

| | |
|---|---|
| திரு. ச. பாலச்சந்திரன் | 1.12.90ல் இருந்து |
| திரு. சு. முருகேசு | 11.04.84 - 1.12.90 வரை |
| அமரர் க. சிற்றம்பலம் | 14.02.84 வரை |

**செயலாளர்**

திரு. வே. செல்வநாயகம்

**உப செயலாளர்**

திரு. நா. பொன்னையா

**பொருளாளர்**

திரு. வே. சிவசுப்பிரமணியம்

**உப பொருளாளர்**

திரு. அ. சி. சிவலிங்கம்

**செயற்குழு உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| திரு. சு. முருகேசு | 11.4.84 வரை |
| திரு. ச. பாலச்சந்திரன் | 1.12.90 வரை |
| திரு. க. பொன்னம்பலம் | |
| திரு. வி. கனகேந்திரம் | |
| அமரர் மா. சண்முகநாதன் | 7.6.98 வரை (கும்பாபிஷேக தினத்தன்று இரவு சிவபதம் அடைந்தார்) |
| அமரர் வி. மு. சண்முகம் | 13.5.90 வரை |
| திரு. மு. வேலுப்பிள்ளை | 1.12.90ல் இருந்து |
| திரு. வே. சிவகுருநாதன் | 1.12.90ல் இருந்து |

**கௌரவ எண்பார்வையாளர்கள்**

| | |
|---|---|
| திரு. அ. நா. குழந்தைவேலு | |
| அமரர் மா. சிவசுப்பிரமணியம் | 16.2.92 வரை |

**பட்டயக் கணக்காளர்**

V. M. பேரம்பலம் & Co

திருப்பணிச் சபையின் அமைப்பு விதியின் பிரகாரம் அங்கத்தவர்களாக சேர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை - 61

உ

சரணம் ஐயப்பா

# காரைநகர் சிவன் கோவில்
# 1998 மகா கும்பாபிஷேக சிவாச்சாரியர் விபரம்

பிரதிஷ்டா சிரோமணி சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையில்
கலந்து கொண்ட ஏனைய குருமார்கள் .

1. சிவஸ்ரீ முத்துக் குருக்கள், தாம்பரம், இந்தியா
2. சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்கள், கோப்பாய்
3. சிவஸ்ரீ ப. முத்துக்குமார சாமிக் குருக்கள், நயினாதீவு
4. சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள், நீர்வேலி
5. சிவஸ்ரீ ச. வரதராஜேஸ்வரக் குருக்கள், மயிலணி
6. சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள், இணுவில்
7. சிவஸ்ரீ இ. இரத்தின சபாபதிக் குருக்கள், கொக்குவில்
8. சிவஸ்ரீ சி. நாராயணக் குருக்கள், யாழ்ப்பாணம்
9. சிவஸ்ரீ கு. சுந்தரேஸ்வரக் குருக்கள், கொக்குவில்
10. சிவஸ்ரீ வ. இராசேஸ்வரக் குருக்கள், சுழிபுரம்
11. சிவஸ்ரீ க. பாஸ்கரக் குருக்கள், வண்ணார்பண்ணை
12. சிவஸ்ரீ தே. ரவீந்திரக் குருக்கள், அல்வாய்
13. சிவஸ்ரீ சோமஸ்கந்த குருக்கள், மருதனாமடம்.
14. சிவஸ்ரீ இ. கேதீஸ்வரக் குருக்கள், ஆனைக்கோட்டை
15. சிவஸ்ரீ இ. சபேசன் குருக்கள், அல்வாய்
16. சிவஸ்ரீ தி. கிருஷ்ணமூர்த்தி குருக்கள், அல்வாய்.
17. சிவஸ்ரீ சி. வாசுதேவக் குருக்கள, வியாபாரி மூலை
18. சிவஸ்ரீ சி. செல்லத்துரை குருக்கள், நவாலி
19. சிவஸ்ரீ மகாலிங்கம குருக்கள், அளவெட்டி
20. சிவஸ்ரீ சிவஸ்ரீ துரைச்சாமிக் குருக்கள், நவாலி
21. சிவஸ்ரீ சா. சோமதேவக் குருக்கள், நீர்வேலி
22. சிவஸ்ரீ கு. சுவாமி நாதக் குருக்கள், நீர்வேலி
23. சிவஸ்ரீ செல்லப்பாக் குருக்கள், மாதகல்
24. சிவஸ்ரீ சி. பாலசண்முகக் குருக்கள், சீரணி
25. சிவஸ்ரீ நா. ஞானசம்பந்தக் குருக்கள், காரைநகர்
26. சிவஸ்ரீ வீ. ஈஸ்வரக்குருக்கள், காரைநகர்
27. சிவஸ்ரீ க. நித்தியானதக் குருக்கள், கொழும்பு
28. சிவஸ்ரீ வை. கனகசபாபதிக் குருக்கள், கொழும்பு
29. சிவஸ்ரீ சி. தியாகராஜக் குருக்கள், கொழும்பு
30. சிவஸ்ரீ பா. சண்முகேஸ்வரக் குருக்கள், கொழும்பு
31. சிவஸ்ரீ நா. மதியழகன் குருக்கள், பதுளை
32. சிவஸ்ரீ சி. கரகுகவரதக் குருக்கள், கொழும்பு

# பொருளடக்கம்


I. பதிப்புரை

II. முன்னுரை

III. செயலாளர் அறிக்கை

IV. பொருளாளர் அறிக்கை

V. திருப்பணிச் சபை உறுப்பினர் விபரம்

VI. மஹா கும்பாபிஷேக சிவாச்சாரியர்கள் விபரம்

VII. ஆசியுரைகள்

1) திண்ணபுரம் சிவன்கோவில் தலவரலாறு
அ. நமசிவாயம்பிள்ளை 1

2) திருக்கோயிற் பண்பாட்டில் கும்பாபிஷேகம் - சில சிந்தனைகள்
பேராசிரியர். கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் 12

3) ஈழத்துச் சிதம்பரத்து மகா கும்பாபிஷேகம்
செல்வி. இராணி வைத்தீசுவரக் குருக்கள் 17

4) கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
செல்வி. சித்திரா ஞானசம்பந்தக் குருக்கள் 21

5) காரைநகர் சிவன் கோவில் அமைப்பும் அங்குள்ள பழமை மரபுகளும்
வே. குமாரசாமி 23

6) அபயம் செய்யும் ஆண்டிகேணி ஐயன்
மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன் 26

7) மஹா கும்பாபிஷேகத்தில் பிம்ப சான்னித்யம்
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் 28

8) அன்றொருநாள் ஈழத்துச் சிதம்பரத்தில்
சிவஸ்ரீ. க.வைத்தீசுவரக் குருக்கள் 30

9) தருமந்தன் வழிசெல்கை கடன்
சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி 33

10) சிவானுபூதி வாசகமே திருவாசகம்
கலாநிதி பண்டிதர் மு. கந்தையா 36

11) திருவாசகம் தந்த மணிவாசகர்
க. பாலசுப்பிரமணியம் 44

12) சிவதொண்டு செய்வார்கள் 47

13) திருவாதிரையின் சிறப்பும் மகிமையும்
க. ஜெயந்தன் 48

14) வேண்டும் தமிழ் தழுவிய சைவம்
க. சிவராமலிங்கம் M.A. 51

15) கும்ப அலங்காரம்
பிரம்மஸ்ரீ. ச.சர்வேஸ்வரசர்மா 54

16) சுகம்பெருகி வாழி
அருட்கவி. சீ விநாசித்தம்பி 57

17) உருத்திராக்க மகிமை
பிரம்மஸ்ரீ.கு.சிவராஜசர்மா 58

18) ஊனுண்ணலும் உயிர்ப்பலியும் சைவ மக்கள் தவிர்க்க வேண்டியன
வித்துவான். க.சொக்கலிங்கம் M.A. 61

19) இறைவனை நினைவூட்டும் இராஜகோபுரம்
நா.பொன்னையா 68

20) அம்பலக் கூத்தனுக்கு அபிஷேகம் ஆறு
பண்டிதர். மு.சு.வேலாயுதபிள்ளை 71

21) அப்பர் கண்ட ஆடல் வல்லான்
சி.பொன்னம்பலம் 73

22) யாக அலங்காரம்
பிரம்மஸ்ரீ. ச. சர்வேஸ்வரசர்மா 77

23) மண்டல மஞ்சன அபிஷேகமும் சங்காபிஷேகமும்
சைவ சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ. கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் 80

24) முப்பொருள் உண்மை
அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் 85

25) மாரியம்மன்
சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானகிராமணியார் 91

26) பெருஞ்சாந்தி
மகா வித்துவான். சி. தண்டபாணி தேசிகர் 94

27) ஒப்பற்ற தர்மம் தானம்
சுவாமி அசலானந்தர் 97

28) காரைநகரில் உள்ள திருக்கோயில்கள் விபரம் 99

29) காரைநகர் சிவன்கோவில் நித்திய பூசை
விசேட அபிஷேக ஆராதனை விபரங்கள் 101

30) ஈழத்துச் சிதம்பரம் தொடர்பான நூல்கள் 103

31) காரைநகர்ப் பள்ளிக் கூடங்கள் 104

32) தமிழ் இலக்க எழுத்துக்கள் 105

33) கும்பாபிஷேகம் தொடக்கம் மண்டலாபிஷேகம் வரை உள்ள உபயகாரர் விபரம் 106

34) அறுபத்து நான்கு சிவமுகூர்த்தங்கள் 107
செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் B.A.



உ

ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நமக

ஸ்ரீ சங்கர பகவத் பாதா சார்ய பரம்பராகத

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

# ஜெகத்குரு
# ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

வழங்கிய

# ஆசியுரை

த்ரேதாயுகத்தில் ராஜ்ய பரிபாலனம் செய்த ஸ்ரீ ராமர் காலத்திலிருந்து பிரசித்தமானதும் திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற க்ஷேத்ரமான ஸ்ரீ லங்கா நாட்டில் வசிக்கும் தமிழ் மக்கள் அனைவரும் சேர்ந்து திருப்பணிச்சபை என்னும் பெயரில் ஓர் சபையை நிறுவி அதன் மூலம் பல லட்சக்கணக்கில் செலவு செய்து இராஜ கோபுரங்கள் நிர்மாணித்து சிவாலயத்தை புனர் நிர்மாணம் செய்து அந்த புனித தேவாலயத்தில் பரிவார தேவதைகளுடன் சிவபெருமானையும் ஐயனாரையும் பிரதிஷ்டை செய்து 1998ம் ஆண்டு யூன் 7ம் திகதி, மஹா கும்பாபிஷேகம் செய்ய இருப்பதையும் அதனை தொடர்ந்து ஒரு சிறப்பு மலர் வெளியிட இருப்பதையும் அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

மஹா திருபுர ஸீந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீஸ்வர ஸ்வாமி கிருபையால் நிர்விக்னமாய் மஹா கும்பாபிஷேகம் நடந்து மலரும் நறுமணத்துடன் அமைந்து மக்கள் அனைவரும் இந்த புனித மஹா கும்பாபிஷேக கைங்கரியத்தில் கலந்து கொண்டும் உடனிருந்தும் உதவிகளைச் செய்தும் ஸ்ரீ சிவபெருமான் அருளால் பரஸ்பரம் நட்புடன் வாழ்ந்து சகல மங்களங்களையும் அடைந்து பரமக்ஷேமமாக வாழ வேண்டும் என்று ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ் மிருதி :

ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்
இல. 1. சாலை தெரு,
காஞ்சிபுரம் 631502.



உ

சிவபெருமான் பேரருள்
மதுரை ஆதீன முதல்வர்

292ஆவது குருமகா சன்னிதானம்

# ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

வழங்கிய

# ஆசியுரை

ஈழத்துச் சிதம்பரமென அழைக்கப்பெறுகின்ற காரைநகர்ச் சிவன் கோயிலின் திருப்பணி முடிந்து மகா கும்பாபிஷேகம் என்று அழைக்கப்பெறுகின்ற பெருஞ் சாந்திப் பெருவிழா 07-06-98 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றிடத் திருவருள் பாலித்துள்ளது பற்றி அறிந்து மகிழ்கின்றோம். அவ்விழா மிகச் சிறப்புற நடந்தேறிடவும், அதில் கலந்து கொள்கின்ற அன்பர்களும், திருப்பணியில் பங்கேற்கும் பெருமக்களும் திருப்பணிக் குழுவினரும் எல்லா நலங்களோடும் வளங்களோடும் வாழ்ந்திடவும், பண்பாடுடன் மனிதத் தன்மையுடன் திகழ்ந்து மகிழ்வான நிம்மதியான வாழ்வை யாழ்ப்பாணம் இலங்கை வாழ் மக்கள் பெற்றிடவும் திருவருள் கூட்டுமாறு எமது நிரந்தரத் தாய் தந்தையாகிய சிவ பெருமானைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

எல்லோர்க்கும் ஆசீர்வாதம் !

சுவாமிகள்:

70, தெற்காவணி மூலவீதி,
மதுரை 625001



உ
சிவசிவ
கயிலை மா முனிவர்

திரு வளர் திரு காசிவாசி
## முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள்
வழங்கிய

# வாழ்த்துரை

கோயிலும் சுனையும் கடலுடன் அமைந்த கோணமாமலை அமர்ந்தாரே என்று ஆளுடைய பிள்ளையால் போற்றியுரைக்கப்பட்ட திருகோணமலை, நல்லூர், கண்டி, கதிர்காமம் முதலான புனிதப் பதிகங்களைத் தன்னகத்தே உடைய ஈழப் பதியில் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப் பெறும் காரைநகர்ச் சிவன் கோயிலில் ஐயனார், சிவன் இராஜகோபுரக் குடமுழுக்கு விழாவும்.

திருக் கோயிலின் குடமுழுக்கு விழாவும் 07.06.98 அன்று நிகழ்வதறிந்து மகிழ்ச்சி. குடமுழுக்கு விழா மலர் ஒன்று மலர்வதும் பொருத்திய தேயாகும்.

"செல்வன் கழலேந்தும் செல்வமே செல்வம்" என்னும் உறுதிப் பாட்டுடன் இறைநேயமும், அருளாளர் நூல் ஓதுதலும், ஓதுவித்தலும், சான்றோரைச் சேர்ந்தொழுகலும் ஆகிய அற்புதப் பண்புகளைக் கொண்ட ஈழத்து அன்பர் தம் முயற்சியில் கனியும் குடமுழுக்கு விழாச்சீரிதே நிகழவும், மலர் சமய மணமும், தமிழ் மணமும் கமழ்ந்து மலரவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

சுபம் !

சிவ சிவ

காசிதிருமடம்
திருப்பனந்தாள் 612504

உ
ஸ்ரீ காளியம்மன் துணை

சிவாச்சாரிய குலபூஷணம்
## சிவஸ்ரீ தி. ச. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார்
வழங்கிய

# ஆசியுரை

காரைநகர் சிவன்கோவில் ஈழத்துச் சிதம்பரம் ஸ்ரீ சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரா ஸ்வாமி தேவஸ்தான நூதன இராஜ கோபுர அஷ்டபந்தன சம்பு ரோஷண மகா கும்பாபிஷேகம் மிகச் சிறந்த முறையில் நடப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி. நமது நாயன்மார்கள் காட்டிய வழியில் 12 வருடங்களுக்கு ஒருமுறை சீரிய முறையில் திருப்பணிகள் செய்து பெருஞ்சாந்தி விழா சீரும் சிறப்புமாக சிவஸ்ரீ பெரியவர் பிரதிஷ்டாபூஷணம் நவாலி சாமி விஸ்வநாத குருக்கள் அவர்கள் தலைமையில் பல சிவாச்சாரியர்கள் கொண்டு சிறந்த முறையில் மகா கும்பாபிஷேகம் ஸ்ரீ காளிகாம்பாள் அருளோடு நடைபெற பிராத்திக்கின்றேன். ஸ்ரீ அம்பாள் ஆசீர்வாதம்.

தி. ஷ. சாம்பமூர்த்தி சிவாச்சாரியர்

**96, ராமசாமி வீதி**
சென்னை 01



உ

சிவமயம்

குருபாதம் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

வழங்கிய

# அருளாசிச் செய்தி

சிவனேயச் செல்வர்களே!

காரைநகரில் எழுந்தருளியிருக்கும் சௌந்தராம்பிகா சமேத சுந்தரேசப் பெருமானுக்கு மகா கும்பாபிஷேக நிகழ்ச்சி நடைபெறுகின்றது. அது மனநிறைவைத் தருகின்றது. காரைநகர் வாழ் சைவப் பெருமக்கள் செய்த பெரும் புண்ணியத்தின் பயனாக ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் ஐயனாரோடு கூடிய எல்லாம் வல்ல இறைவனுக்கு 12 ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் மகா கும்பாபிஷேகம் சைவ மக்களுக்கும், ஆலயத்துக்கும், ஊருக்கும் பெரும் புண்ணியத்தைத் தருவதாக அமைந்துள்ளது. இந்தியாவில் உள்ள சிதம்பரத்தை தரிசிக்க இயலாத அடியார்கள் இலங்கையில் அதுவும் யாழ்ப்பாணத்தில் ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகரில் எழுந்தருளியிருக்கும் சிதம்பரத்தை தரிசித்தால் இந்தியாவில் உள்ள சிதம்பரத்தை வழிப்பட்ட பெரும்பேறுகள் யாவும் கிடைக்கும். ஐந்து தொழிலுக்கும் தலைவனாக இருக்கின்ற இறைவன் ஆடற்கலையின் தத்துவமாக, ஆன்மாக்களின் இதயத்துடிப்பை எடுத்துக் காட்டும் வகையில் சிதம்பரத்தில் என்னேரமும் ஆடிக்கொண்டு இருப்பதனால் உலகத்தினுடைய தொழிற்பாடுகள் யாவும் இயற்கையாகவே நடந்து கொண்டிருக்கின்றது. அவ்வகையான இறைவனுக்கு நடைபெறும் மகா கும்பாபிஷேகம் எல்லா ஜீவராசிகளுக்கும் மன அமைதியையும் சந்தோஷத்தையும் தரக்கூடியதாகும். கும்பாபிஷேகத்தை நடாத்தி வைக்கும் சிவாச்சாரிய பெருமக்களுக்கும், ஆலய திருப்பணிச் சபையினருக்கும் இறைவனுடைய வாழ்த்துக்கள் கிடைக்கவும். மக்கள் யாபேருக்கும் இறைவனுடைய ஆசிகள் கிடைக்கவும் பிராத்திக்கின்றோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

நல்லூர்
இலங்கை

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய ஸ்வாமிகள்

உ

இராமகிருஷ்ணமிஷன் இலங்கைக் கிளைத் தலைவர்

# சுவாமி ஆத்மகனாநந்தா அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

சிவனேயச் செல்வர்களே!

ஈழத்துச் சிதம்பரம் என்று சிறப்புடன் அழைக்கப்படும் காரைநகர் சிவன்கோவில் மகா கும்பாபிஷேக விழா எதிர்வரும் 07.06.98 ஞாயிற்றுக்கிழமையன்று மிகவும் கோலாகலமாக நடைபெற இருப்பதையறிந்து மகிழ்ச்சியடைகிறோம்

பிரச்சினைகள் நிறைந்த இக்கால கட்டத்திலும் இவ்விழா நடைபெறுவது சைவமக்களின் சமய ஈடுபாட்டையும் இறை பக்தியையும் வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

இம் மகா கும்பாபிஷேக விழா மண்டலாபிஷேக பூர்த்தி விழா இனிதே நிறைவேறி ஸ்ரீ சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமானது திருவருள் அனைத்து பக்தகோடிகளுக்கும் அருள் மழையெனப் பொழியப் பிராத்திக்கின்றேன்.

இக் கும்பாபிஷேக விழாவிற்காக பாடுபட்டு உழைக்கும் அனைத்து அன்பர்களுக்கும் இறைவனது திருவருள் நிறைவதாக.

**40, இராமகிருஷ்ண வீதி,**
கொழும்பு - 6

சுவாமி ஆத்மகனாநந்தா



உ
சிவமயம்

காரைநகர் சிவன்கோவில் (ஈழத்துச் சிதம்பரம்)
ஸ்ரீ சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரர் பெருமான்
ஸ்ரீ ஆனந்த நடராஜ மூர்த்தி ஐயனார் ஆலய
மஹா கும்பாபிஷேக பிரதம சிவாச்சாரியர்

## பிரதிஷ்டா சிரோமணி

## சாமி விஸ்வநாதக் குருக்கள்

வழங்கிய

# ஆசிச் செய்தி

இலங்காபுரியின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தில் சைவம் தழைத்து ஓங்க பல சமய அறிஞர்கள் அறம் வளர்த்த மக்கள் செறிந்து விளங்கும் இடம் காரைநகர். மேற்படி இடத்தில் சமுத்திரக் கரையை அண்டிய பகுதியில் ஈழத்து சிதம்பர ஆலயம் சிறப்புடன் அமைந்து விளங்குகின்றது. இவ்வாலயத்தை சைவ மரபு தவறாத ஆசார சீலராகவும் புராஸீகராகவும் விளங்கிய ஆ. அம்பலவிமுருகன், மு. சுந்தரலிங்கம் இருவரும் அறங்காத்த அடியார்களாக பரிபாலனம் செய்து வருகிறார்கள்.

ஆலயத்திற்கு மெருகூட்டுவது சான்நித்தியத்தை உண்டு பண்ணும் கடமை சிவாச்சாரியர்களாலே நடத்தப்படும் பூஜை கிரியைகள் தான் முதற் காரணம். எனவே, மதிப்புக்குரிய வேதாகம விற்பன்னர் கணபதீஸ்வரக் குருக்கள் மகன் மங்களேஸ்வரக் குருக்களின் உண்மை நிலையான ஆராதனைகளால் சிறப்புற்ற ஆலயம் எனலாம். எனவே இவ்வாலயம் 1988ம் ஆண்டு ஆவணி மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு சிவன் ஐயனாருக்கு ராஜகோபுரம் அமைக்கப்பட்டு திருத்த வேலைகள் நடத்திக் கொண்டே வந்தது. மகாகும்பாபிஷேகத்தை 1991ம் ஆண்டில் செய்யமுன் வந்த போதும் தேச கஷ்டங்கள், அரசியல் கெடுபிடிகள், வன்செயலால் அங்கு வாழ்ந்த மக்கள் தெறிகெட்டு பல இடம் போக நேர்ந்தது. ஏதோ தற்போது இறைவன் கருணை

கொண்டு தர்மகர்த்தா, திருப்பணிச் சபையினர், சைவமக்களின் அயராத உழைப்பினாலும் மன வேதனையாலும், பாதிக்கப்பட்ட நிலையை இறைவன் கருணைபாலித்து மகாகும்பாபிஷேகப் பெரும் சாந்தி விழா வைகாசி மாதம் 24ம் நாள் (7-6-98) நன்நாளில் நடைபெற்றதும், இதன் நிகழ்ச்சிகள் சைவப் பெரியார்கள் அறிஞர்களின் சிறப்பு நிறைந்த கட்டுரைகளுடன் கும்பாபிஷேக மலரைச் சிறப்புடன் வெளியிட இருப்பது மிகவும் மேன்மையான போற்றுதற்குரிய பணியாகும் மேற்படி மலர் சிறப்பாகவும், மக்கள் இதயங்களில் மனைகளில் வாடாத நிறைவு பெறவும், ஆஸ்தான பிரதமகுரு அவர்களுடைய ஆசியை முற்கொண்டு எனது அன்பான பிரார்த்தனையையும் ஆசிச் செய்தியையும் சமர்ப்பிக்கின்றேன்.

*வாழ்க வையகம் சைவம் வளர*
*ஆலயத் திருப்பணிகள் சிறப்புற வேண்டும்*

விசேஷமாக இவ்வாலயத்திற்கு திண்ணபுர அந்தாதி ஈழத்துச் சிதம்பர புராணம் என்னும் அரிய நூல்கள் இருப்பதும் பெருமைக்கும் போற்றுதற்கும் உரிய செயலாகும். திருப்பணிச் சபையினரின் தொண்டுகள் வளம் பெற வாழ்த்துகின்றேன்.

**சுபம்**

*லோகா சமஸ்தா சுகினோப்வந்து*

*சுவாமி விஸ்வநாதக் குருக்கள்.*





ஆலய முன்னாள் பிரதம சிவாச்சாரியார்

*சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக் குருக்கள்*



மக்கள் இடம் பெயர்ந்த
காலத்திலிருந்து
கும்பாபிஷேகம் வரை
கோவிலின் பிரதம சிவாச்சாரியராக
பணியாற்றிய
சிவஸ்ரீ. நா. ஞானசம்பந்தக் குருக்கள்



கோவிலின் தற்போதைய
பிரதம சிவாச்சாரியார்
சிவஸ்ரீ வி. ஈஸ்வரக் குருக்கள்

உ
சிவ சிவ

காரைநகர்ச் சிவன் கோவில்
ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான பிரதம சிவாச் சாரியர்

## சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக் குருக்கள்

வழங்கிய

# ஆசியுரை

ஈழத்துச் சிதம்பரமெனப் போற்றப்படும் இக்கோயிலில் ஐயனார் சிவன் இராஜ கோபுரங்கள் அமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நிறைவேறியதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இப்புனித திருப்பணியில் ஈடுபட்ட திருப்பணிச் சபையினருக்கும், ஆதின கர்த்தாக்களுக்கும், அடியார்களுக்கும் கூத்த பிரான் திருவடிகளை பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

தமிழக இலங்கைப் பெரியார்களின் கட்டுரைகளையும் கவிதைகளையும் தாங்கி வரும் கும்பாபிடேக சிறப்புமலர் ஈழத்துச் சிதம்பர மகத்துவத்தை எடுத்தியம்பும் பெருநூலாக மலர எனது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஈழத்துச் சிதம்பரம்
காரைநகர்.

க. மங்களேஸ்வரக் குருக்கள்

உ
சிவமயம்

காரைநகர்ச் மணற்காடு
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதம சிவாச் சாரியார்கள்
தற்பொழுது காரைநகர் சிவன்கோவிலிலும் கிரியைகளை நடாத்தி வருபவருமான

# சிவஸ்ரீ நா. ஞானசம்பந்த சிவாச்சாரியார்

வழங்கிய

# ஆசியுரை

"இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க"

எப்போ என அனைவரும் ஏக்கத்துடன் எதிர்பார்த்திருந்த காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் என்று பெருமையுடன் அழைக்கப்படும் சிவன் ஆலயத்தினதும் ஆண்டிகேணி ஐயன் ஆலயத்தினதும் மஹா கும்பாபிஷேகம் இறைவன் திருவருளின் துணைகொண்டு வெகு சிறப்பாக 07-06-1998 அன்று நடைபெற்றது. சென்ற 1988ம் ஆண்டு சிவன் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு இருந்தும் சூழ்நிலை இடம் தரவில்லையாகையால் மஹா கும்பாபிஷேகம் செய்ய முடியவில்லை . எனினும் கடந்த ஆறு வருடங்களாக ஆண்டிகேணி ஐயனுக்கும் ஈழத்துச் சிவனுக்கும் கிரியைகள் செய்யும்பணி எனக்கு இறை அருளினால் கிடைத்தது. இது எனக்கு பெரும் பேறாக அமைந்தது. இதற்கு எனக்கு மிகவும் உதவியாக அமரர் முருகேசப்பா அவர்கள் உறுதியுடன் செயற்பட்டார்கள். இவர் மஹா கும்பாபிஷேகம் செய்யும் பொழுது இல்லையே என்று வருந்த வேண்டி இருந்தது. எனினும் அவரது ஆசியும் திரு. ஆண்டிஐயாவின் ஆசியும் மற்றும் பிரதிஷ்டா சிரோமணி பிரதம சிவாச்சாரியராக வந்து கிரியைகள் ஆற்றிய சிவஸ்ரீ சாமி விஸ்வநாத சிவாச்சாரியரினதும் ஆசியும் சென்னை தாம்பரத்திலிருந்து வருகைதந்த ஸ்ரீ முத்துக்குருக்களின் ஆசீர்வாதமும் ஈழத்துச் சிதம்பர

ஆதீன குருவாக இருந்த சிவஸ்ரீ கணபதீஸ்வர மங்களேஸ்வரக் குருக்கள் அவர்களின் ஆசியும் கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேற உதவின. மேலும் ஏனைய பிரதம குருமார்களின் சிறப்பான பங்களிப்பும் இங்கு குறிப்பிட வேண்டிய தொன்றாகும். தொடர்ந்து கும்பாபிஷேகத்திற்கு மிக உதவிபுரிந்த தற்போதைய ஆதீனகர்த்தாக்களாகிய திரு. ஆ. அம்பலவிமுருகன், திரு. மு. சுந்தரலிங்கம் ஆகியோருக்கும். திருப்பணிச் சபையினர் சார்பாக சிறப்பாக கடமையாற்றிய செயலாளர் திரு. வே. செல்வநாயகம் அவர்களுக்கும் பக்தகோடிகளுக்கும் இறை அருள் பெற எனது ஆசிகள் மேலும் கும்பாபிஷேக வைபவத்தை அடுத்து கும்பாபிஷேக சிறப்பு மலர் ஒன்று ஈழத்துச் சிதம்பர தில்லைக் கூத்தனின் திருவருளால் மலர விருப்பதை அறிந்து மனமகிழ்கின்றேன். மலரானது ஈழத்திருநாட்டிலும், ஏனைய இந்துமத உலகிலும் இறைவனது சிறப்பினை மணம்பரப்ப பரம்பொருள் அருள்பாலிக்க வேண்டும் என்று எனது உளமார்ந்த ஆசிகளை தெரிவிக்கின்றேன். யாக அலங்கார அமைப்பாளரும் எனது ஆப்த நண்பருமாகிய பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர சர்மாவுக்கும் உதவியாளர்களுக்கும் என்றென்றும் எனது ஆசியை வெளிப்படுத்துகிறேன்.

*சர்வே ஜனா: சுகினோ பவந்து !*
*ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!*

*சிவஸ்ரீ நா. ஞானசம்பந்தக்குருக்கள்.*

மணற்காடு
காரைநகர்.

உ
சிவமயம்

லண்டன் ஸ்ரீ முருகன் கோவில் பிரதம சிவாச்சாரியர்கள்
ஆகம பிரவின் சிவகாம வித்துவான்

# கயிலை இராமநாகநாத சிவம் குருக்கள்

வழங்கிய

# ஆசிச் செய்தி

இவ்வுலக உற்பத்திக்கும் இயக்கத்திற்கும் ஆதாரமான அம்பலவாணனின் ஆனந்தக் கூத்து அரிதிலும் அரிதானது. கோயில் என்றாலே அது சிதம்பரம் என்பார் பெரியோர். தமிழகத்து ஆகாயத் தலமான தில்லையைப் போல ஈழத்துச் சிதம்பரமான காரைநகர் திருத்தலத்தைப் போற்றாத பக்தர்களே கிடையாது.

புராண வரலாற்றுப் புகழ் வாய்ந்த இத்திருத்தலம் திருப்பணி நடைபெற்று மஹா கும்பாபிஷேகம் நிகழ இருப்பது அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறோம். திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிவாகம முறைப்படி நடைபெற்று சிறப்புறவும், ஆலயத்தில் நித்ய நைமித்திக காம்யபடி நடைபெற்று சிறப்புறவும். ஆலயத்தில் நித்ய நைமித்திக் காம்ய பூஜைகள் தொடர்ந்து நடைபெற்று வரவும் அடியார்கள் அனைவரும் துன்பம் நீங்கி இன்பம் பெறவும், தேசத்தில் அமைதியும் சமாதானமும் பொருளாதாரமும் கல்வி மேன்மை பெறவும் வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானை வணங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

லண்டன்

இராமநாகநாத சிவம் குருக்கள்

உ

அளவெட்டி நாகேஸ்வரம்
ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான முதல்வர்

# அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்

வழங்கிய

# ஆசிச் செய்தி

## சிவநீதி விளங்க வந்தருளுவாய்

எண்ணரிய மண்டலத் தொகையெலாம் ஐந்தொழில்
இயற்றிடும் நடராஜனே.
ஈழத்துச் சிதம்பரம் எனமிளிரும் காரைநகர்.
எழில்மிக்க திண்ணபுரத்தில்
கண்ணருள்செய் ஐயனொடு பண்ணொழுகு பவளவாய்க்
கன்னிசௌந் தராம்பிகைத்தாய்
கருதுபங் குறநின்ற கற்பகத் தேவனே
கதிரவனும் வலம் வந்திடும்
வண்ணமுயர் பொற்கலச வான் கோபுரங்களின்
மகா கும்பாபிஷேக சாந்தி
வளம் பொங்கி நிறைவேற முன்னின்று காக்குகென
மலரடி பணிந்து நின்றோம்
விண்ணவரும் மண்ணவரும் மெய்யுருகி விழிபெருகி
வேண்ட முழுதந் தரு வைநீ
விடையேறி ஓங்குகோ புரமேறிச் சிவநீதி
விளங்கவந் தருளுவாயே

நாகேஸ்வரம்
அளவெட்டி.

அருட்கவி சீ. வினாசித்தம்பி

உ
சிவமயம்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர்

# உயர்திரு. சி. தில்லை நடராஜா அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

திருப்பணிகள் சிறக்கப்படும்

வடக்கு மாகாணத்தில் காரைநகரில் கோவில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான் ஈழத்து மக்கள் எல்லோருக்கும் நல்லருள் புரிவதனாலும், தமிழகத்துச் சிதம்பரத்தை நினைவூட்டுவதாலும் ஈழத்துச் சிதம்பரம் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்று எல்லாவற்றிலும் சிறந்ததொரு சிவத்தலமாக திகழ்கின்றது.

சிறப்புக்கள் பல பொருந்திய சிவன் கோவிலில் மகா கும்பாபிஷேகம் எல்லோரும் வியக்கும் வண்ணமும், மகிழும் வண்ணமும், பூர்த்தியாகியுள்ளது என்பதை அறியும் பொழுது இறையருளை எண்ணி மெய்சிலிர்க்க இறைவனை மீண்டும் மீண்டும் பிரார்த்திக்கத் தூண்டுகின்றது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறுவதாகவும், மண்டல பூர்த்தி விழாவும், சங்காபிஷேகமும் 21-07-98 நடைபெற இருப்பதையறிந்து பெரும் மகிழ்ச்சியுடன் ஆதீனகர்த்தாக்களும் திருப்பணிச் சபையினரும் மேற்கொள்ளும் முயற்சிகள் யாவும் வெற்றிகரமாக பூர்த்தியாக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**இந்துசமய கலாசார திணைக்களம்**
98ஈ வோட் பிளேஸ்,
கொழும்பு - 7.

*சி. தில்லை நடராஜா*

உ
சிவமயம்

காரைநகர் சிவன் கோவில் (ஈழத்துச் சிதம்பரம்)

# ஆதீன கர்த்தாக்களின்

# ஆசிச் செய்தி

"காத லாகிக் கசிந்து கண் ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே"

பரம்பரை பரம்பரையாக எமது வம்சத்தினரால் பேணிப் பரிபாலிக்கப்பட்டு வரும் இக்கோவிலை எமது தந்தைமார் சிவபதம் அடைந்த பின்னர் பரிபாலனம் செய்யும் பெரும் பொறுப்பு எம்மீது ஆண்டவனால் சுமத்தப்பட்டது. இறைவனின் ஆசியுடனும் ஊரவர்களின் ஒத்துழைப்புடனும் யாம் இப்பொறுப்பினை இயன்றவரை சிறப்பாக செய்து வருகின்றோம். 1982ம் ஆண்டு ஆவணி மாதம் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு இராஜ கோபுரங்கள் அமைக்கும் பணி முற்றுப் பெறும் நிலையில் 1988ம் ஆண்டு கோயில் பாலஸ் தாபனம் செய்யப்பட்டு உட்கோயில் திருத்த வேலைகள் நடைபெற்று 1991ம் ஆண்டு குடமுழுக்கிற்கு ஆயத்தங்கள் நடைபெற்றபோது தோன்றிய யுத்த சூழலினால் அம்முயற்சி கைவிடப்பட்டது.

பின்னர் மக்கள் மீளக்குடியேற்றத்துடனும், பொன்னாலையூடான போக்கு வரவும் ஆரம்பிக்க உட்கோயில் திருத்த வேலைகள், வர்ணம் பூசும் வேலைகள் துரித கதியில் நடைபெற்றது. தற்சமயம்

கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே தரைவழித் தொடர்பு அல்லது கப்பல்வழிப் பயணத்தொடர்போ இல்லாத போதும் விமான மார்க்கமாக கும்பாபிஷேகத்திற்கு தேவையான பொருட்களையும், தமிழகத்திலும் கொழும்பிலும் இருந்து பெருந்தொகையான அந்தண குருமார்களையும் இங்கு கொண்டு வந்து கும்பாபிஷேகத்தை பெருஞ்சிறப்பாக நிறைவேற்றிய திருப்பணிச் சபை அன்பர்களுக்கும் மற்றும் பக்தர்களுக்கும், ஊரவர்களுக்கும் எல்லா நலன்களும் பெற்றுத் திகழ திருவருள்பாலிக்குமாறு ஐயனாரையும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானையும் பிராத்திக்கின்றோம்..

"கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூனுக்குச்
செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வோனுக்
கிம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானை கொண்டன்றே "

இம் மஹா கும்பாபிஷேக விழாவை ஒட்டி வெளிவர இருக்கும் சிறப்புமலர் காரைநகர் சிவன் கோவில் வரலாற்று நூலாகவும் ஆண்டவனின் மகத்துவத்தை எடுத்து இயம்பும் திருநூலாகவும் வெளிவர இருப்பது எமக்கெல்லாம் பேரானந்தத்தைத் தருகின்றது. இம்மலர் சிறப்பாக அமைவதற்கு எமது ஆசியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*

காரைநகர் சிவன் கோவில்
காரைநகர்


ஆ. அம்பலவிமுருகன்
மு. சுந்தரலிங்கம்
ஆதீன கர்த்தாக்கள்.




கோவில் தல விருட்சமாம்
வன்னி மரத்தின் கீழ் புதிதாக
நிர்மாணிக்கப்பட்ட
வினைதீர்க்கும்
விநாயகப் பெருமான்



கோவில் முன்பக்கத்தில் அமைந்துள்ள சந்தான கோபாலர்



இரண்டாம் வீதி அரசடி வைரவர் கோவிலும் தலவிருட்சமும்



மூன்றாம் வீதியில் உள்ள தினகரன்பிட்டி வைரவர் கோவில்

ஓம்
"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு"

# காரைநகர்
# திண்ணபுரம் சிவன் கோவில் தலவரலாறு

**திரு. அ. நமசிவாயம்பிள்ளை அவர்கள்**
ஆசிரியர் - காரைநகர்

இலங்கைத்திருநாட்டின் வடக்கே சிரசுபோன்று இருப்பது யாழ்ப்பாணக் குடாநாடு. இதற்கு மேற்திசையில் ஏழு பெருந்தீவுகள் அமைந்துள்ளன. மற்றைய தீவுகளை விட யாழ்நகருக்கு அண்மையில் இருப்பதுதான் காரைதீவு. இது நாற்புறமும் கடலினால் சூழப்பட்ட ஒரு தீவு ஆகும். ஆதியில் இந்தியாவின் காரைக்கால் என்ற ஊரில் இருந்து குடியேறியவர்களை கொண்டமையால் காரைதீவு என்றும் அல்லாமலும் இவ்வூரில் அப்போது ஏராளம் காரைச்செடிகள் நின்றமையால் அப்பெயர் ஏற்பட்டது என்றும் பெயருக்குரிய காரணம் இரண்டு கூறப்படுகின்றது. காரைதீவு வடக்கு, மேற்கு திசைகளில் ஆழமான பாக்கு நீரிணைக்கடலாலும் கிழக்கு, தெற்கு திசைகளில் ஆழமற்ற வற்றும் தன்மையுள்ள பரவைக்கடலாலும் சூழப்பட்டுள்ளது.

இவ்வூரோடு இலங்கையில் புத்தளத்தில் ஒரு காரைதீவும், கிழக்கே மட்டக்களப்பில் ஒரு காரைதீவும் ஆக மூன்று காரைதீவுகளும் சேர்ந்து அரசினரின் தபால் தந்தி போக்குவரவிற்கு பெரிய தொல்லைகளையும் தாமதங்களையும் ஏற்படுத்திக்கொண்டு இருந்தன. ஆங்கிலேயரின் ஆட்சியில் 1869ம் ஆண்டில் அப்போது அரசாங்க அதிபராய் இருந்த துனவைந்துரையால் பொன்னாலை கடலுக்கூடாக கற்தெருவும், ஒன்பது பாலங்களும் அமைத்து காரைதீவினைக் குடாநாட்டுடன் இணைத்தனர். இவ்விணைப்புத் தெருவினது நீளம் சுமார் 3 கிலோ மீற்றர் ஆகும். இத்தரைத் தொடர்பினை அடுத்து சேர் பொன் இராமநாதனின் விதைந்துரைப்புடன் அரசினர் காரைதீவினை 1923ம் ஆண்டு தொடக்கம் காரைநகர் என்று பெயர் மாற்றிக் கொண்டனர்.

இங்கே வலந்தலை, கோவளம், தங்கோடை, கருங்காலி, பலுகாடு, களபூமி என்று ஆறு பெருங்குறிச்சிகள் உள்ளன. காரைநகர் ஏழு கிலோ மீற்றர் நீளமும் 41/2 கிலோ மீற்றர் அகலமும் உடையது. மேற்கே உள்ள கோவளக் கடற்கரையில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட ஒரு கலங்கரை விளக்கமும் தெற்கே இயற்கையாக அமைந்த கப்பற்துறைமுகமும் உள்ளன. நகரின் வடக்கு பக்கமாக இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது திண்ணக்களி என்னும் திண்ணபுரம் சிவன் கோவில். இக்கோவிலுக்கு கிழக்கு, தெற்கு திசைகளில் பசும்புல் தரைகளும் மேற்கு வடக்கு திக்குகளில் தென்னஞ்சோலைகளும் அதனை அடுத்தாற் போல கசூரினா பீச் என்று அழைக்கப்படும் சுவாமி தீர்த்தம் ஆடும் தீர்த்தக்கரைக் கடலும், வடகிழக்கே தூர்வாசகிரி (தும்பில்) கடல்முனையும் உள்ளது.

**ஐயனார் கோவில் வரலாறு :**

இற்றைக்கு சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தை தமிழ் அரசர்கள் ஆட்சி செய்த காலத்தில் காவரிப்பூம் பட்டணத்தில் இருந்து வந்த இராமசேது மகாராசாவின் மகனாகிய குளக்கோட்டு மகாராசா யாழ்ப்பாணத்தை அரசாளத் தொடங்கினார். தமிழ்நாட்டு அரசர்கள் ஐயனாரையே தமது குலகாப்புத் தெய்வமாக வழிபடுபவர்கள். தாங்கள் அரசாளும் நகரங்களிலும் ஐயனாருக்கு பெரிய கோவில்கள் கட்டுவித்து அவரது பூரண அனுக் கிரகத்துடன் செங்கோல் செலுத்தி அரசாண்டு வந்தார்கள். இதற்கமைய குளக்கோட்டு மகாராசா காரைதீவிற்கு வந்து துறைமுகத்துக்கு மேற்பக்கமாக உள்ள இராசாவின் தோட்டத்தில் தங்கி இருந்து வியாவிலிலே சோழர் காலத்து சிற்ப அம்சங்களுடன் கூடிய ஏழு நிலைமாட இராஜ கோபுரத்துடன் அமைந்த ஒரு பெரும் ஐயனார் கோவிலை கட்டுவித்தார். இக்காலத்தில் காவரிப்பூம் பட்டணத்திற்கும் காரைநகர் துறைமுகத்திற்கும் இடையே கப்பற்போக்கு வரவும் பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதியும் பெரிய வாணிபமும் நடைபெற்றுக் கொண்டு இருந்தன. காவரிப்பூம் பட்டணம் காரைதீவிற்கு சமீபமாக நேர் வடக்கே 40 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கின்றது. காவரிப்பூம் பட்டணத்தில் இருந்து முத்துமாணிக்கம் செட்டியார் காரைத்தீவில் வந்து குடியேறி பெரிய சரக்கு கப்பல்களை வைத்து பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்து கொண்டு இருந்தார். குளக்கோட்டு மகாராசாவின் ஆணையின்படி முத்து மாணிக்கம் செட்டியார் காவரிப்பூம் பட்டணத்தில் இருந்து ஐயனாரையும் ஏனைய திருவுருவங்களையும் வியாவிலுக்கு கொண்டு வந்தார். பிரதிஷ்டை செய்வதற்காக உத்தரகோசமங்கையில் இருந்து அழைத்து வரப்பட்ட மங்களேஸ்வரக் குருக்களையும் சுந்தரேஸ்வரக் குருக்களையும் குளக்கோட்டு மன்னன் அழைத்து தேங்காய் உடைத்து முகூர்த்தத்தை எடுக்குமாறு கூற பல்லி சொல்லியது. தடையான சகுனம் என்பதை உணர்ந்த குருக்கள்மார் கும்பாபிஷேகத்தைப் பிற் போட்டனர். இரண்டு மாதம் கழிந்த பின்னர் முகூர்த்தம் வைப்பதற்கு தேங்காய் உடைத்தபோது தேங்காய் கவிழ்ந்து போயிற்று. இதனைக் கண்ணுற்ற மகாராசா கோவில் அமைக்கப்பட்டு நீண்டகாலமாக கும்பாபிஷேகம் நிறைவேறாமல் இருப்பதுதான் இத்தடைக்கு உரிய காரணம் என்று எண்ணியவராய் வேறு ஒரு தேங்காயை உடைப்பித்து கும்பாபிஷேகத்தை (1518ம் ஆண்டு) சிறப்பாக நிறைவேற்றி தொடர்ந்து நித்திய பூசைகளை நடத்தும் பொறுப்புக்களை அவ்விரு குருக்கள்மார்களிடம் ஒப்படைத்து அதற்கு வேண்டியனவற்றையும் ஏற்பாடு செய்தார். இக்காலத்திலே தான் நயினாதீவு நாகபூசணி அம்மாள் கோபுர உச்சியில் வைக்கும் தீபஒளி வியாவில் ஐயனார் கோவிலுச்சிக்கும், வியாவில் ஐயனார் கோபுர உச்சியில் வைக்கும் தீபஒளி பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்கும் வரதராஜப் பெருமாள் கோபுர உச்சியில் வைக்கும் தீபஒளி மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கும் தெரிந்ததாக செவிவழிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

**போர்த்துக்கேயர் காலம் :**

கி.பி. 1545ம் ஆண்டளவில் போர்த்துக்கேயர் இலங்கையின் கரைப்பகுதிகளை கைப்பற்றி ஆட்சிசெய்தனர். அவர்கள் சைவக்கோவில்களை இடித்து சைவர் வழிபாடு செய்வதனைத் தடுத்து கிறிஸ்தவ சமயத்தை வளர்த்தனர். வியாவில் ஐயனாரின் தெய்வீக மகிமையால் இக்கோவிலை இடிக்க முடியவில்லை. காரைநகரில் பெரிய அம்மை

நோய் இச்சமயத்தில் பரவிக் கொண்டு இருந்தது. மக்கள் பலர் மாண்டு கொண்டு இருந்தனர். இக்கொடிய நோயின் தாக்கத்தை உணர்ந்த முத்து தாண்டவ முதலியார் என்னும் ஒருவர் மணற்காட்டில் முத்துமாரி அம்மன் கோவிலைக் கட்டுவித்து வியாவில் ஐயனார் கோவில் பூசகர் சூரியநாராயணக் குருக்களை அழைத்து கும்பாபிஷேகம் செய்விக்க அம்மை நோயும் குறைந்துவிட்டது.

**ஒல்லாந்தர் காலம் :**

1658ம் ஆண்டில் ஒல்லாந்தர் இத்தேசத்தின் ஆட்சியைக் கைப்பற்றினார். அவர்களும் சைவ கோவில்களை இடித்தும் அங்கு பூஜைகள் நடைபெறாமல் தடைகளும் ஏற்படுத்தினர். இவற்றைப் பொறுக்க முடியாது அப்போது ஐயனார் கோவில் பூஜை செய்த கனகசபாபதிக் குருக்கள் ஐயனார் கோவிலில் இருந்து விக்கிரங்களை எடுத்துச் சென்று நிலவறையில் வைத்து பூஜை செய்தார்.

இக்காலத்திலே ஒல்லாந்தர் வியாவில் ஐயனார் கோவிலையும் கோபுரத்தையும் அத்தோடு பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோபுரத்தையும் இடித்து அதன் கற்களைக் கொண்டு போய் ஊர்காவற்துறைக் கடலில் கில்மன் பாதுகாப்புக் கோட்டையைக் கட்டுவித்தனர்.

இரகசியமாக நிலவறையில் குருக்கள் பூஜை செய்வதை அறிந்த ஒல்லாந்தர் அங்கு சென்று விக்கிரங்களை எடுத்து கிணறு ஒன்றில் போட்டுவிட்டு தேரையும் வாகனங்களையும் கடலிலே தள்ளி பெறுமதிமிக்க சுவாமியின் அணிகலன்களை தமது வசமாக்கிக் கொண்டனர். *அடியார் ஒருவர் கிணற்றினுள் போடப்பட்ட ஐயனார் உருவினை எடுத்து வடக்கு நோக்கிச் சென்று திண்ணைக்களிக்கு சமீபமாக உள்ள அரசமரத்தடியில் புதைத்து வைத்து விட்டுச் சென்றுள்ளார்.

**ஐயனார் ஸ்தாபிதம் :**

ஒல்லாந்தர் ஆட்சி வீழ்ச்சியுற்று ஆங்கிலேயர் ஆட்சி மலர்ந்திருந்த காலத்திலே இராமநாதபுரம் சேதுக்கரையைக் காவல் செய்த மறக்குடி மரபினரான ஆண்டி என்னும் பெரியார் இலங்கைக்கு வந்து பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு இறுதியில் காரைதீவில் உள்ள வியாவில் ஐயனாரிடம் வந்தார். அங்கு ஒல்லாந்தரால் கோவில் அழிக்கப்பட்டதைப் பார்த்து மனம் வருந்தினார். இங்கு உள்ள தாமோதர ஐயருடன் தங்கி இருக்கும் போது ஐயனார் கனவில் தோன்றி "அப்பனே அஞ்சாதீர் நீயோநான் நானே நீ" யாம் ஊருக்கு வடக்கே தூர்வாகிரிக்கு சமீபமாக திண்ணக்களி மேட்டில் நிற்கும் அரசமரத்தின் கீழ் இருக்கின்றோம். வந்து தரிசிப்பீராக" என்று அருள் செய்தார். ஆண்டியார் ஐயனாரின் திருவருட் குறிப்பை வியந்து உவகைகொண்டு திண்ணக்களிக்கு விரைந்து சென்று அங்கு அரசமரத்தைக் கண்டு பிடித்து அதன் சுற்றாடல் எங்கும் தேடினார். காணமுடியவில்லை. இறைவன் வாக்கு பிழைக்காது என்று எண்ணியவராய்

---

*ஐயனாரை சதாவாகனன் என்றும் கூறுவர். (சாதம்-குதிரை) இதிலிருந்தே சாத்தான் என்ற பெயர் உருவாயிற்றென்று வரலாற்றுப் பேராசிரியர் கூறுகின்றார். ஐயனார் பொதுவாக விவசாய சமூகத்தவரது வழிபாட்டுத் தெய்வமாக அமைந்து கிராமத்தின் தென்மேற்கு மூலையில் அல்லது வடகிழக்கு மூலையிலமர்ந்து கிராமத்தினைக் காப்புச் செய்வார். தெய்வீகதன்மையுள்ள அடியவர் ஒருவர் இதனையுணர்ந்து நிருதியிலமைந்த வியாவிலிருந்து ஈசானியபத்திலுள்ள திண்ணைக்களிக்கு ஐயனார் திருவுருவினை எடுத்துச் சென்று புதைத்திருக்கிறார். இவ்வடியவரைபற்றி மேலதிக விபரங்களைப் பெற முடியவில்லை.
ஐயனாரை வேட்டுவத் தெய்வமாகவும் ஈழத்துப் பழங்குடி மக்கள் போற்றியதாக ஊகிக்கப்படுகின்றது.

கனாப் பலன் கைகூடும் வரை அங்கேயே அமர திருவுளங் கொண்டார். அரசமரத்தடியில் தன்னுடன் கொண்டுவந்த சூலத்தை நட்டு அதில் வைரவரை இருத்தி ஆத்மார்த்த பூஜை செய்து வழிபட்டார். ஆண்டியார் வந்த திண்ணைக்களி என்னும் இடம் 400 பரப்பு விஸ்தீரணம் உடையது. இது களபூமி விளானை என்னும் குறிச்சியைச் சேர்ந்த மானா முதலியார் வமிசத்து அம்பலவி முருகர் என்னும் பெரியாருக்கு முது சொத்தானது. ஐயனாரின் வேண்டுகோளின்படி ஆண்டியார் ஒருவர் திண்ணக்களிக்கு வந்த செய்தியை அறிந்த அம்பலவி முருகரும் அவ்வூரவரும் பத்தி பரவசம் அடைந்து அங்கு வந்து ஆண்டியாரைக் கண்டு வணங்கினர். ஆண்டியாரின் வழிபாட்டில் பங்கு பற்றிய அவர்கள் வைரவர் சூலம் நட்ட இடத்தைச் சுற்றி ஒரு குடில் அமைத்துக் கொடுத்தனர். அன்று தொடக்கம் அம்பலவி முருகர் ஆண்டியாருடன் பெருநட்பு கொண்டு வழிபாட்டிற்கு தேவையான சகல உதவிகளையும் செய்து வரலாயினர்.

ஆண்டியார் திருவுருவைத்தேடி காணாதவராய் மனம் நொந்து கொண்டு இருந்தார். ஒரு நாள் அரசமரத்துக்கு தென்கிழக்கு பக்கமாக நிலத்தினுள் ஒளித்தீபம் ஒன்றை ஆண்டியார் கண்டார். உடனே ஆண்டியார் அவ்விடத்திற்குச்சென்று நிலத்தை அகழ்ந்தபோது பூரணை புட்கலை சமேத ஐயனார் திருவுருவம் கிடைக்கப்பெற்று பேரானந்தப் பரவசம் ஆனார்.

"ஐயனே பாவியேன் றன்னை யாண்ட மெய்த்
தெய்வமே யென்றுகண் ணருவி தேக்கிடக்
கையினாற் றழுவினார் மோந்தார் காதலாய்
மெய்யினிற் றொட்டுத் தம் விழியி லொற்றினார்"

ஆண்டியார் அப்போது பெற்ற மகிழ்ச்சியினை புலவர் ஈழ முருகனார் தலபுராணத்தில் மேல் உள்ளவாறு விபரிக்கின்றார். ஐயனாரை ஆண்டியார் அகழ்ந்தெடுத்த செய்தி ஊரெங்கும் பரவியது. மக்கள் பெருந்திரளாக அங்கு பக்தி பரவசம் மேலிட்டு வந்து தரிசித்தனர். அம்பலவி முருகரும் ஓடோடி வந்து ஐயனாரை வணங்கி ஆண்டியாருடன் சேர்த்து அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபாடு ஆற்றினார்கள். ஐயனார் திருவுருவை தோண்டி எடுத்த இடத்தில் ஒரு சிறிய கேணியையும் வெட்டி ஐயனார் வைரவர் பூஜைக்கு தேவையான பூக்களையும் இலைகளையும் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஒரு நந்தவனத்தையும் அமைத்தனர். ஆண்டியார் ஐயனாருக்கு ஆலயம் ஒன்று அமைக்க வேண்டும் என்று குறிப்பை அம்பலவி முருகருக்கு தெரிவிக்க அம்பலவி முருகரும் அதனை அகமகிழ்வோடு ஏற்றுக் கொண்டார். ஆண்டியாரும் தமது இப்பிறவிப்பணியை நிறைவு செய்தவராய் "நானே நீ நீயே நான்" என்ற ஐயனாரின் வாக்கிற்கமைய அங்கேயே சமாதி ஆனார்.

அம்பலவி முருகர் அரசமரத்திற்கு வடக்கே உள்ள உயர்ந்த நிலத்தில் ஐயனார் கோவிலை கட்டுவித்து ஐயனாரைப் பிரதிஷ்டை செய்வித்து கும்பாபிஷேகத்தை நிறைவேற்றினார். நாராயணப்பட்டரை நியமித்து ஐயனாருக்கும் வைரவருக்கும் தினமும் பூஜை செய்வித்து வந்தார். ஊரவர் ஐயனாரை, "ஆண்டிகேணி ஐயனார்" என்றும் வைரவரை "அரசடி வைரவர்" என்றும் அழைத்து ஐயனார் எம்மைக் காக்கின்றார் என்ற பெருநம்பிக்கையுடன் வாழ்ந்து வரலாயினர்.

சிலகாலத்தின் பின்னர் அம்பலவிமுருகர் ஐயனார் உற்சவ மூர்த்தியை சிற்பாச்சாரி மூலம் சிறப்பாக வார்ப்பித்தார். அவ்வுருவினை உளியினால் ஆசாரி செப்பம் செய்யத் தொடங்கிய போது செதுக்கப்பட்ட இடத்தில் இருந்து உதிரம் பெருகியதை கண்டு சிற்பாசாரி வியப்புற்றவராய் செப்பம் செய்யாமலே அம்பலவி முருகரிடம் ஒப்படைத்தார். ஐயனாரின் திருவுருவம் செப்பம் செய்யப் படாமலேயே கும்பாபிஷேகம் செய்யப்பட்டு பூஜிக்கப்பட்டு வருகிறது. இன்றும் இதனைக் காணலாம். ஐயனாரது கும்பாபிஷேகம் நிகழ்ந்த பின்னர் அவரது அருட் பெருக்கம் காரைநகர் எங்கும் அருளாட்சி செய்தது. திண்ணபுரத்தை அண்டிய பகுதிகளில் அதிகாலையிலும் மாலை வேளைகளிலும் ஐயனாரின் வாகனமாகிய குதிரைகள் ஓடும் ஒலியையும், சதங்கை ஒலியையும், சங்கு நாதமும் மக்கள் கேட்டு ஐயனாரின் மகிமையை வியந்ததாக மூதாதையர் கூறுவர். ஆண்டியார் வந்து உறைந்த அரசமரம் இன்றும் கோவிலின் தெற்கு வீதியில் பெரிய கிளைகளோடு வியாபித்து நிற்பதைக் காணலாம். இதன் கீழ் உள்ள வைரவர் கோவில் புனரமைக்கப்பட்டுள்ளது. ஐயனார் மூல மூர்த்தி கண்டு எடுத்த இடத்தில் உள்ள கேணி காலப்போக்கில் தூர்ந்து நிரவி விட்டது.

**சிவன் கோவில் ஸ்தாபிதம் :**

அம்பலவி முருகர் இயற்கையாகவே ஒரு சிவபக்தர். சிதம்பரயாத்திரை அடிக்கடி சென்று வழிபட்டு சிறந்த சிவன் நேயராகவுந் திகழ்ந்தார். இவருக்கு ஐயனார் கோவிலுக்கு அருகே வடபுறமாக சிவாலயம் அமைக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டு அதிலே ஒரு சிவன் கோவிலைக் கட்டுவித்தார். அதற்கு உரிய சிவலிங்கம் பெறுவது எங்ஙனம் என்று சிந்தனையில் மூழ்கி இருக்கும் போது இறைவன் கனாவில் தோன்றி சிதம்பரத்தில் உள்ள சிற்பாச்சாரி ஒருவரிடம் பதினாறு சிவலிங்கங்கள் உண்டென்றும் தம்மால் அங்கு அடையாளம் காண்பிக்கப்படும் சிவலிங்கத்தினை பெற்று வரும்படியும் கூறினார். இறைவன் திருவருளை வியந்த முருகர் சிதம்பரம் சென்று சிற்பாச்சாரியாரை அணுகி தாம் வந்த நோக்கத்தைத் தெரிவித்தார். அவரிடமிருந்த பதினாறு இலிங்கங்களையும் பேரானந்தத்துடன் முருகர் நோக்கினார். அப்பொழுது ஏழாவது இலிங்கத்தில் இருந்து வெண்முகில் போன்று ஆவி எழுவதைக் கண்டு இறைவனது அருட் குறிப்பை சிரம்மேல் வைத்து எந்நேரமும் கருணை பொழியும் அவ்வாண இலிங்கத்தினைப் பெறுவதாக நிச்சயித்து அதன் விலையைக் கேட்டபோது பதினாறு வராகன் என்றார் சிற்பி. அவ்வளவு பணம் தம்மிடம் இல்லையே என்று வருந்தி அவ்விடத்தை விட்டகன்றார் அன்றிரவு சிற்பியின் கனாவில் இறைவன் பத்து வராகனுக்கு கொடுக்கும்படி ஆணையிட்டார். மறுநாள் சிற்பி முருகரிடம் பத்து வராகனைப் பெற்றுக் கொண்டு அவ்லிங்கத்தினை ஒப்படைத்தார். முருகர் சிதம்பரத்திலே சில நாள் தங்கி விநாயகர் சுப்பிரமணியர் சண்டேசுவரர் நந்தி பலிபீடம் முதலான திருவுருவங்களை செதுக்குவித்துக் கொண்டு திண்ணபுரம் திரும்பி புதிய சிவாலயத்தில் அம்மூர்த்திகளை சிறப்பாக பிரதிஷ்டை செய்வித்தார். சிவலிங்கப்பெருமானினதும் அம்பிகையினதும் வனப்பையும் அருளாட்சியினையும் கண்ட குருமாரும் பெரியோர்களும் அன்று முதல் கோயிலை ஈழத்துச் சிதம்பரம் என்றும் சுவாமியை சுந்தரேசுவரர் என்றும் அம்பிகையைச் சௌந்தராம்பிகை என்றும் திருநாமம் இட்டு அழைக்கலாயினர்.

*"தில்லைத் தலமே யீழத்திற்*
*றிண்ண புரமாத் திகழ்ந்திடுக*
*அல்ல னீக்குங் கூத்தனுனுட*
*னம்மை யிங்கே யெழுந்தருள்க*
*செல்வச் சுந்த ரேசரெனுஞ்*
*சிவப்பே ரடியார் நாப்பயில்க*
*வல்லி சௌந்த ராம்பிகையாள்*
*காக்க வென்று வாழ்த்தினரால்"*

திரு நாமம் இட்ட வரலாற்றிறனை ஈழத்துச்சிதம்பர புராணம் மேற்கண்டவாறு கூறுகின்றது.

**சோமஸ்கந்த மூர்த்தி :**

சிவநெறிப் பெரியார் அம்பலவி முருகர் சச்சிதானந்தர் திருவுருவாகிய சோமஸ்கந்த மூர்த்தியை வார்ப்பிக்கும் பொருட்டு தனது மைந்தன் சண்முகத்தாருடன் சிதம்பரம் சென்று சிற்பாசரியை அணுகி தமது கருத்தைத் தெரிவித்தார். ஆசாரியும் இசைந்து வார்த்தபோது இருமுறையாகக் கரு செவ்வனே பாய்ந்தும் சிதைவுற்றதனைக் கண்டு பெரியவர் பெரிதும் மனம் வருந்திய வேளையில் திருவருள் தூண்டுதலினால் தனது காதில் இருந்து இரண்டு கடுக்கண்களையும் கழற்றி அவற்றை முன்னரே கொடுக்க விடாது தமக்காக வைத்து இருந்த செயலை நினைத்து

*"இவற்றின் பொருட்டோ இ.்.து இவ்வாறாயிற்று"*
*யாவும் தந்துவிட்டேன், யாவும் தந்துவிட்டேன்,"* என்று மெய்சிலிர்க்க, கண்ணீர் மல்க இரு கடுக்கண்களையும் சிற்பியிடம் ஒப்படைத்து அவற்றையும் சேர்த்து வார்ப்புலையில் இட்டு மீண்டும் வார்க்கும்படி கேட்டுக் கொண்டார். சிற்பியும் இசைந்து வார்த்தபோது திருஉரு செவ்வனே அமைந்தது. இச்செய்தியை ஆசாரி மூலம் அறிய அம்பலவி முருகருடைய ஆன்மா அத்திருவுருவிலே கலந்தது போல இறைவனடி எய்தி விட்டது. அங்கு உள்ளவர்களும், ஆசாரிமாரும் நிகழ்ந்ததைக் கண்டு வியப்புற்று பரவசமெய்தினர்.

அங்கு சண்முகத்தார் தந்தைக்கு செய்ய வேண்டிய ஈமக்கடன்களைச் சிதம்பரத்தில் முறைப்படி செய்தார்.

நாட்கள் சில சென்ற பின்னர் சண்முகத்தார் சோமஸ்கந்த மூர்த்தியைக் கொண்டு இங்குவரப்புறப்பட்டார். எண்ணியபடி குறித்த நாளிலே புறப்பட தன்னாலியன்றவரை முயன்று முடியாமற் போகவே பறங்கிப்பேட்டைத் துறைமுகத்திற்கு சோமஸ்கந்த மூர்த்தியைக் கொண்டு போய் ஒரு தோணியில் ஏற்றி அனுப்பி வைத்தார். தாமும் மற்றொருவருமாக வேறொரு தோணியில் ஏறிவரும் போது பெரும் புயற்காற்று வீசியது. தோணி சேதமடைந்து கடலினில் அமிழ்ந்து விட்டது. சண்முகத்தாரும் கூடி வந்தவரும்

* சண்முகத்தாருக்குக் கடலிலாபத்து நேர்ந்த போது காப்பாற்றிய அதிராம்பட்டினத்துச் சோனகரின் உதவிக்கு நன்றியறிதலாகச் சிவன்கோவிலுக்கு கிழக்கே கடற்கரையையடுத்த சுமார் 20. பரப்பு விஸ்தீரணமுள்ள வளவு அவர்கள் பெயருக்கு எழுதிக் கொடுக்கப் படலாயிற்று அது இன்றுஞ் சோனகபங்கென அழைக்கப்படுகின்றது.

கடலில் தத்தளித்த போது தெய்வீகமாக கையில் அகப்பட்ட மரக்குற்றியினை இறுகப்பற்றிக் கொண்டனர். இவ்விதம் இரண்டு நாள் கடலில் அவஸ்தைப்பட்டு மூன்றாம் நாள் அதிராம்பட்டின கடற்கரையை சேர்ந்தனர். மயக்கமுற்ற நிலையில் கிடந்த அவர்களை அதிராம்பட்டின சோனக குடிமக்கள் *கண்டு வேண்டிய சிகிச்சைகள் செய்து தேற்றி சில நாட்களின் பின் தோணியில் காரைநகருக்கு அனுப்பிவைத்தனர். இங்கு வந்து சேர்ந்ததும் சண்முகத்தார், சோமஸ்கந்த மூர்த்தி எவ்வித இடையூறுமின்றி வந்து சேர்ந்ததை அறிந்து மனமகிழ்ச்சியுற்றார். அன்றியும் தம்முடன்கொண்டு வராமல் எம்பெருமானை முன்னேரே அனுப்பத்தூண்டிய திருவருளை வியந்து போற்றினார். பின்னர் நல்ல முகூர்த்தத்தில் சோமஸ்கந்த மூர்த்தியை பிரதிஸ்டை செய்வித்து, தந்தை அம்பலவி முருகர் விரும்பியவாறு இக்காலம் முதல் மார்கழி திருவெம்பாவை திருவாதிரை உற்சவத்திலும், பங்குனி உத்தர மகோற்சவத்திலும் பிரதான எழுந்தருளியாக கைக்கொள்ளப்பட்டது.

**நடேசர் திருவுரு :**

பஞ்சகிருத்திய திருநடனம் புரிகின்ற நடராசப் பெருமானது திருஉரு 1901ம் ஆண்டு திண்ணபுரம் சிவன் கோவிலில் வார்க்கப்பட்டது. விரித்த சடையும் முயலகனைமிதித்து நடனம் புரிகின்ற திருவடியையும் பதஞ்சலி வியாக்கிரத பாதரை இருமருங்கிலும் தொழ வைத்து மிளிர்கின்ற ஐம்பத்தியொரு சுடர்களையும் கொண்ட வட்டவுரு திருவாசியுடன் கூடி அண்டகாரங்களையும் ஆடவைக்கும் தன்மை உடையதாக

*"மருவுந் துடியுடன் மன்னிய வீச்சு*
*மருவிய அப்பும் அனலுடன் கையுங்*
*கருவின் மிதித்த கமலப் பதமும்*
*உருவில் சிவாய நமவென வோதே"*

- என்ற திருமந்திர வாக்கின்படி திருவுரு அமைந்தது. மூலமூர்த்தியின் அருளாட்சியினால் தான் இவ்வளவு சிறப்புடன் அமைந்ததாக இதனை வார்த்த சிற்பி தென்னாடு சோழபுர குருசாமி தெய்வத்தன்மையை வியத்து மெய்சிலிர்க்க கூறியதாக இங்குள்ள பெரியோர் கூறுகின்றனர். திருவுரு வார்க்கப்பட்டும் ஏழெட்டு வருடங்களாக கும்பாபிஷேகம் நடைபெறவில்லை. இக்காலத்தில் *திருவுருவை கோவிலிலே நெல்லுக்குள் மறைத்து வைத்து இருந்து பின்னர் மாசிலாமணி காலத்திலே 1908ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இந்த நாள் தொடக்கம் நடராசப் பெருமானே மார்கழி திருவெம்பாவை தேர்த்திருவிழாவிற்கும் ஆனி உத்தரத்திற்கும், பங்குனித் தீர்த்தத்திலன்றும் எழுந்தருளி வருகின்றார். இக்காலத்திலிருந்து சந்திரசேகரப்பெருமானும் ஸ்தாபனம் செய்யப்பட்டு பங்குனி மார்கழி ரத்தோற்சவத்தைத் தவிர்ந்த மற்றையவற்றிற்கு பிரதான எழுந்தருளியாக எழுந்தருளி வருகின்றார். பங்குனி ரததோற்சவத்திற்கு சோமஸ்கந்தரே எழுந்தருள்வார்.

---

*தெற்குநோக்கியமர்ந்து ஊரினை முழுநோக்கில் நோக்கி அருளாட்சிசெய்து ஆனந்தத் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் நடேசர் திருவுருவினை வார்பித்தவர் பேய்க்காசி வசித்தவரான மீசைக்காரச் சண்முகம். இவ்வடியவரும் தனது கடுக்கண்களை உபகரித்தே திருவுருவை வார்பித்தார். நடேசர் திருவுரு ஊரைச்சுற்றி ஊர்வலமாக கொண்டு வந்த பின்னர் நிதி. பொருள் சேராமையால் கும்பாபிஷேகம் நடைபெறவில்லை. இதனைக்கண்ட மீசைக்காரச்சண்முகம் வெதும்பி ஆறுமாதகாலமாக இரவு பகலாக "அரிகண்டம்" (அங்கவிலங்கு) பூட்டிநோன்பு நோற்றாறென்றும் பின்னர் நிர்வாகத்திற்கு வந்த மாசிலாமணி மணியகாரனின் பெருமுயற்சியினால் 1908ம் ஆண்டு நடேசர் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றதாகவும் பெரியோர்கள் கூறுகின்றனர். சந்திரசேகர் திருவுரு ஸ்தாபனம் பற்றிய விபரங்கள் பெறமுடியவில்லை.

அம்பலவி முருகரால் தொடங்கிய திருப்பணி அவரது சந்ததியினரால் தொடரப்பட்டது. இவரது வழித்தோன்றல் சண்முகத்தார், சின்னத்தம்பியார், மாசிலாமணி, அவர்களால் செய்யப்பட்ட திருப்பணிகள் ஏராளம் விரிவஞ்சி அவற்றை குறிப்பிடவில்லை.

**திருப்பணிச் சபை :**

*"புல்லினா லொன்று கோடி புதுமண்ணாற் பத்துக்கோடி*
*செல்லுமாங் காலந்தன்னிற் செங்கல்லாற் பதினாயிரங் கோடி*
*அல்லினுங் குழலாய் கேளாய் அலயமடங்கடன்னை*
*கல்லினாற் சமைத்த பேர்கள் கைலை விட்டகலார் மாதோ "*

சிவநேயர் பலர் சேர்ந்து சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும் சௌந்தராம்பிகை அம்பாளுக்கும் கருங்கல்லினால் சிற்பம்சங்களுடன் கோயில் கட்டிடவிரும்பி ஆதின கர்த்தாக்களின் ஆலோசனையோடு 15-04-1963ம் ஆண்டு காரைநகர் சிவன்கோவில் திருப்பணிச் சபையை உருவாக்கினர். இச்சபையினரால் கருங்கல்லினாற் சிவன் அம்பாள் கர்ப்பக்கிரகம் அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகியன அழகுற அமைக்கப்பட்டன. இன்னும் விநாயகர், சுப்பிரமணியர், சண்டேஸ்வரர் நால்வர் கோவில்களும் புதிதாக அமைக்கப்பட்டன. நடேசர் கோவிலும் திருத்த வேலைகள் செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. திருப்பணிச் சபையினரின் அயராத உழைப்பினால் 10-07-1970 ல் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன ஐந்தாவது மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. சிவஸ்ரீ மங்களேஸ்வரக் குருக்கள் பிரதம ஆசாரியராகவும் சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் சர்வபோதகராகவும் இருந்து நிறைவேற்றினார்கள். இக்காலத்தில்தான் பிரதோச விநாயகர் மூர்த்தியும் பிரதிஷ்டை செய்யப்பட்டு புதிய கண்டாமணியும் ஸ்தாபிக்கப்பட்டது.

## சிவன் கோவிலினை சூழவுள்ள ஏனைய கோவில்கள்

**அரசடி வைரவர் கோவில்:**

ஆதியில் ஆண்டி முனிவரால் அரசின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட வைரவர் கோவில் இரண்டாம் வீதியில் புதுப்பொலிவுடன் அருள் மிகு வைரவராக திகழ்கின்றார். வருடந்தோறும் தைப்பொங்கல் நன்னாள் அன்று அல்லல்கள் அகலுமாறு வேண்டி அடியார்கள் பொங்கல் பொங்கி படைத்து வழிபாடு செய்வர்.

**பத்திரகாளி அம்மன் கோயில்**

தில்லைச்சிதம்பரக் கோவிலுக்கு நேரே முன்னதாக உள்ளது போன்ற அமைப்பில் சிவன் கோவிலுக்கும் நேர் கிழக்கே சித்தாஅமிர்த வாவி திருக்குளத்தை அடுத்து பத்திரகாளி அம்மன் கோவில் உள்ளது. பங்குனி மாதத்தில் சுந்தரேஸ்வரப் பெருமான் கொடியேற்றத் திருவிழா தொடங்குவதற்கு சிலநாள்கள் முன்னதாக காளி அம்மன் கோவில் முகப்பில் நீண்ட மரம் ஒன்றை நட்டு அத்துடன் கொடிச் சீலையை இணைத்து திருவிளக்கு ஏற்றி பூஜை செய்து எட்டாவது நாளில் பொங்கல் செய்து மடைபடைத்து தொற்றுநோய் வறுமை துன்பம் முதலியவற்றில் இருந்து காத்தருளவேண்டும் என்று அம்பாளை வணங்கி அடியார்கள் வழிபாடு செய்வர்.

### தினகரன்பிட்டி வைரவர் கோவில்

சிவன் கோவில் மூன்றாவது வீதி மிகப்பெரியது. கோவிலில் இருந்து தென்மேற்கு திசையில் சுமார் 150 மீற்றர் தூரத்திலே தினகரன் என்னும் அந்தணப் பெருமகனால் உண்டாக்கப்பட்ட ஒரு ஆல மரமும் அதன் கீழ் வைரவர் கோவிலும் அமைந்திருக்கின்றது. இக்கோவிலினைச் சுற்றி பசுக்கள் மேயும் பசும் புற்றரைகளும் அவை தண்ணீர் பருகும் தரவைக் குளமும் இருக்கின்றது. இக்கோவிலில் ஒவ்வொரு வைகாசி விசாகத்தன்றும் அடியார்கள் பொங்கல் பொங்கி தங்களையும் தமது பசுக்களையும் இடர்களில் இருந்து காப்பாற்றும் வண்ணம் வேண்டி வழிபாடு இயற்றுகின்றனர். மனவமைதி தரும் தலமென சிவநேயர்கள் கூறுவர்.

### அன்னதான மடாலயங்கள்

வடக்குக்குத் திசையிலுள்ள மூன்றாவது வீதியில் இரண்டு மடாலயங்களும் கோவில் அந்தண குருமார்களின் அக்கிரகாரமும், கோவில் நாதஸ்வர, தவில் கலைஞர்களின் வசிப்பிடங்களும் நந்நதவனமும், தாமரைத்தடாகமும் உள்ளன.

மடாலயங்களில் ஒன்று சிவாச்சிரமம், மற்றையது மாணிக்க வாசகர் மடாலயம். இரண்டு மடாலயங்களிலும் உற்சவ காலங்களில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது.

சிவாச்சிரமத்தில் வாரந்தோறும் அடியார்கள் கூடி திருமுறைபாரயணம், புராணப்படனம் செய்தும் சிவசிந்தனையில் ஈடுபடுவார்கள். தெய்வீக பத்தினி தங்கம்மா நடராசாவினால் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வாச்சிரமம் புதுப்பொலிவுட்டப்பட வேண்டியுள்ளது.

### மணிவாசகர் சபை :

திருவெம்பாவை காலத்தில் ஈழத்திலும், தமிழகத்திலும் தலைசிறந்த சைவப்பேரறிஞர்களை அழைத்து திருவாசகப் பேருரைகள் நடாத்தி மணிவாசகர் விழாவினை சிறப்புற சிவன் கோவில் வசந்தமண்டபத்தில் நிகழ்த்துவார். அத்தோடு இவ்வூர் மாணவர்களுக்கிடையே சமயபரீட்சை நடாத்தி தலைசிறந்த மாணவர்களுக்கு பரிசு வழங்கி கௌரவிப்பர்.

### இராஜ கோபுரங்கள்

"கோபுர தரிசனம் பாவவிமோசனம்".

ஆலய திருப்பணிகளில் இராஜகோபுரம் பிரதானமானது

"வாய் கோபுர வாசல்"

என்றார் திருமூலர். வாயில் கோபுரம் கட்டவேண்டும் என்ற எண்ணம் பலரிடம் உருவாகி திருப்பணிச் சபையினரால் 1965ம் ஆண்டு சிவன் கோபுரத்திற்கான அத்திவாரம் நிலம் மட்டம்வரை கட்டப்பட்டது. வேலைகள் தொடரவில்லை பின்னர் 1979ம் ஆண்டு

ஒரு வர்த்தகப் பெருமகன் முன்வந்து ஐயனாரின் கோபுரத்துக்கான அத்திவாரத்தை நிலம் மட்டம் வரை கட்டுவித்தார். தொடர்ந்தும் கட்டுமான வேலைகள் நடைபெற வில்லை. பின்னர் 1982ம் ஆண்டு வைகாசி மாதம் தற்போதைய புதிய திருப்பணிச் சபை தெரிவு செய்யப்பட்டது.

"வீட்டைக்கட்டிப்பார்" என்பார்கள்

அருகருகே இரு பெரிய கோபுரமமைப்பதென்பது இலகுவான காரியமன்று. தெய்வபலத்தோடு ஆன்ம பலமும் இணையவேண்டும்.

திருவருள் வழிநடந்த "கல்லும் கதை சொல்லும்" "கல்லும் சொல்லாதோகவி" என்றவாறு தென்னாட்டு சிற்பங்களை ஒத்த சிற்ப அம்சங்கள் கோபுரங்களில் மிளிர ஏக நேரத்தில் வானளாவிய இரண்டு இராஜகோபுரங்களும் வளர்ந்து ஐயனாரது திரிநிலைமாடங்களுடனும் பஞ்சநிலைமாடங்களுடனும் அமைந்து ஏழெட்டு வருடங்களில் கோபுர நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்தது. 1988ம் ஆண்டு மூலமூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு கருவறைகளும் தூபிகளும் புதுப்பிக்கப்பட்டு வாகனசாலையுமமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டது. 1991ம் ஆண்டு கும்பாபிஷேகத்திற்கு ஆயத்தங்கள் நடைபெற்ற வேளையில் இவ்வூரில் ஏற்பட்ட போர்ச் சூழலினால் பெரும்பான்மையான மக்கள் வெளியூர்களுக்கு இடம் பெயர்ந்தனர் கும்பாபிஷேக முயற்சிகள் யாவும் தடைப்பட்டன. இக்காலத்தில் இவ்வூருக்கும் யாழ் குடாநாட்டிற்கும் இடையிலான தரைவழித் தொடர்பு ஐந்து வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து துண்டிக்கப்பட்டு இருந்தது. இக்காலத்தில் சிவஸ்ரீ ஞானசம்பந்தக் குருக்களும் சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்களும் ஆதீன கர்த்தா முருகேசு அவர்களும் சிறுபகுதி ஊரவர்களும் இவ்வூரில் தங்கி கோவில் பூஜைகளை செவ்வனே நிறைவேற்றி வந்தார்கள். பின்னர் இவ்வூர் மக்களின் மீளக் குடியமர்வுடன் திருப்பணிச்சபையினரின் பெருமுயற்சியினால் 1998-06-07ந் திகதி பகுதானிய வருடம் வைகாசி மாதம் ஞாயிற்றுக்கிழமை காலை உத்தராயன தேவப்பிரதிஷ்டா உத்தம மிதுனலக்ன முகூர்த்தத்தில் மூல மூர்த்திகளுக்கும், அருகருகே அமைந்த ஐயனார் சிவன் இராஜகோபுரங்களுக்கும் ஒன்றாக அறவோர் வேத மந்திரங்கள் ஓத, நாதஸ்வர மேள வாத்தியங்கள் இசைக்க, சங்குகள் ஒலிக்க, மணிக் கோபுரத்தில் உள்ள கண்டாமணி ஒலிக்க, பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் பக்திப் பரவசத்தில் மெய்சிலிர்த்து அரோகரா அரோகரா என்று கோசம் எழுப்பி வணங்க தமிழகத்திலும் ஈழநாட்டிலும் தலை சிறந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட அந்தண குருமார்களால் ஆகம முறைப்படி வரலாற்று சிறப்பு மிக்க மகாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா நிறைவேறியது. இதனைத் தொடர்ந்து 45 நாட்கள் அபிஷேகம் உற்சவம் நடைபெற்றது. மண்டல பூர்த்தியன்று கும்பாபிஷேகத்தினை நிறைவுசெய்யும் 1008 சங்காபிஷேகம் சர்வவாத்தியங்களிசைக்க, பெருந்தொகையான அடியார்கள் வணங்க சிவாச்சாரியார்களால் நடாத்தப்பட்டு புராதன இவ்வாலயத்தின் ஆறாவது மகா கும்பாபிஷேக கிரியைகள் யாவும் பரிபூரணமாக நிறைவுற்றது. இப்புனித திருப்பணியில் தொண்டாற்றியவர்கட்கும் கும்பாபிஷேகத்தை கண்டு களித்த பக்த கோடிகளுக்கும், ஈழநாட்டுமக்கள் அனைவருக்கும் மங்களம் பொங்க சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப்பெருமான் திருவருள் பாலிப்பதாக

*"பொங்கிய அன்பினோடும் பொற்புற அமைந்த கோவில்*
*நன்கு செய்பணிகள் முற்ற ஆகமம் நவின்ற வண்ணம்*
*துங்க நீர்க்குட முழுக்குத் தூயநல் விழவு காண்போர்*
*மங்கலம் பொலிய வாழ்ந்து மன்று பேறடைவர் தாமே"*



ஆதீன வித்துவான்கள்
நாதஸ்வர வித்துவான்
என். கே. கணேசன் அவர்களும்
தவில் மேதை
என் கே. வீராச்சாமி அவர்களும்



கோபுர வேலைகளை திறம்பட
செய்துதந்த ஸ்தபதி
அராலியூர்
[redacted]
நாகமுத்து கோபாலரத்தினம்





இராஜ கோபுரத் திருப்பணிகளின் போது

**கோவில் பெயர்** : காரைநகர் சிவன் கோவில்

**மறுபெயர்கள்** : திண்ணபுரம் சிவன் கோவில் அல்லது திண்ணைக்களிச் சிவன் கோவில்

**சிறப்புப் பெயர்** : ஈழத்துச் சிதம்பரம்

**சுவாமி பெயர்** : சுந்தரேஸ்சுவரர்

**அம்பாள் பெயர்** : சௌந்தராம்பிகை

**தலவிருட்சங்கள்** : அரசு, வன்னி, இருப்பை - மூன்று விருட்சங்கள்

**தீர்த்தங்கள்** : பரமானந்த கூபம், சித்தாமிர்தவாவி, துர்வாசசாகரம் - மூன்றுதீர்த்தங்கள்

**கும்பாபிஷேகம்** : சுந்தரேஸ்சுவரர்

| | |
|---|---|
| **முதலாவது** | **1848** |
| **இரண்டாவது** | **19-03-1900** |
| **மூன்றாவது** | **26-01-1934** |
| **நான்காவது** | **16-11-1950** |
| **ஐந்தாவது** | **10-07-1970** |
| **ஆறாவது** | **07-06-1998** |

**நடராஜர் கும்பாபிஷேகம் 23.04.1908**

**நவக்கிரக கும்பாபிஷேகம் 27.11.1931**

**ஐயனார் (இரண்டாவது) கும்பாபிஷேகம் 6.09.1929**

**ஆலய ஸ்தாபித நூற்றாண்டு நிறைவு சதாபிஷேகம் 17.06.1948**

**தேவஸ்த்தான கர்த்தாக்கள்**

1. அம்பலவி முருகர்
2. சண்முகத்தார்
3. சின்னத்தம்பியார்
4. மாசிலாமணி + துரையப்பா
5. ஆண்டி ஐயா + முருகேசு
6. அம்பலவி முருகன் + சுந்தரலிங்கம்

# திருக்கோயிற் பண்பாட்டில் கும்பாபிஷேகம்

## *சில சிந்தனைகள்......*

**பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்,**
(தலைவர், இந்து நாகரிகத்துறை - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.)

சைவத் திருக் கோயில்களில் நித்தியக் கிரியைகளும் நைமித்தியக் கிரியைகளும் ஆகமங்கூறும் விதிப்படி நடந்து வருவது மரபு. சிவாகமங்களில்தான் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் ஆகிய கிரியைகள் வகுத்துக் கூறப்பட்டுள்ளன. ஒரு கிராமத்திலே புதிதாக ஒரு கோயிலை நிர்மாணிக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்கு முறைகள் சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளன, கிராமத்தில் கோயில் அமையவேண்டிய திக்கு, ஆலயத்திற்குரிய நிலத்தைத் தேர்ந்தெடுத்தல், நிலத்தை உழுது பண்படுத்துதல், பதவின்யாசம், கர்ப்பநியாசம் முதலிய கிரியைகள் முக்கியத்துவம் பெறுவன. எமது நாட்டில் முன்னோர்களால் நிர்மாணிக்கப்பட்ட கோயில்களைத் திருப்பணிகள் மூலம் புதுப்பொலிவு பெறச் செய்து புனராவர்த்தன கும்பாபிஷேகம் செய்வதே பெரிதும் நடைமுறையில் இருந்து வருகின்றது. புதிதாக ஒரு கோயிலை நிர்மாணித்து கும்பாபிஷேகம் நிகழ்த்துவதைக் காட்டிலும் ஏற்கனவே உள்ள ஒரு கோயிலை திருப்பணிகள் மூலம் புனர்நிர்மாணம் செய்து கும்பாபிஷேகம் நிகழ்த்துவதானல் அடியார்களுக்குக் கிட்டும் பலன் அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகமங்களைப் பிரமாணமாகக் கொண்டு பிரதிஷ்டை எனப்படும் கும்பாபிஷேகத்தைச் செய்யும் ஒழுங்குகளை வகுத்துக் கூறும் நூல்கள் பத்ததிகள் ஆகும். பத்ததிகளை சிவாச்சார்யார்கள் பக்குவமாகப் பேணி வருவர். அந்தந்த மூர்த்திகளுக்குரிய பிரதிஷ்டையின் போது இப்பத்ததிகளே இன்றியமையாதனவாக விளங்குகின்றன. ஆகமங்களிலும் பத்ததிகளிலும் யாகசாலை, குண்டங்கள் வேதிகை, ஸ்நபனங்கள் செய்யும் முறைகளையும் அளவுப் பிரமாணங்களையும் நாம் காணலாம். எனவே எமது சமய நடைமுறைகள் காலவெள்ளத்தால் சிதைந்து போகாவண்ணம் பாதுகாத்து வருபவை இவ்வாகமங்களும் பத்ததிகளும் எனில் மிகையில்லை. இளந்தலைமுறையைச் சார்ந்த சிவாச்சாரியார்கள் குரு முகமாக இவற்றைப் பெற்று பேணிப்பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளனர். அவ்வப்போது ஏற்படும் ஐயங்களைப் போக்கி விளக்கம் பெற இவ்வாகமங்கள் துணைபுரிவன. எனவே இவை கூறும் பொருளடக்கம் கிரியைகள் பற்றிய விளக்கம், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் உள்ள ஒழுங்குமுறை, ஆகியவற்றை கிரியைத்துறையில் ஈடுபடுபவர்கள் அறிந்து கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகும். பண்டைக் காலத்திலிருந்து குருகுலங்கள் இப்பணியைச் செய்து வருகின்றன. எமது நாட்டில் ஆகமங்களில் பாண்டித்தியம் பெற்றவர்களும், பத்ததிகளை வகுத்து உருவாக்கியவர்களும் கிரியைகளில் அனுபவம் வாய்ந்தவர்களும் தலைமுறை தலைமுறையாக திருக்கோயிற் பண்பாட்டினைப் பேணிவருகின்றார்கள். இது எமக்குப்

பெருமை தரும் விடயமாகும். எனினும் சிவாச்சாரியப் பணியில் காலடி எடுத்து வைக்கும் இளம் சிவாச்சாரியர்கள் ஆகம அறிவில் மிகுந்து விளங்க வேண்டியது அவசியமாகும். பத்ததிகள் கிரியைகளுக்கு இன்றியமையாதவை என்ற காரணத்தினால் அவற்றைச் சாதகம் செய்யும் பயிற்சி முதற்கண் தேவை. அவற்றை விளங்கிக் கிரியை செய்தவற்கேற்ற மொழிப்பயிற்சியும் அடுத்து முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனைய சிவாச்சாரியர்களோடு இணைந்து செயலாற்றக் கூடிய ஆளுமையும் அனுபவமும் அடுத்து வளர்த்துக் கொள்ளுதல் அவசியமாகின்றது. கிரியைத்துறையில் வல்லவர்களாகவும், சாதனையாளர்களாகவும் இளஞ்சிவாச்சாரியர்கள் விளங்க வேண்டும் என்பதே சைவ் உலகின் எதிர்பார்ப்பாகும். சிவாச்சாரியப் பணி மிகவும் புனிதமான பணியென்பதுடன் பொறுப்புமிக்க பணி என்பதும் கருத்திற் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். ஆலயத்தைத் தெய்வாம்சத்துடன் மிளிரச் செய்வது இவர்களது முக்கிய கடமையாகும்.

இறைவன் எங்கும் நிறைந்தவன். அத்தகைய இறைவன் ஆலயத்தில் தெய்வீக சாந்நித்தியம் கொண்டு வேண்டுவார்க்கு வேண்டியவற்றை அருளி எம்மைப் பாதுகாக்கின்றான். எம் மனம் புலன் வழிசெல்லாது ஒருமுகப்பட்டு இறைவழிப்பாட்டில் ஈடுபடுவதற்கு ஆலயமும் அதன் புனிதச் சூழலும் துணைபுரிகின்றன. இறைவழிப்பாட்டில் மனம் லயப்படுவதற்கு ஏற்ற இடமே ஆலயமாகும். எனவேதான் எமது முன்னோர் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என அறிவுறுத்தியுள்ளனர். "ஆலயம் இல்லாத ஊர் பாழ்" எனக் கூறப்படுவதனால் ஆலயம் ஒரு கிராமத்தின் சிறப்புக்கும் புனிதத்துவத்திற்கும் காரணமாகின்றது. எனவே தான் ஊர் தோறும் கோயில் அமைத்து திருக்கோயில் பண்பாட்டினை எமது முன்னோர்கள் மிகுந்த நம்பிக்கையுடனும் பக்தியுடனும் பேணி வந்துள்ளனர். அம்மரபை எமது தலைமுறையினரும் பேணக் கடமைப்பட்டுள்ளனர். சமயமரபும் கலைமரபும் சங்கமமாகும் இடமே ஆலயமாகும் - எனவே ஆலயந் தொழுபவர்களுக்கு இவ்விரு அனுபவங்களும் கிட்டுவதற்கு வாய்ப்புண்டு.

ஓர் ஆலயத்தைப் புதுபித்துப் பிரதிஷ்டை செய்யும் வரை எத்தனையோ அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன. சிற்பக்கலைஞனின் கைவண்ணத்தில் ஆலயம் கலை எழிலுடனும் புதுப்பொலிவுற்று விளங்குகின்றது. அடியார்களின் ஈடுபாட்டினால் திருப்பணிகள் செம்மையுறுகின்றன. சிவாச்சாரியரின் கிரியை விசேடத்தினால் ஆலயத்தில் தெய்வீக சாந்நித்தியம் மேலோங்குகின்றது. அடியார்களின் உள்ளங்களில் இவை அளவற்ற பக்தியை ஏற்படுத்திவிடுகின்றன. மந்திரம், கிரியை பாவனை ஆகிய அம்சங்களுடன், நாதோபாசானை, தோத்திரம் பாவனை அடியவர்களின் "அரோகரா" கோஷம் ஆகிய அனைத்தும் ஒன்றிணைய கருவறையின் திருவுருவத்தில் பிரதிஷ்டையின் போது இறைவன் சாந்நித்தியம் கொள்கின்றான். எனவே பல்துறை சாதனைகளை ஒன்றிணைக்கும் ஆற்றல் கும்பாபிஷேகக் கிரியையில் உண்டு. இவற்றினால் ஆலயத்தில் இறைவனது அருளாட்சி நிறைந்து உலகையும் வாழ வைக்கின்றது. அனைத்து உலகமும் இக்கிரியையினால் நன்மை பெறுகின்றது. எனவே தான் ஆகம வழிபாட்டில் கும்பாபிஷேகம் உன்னதமான இடத்தைப் பெறுகின்றது.

பிரதிஷ்டை என்ற சொல் குறிக்கும் பொருளை விளக்குவதன் மூலம் கும்பாபிஷேகத்தின் உட்பொருளை நாம் உணரலாம். பிர என்னும் பகுதி "சிறப்பாக" என்றும் "நன்கு புலனாகும்படி என்றும் பொருள்படும். "திஷ்ட" என்னும் பகுதிக்கு

"நிற்றல்" என்ற பொருளுண்டு. எனவே"பிரதிஷ்டை" எனும்போது ஏனைய இடங்களிற் புலனாவதைக் காட்டிலும் "சிறப்பாக நிலைநிற்றல்" என்றும் "ஏனைய இடங்களில் நிற்பதைக் காட்டிலும் நன்கு புலனாகும்படி நிற்றல்" என்றும் பொருள்படுகின்றது. இந்நிலையை வருவிக்கும் கிரியையே ஆகமங்கள் கூறும் பிரதிஷ்டை ஆகும். பாரெங்கும் பரந்து விளங்கும் பரம்பொருளைப் பசுவின் முலைகளினூடேப் பாலைத் தோற்றுவிப்பது போன்று திருக்கோயிற் கிரியை வழிகளால் ஆலயத்தில் இறை சாந்நியத்தை ஆகமங்கள் எமக்கு உணர வைக்கின்றன.

பிரதிஷ்டை என்று கூறப்படும் கும்பாபிஷேகக் கிரியையின் போது குடத்தில் நிரப்பப்படும் மந்திரபூர்வமான புனித நீரால் இறைவனது திருவுருவத்திற்கு நிகழ்த்தப்படும் நீராட்டுதலே சிறப்பம்சமாகும். இக்கும்பாபிஷேகக் கிரியை, இறைவனை அகன்ற பரப்பினின்றும் வெளிக் கொணர்ந்து ஆலயத்தில் உள்ள திருவுருவற்றில் எழுந்தருளி நிலைநிற்கச் செய்யும் செயலைக் காட்டுகின்றது. இயற்கைச் சக்தியில் நாம் காணும் இறை சாந்நித்தியத்தை நாம் இக் கிரியையின்வழி படிப்படியாக உணர வழியேற்படுகின்றது. இறைவன் ஆகாயத்தில் புலனாகும் வண்ணம் வெளிப்படுகின்றான். ஆகாயந்தானும் புலன்களால் செவ்விதாகக் கிரகிக்கப் படமுடியாதது. ஆகாயத்திற்கு அடுத்த நிலையில் வாயு சிறிது அதிகமாக உணரப்படக்கூடிய தெனினும் கட்புலனாகாத ஒன்றாகும். இதற்கு அடுத்த நிலை அக்கினியாகும். இது கட்புலனுக்கு உட்பட்டது. எமது வழிபாட்டு முறைகளில் அதிகம் இடம்பெற்று எம்மை ஈடேற்றவல்லது. எனினும் அக்கினியை அணைந்து போகாமல் பேணிப் பாதுகாப்பதும் தொடர்ந்து வழிபடுவதும் எளிதான காரியமல்ல. இந்நிலையிலிருந்து சற்று எளிமையாக விளங்குவது நீர் எனினும் கிரகிக்கத் தக்கவாறு நீரை ஒரேநிலையில் நிலைபெற நிறுத்தி அதில் இறைவனைக் கண்டு தொடர்ச்சியாக வழிபடுவது எளிதன்று. இவற்றிலிருந்து சற்று வேறாக அமைவது ஐந்தாவது அம்சமாகிய மண். அது நிலத்தின் வயப்பட்டது. கல், உலோகம் ஆகியவையும் இவற்றுள் அடங்கும். இவற்றில் இறைவனது தெய்வீக அம்சங்களை நிலை நிறுத்தி இடைவிடாது தொடர்ச்சியாக இறைவனைக் கிரகித்தல் ஓரளவு எளிதாக அமைகின்றது. இவ்வாறு இயற்கையில் பல்வேறு சக்திகளாகப் பரந்து விரிந்து விளங்கும் இறைவனைப் படிப்படியாக திருவுருவத்தில் எழுந்தருளச் செய்யும் படிமுறையை நாம் கும்பாபிஷேகக் கிரியையில் அவதானிக்கலாம். தைத்தீரிய உபநிடதம் கூறும் கருத்துக்களும் இக்கிரியையோடு ஒப்புநோக்கத்தக்கன.

*ப்ரஹ்மணஆகாச : ஸம்பூத*
*ஆகாசாத் வாயு :*
*வாயோரக்நி :*
*அக்நேராப :*
*அத்ப்ய! ப்ருதிவீ !*

எனவே கும்பாபிஷேகத்தின்போது இறைவனைப் பிருதிவீ அம்சம் வாய்ந்த கல்லிலோ, அல்லது உலோகத்திலோ திருவுருவாக அமைத்து அதனைத் தெய்வீக அம்சம் வாய்ந்ததாக ஆக்குவது முக்கிய அம்சமாக அமைகின்றது. இறைவனை வழிபட நிறுவப்படும் மண் அம்சம் வாய்ந்த விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்வதற்காக விண், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐந்தினையும் அவாவி நிகழ்த்தும் கிரியைகளே

கும்பாபிஷேகக் கிரியையின் உயர்நிலையைச் சுட்டி நிற்கின்றன. தைத்திரீய உபநிடத்தில் குறிப்பிட்டுள்ளவையும் இதே கருத்தையே உணர்த்துகின்றன. இறைவன் முதலில் ஆகாயத்தில் சம்பவிக்கின்றான். ஆகாயத்திலிருந்து காற்றிலும் காற்றிலிருந்து அக்கினியிலும் அக்கினியிலிருந்து நீரிலும் நீரிலிருந்து நிலத்திலும் அவனது தெய்வ அம்சம் பரந்து விளங்குகின்றது.

கும்பாபிஷேகக்கிரியை நிகழ்த்துவதற்கு அமைக்கப்படும் யாகசாலை ஆகாய வெளியில் அமைவது குறிப்பிடத்தக்கது. இங்கு அமையும் குண்டங்களில் அக்கினியும் வாயுவும் ஒன்றிணைந்து விளங்குகின்றன. யாகசாலையின் மையத்தில் விளங்கும் வேதியில் அமையும் கும்பத்தில் இருப்பது நீர். இவ்வாறு பஞ்சபூதங்களின் ஒடுக்கம் இறுதியில் பிருதிவியோடு தொடர்புடைய திருவுருவத்தில் நிறைவெய்துகிறது. அத்திருவுருவம் கலையம்சங்களுடன் நிறைவேறியதும் புனித நீரால் அபிஷேகிக்கப்பட்டவுடன் இறையம்சத்துடன் தெய்வீகப் பொலிவு பெற்று வழிபாட்டிற்கும் உபசாரத்திற்கும் உரியதாக விளங்குகின்றது. பிரதிஷ்டையின் பின்னர் பிம்பம் என்ற பெயர்நீங்கி இறைவனது திருநாமத்தைக் கொண்டு விளங்கும் நிலை ஏற்படுகின்றது. பிரபஞ்சத்தில் உள்ள பொருட்களில் இறைவன் விரவியுள்ள காரணத்தால் அட்டமூர்த்தி எனச்சிறப்பிக்கப்படுகின்றான். மண், நீர், நெருப்பு, காற்று, வெளி எனப்படும் ஐம்பூதங்களும் இவற்றுக்குப் புறம்பாய் இருந்து இவை விளங்கவும் வாழவும் ஆற்றல் பெருக்கும் சூரியனும் சந்திரனும் இவ்வேழு அம்சங்களின் வேறாய் நின்று இவற்றை உணரும் எசமானனும் ஆகிய எட்டுமே இதில் அடங்குகின்றன. இவ்வெட்டு அம்சங்களில் இறைவனை உணர்ந்து வழிபடுதலே கும்பாபிஷேகக்கிரியையின் உயர் நோக்கமாகும். கிழக்கு முதலாய எட்டு குண்டங்களிலும் இந்த அட்டமூர்த்தியைப் பூசித்தலும் சிறப்பம்சமாகும்.

எடுத்துக் காட்டாக காமிகாகமத்தின்படி பதினாறு கலாசூத்திர நவகுண்ட யாகசாலை பற்றிக் குறிப்பிடலாம். (ஆகமாமிர்த வர்ஷிணி - 1972 - பக். 52) லிங்க ஸ்தாபனத்திலும் உருவமூர்த்திகளின் ஸ்தாபனத்திலும் உற்சவத்திலும் ஸம்புரோக்ஷணத்திலும் தீனக்ஷயிலும் பாலஸ்தாபனத்திலும் 16 சூத்திரயாக சாலை அமைக்க வேண்டும். இதில் நவகுண்டங்கள் இடம்பெறுவன அவையாவன :

**திக்கு குண்டம்**

1. கிழக்கு **சதுஸ்ரம்**
2. அக்னி **யோனி**
3. தெற்கு **அர்த்தசந்திரன்**
4. நிருதி **திரிகோணம்**
5. மேற்கு **விருத்தம்**
6. வாயு **ஷடஸ்ரம்**
7. வடக்கு **பத்மம்**
8. ஈசானம் **அஷ்டாஸ்ரம்**
9. கிழக்குக்கும் ஈசானத்திற்கும் இடையில் பிரதானகுண்டம் - **விருத்தம் ஆகும்.**

நவகுண்டங்களில் அக்கினியைப் பல்வேறு நிலைகளில் பூசித்து அந்தந்த குண்டங்களுக்குரிய சமித்து வகைகள், விசேட ஹோமங்கள், பூர்ணாகுதி முதலியன

இடம்பெற்று யாகம் பூரண பொலிவு பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. யாகசாலை அமைத்தல் குண்டங்கள் நிர்மாணித்தல் கும்பாபிஷேகக்கிரியையின் போது சிறப்பான காரியங்களாகும். ஏக குண்டம், ஐந்து குண்டங்கள் (பஞ்சகுண்டம்) ஒன்பது குண்டங்கள் (நவ குண்டம்) பதினேழு குண்டங்கள் (சப்ததச குண்டம்) இருபத்தைந்து குண்டங்கள் (பஞ்சவிம்ச குண்டம்) முப்பத்து மூன்று குண்டங்கள் (திரயஸ்திரிம்ச குண்டம்) என்ற எண்ணிக்கையில் குண்டங்கள் யாகசாலையில் இடம் பெறுவன. குண்டங்கள் நிர்மாணிப்பதற்குரிய அளவுப் பிரமாணங்களும் அமைப்புக்களும் கூறப்பட்டுள்ளன.

கும்பாபிஷேகக் கிரியை அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என நான்கு வகையாகக் கூறப்படுகின்றன. ஆலயம் இல்லாத ஓரிடத்திலே ஆகம விதிகளுக்கமைய புதியதொரு ஆலயம் அமைத்து அங்கு இறைவனை எழுந்தருளச் செய்தல் அநாவர்த்தனம் எனப் பெயர் பெறும். பல காலத்திறகு முன் அமைக்கப்ட்ட ஆலயத்தில் தொடர்ந்து நித்திய நைமித்திகங்கள் நிகழ்ந்து வரும் வேளை எதிர்பாராதவாறு தீயினால் பாதிப்படைதல், காடுபடர்தல், மண்மாரி ஆகியவற்றால் தடையேற்படுமிடத்து அதனை நிவர்த்தி செய்து நிகழ்த்தும் பிரதிஷ்டை ஆவர்த்தனம் எனப் பெயர் பெறும். நித்திய நைமித்தியங்கள் முறையாக நடைபெற்றுவரும் ஆலயத்தில் விமானம், கருவறை, மண்டபம், கோபுரம், பிரகாரம், பரிவாரக் கோயில்கள், ஆலய வழிபாட்டிற்குரிய விக்கிரகங்கள் ஆகியவை பழுதடைந்தால் பாலஸ்தாபனம் செய்து திருப்பணி மூலம் புனரமைத்து பிரதிஷ்டை செய்தல் புனராவர்த்தனப் பிரதிஷ்டை எனப்பெயர் பெறும், திருடர் பிரவேசித்தல் எதிர்பாராத நிகழ்வுகள் ஆகியவற்றால் நித்திய பூசைகள் தடைப்படின் உடன் நிகழ்த்தப்படும் பிரதிஷ்டை அந்தரிதம் எனப் பெயர் பெறும்.

கும்பாபிஷேகம் நிகழும்போது இறுதிவரை இடையூறின்றி விநாயகப் பெருமான் அருள் வேண்டி நிகழ்த்தப்படுவது கணபதிஹோமம் அதனைத் தொடர்ந்து நிகழ்வது ஆச்சாரிய வர்ணம் கும்பாபிஷேகத்தை நிகழ்த்தும் ஆசாரியரைத் தேர்தல் இதன் நோக்கம் - இதனைத் தொடர்ந்து திரவியபாகம், அனுஞ்ஞை, கிராமசாந்தி, பிரவேசபலி, ரகேஷாக்ன ஹோமம், திசாஹோமம், சாந்திஹோமம், மூர்த்திஹோமம், வாஸ்துசாந்தி, நவக்கிரக மகம், மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரகஷாபந்தனம், ஜலாதிவாசம் (புதிய தெய்வ விக்கிரங்களுக்காக) தான்யாதிவாசம், நயனோன்மீலனம், கிராம பிரதக்ஷிணம், சயனோராபணம், அக்கினிகார்யம், நாமகாரணம், பிம்ப பிரதகஷ்ணம் பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், எண்ணெய்க் காப்பு. பிம்பசுத்தி, ஷடத்துவநியாசம், ஸபர்சாகுதி, யாத்ரா தானம், கும்பஉத்வாசனம், ஸ்தூபிஸ்தாபனம், இலிங்கத்திற்கு நவதநுதகல்பனம், ஆவாகனம், கும்பாபிஷேகம், ஆசீர்வாதம், மகாபிஷேகம், தீபாராதனை, ஆச்சார்யோற்சவம், மண்டபபூசை, மண்டலபூர்த்தி ஆகியவை கும்பாபிஷேகத்தின் முக்கிய கிரியைகளாகும்.

கும்பாபிஷேகக்கிரியையினால் திருக்கோயிலும் சூழலும் புனிதமடைவது போன்று அதில் ஈடுபடும் அனைவரது உள்ளங்களும் நிறைவுபெற்று பக்தியுணர்வு மேலிடும் - கும்பாபிஷேகக் கிரியைகள் நிறைவு பெற்றபின் இறைவன் ஆலயத்தில் சாந்நித்தியம் பெற்று அடியவர்களின் பக்திக்கு உரியவனாகின்றான். தெய்வீகப் பொலிவு பெற்று விளங்கும் இறைவனுக்குப் பல்வகை உபசாரங்கள், அபிஷேகம், அலங்காரம், நிவேதனம் அர்ச்சனை, தோத்திரம் உள்ளிட்ட வழிபாட்டு முறை தொடரும் இம்மரபை நம்பிக்கையுடன் பேணிப்பாதுகாத்து வருவது எம் அனைவரினதும் கடமையாகும்.



கும்பாபிஷேகத்திற்கான படிக்கட்டுக்களுடன் இராஜ கோபுரங்கள்



ஆலய முன்பாக அமைந்துள்ள சித்தா அமிர்த வாவி என
அழைக்கப்படும் திருக்குளம்.



கும்பாபிஷேக நிகழ்விற்காக சிவாச்சாரியர்கள் அழைத்து வரப்படல்



கும்பாபிஷேக கிரியைகளின் போது



# ஈழத்துச் சிதம்பரத்து மகா கும்பாபிஷேகம்

**செல்வி. இராணி வைத்தீசுவரக் குருக்கள்** - காரைநகர்

காரைநகர் மக்களின் மனத்தில் நீண்ட காலமாக இருந்து வந்த அபிலாஷை 7.6.98 ஞாயிற்றுக்கிழமை நிறைவேறிவிட்டது. அன்று ஈழத்துச்சிதம்பரத்தில் நடைபெற்ற மகா கும்பாபிஷேகமே ஈண்டுக் குறிப்பிடப்படுகின்றது. ஈழத்துச் சிதம்பர ஆலய முன்னேற்றத்தைப் பற்றிக் காலத்துக்குக் காலம் சிந்தித்துச் செயலாற்றிக் கொண்டுவந்த அன்பர்கள், சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும் ஆண்டிகேணி ஐயனாருக்கும் கோபுரங்கள் அமைக்கவேண்டுமெனப் பெரிதும் விரும்பினர். அவர்களது விருப்பங்காரணமாகக் கோபுரங்களை அமைப்பதற்கான கருங்கல்லுகளைச் செப்பமிடும் பணி 1982ஆம் ஆண்டு ஆரம்பமானது. உளிகள் எழுப்பிய இனிய ஒலி எமது காதுகளில் அதிகாலையிலேயே கேட்கத் தொடங்கிவிடும். இந்த இனிய ஒலி 1986ஆம் ஆண்டு வரை ஒலித்துக் கொண்டேயிருந்தது. இன்று அவ்வொலி இல்லை. ஆனால், கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் சுந்தரேஸ்வரப் பெருமானது இராஜகோபுரத்தையும், ஐயனாரின் அழகுமிக்க கோபுரத்தையும்காண்கின்றோம்; எமது பெருவிருப்பு நிறைவேறிவிட்டது என எண்ணிப் பெருமகிழ்ச்சியடைகின்றோம். கோபுரங்கள், வியாழவரி வரையும் கருங்கல்லினாலும் அதன்மேல் சுதையினாலும் அமைக்கப்பட்டுள்ளன. இரு கோபுரங்களிலும் எம்பெருமானின் திருவிளையாடற் காட்சிகள், தமிழ்நாடு உத்தரகோசமங்கையைச் சேர்ந்த திரு.ச.நாகலிங்க ஸ்தபதியால் பொம்மைவடிவில் மிகவும் நுணுக்கமாகவும் கலையழகு ஒழுகவும் அமைக்கப்பட்டுள்ளன. இராஜகோபுரம் 64அடியும் ஐயனாரின் கோபுரம் 40 அடியும் உயரமானவை.

கோபுரவேலைகள் முடிவுறும் நிலையில் இருந்தபோது 1988ஆம் ஆண்டு மூலமூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டன. கருவறை வேலைகளும், தூபி வேலைகளும் மிகத்துரிதமாக நடைபெற்று வந்தன. 1991ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகத்தை நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்த வேளையில் எதிர்பாராத விதமாகக் காரைநகர் மக்கள் - ஏறக்குறைய 25000 பேர் - அடுத்த கணம் என்ன நடக்குமோ என்று தெரியாத நிலையில், அழுத கண்ணும் கூப்பிய கரங்களுமாய், சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும் ஆண்டிகேணி ஐயனாருக்கும் நேர்த்திகள் வைத்துவிட்டுப் பயங்கரமான எறிகணைத் தாக்குதலுக்கும், விமானக் குண்டு வீச்சுக்கும், கடற்படைக்கப்பலின் பீரங்கித் தாக்குதலுக்கும் மத்தியில் ஊரைவிட்டு வெளியேறி, அலையலையாகக் கடல்மார்க்கமாக ஒற்றையடிப் பாதையில் நடந்து, பொன்னாலைக் கண்ணபிரான் கோயிலின் வீதிக்கு வந்து சேர்ந்தனர். ஆயினும் அன்பர்கள் சிலர், காரைநகரிலேயே தங்கிவிட்டனர். சுந்தரேஸ்வரர் அவர்களைத் தமது வசந்த மண்டபத்தில் 36 நாள்கள் வைத்திருந்து பாதுகாத்து வந்தார்.

காரைநகரினின்றும் வெளியேறியவர்கள் எப்போது காரைநகருக்குச் சென்று ஐயனாரை வழிபடுவோம் என்ற எண்ணத்துடனேயே இருந்தனர். அவர்களுட் சிலர், ஈழத்துச் சிதம்பரத்தைத் தரிசித்த பின்புதான் இரவு உணவை உட்கொள்ளுவது என்ற பிடிவாதத்துடன் மத்தியான உணவை மட்டுமே உண்டு காலங்கழித்து வந்தனர். அன்பர்கள் எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் ஆண்டிகேணி ஐயனாரையும், சுந்தரேஸ்வரப் பெருமானையும் சேர்த்தே வழிபட்டு வரலாயினர். அவர்களுடைய வழிபாடு வீண்போகவில்லை. 1997ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் பொன்னாலை வழியாகக் காரைநகருக்குச் செல்லும் பாதை திறக்கப்பட்டு மக்களின் போக்குவரத்துக்கு வசதி செய்யப்பட்டது.

திருப்பணிச் சபையினர் ஈழத்தச் சிதம்பரத்துக்கு வந்து மகாகும்பாபிஷேகத்துக்கான ஆயத்தங்களைச் செய்தனர். கும்பாபிஷேகத்துக்கான நாள் 7.6.98 ஞாயிற்றுக்கிழமை எனக் குறிக்கப்பட்டது. சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும் சௌந்தராம்பிகை அம்மைக்கும் ஒன்பது குண்டங்களுடன் கூடிய யாகசாலைகளும், ஐயனாருக்கு ஐந்து குண்டங்களுடன் கூடிய யாகசாலையும் அமைக்கப்பட்டன. இந்த யாகசாலைகளின் அழகான அமைப்பு எம்மால் என்றும் மறக்க முடியாத ஒன்றாகும். கூத்தப்பிரானுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும், சிவன், ஐயனார் கோபுரங்களுக்கும் ஒவ்வொரு குண்டத்துடன் கூடிய யாகசாலைகள் அமைக்கப்பட்டன.

1.6.98 அன்று அதிகாலை ஐந்து மணியளவில் ஈழத்துச் சிதம்பர பிரதம சிவாசாரியர் சிவஸ்ரீ க.மங்களேஸ்வரக்குருக்களின் ஆசியுடன் சிவஸ்ரீ சாமி. விஸ்வநாதக் குருக்களின் தலைமையில் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்து ஏழு நாள்கள் நடைபெற்றன. நயினாதீவு நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான பிரதம சிவாசாரியர் சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்கள், இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் முதலான 34 சிவாசாரியர்கள் கிரியைகளிற் கலந்து கொண்டார்கள்.

திருப்பணிச் சபையாரின் அழைப்புக்கு இணங்கி, கும்பாபிஷேகக் கிரியைகளிற் கலந்து கொள்ளுவதற்காகச் சென்னையிலிருந்து சர்வசாதக சிந்தாமணி சிவஸ்ரீ சு. முத்துக்குமாரசாமிக்குருக்கள், (முத்துக்குருக்கள்) ஈழத்துச் சிதம்பரத்துக்கு வந்திருந்தார். 80 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தும் ஓர் இளைஞனைப் போன்று மிகுந்த உற்சாகத்துடனும் புன்னகை தவழும் முகத்துடனும் கம்பீரமாகத் தமது இனிமையான குரலில் வேதம் ஓதிக்கொண்டிருந்த காட்சி கிரியைகளுக்கு மேலும் மெருகூட்டுவதாக இருந்தது. எங்கள் பெரியவர் சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் என்று எண்ணுமளவுக்கு அந்தச் சென்னைக் குருக்கள் தோன்றுகிறார் எனப் பேசிக்கொண்டார்கள் மக்கள். அந்த அந்தணப் பெருந்தகையின் தோற்றத்தில் கணபதீஸ்வரக்குருக்களைக் கண்டு மகிழ்ந்த அன்பர்கள் பலர். 3.6.98 புதன்கிழமை முதல், சிவாசாரியர்கள் பத்ததி வாசிப்பவர்கள், பரிசாரகர்கள் என்போர் உட்பட 60 அந்தணர்களைக் கிரியைகள் நடைபெற்ற போது காணக்கூடியதாக இருந்தமை நாம் செய்த தவப்பயனேயாகும். ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைப் பக்தி பூர்வமாகவும் ஆகம முறை வழுவாமலும், அமைதியாகவும் செய்து வந்தமை மிகமிக வியந்து பாராட்டுதற்குரியது.

சிவாசாரியர்கள் சந்தியானுஷ்டானத்தை முடித்துக் கொண்டு தோற்றப் பொலிவுடன் மங்கள வாத்தியம் முழங்க பிரதம சிவாசாரியரின் தலைமையில் அடியார்கள் புடைசூழ வரிசையாக யாகசாலைக்குச் சென்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. கிரியைகளின் ஓர் அங்கமாக விளங்கும் பஞ்சமுகார்ச்சனை, விசேட திரவியஹோமம், பூர்வ பட்சிம சந்தானம், மகாபூர்ணாகுதி முதலியன மிகச் சிறப்பாக இருந்தன. தினமும் வேதபாராயணமும், திருமுறைப் பாராயணமும் நடந்து கொண்டேயிருந்தன.

கும்பாபிஷேகத்தைக் காண்பதற்காக முதல் நாளாகிய சனிக்கிழமையே (6.6.98) வெளியூர் அன்பர்கள் பலர், ஈழத்துச் சிதம்பரத்துக்கு வந்துவிட்டார்கள். அவர்களுக்கு மாணிக்கவாசகர் மடத்தில் உணவு வழங்கப்பட்டுத் தங்குவதற்கான வசதியும் செய்து கொடுக்கப்பட்டது.

கும்பாபிஷேக தினமாகிய ஞாயிறு அதிகாலைப் பொழுதில் ஆலயமணியோசை ஊரெல்லாம் தவழ்ந்து வந்தது. "இன்னும் சிறிது நேரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது. விரைந்து வாருங்கள்" என்று அறிவிப்பது போன்றிருந்தது, அந்த மணியோசை. யாகபூசை முதலியன முடிவுற்ற பின்னர் மூர்த்திகளின் தூபிக் கும்பங்களும், கோபுரக்கும்பங்களும் வீதி வலமாகக் கொண்டு வரப்பட்டன. தூபிக் கலசங்களுக்கு அபிஷேகம் நடைபெற்றது. கோபுரக்கும்பங்கள் கோபுரத்தை அண்மித்து விட்டன. வடக்குப் பக்கத்தில் விசேடமாக அமைக்கப்பட்டிருந்த ஏணிப்படிகள் வழியாகச் சுந்தரேஸ்வரப் பெருமானின் இராஜகோபுரத்துக்கும், தெற்குப்பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த ஏணிப்படிகள் வழியாக ஐயனாரின் கோபுரத்துக்கும் அந்தணர்கள் கும்பங்களை ஏந்திய வண்ணம் ஏறிச் சென்றார்கள். கோபுர கலசங்களுக்கு அபிஷேகம் நடைபெற்றது. அபிஷேக நீர் கோபுரங்கள் வழியாக வழிந்து கீழே வந்து கொண்டிருந்தது. மக்கள் முண்டியடித்துக்கொண்டு கோபுரங்களுக்குக் கீழே ஓடினார்கள். அப்புனித நீரில் ஒரு சிறு துளியாவது தம் மேனியிற்பட்டுத் தமது பாவவினைகள் எல்லாம் நீங்க வேண்டுமென்பதே அவர்களுடைய அவாவாக இருந்தது. இந்த இனிய காட்சிகளையெல்லாம் ஐயனார் கோபுர ஏணிப்படியில் நின்று திரு. ஆறு. திருமுருகன் அவர்கள் அழகொழுகும் தமிழில் அற்புதமாக விபரித்துக் கொண்டிருந்தமையைக் கேட்டுப் பலரும் பயனடைந்தனர்.


தூபி, கோபுர அபிஷேகங்கள் முடிந்துவிட்டன. எங்கும் ஒரே இனிமையான சூழ்நிலை காணப்பட்டது. அடியவர்களின் தொகை நிமிடத்துக்கு நிமிடம் கூடிக்கொண்டே வந்தது. எல்லோருடைய முகத்திலும் புன்னகை தவழ்ந்தது. மகாகும்பாபிஷேகக் காட்சியைக் காணும் நேரம் நெருங்கிவிட்டதை எண்ணி மகிழ்ச்சிக் கடலில் மிதந்தனர் மக்கள்.

நேரம் 7.30 மணி. யாகசாலைகளிலிருந்து பிரதான கும்பங்கள் தூக்கப்பட்டு வேதபாராயணமும் திருமுறைப்பாராயணமும் நிகழ, வீதி வலமாகக் கொண்டு வரப்பட்டு அந்தந்தச் சந்நிதானங்களில் வைக்கப்பட்டன. பிரதான சிவாசாரியராகிய சிவஸ்ரீ சாமி. விஸ்வநாதக்குருக்கள் சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு அருகில் நின்று கண்களில் ஆனந்த அருவி சொரிய, தம்மை மறந்த நிலையில் கிரியைகளைச் செய்து கொண்டிருந்தார். அந்தணர்கள் வேதங்களை ஓதிக்கொண்டிருந்தனர். ஓதுவா மூர்த்திகள் திருமுறைப்பாராயணஞ் செய்து கொண்டிருந்தனர். பஜனைக் கோஷ்டியினர் அவன்

புகழைப் பாடினர். ஒருபக்கம் சங்கொலி. மறுபக்கம் சேகண்டிகளின் இனிய நாதம். மணிகளின் ஒலியும் காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. இவற்றையெல்லாம் விஞ்சிய நிலையில் நாதஸ்வர, தவில் கலைஞர்களின் வாத்திய ஒலி காணப்பட்டது. எங்கும் ஒலிமயம். "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்றார் அப்பர் சுவாமிகள். அன்பர்கள் உச்சியிற் கூப்பிய கைகளுடன், நெஞ்சம் நெகிழ்ந்துருக, மெய் அரும்பி விதிர்விதிர்க்க, கண்ணீர் ததும்ப, வைத்த கண் வாங்காமல் அவனுடைய சந்நிதானத்தையே நோக்கிய வண்ணம் இருந்தனர். திடீரென இவ்வொலிகளையெல்லாம் மீறி எழுந்தது பக்தர்களின் "அரோகரா" ஒலி. ஆம்! சுந்தரேஸ்வரப்பெருமானுக்கு 8.10 மணிக்குக் கும்பாபிஷேகம் இனிது நடைபெற்றது. "எம் பெருமானுக்குக் கும்பாபிஷேகத்தை நடத்தி முடித்துவிட்டோம்" என அடியார் கூட்டம் பேரானந்தம் அடைந்தது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து சிவஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு.ஆறு.திருமுருகன் என்போரது ஆசியுரைகளும், பின்னர் நல்லை ஆதீன மகாசந்நிதானம் அவர்களின் ஆசியுரையும் இடம்பெற்றன. தொடர்ந்து மகாபிஷேகம் நடைபெற்றது. பிற்பகல் திருக்கலியாணமும் பஞ்சமூர்த்திகளின் திருவீதியுலாவும் இடம்பெற்றன. எம்முடைய வாழ்நாளில் காண்பதற்கு மிகவும் அரியதான, இந்த அற்புத கும்பாபிஷேகக் காட்சியைக் காணக்கிடைத்தது ஏதோ நாம் முற்பிறப்பில் செய்த சிறிதளவு புண்ணியத்தின் பயனேயாம்.





# ‘கோபுர தரிசனம் கோடி புண்ணியம்’

**செல்வி. சித்திரா ஞானசம்பந்த குருக்கள்**
(உயர்தர வகுப்பு மாணவி) காரைநகர்.

பெரிய பிரகாரம் ஒன்று எடுத்து அதற்கு வாயில் ஒன்று வைக்கப்படுகின்றது. அந்த வாயிலுக்கு உயர்ந்த கோபுரம் ஒன்று அமைக்கப்படுகின்றது. ஆலயத்திற்கு உள்ளே இருக்கும் கோபுரங்களை எல்லாம் விட இது உயர்ந்ததாக இருக்கும். நெடுந்தூரத்துக்கு அப்பால் இருந்தும் இதனைக் காணலாம். இந்தக்கோபுரத்தினையே இராஜகோபுரம் அல்லது ஸ்தூலலிங்கம் என்று கூறுவார்கள். எட்ட இருந்து வரும் பக்தர்களுக்கு தூரத்தில் இருந்து காட்சி தரும் இராஜகோபுரம் பரம்பொருளை பற்றி ஞாபகமூட்டுவதற்கே அமைந்துள்ளது. கண்ணுக்குத் தென்படுகின்ற பொழுதே பக்தர்கள் இராஜகோபுரத்தினையே தெய்வ சொரூபமாக வழிபடுவர்.

மேலும் ஆலயத்தின் கோபுரம் பிரபஞ்ச இயக்கத்தை விளக்குகின்றது. அடுக்கடுக்காய் அமைந்து தளங்கள் பல்வேறுபட்ட உலகங்களையும், உலகவாழ்க்கையின் பலவித அனுபவங்களையும் குறிப்பன. இராஜகோபுரத்தினை நாம் நுணுக்கமாக நோக்கினால் பல அற்புதங்களை காணலாம். அதாவது கணக்கற்ற வடிவங்கள் அதன்கண் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளுள் மானுட வடிவங்களை ஏராளமாக காணலாம். அவர்களுடைய வித விதமான வாழ்க்கை முறைகளும் ஆங்காங்கே காணப்படும் வடிவங்களில் விளக்கப்பெற்றிருக்கும். தேவர்களும் ஏராளமாக இடம் பெற்று அவர்களின் செயல்களும் இராஜகோபுர சிற்பங்களினூடாக சித்தரிக்கப்படுகின்றன. மானிடர்கள், தேவர்கள் மட்டுமன்றி இப்பிரபஞ்ச அமைப்பில் சிற்றுயிர்கள், பேருயிர்கள், விலங்கினங்கள், பறவைகள் எல்லாவற்றுக்கும் இடம் உண்டு என்பதனை விளக்குவதற்கு இராஜ கோபுரத்தில் நிறைவாக அமைக்கப் பெற்றுள்ளன.


இந்த பிரபஞ்ச அமைப்பினுள் இன்னது தான் இருக்கலாம், இன்னது இல்லை என்று பாகுபடுத்த முடியாது எல்லாப் படித் தரங்களிலும் உள்ள அனைத்தும் ஆங்கு இடம் பெறுகின்றன இக்கோட்பாட்டையே இராஜ கோபுரம் உருவகப்படுத்தி விளக்குகின்றது. இந்த இராஜ கோபுரத்தில் நாகரீக பண்புக்கு அற்ற சில புதுமைகளையும் காணலாம். ஆனால் பக்திரஸம் இல்லாத ஆலய வழிபாட்டுக்கு பொருந்தாத, கீழான எண்ணங்களைத் தோற்றுவிப்பதற்கு துணை புரியும் இவற்றையும் அமைப்பதற்கு காரணம் உண்டு. ஏனெனில் ஆகம விதியின்படி சிற்பாசாரியார்கள் இதனை அமைத்தே ஆகவேண்டும். அதன்மூலம் இயற்கையில் உள்ள நலம், கேடு போன்றவற்றை சுட்டிக்காட்டி விளக்குகின்றது. உதாரணமாக நமது உடலின் அமைப்பை நோக்குகையில் உடலின் பாங்கினை விளம்பரப்படுத்த வேண்டிய பகுதிகளும் உள்ளன. மறைத்து வைக்க வேண்டிய பகுதிகளும் உள்ளன. அதற்காக நாம் வெட்கப்படுவதோ அல்லது வருந்தி துன்பப்படுவதோ

கிடையாது. மேலும் நாள் என்பது ஒன்றே ஆனால் இரவு, பகல் என்பது மாறி மாறி வருவதில்லையா. இவற்றை இயற்கையோடு தொடர்புபடுத்தி அதன்மூலம் இயற்கையிலே நன்மையும், தீமையும் அமைந்திருக்கின்றது என்பதற்காகவே இராஜகோபுரம் அமைந்துள்ளது.

இராஜ கோபுரத்தின் வாயில்கள் ஒற்றைப்பட்டையாகவே அமைந்திருக்கும். மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று இங்ஙனம் அதன் வாயில்கள் ஒன்றன்மேல் ஒன்றாக பெருகிகொண்டு போகும். மூன்றுவாயில்கள் உள்ள இடத்து ஜாக்கிரத, சொப்ன, சுஷுப்தி, என்னும் மூன்று அவஸ்தைகளை குறிக்கின்றன. ஐந்து வாயில்கள் ஐம்பொறிகளையும் ஏழுவாயில்கள் உள்ள இடத்து மனம், புத்தி என்னும் இரண்டு தத்துவங்களும், ஒன்பது வாயில்கள் உள்ள இடத்து சித்தம் அகங்காரம் என்னும் இரண்டு தத்துவங்களும் சேர்க்கப்பெறுகின்றன. இங்ஙனம் நம்முடைய அமைப்பில் உள்ள வெவ்வேறு தத்துவங்களுக்கு கோபுர வாயில்கள் சின்னங்களாக அமைந்து இருக்கின்றன. இத்தனை வாயில்களிலும் ஆலயத்தினுள் பிரவேசிப்பதற்கு தரைமட்டத்தில் உள்ள ஒரு வாயில் தான் உதவுகின்றது. ஏனையவை அமைக்கப்பெற்று இருப்பினும் ஆலயத்தினுட் செல்வதற்கு பயன்படுவதில்லை. இதன் தத்துவம் யாது என நோக்கின்.

புறக் காரணங்களும், அகக்காரணங்களும் பல நம்மிடத்தும் இருக்கின்றன எனினும் கடவுள் நாட்டம் கொள்கின்ற போது மனம் என்னும் ஒரு கரணமே பெரிதும் பயன்படுகின்றது. ஏனைய கரணங்கள் பயன்படுவதில்லை. மனம், புத்தி முதலியவைகளைக் கொண்டு பஞ்சேந்தியங்களைக் கொண்டும் புறஉலக வாழ்க்கையை நிறுத்தி வைத்து விட்டு மனத்தின் துணைக்கொண்டு பரம்பொருளிடம் ஒருமுகமாக முத்தி அடையச் செல்ல வேண்டும் என்னும் கோட்பாட்டினை இராஜகோபுர வாயினுள் நாம் செல்லும் பிரவேசம் விளக்கிக் காட்டுகிறது.

தொகுத்து நோக்குகையில் இத்தகைய சிறப்புக்களையும், உயர்வுகளையும் உள்ளடக்கியது இராஜகோபுரம் என்பது தெளிவாகின்றது. இவையனைத்தையும் அறிந்ததினால் போலும் நமது முன்னோர்கள் “கோபுரதரிசனம் பாவ விமோசனம்” என்றும் “கோபுரதரிசனம் கோடி புண்ணியம்” என்றும் கூறியுள்ளார்கள். இத்தகைய பழம்பெரும் சிறப்புக்களையும், உயர்வுகளையும் தன்னகத்தே உள்ளடக்கியும் அமைதியாக பக்தர்களுக்கு அருள்பாலித்த வண்ணம் ஈழத்து சிதம்பரம் என்று பெருமையோடு அழைக்கப்படும் காரைநகர் சிவன் ஆலயத்தின் இராஜ கோபுரத்தினை வழிபட்டு பரம் பொருளின் பெரும்புகழினை பாடி ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிசெய்வோம்.





# காரைநகர் சிவன் கோவில் அமைப்பும் அங்குள்ள பழமை மரபுகளும்

**திரு. வே. குமாரசுவாமி அவர்கள்** - காரைநகர்.

அலைகடல் சூழ்ந்ததும் அமெஸ்ரடாம் என்று முன்னாளில் பெயர் பெற்று இருந்த நன்னகரான காரைநகர் ஒரு புண்ணிய பூமி. இங்கு அகத்தியர், துர்வாசர், தினகரன் என்னும் முனிவர்களுடன் ஆண்டி முனிவரும் இங்கு வருகை தந்தனர்.

இந்தியாவின் சேதுக்கரையை காவல் செய்தவர்களின் மரபில் வந்து பிறந்தவரே ஆண்டிமுனிவர். இவர் மனஅமைதியின்றி இலங்கை வந்து புண்ணியஸ்தலங்களை வழிபட்டு வருகையில் காரைநகர் வியாவில் வந்து சேர்ந்தார். இங்கு ஏழுநிலக் கோபுரத்துடன் இருந்த ஐயனாரது கோவிலின் அழிவு கண்டு மனம் கலங்கினார். இந்த மனக்கலக்கம் தீர ஐயனார் கனவில் தோன்றி "நானே நீ நீயே நான்" காரைநகரின் வடகீழ் திசையில் துருவாசசாகரத்துக்கு அண்மையில் அரசின் கீழ் இருக்கின்றோம் என்று கூறி மறைந்தார்.

கனவு கண்ட மறுதினம் காலை அங்கு வந்து அரசின்கீழ் தாம் கொணர்ந்த வைரவ சூலத்தினை வைத்து வழிபட்டார். இப்படி இருக்கும் போது ஒரு நாள் அரசின் தென்கீழ் திசையில் பேரொளி தோன்றக் கண்ட ஆண்டிமுனிவர் அவ்விடத்தில் கேணி தோண்டுகையில் ஐயனார் விக்கிரகம் வெளிப்படக் கண்டார். இதனால் வந்த பெயரே "ஆண்டி கேணி ஐயனார்". இந்த விக்கிரகத்தினை எடுத்து வழிபாடு செய்து வந்தார். இந்நிகழ்வுகள் யாவும் அம்பலவி முருகருக்கு சொந்தமான பெருநிலப்பரப்பில் நடந்தன. இதணையறிந்து அம்பலிவிமுருகர் அங்கு வந்தபொழுது ஆண்டி முனிவரால் ஆட்கொள்ளப்பட்டார்.

அன்று முதல் இன்று வரை திண்ணபுரம் சைவ மணம் வீசிக் கொண்டு இருக்கின்றது. இறைவன் வழிகாட்டலால் ஆண்டிமுனிவரும் அவரின் வழிகாட்டலால் அம்பலவி முருகரும் நாயன்மார் போன்று சிவதொண்டர் ஆகினர்.

ஆண்டிமுனிவர் ஆணைப்படி கோவிலமைத்து குடமுழுக்காட்டி நித்திய நைமித்திய பூசைகளை சைவ ஆகமமுறைப்படி அம்பலவி முருகர் செய்து வந்தார். அன்று ஒருநாள் அம்பலவிமுருகர் இறைவனது பூசைக்கு உரிய நெல்லைத்தண்ட சென்ற பொழுது கேட்ட வார்த்தைகளால் மனம் புழுங்கி இறைவனுக்கு ஆக்கும் நைவேத்தியங்களில் உப்பு சேர்க்காமல் ஆக்க தொடங்கினார். இந்த வழமை இன்றும் இருந்து வருகின்றது.

அம்பலவி முருகர் ஐயனாரது வழிபாட்டில் மனதில் கண்ட காட்சிகள் இன்று ஐயனாரது இடது புறத்தில் இருக்கின்ற சிவன்கோவிலும் அக்கோவிலில் தென்புறம் நோக்கி திருநடனம் புரிகின்ற நடராசரது காட்சியும் பிரதிபலிக்கின்றது. இறைவன் ஆண்டிமுனிவரின் கனவில் தோன்றி "நானே நீ நீயே நான்" என்று சொன்னது போல

கோவில் அமைந்துள்ள ஐயனாரது மூலஸ்தானமும் அதன் பின்புறமும் அமைந்த சோமாஸ்கந்தர் கோவிலும் எடுத்துக்காட்டுகின்றது.

நாம் திண்ணபுரத் தலத்திற்கு சென்றதும் மூன்றாம் பிரகாரத்தில் உள்ள தினகரன் பிட்டிவைரவர் கோவிலையும் கும்பிட்டு சித்தாமிர்த வாவியில் (திருக்குளம்) கால், கை, முகம் கழுவி வடபத்திரகாளியை வணங்கி போகும் போது ஐயனார் சிவன் கோபுரங்களை கும்பிட்டு ஆண்டி முனிவரால் வழிபடப்பட்ட அரசடி வைரவரை வணங்கி சிவன் வாசல் சேர்ந்து கோபுரத்தை வணங்கி ஐயனார் கோபுரத்தை வணங்கி ஐயனார் வாசல் வழியாக சென்று ஐயனாரை வழிபட்டு பின் உட்பிரகாரத்தில் வழிபட்டு வரும் பொழுது சோமாஸ்கந்தர் நடராசர் வழிபாடு செய்து வந்து சிவன் வாசல் வந்து கும்பிடும் வழக்கம் இன்றும் வழங்கி வருகின்றது. இவ்வழிபாட்டு முறையை நாம் பார்க்கும் பொழுது இறைவனால் திருவாய் மலர்ந்த "நானே நீ நீயே நான்" என்ற சொல் ஆண்டி முனிவர் அம்பலவி முருகரை ஆட்கொண்டதை காணக்கூடியதாக உள்ளது.

ஆண்டி அம்பலவி முருகர் போன்று ஒட்டிப் பிறவா இரட்டையர் போன்று கோவில் அமைப்புக்களும் முறைகளும் குன்றின் மேல் தீபம் போல் தெரிகின்றது.

| | |
|---|---|
| **ஆண்டி** | **- அம்பலவி முருகர்** |
| **ஐயனார்** | **- சிவன்** |
| **கூழையன்** | **- வாலன் (அம்பலவி முருகர் காலத்து நாகங்கள்)** |
| **சங்கரன்** | **- கந்தன் (ஆலய எருதுகள்)** |
| **பெரிய குருக்கள்** | **- சின்னக் குருக்கள்** |
| **ஆதீனகர்த்தா** | **- இருவர்** |
| **பங்குனித்திருவிழா** | **- மார்கழித்திருவிழா** |

**இருகோபுரங்கள்**
**இரண்டு மணிக்கோபுரங்கள்**

இவ்வாலய ஆரம்ப கர்த்தாவாகிய அம்பலவி முருகர் காலத்தில் இருந்து இன்றுவரை நடக்கும் பின்வரும் வழக்கங்கள் ஆகமத்திற்கு ஒரு உரைகல்லாக திகழ்கின்றது.

1. அவரது விரதத்தை என்றும் நிறைவேற்றும் வகையில் உப்பின்றி நிவேதனம்

2. எந்த ஒரு நிகழ்வும் முதலில் ஐயனார் வாசலில் நிகழ்தல் (ஏடு தொடக்கல், அரங்கேற்றம் போன்றவை) கோயில் நைவேத்தியத்துக்கு எடுக்கும் அரிசி கையால் உரலில் குற்றப்பட்டதாக இருக்க வேண்டும்.

3. அபிஷேகத்திற்கு எடுக்கும் பால் செம்பு வெள்ளிப்பாத்திரங்களில் கொண்டு வரப்படவேண்டும்.

4. ஆலய நித்திய பூசைக்கு அருச்சனைக்கு எடுக்கப்படும் பூக்கள் வில்வங்கள் சிவாச்சாரியரால் அல்லது சைவ அடியார்களால் செப்புக் கூடையில் அல்லது தென்னோலையால் இழைக்கப்பட்ட கூடையில் கொண்டுவரப்படுதல்.

5. அபிடேகத்திற்கு பாவிக்கும் நல்லெண்ணெய் உரலில் எள்ளைத் துவைத்து பிழிந்து எடுத்ததாக இருக்க வேண்டும்.

6. விபூதி ஊரவர்களால் கொண்டு வரப்பட்டு நீரில் கழுவி காயவைத்து பாவித்தல்.

7. திருவிழாக்கள் தொடங்க ஒருகிழமை முன்னதாக ஆதீனகர்த்தாக்களால் திருவிழா உபயக்காரர்களுக்கும் அவ்வூர் அடியவர்க்கும் பட்டி கொடுத்தல் (விபூதி சந்தனம் என்பன இலையில் வைத்து பூவும் சேர்த்துக் கட்டப்பட்டது)

8. வட பத்திரகாளிக்கு விளக்கு வைத்து பங்குனி திருவிழா முடியும் வரை ஊரவர்கள் வெளியூர் பிரயாணங்கள் போவதில்லை. பங்குனி திருவிழாவின்போது இழுக்கப்பட்ட சப்பரம் தேர் என்பன ஐயனார் வேள்வி முடிந்த பின்புதான் வேயப்படும்.

9. மார்கழித் திருவிழாவின் போது வழங்கப்படும் பட்டி திருவெம்பாவை பட்டி என்று சொல்லப்படும். இத்திருவிழாவின் போது இழுக்கப்படும் பஞ்சரதங்களும் தைப்பொங்கலன்று நடைபெறும் அரசடி வைரவர் பொங்கல் முடிந்த பின்னர் வேயப்படும்.

10. வடபத்திரகாளி கோவில் பொங்கல் ஆதீனகர்த்தாவால் நாயகப் பானை வைக்கப்பட்டு பொங்கல் விழா நடைபெறும். ஊர் அடியவர்கள் பொங்கல் செய்து படையல் செய்வர். அதில் ஒருபகுதியை கடகத்தில் சேர்த்து வடபத்திரகாளி கோவிலுக்கு அண்மையில் உள்ள தனிப்பனைக்கு அண்மையில் சிவாச்சாரியரால் எடுத்து செல்லப்பட்டு படைத்து விட்டு வந்த பின்னர் தான் அடியவர்கள் தங்கள் பொங்கல்பானையை தூக்குவார்கள். ஐயனார் அரசடி வைரவர் பொங்கலும் இவ்வாறானதே.

11. ஐப்பசி பூரணையில் நடைபெறும் அன்னாபிஷேகத்தின்போது சிவனுக்குச் சாத்தப்படும் அன்னமும் சூரியஸ்தமனத்திற்கு முன் துருவாசசாகரத்தில் சேர்க்கப்படும்.


இங்குள்ள அந்தணப் பெரியோர்கள் உத்தர கோசமங்கையூரில் இருந்து வந்த மங்களேசுவரக்குருக்கள் பரம்பரையினர் ஆவர். இவர்கள் என்றும் ஆசாரசீலர்களாக இருந்து வேதசிவாகமமுறைப்படி பூசை புரிந்து வருகிறார்கள். இவர்கள் பரம்பரையில் வந்த சரவணபவக் குருக்கள், கணபதிசுவரக்குருக்கள், மங்களேசுவரக்குருக்கள் காலங்களில் இக்கோவில் பல்லாற்றாலும் வளர்ச்சி கண்டது.

காரைநகரில் சைவசமயம் வளர "ஈழத்துச்சிதம்பரம்" மையமாக திகழ்ந்தது என்று "காரைநகரில் சைவ சமய வளர்ச்சி" என்னும் நூலை எழுதிய "சிவத்தமிழறிஞர்" சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக்குருக்கள் கூறினார்கள். அவரும் இந்தப் பரம்பரையில் வந்தவர் என்பது குறிப்பிடற்குரியது. அவர் சைவத்திற்கும் தமிழுக்கும் ஆற்றும் சேவை என்றும் போற்றற்குரியது.

மேலே சொல்லப்பட்டவை திண்ணபுரத்தினையும் அங்குள்ள சிவாலய அமைப்பையும் அதன் மரபு நெறியையும் கூறியதனால் இதனை திண்ணபுரக் கலாச்சாரம் எனப் பெருமைபடக் கூறிவிடலாம்.

உ

அன்னை துணை



# அபயம் செய்யும் ஆண்டிகேணி ஐயன்!


**மதுரகவி காரை எம். பி. அருளானந்தன் அவர்கள்**

(ஆசிரியர், யா/கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி. - காரைநகர்)


காரைநாட்டில் எழில் திண்ணபுரத்தில்
காத்தருள் செய்பவன் எங்கள் ஐயப்பன்!
பேரை நினைத்தே பெரும் நேர்த்தி செய்திட
பெரும் பாவம் தீர்ப்பவன் ஐயப்பன்!
தில்லைக் கூத்தனின் திக்கிலிருப்பவன் ஐயப்பன்!
தேடியழுபவர் துயரம் தீர்ப்பவன் ஐயப்பன்!
தொல்லை வினைகள் துரத்தி வைப்பவன் ஐயப்பன்!
தொன்மைத் தெய்வமாய் துணையிருப்பவன் ஐயப்பன்!

ஆண்டி கேணி அப்பன் நீயே ஐயப்பா
அருவணைத்து காக்கும் தெய்வம் நீயே ஐயப்பா
நீண்ட துயரை நிறுத்தும் அப்பன் நீயே ஐயப்பா
நிம்மதி வாழ்வில் பெருக்கும் தெய்வம் நீயே ஐயப்பா
வேண்டுவார்க்கு அபயம் செய்வாய் ஐயப்பா
விடிவு தந்து எம்மைக் காப்பாய் ஐயப்பா
ஆண்டு கொள்வாய் எம்மை நீயே ஐயப்பா
ஆண்டிகேணி அப்பன் நீயே ஐயப்பா

அபயம் செய்திடுவாய் சுவாமி ஐயப்பா
ஆறுதலை அளித்திடுவாய் ஐயப்பா
உபயம் ஏற்றிடுவாய் சுவாமி ஐயப்பா
உலகம் காத்திடுவாய் சுவாமி ஐயப்பா
வல்வினைகள் போக்குவாய் சுவாமி ஐயப்பா
வாழும்முறை காட்டிடுவாய் சுவாமி ஐயப்பா
தில்லைதனை நாடிவிட்டால் சுவாமி ஐயப்பா
தீமைகளை நீக்கிடுவாய் சுவாமி ஐயப்பா

காரைநகர் மக்களுக்கு சுவாமி ஐயப்பா
கண்கண்ட தெய்வமானாய் சுவாமி ஐயப்பா
பேரை நினைத்துவிட்டால் சுவாமி ஐயப்பா
பெரும் பாவம் தீர்ந்துவிடும் சுவாமி ஐயப்பா
எண்ணியவை நிறைவேற சுவாமி ஐயப்பா
எங்களுக்கு அருள்புரிவாய் சுவாமி ஐயப்பா
புண்ணியங்கள் செய்திடவே சுவாமி ஐயப்பா
புத்துணர்வு தந்திடுவாய் சுவாமி ஐயப்பா

ஈழத்து சிதம்பரத்தில் சுவாமி ஐயப்பா
இணையற்ற தெய்வம்நீ சுவாமி ஐயப்பா
எங்களின் வாழ்வில் சுவாமி ஐயப்பா
என்றுமே துணையிருப்பாய் சுவாமி ஐயப்பா
மார்கழியில் உந்தனுக்கு சுவாமி ஐயப்பா
மாண்பான உற்சவங்கள் சுவாமி ஐயப்பா
தேரேறி வந்தருள்வாய் சுவாமி ஐயப்பா
தேவைகளை நிறைந்திடுவாய் சுவாமி ஐயப்பா

காரைநகர் வீதியெங்கும் சுவாமி ஐயப்பா
காவடிகள் உந்தனுக்கு சுவாமி ஐயப்பா
பாற்குடங்கள் வீதியெங்கும் சுவாமி ஐயப்பா
பால்அபிஷேகம் உந்தனுக்கு சுவாமி ஐயப்பா
கற்பூரஜோதியிலே சுவாமி ஐயப்பா
காட்சி தெரிந்துவிடும் சுவாமி ஐயப்பா
அற்புதம் நிறைந்தவரே சுவாமி ஐயப்பா
அல்லல் களைந்திடுவாய் சுவாமி ஐயப்பா

அழகான கோயிலுடன் கோபுரங்கள் சுவாமி ஐயப்பா
அமைத்தவர்கள் நீடுவாழ வேண்டும் சுவாமி ஐயப்பா
எழிலான குடமுழுக்கு நிகழ்த்தியவர் சுவாமி ஐயப்பா
இவ்வுலகில் சிறப்பெய்த வேண்டும் சுவாமி ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி ஐயப்பா
சாமி சரணம் சுவாமி ஐயப்பா
அபயம் அபயம் சுவாமி ஐயப்பா
ஆசி தருவாய் சுவாமி ஐயப்பா

**சுபம்**

# மஹாகும்பாபிஷேகத்தில் பிம்ப சான்னித்யம்

**சிவஸ்ரீ தா. மகாதேவாக் குருக்கள்.**
(அதிபர், தர்மசாஸ்தா குருகுலம் - இணுவில்)

பலவிதமான பூக்களால் அடுக்கடுக்காக அழகாக தொடுக்கப்பட்ட மாலை போன்றது கும்பாபிஷேகக் கிரியாவைபவங்கள். அனுக்ஞைமுதல் மண்டல பூர்த்தியீறாக அறுபத்தினான்கு கிரியைகள் விரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. கடஸ்தாபனம் கலாகர்ஷணம் யாகஆராதனை ஷடத்வநியாசம் ஸ்பர்சாகுதி என்பன மிகமுக்கியமானதும் அழகானதுமான கிரியைகளாகும். இதில் ஷடத்வநியாசத்தோடு வருகின்ற பிம்ப சான்னித்யம் மிக முக்கியமான கிரியையாகக் கொள்ளப்படுகின்றது. இந்தக் கிரியை கும்பாபிஷேகத்திற்கு முதல் நாள். கும்பாபிஷேகத்தை பிரதானமாக இருந்து நடாத்திவைக்கின்ற சிவாசார்யரால் பல விதயோக சாதனைகளுடன் ஆற்றப்படுகின்றது. இந்த பிம்பசான்னித்யக் கிரியையை ஆற்றுவதற்கு ஆசார்யருக்குப் பொறுமை, ஒருமைப்பட்ட மனம், தேகத்தில் சீரான வாயு சஞ்சாரம், பக்தி முதலியன தேவைப்படுகின்றது.

ஷடத்வநியாசம் செய்ய முதல் செய்யப்படுகின்ற பிம்பசுத்தி செய்வதற்கு ஆசார்யர் கர்பக்கிருகத்திற்குள் பிரவேசிப்பதே ஒரு அழகான கிரியையாகும். அவர் முதலில் கர்ப்பகிரக வாசலுக்குச் சென்று துவாரத்தில் கணபதி சரஸ்வதி மஹாலட்சுமியைப் பூசித்து நந்தி மஹாகாளர் முதலிய தேவர்களைப்பூசித்து. வாசலில் இடபதேவரையும் பூசித்து திரையைப் பூசித்து திரையை நீக்கி உட்பிரவேசித்து வாஸ்து பிரம்மா சதாசிவாதி குருக்கள் முதலியோரைப் பூசித்து வேதமந்திர பாராயணத்துடன் விம்பசுத்தி கும்பாபிஷேகம், இரட்சாபந்தனஞ் செய்து ஷடத்துவநியாசம் செய்து பிம்ப சான்னித்யத்தைத் தன்னுடைய கையினாலேயே செய்கிறார்.

மஹாகும்பாபிஷேகம் செய்வதற்காக தன்னுடைய தேகத்தில் சாதனைகள் மூலம் சேகரித்து வைத்திருக்கும் இறைசக்தியை யோக சம்ரட்சணையால் பிம்பத்தில் இருத்துவதே பிம்பசான்னித்ய கிரியையாகும். முதலில் ஆசார்யர் நிமிர்ந்து நின்று கொள்கிறார் மனத்தையும் கண்களையும் ஒருநிலைப்படுத்தி இடைநாடியினால் வாயுவைப் பூரித்து நிறுத்திக் கொண்டு கைநிறையப் பூக்களை அஞ்சலியாக எடுத்துக் கொள்கிறார் திடமாக வைத்துக் கொண்டு பரசிவசக்தியை எட்டிப்பிடிப்பதற்காக தன்னுடைய தேகத்தில் ஆறு ஆதாரங்களிலும் சக்தியை ஒன்று திரட்டி தான் சிறிது சிறிதாக சேமித்து வைத்திருக்கும் தெய்வீகத்தையும் ஒன்று சேர்த்து சிரசின் மேல் பன்னிரண்டு அங்குலத்திற்கு மேல் கொண்டு சென்று அங்கே ஸ்வயம்பிரகாசமாக இருக்கின்ற பரமசிவ ஜோதியோடு இரண்டறக் கலந்து புருவமத்தியில் நிலைநிறுத்தி ஆஸ்வாசப்பட்டுக் கொண்டு. ஆயிரம் சந்திரப்பிரகாசத்தோடு கூடிய அத்திருவருட் ஜோதியை பிங்களையால் வெளிவரும் வாயுவினால் வெளிக்கொணர்கிறார் பின்பு தன்னுடைய ஹிருதயத்தில் தாங்கிநிற்கும் அஞ்சலி புஷ்பத்தில் அப்பிரான தெய்வீக ஒளித்திருவருட் சக்தியைப் பெற்றுக் கொள்கிறார்.

அப்படியே விரைவாக அந்த ஜீவ ஒளியை லிங்கத்தினுள் பிரவேசிக்கச் செய்து சான்னித்யப் படுத்துகிறார் அடுத்த இந்த செயற்கரிய செய்கையினால் அவர் உடல் களைத்துப் போகிறது. ஆனாலும் லிங்கத்தில் பிம்ப சான்னித்யத்தை ஏற்படுத்திய பெருமை அவர் முகத்தில் பிரகாசிக்கிறது. மனத்திருப்தியோடு அடுத்தநாள் அவர் கும்பாபிஷேகத்தை மனநிறைவோடு ஆற்றுகிறார்.

**சங்காபிஷேகத்தின் பெருமை :-**

கும்பாபிஷேகம் நிறைவெய்திய 45ம் நாள் மண்டலபூர்த்தி வைபவம் நடைபெறுகின்றது. "சங்காபிஷேகம் கர்த்தவ்யம் சத்வாரிம்சத்தினாவதி" என்கின்ற ஆகமவாக்கியத்திற்கிணங்க 45ம் நாள் சங்காபிஷேகம் நடைபெறுகிறது. சங்கிற்கு அதிதேவதையாக சூரியனும் சந்திரனும் இருக்கின்றார்கள் மத்தியில் வருணனும் பிற்பக்கத்தில் பிரம்மாவும் இருக்கிறார்கள். சங்கின் நுனியில் கங்கை, சரஸ்வதியும் இருக்கின்றார்கள். மூவுலகங்களிலும் என்னென்ன தீர்த்தங்கள் இருக்கின்றனவோ அவையெல்லாம் மஹா விஷ்ணுவின் கட்டளைப்படி சங்கில் வந்து உறைகின்றன. ஆகவே நாம் சங்கிலிருந்து பெருகும் சிறிது தீர்த்தத்தை உட்கொண்டாலும் மூவுலகங்களிலும் உள்ள தீர்த்தங்களையும் உட்கொண்ட பெருமையை அடைகின்றோம். இத்துணை பெருமை வாய்ந்ததாக சங்கு தீர்த்தம் விளங்குகின்றது.

காரைநகர் சிவன்கோவில் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகமும் மண்டல பூர்த்தி நவோத்தர சாஹஸ்தர சங்காபிஷேகமும் காரைநகர் மக்களின் அபிலாஷையின் படி மிகச் சிறப்பாக நடந்தேறியது. மஹாகும்பாபிஷேகம் எப்படி நடைபெற்றதோ அதேபோல் மண்டலநிறைவு மஹாசங்காபிஷேகமும் கோலாகலமாக நடைபெற்றது. மஹாசங்காபிஷேகத்தை நிரம்ப நாதஸ்வர தவில் வித்துவான்கள் அணி செய்தனர். மஹாசங்காபிஷேகம் மொனரா ரவல்ஸ் சகோதரர்களின் தனிப்பட்ட உபயமாக நடைபெற்று எதுவித லோபமில்லாமல் எந்த எந்த சிறப்புக்கள் இருக்க வேண்டுமோ அந்த அந்த சிறப்புக்களோடு நடைபெற்றது. இந்த இரண்டு கைங்கர்யங்களாலும் ஈழத்துச்சிதம்பரமென போற்றப்படும் காரைநகரில் பிரகாசிக்கும் ஸ்ரீ சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் திருவருட் சக்தி பெருகி லோக மக்களை சம்ரட்சிண செய்யுமென்பது திண்ணம்.

# அன்றொருநாள் ஈழத்துச் சிதம்பரத்தில்

சிவஸ்ரீ.க. வைத்தீசுவரக் குருக்கள் - காரைநகர்

"செயற்கரிய செய்வார் பெரியர்" என்பது திருவள்ளுவரின் திருவாக்கு.

ஈழத்துச்சிதம்பர ஆலய ஸ்தாபகராகிய அம்பலவிமுருகர் பெரியார் வரிசையில் முன்னிற்பவர்.

அவரின் சம்மதத்துடன், பார்வதி என்ற பெண், கோயிலுக்குச் சொந்தமான தோட்டத்திற் புல்லுச் செதுக்கிக்கொண்டிருக்கிறாள்.

தேங்காயொன்று தென்னை மரத்திலிருந்து அவளுக்கு அண்மையில் விழுகிறது. பார்வதி எழுந்து நின்று நான்கு பக்கமும் மிகக் கவனமாகப் பார்க்கிறாள்.

எவரையும் காணவில்லை.

தேங்காயை எடுத்துப் புல்லுக் கடகத்துள் வைத்து, அதன்மேல் புல்லைப் போட்டுத் தேங்காயை மறைத்துவிடுகிறாள்.

பின்னரும் புல்லுச் செதுக்குகிறாள். செதுக்கிய புல்லையும் எடுத்துக் கடகத்துள்ளே போட்டுக்கொண்டு வீட்டிற்குப்போக எழுந்து வருகிறாள்.

கோயில்மணி டாண்,டாண் என்று கேட்கிறது.

உடனே புல்லுக் கடகத்தை ஓர் இடத்தில் வைத்து விட்டுக் கை கால்களைக் கழுவிச் சுத்தஞ் செய்துகொண்டு சுவாமி தரிசனஞ் செய்யக் கோயிலுக்குள்ளே செல்லுகிறாள்.

அவள் சென்றபின்பு, அம்பலவி முருகரின் ஆப்த நண்பனும் கோயிற் பாதுகாவலனுமாகிய "கூழையன்" என்ற நாகபாம்பு புல்லக்குமேல் ஏறிச் சுருண்டுகொண்டு உல்லாசமாகப் படுத்துவிட்டது.

பூசை முடிந்ததும் விபூதி வாங்கிப்பூசி, சந்தனப் பொட்டும் இட்டுக்கொண்டு மிகுந்த குதூகலத்தோடு புல்லுக் கடகத்தடிக்கு வருகிறாள் பார்வதி.

புல்லுக்கு மேலே பாம்பு படுத்திருப்பதைக் கண்டதும் திடுக்குறுகிறாள்.

சத்தம் செய்கிறாள்: மணலை அள்ளிப் பாம்பின் மேலே வீசுகிறாள்: தடியொன்றினாற் கடகத்திலே தட்டுகிறாள்.

பாம்போ அசையவில்லை.

சிறிது தூரத்துக்கப்பால் அம்பலவிமுருகர் தம்மை மறந்த நிலையில் திருவாசகத்தைப் பாடிக்கொண்டிருக்கிறார்.

*"எய்த்தேன் நாயேன் இனியிங் கிருக்க*
*கில்லேன் இவ்வாழ்க்கை*
*வைத்தாய் வாங்காய் வானோர் அறியா*
*மலர்ச்சே வடியானே*
*முத்தா உன்தன் முகவொளி நோக்கி*
*முறுவல் நகைகாண*
*அத்தா சால ஆசைப் பட்டேன்*
*கண்டாய் அம்மானே."*

*பாரோர் விண்ணோர் பரவி யேத்தும்*
*பரனே பரஞ்சோதீ*
*வாராய் வாரா உலகந் தந்து*
*வந்தாட் கொள்வானே*
*பேரா யிரமும் பரவித் திரிந்தெம்*
*பெருமான் எனஏத்த*
*ஆரா அமுதே ஆசைப் பட்டேன்*
*கண்டாய் அம்மானே."*

"ஐயா, புல்லுக்கடகத்திற் பாம்பு படுத்திருக்கிறது: துரத்தி விடுங்கள்."

திருவாசகத்தில் ஈடுபட்டிருந்த அம்பலவிமுருகருக்குப் பார்வதியின் சொற்கள் காதுகளில் ஏறவில்லை.

பின்னர் அம்பலவிமுருகருக்குக் கிட்டச் செல்லுகிறாள் பார்வதி.

"ஐயா, பாம்பு புல்லுக்கடகத்திற் கிடக்கிறது...........

பழைய நிலைதான்.

இரண்டு நாழிகைகள் வரை கழிந்து விட்டன.

அம்பலவிமுருகரின் திருவாசகப்படிப்பு முடிந்துவிட்டது.

"ஐயா, நான் நீண்ட நேரமாக இங்கே நிற்கிறேன்."

"என்ன சமாசாரம்?"

"புல்லுக் கடகத்திலுள்ள புல்லுக்குமேலே பாம்பு படுத்திருக்கிறது. துரத்தி விடுங்கள்."

"நீ ஏதோ பிழை செய்துவிட்டாய்."

"நான் ஒரேயொரு தேங்காய்தான் எடுத்துப் புல்லால் மறைத்து வைத்திருக்கிறேன்."

"தேங்காயை மெல்ல எடுத்து வெளியே போடு."

"கடகத்துக்குள்ளே தேங்காய்: தேங்காய்க்கு மேலே புல்லு,புல்லுக்கு மேலே பாம்பு, எப்படி ஐயா தேங்காயை எடுப்பது?"


"கூழையா, இறங்கிக் கீழே வா."

கூழையன் புல்லைவிட்டுக் கீழே இறங்கி ஊர்ந்து அப்பாற் செல்லுகிறது.

பார்வதி தேங்காயை எடுத்துச் சுவாமி வாயிலில் வைத்துவிட்டுப் புல்லுக்கடகத்துடன் வீட்டுக்குப் போகிறாள்


*"நீல கண்டனா ராணையி னித்தலும்*
*வாலன் கூழைய னென்றிரு மாசுணங்*
*கோலக் கோயிற் பொருட்குறு காவலாய்ச்*
*சால நின்று சரித்திடு மென்பரால்"*

என்பது ஈழத்துச் சிதம்பர புராணம்.



சிவன் தூபி கும்பாபிஷேகம்

ஐயனார் தூபி கும்பாபிஷேகம்





மஹா கும்பாபிஷேகத்தின் போது பிரதம கும்பங்கள் வீதி வலம் வருதல்



கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட அடியார்கள்

# தருமந்தன் வழிசெல்கை கடன்

சிவத்தமிழ்ச் செல்வி. பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி - ச. நீ.

தமிழ் ஈழ மண்ணை அலங்கரிக்கின்ற திருக்கோயில்களில் ஈழத்துச் சிதம்பரம் என்னும் திருத்தலம் தலைசிறந்ததாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று அங்கங்களினாலும் அருட்சிறப்பு பெற்றது. இவ்வாலயம் காரைநகர்க் கடற்கரையை அண்டிய பகுதியிலே கிழக்குப் பக்கமாக பரந்து கிடக்கும் வெட்ட வெளியிலே காட்சி தரும் சிறப்பு இவ்வாலயத்துக்குண்டு. அருளாட்சி செய்து வரும் ஐயனாருக்கும் அருகே எழுந்தருளி விளங்கும் சிவபரம் பொருளுக்கும் நிலைக்களனாக விளங்குவது இவ்வாலயம் ஆகும். அன்னதான மடங்களும், அந்தணர் விடுதிகளும், ஆச்சிரமங்களும், புனித தீர்த்தக்கேணியும் ஆலய வெளிவீதியை அலங்கரித்திருப்பது பெருஞ்சிறப்பாகும். ஆண்டுதோறும் மார்கழி ஆதிரை நாளை முன்னிட்ட பத்துத்தினங்களும் இங்கு மகோற்சவம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும். இக்காலத்தில் யாழ் குடாநாட்டின் நாலாபாகங்களில் இருந்தும் ஈழத்தின் பல பாகங்களில் இருந்தும் பக்தர் கூட்டம் இங்கு குழுமுவது வழக்கம். நெறிமுறை தவறாத அந்தணச் சான்றோரும் தொண்டுள்ளம் படைத்த மணிவாசகர் சபையினரும் அன்னம் பாலிக்கும் அருட்தொண்டரும் பண்ணிசைகளினாலும் சமயச் சொற்பொழிவுகளினாலும் உள்ளத்தைத் திருவருளினால் நிரப்பிக் கொண்டிருக்கும் மெய்யடியார்களும் இவ்வாலயத்தை சிறப்பித்து நிற்பதை இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து அங்கு சென்று கண்ணுற்ற பாக்கியம் எனக்கு உண்டு. மணிவாசகப் பெருமானே எழுந்தருளி வந்து பாடுகின்றாரோ என்று சிந்திக்கக் கூடியதாக திருவெம்பாவைப் பாடல்களை ஆலய அறங்காவலரில் ஒருவர் நெஞ்சம் நெக்குருகிப் பாடுதலை நேரில் கண்டு இறும்பூது அடைந்தவர்களில் நானும் ஒருத்தி. இறையருளினாலும் பக்தர்களின் வேண்டுதலினாலும் இவ்வாலயம் இன்று புதுப்பொலிவு பெற்று குடமுழுக்கு எழுச்சியாகவும் பக்தி பூர்வமாகவும் நிறைவேறி இருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் "தருமந்தன் வழிச்செல்கை கடன்" என்பதைத் திருத்தொண்டர் புராணத்தின் மூலம் சிந்திப்போம்.

சைவமக்களால் ஏற்றியும், போற்றியும் ஓதப்பட்டு வரும் புராணங்கள் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் என்பனவாகும். இறைவனுக்கு ஆளாய அன்பனின் தூய வாழ்வையும் அவர்கள் அடைந்த தெய்வப் பேற்றையும் எடுத்து விளக்குவது பெரியபுராணமாகும். இறைவனின் அருட்பெருங்கருணையையும் தீயோரை அடக்கி தூயோரை வாழவைத்த தண்ணளியையும் எடுத்துக் காட்டுவது கந்தபுராணமாகும். அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் மூலம் தனது அருட்பெருங்கருணையை இறைவன் வெளிக்காட்டி அருள்புரிந்த சம்பவங்களைக் காட்டுவது திருவிளையாடற் புராணமாகும். எனவே இந்த மூன்று வகைப் புராணங்களையும் சைவமக்கள் ஓதி உணர்ந்து உய்வடைய வேண்டிய கடமைக்கு உட்பட்டவர்கள்.

காலத்தால் கருத்தினால் பக்திச் சுவை சொட்டும் பாடல் அமைப்பினால், காப்பியச் சிறப்பினால் விதந்து பேசப்படும் பெரியபுராணத்தில் தமிழர் ஆட்சித்திறன் பற்றி எடுத்துக்காட்டிய ஒரு இடத்தைச் சிந்தனையில் இருத்துவோம். "சோழ நாடு சோறுடைத்து" என்ற பெருமைக்குரியது. நீதி வழுவா நெறிமுறையில் ஆட்சி செய்த மன்னர்களைக் கொண்டது. அத்தகைய மன்னர்களில் மாண்புடையவனாக நீதியான செங்கோலைத் தாங்கியவனாக விளங்கியவன் மனுச்சோழன். இவனுடைய நல்லாட்சி "மண்ணில் வாழ்தரு மன்னுயிர்களுக்கெல்லாம் கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலன்" என்ற நிலையில் சேக்கிழார் சுவாமிகளால் போற்றப்படுகிறது. மற்றுமொரு இடத்தில் மன்னவன் கடமையைத் தெளிவாக சிந்தனையைத் திருத்துவதாகவும் அமைந்துள்ள பாடலைக் காணலாம்

*"மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்*
*தானதனுக் கிடையூறு தன்னால் தன் பரிசனத்தால்*
*ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்*
*ஆனபயம் ஐந்துதீர்த் தறங்காப்பான் அல்லனோ?"*

மனுவேந்தனின் ஆட்சிச் சிறப்பு, கன்றை இழந்த பசு அடைந்த துயரத்தைத் தானும் அடைய வேண்டுமென்ற நினைப்பிலேயே உயர்வடைகிறது. தனது அமைச்சர்களோடு கலந்து ஆலோசித்து நின்ற மன்னன் அமைச்சர்களின் கூற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. பசு அடைந்த துயரத்தை தானும் அடைவதே பிராயச்சித்தம் ஆகும் என்பதைத் தெள்ளத்தெளிவாக மந்திரிகளுக்கு விளக்கினான். இளங்கன்றைக் காணாமல் இரங்கி ஏங்கி நின்ற தாய்ப் பசுவினது முகத்தை நோக்கினான். சோர்வடைந்தான். இரக்கமும், ஏக்கமும் அவன் உள்ளத்தை அசைத்தது. மந்திரிமார் சொல்லிய பாவ நிவர்த்திக்கான பரிகாரம் அவன் மனத்தைத் திருப்தி அடையச் செய்யவில்லை. தன் செங்கோல் ஆட்சியை தருமதேவதை புறக்கணிக்கக்கூடாது என்பதே அவனுடைய மனித நோக்காகும். பசுக்கன்று மாய்ந்த இடத்திலேயே தேர்க்காலில் அகப்படக்கூடியதாக தன் மகனை அத்தெருவில் கிடத்தி மந்திரி ஒருவரை தேர் ஊர்ந்து வரும்படி கட்டளையிட்டான். இதனைத்தாங்க முடியாத மந்திரியும் அவ்விடத்தைவிட்டு அகன்றதும் அன்றி உயிர்பிரியும் நிலையும் எய்திவிட்டார். ஆனால் மன்னவனோ தரும நெறியைத் தவறாது காத்தற் பொருட்டு தன் மகன்மேல் தானே முந்நின்று தேர் ஊர்ந்தான். சேக்கிழார் பெருமான் இந்த இடத்தில் மனுவேந்தனின் ஆட்சியின் மகத்துவத்தை நாம் உணர வைக்கிறார்.

*"ஒரு மைந்தன் தன்குலத்துக்குள்ளான் என்பதும் உணரான்*
*தருமந்தன் வழிச்செல்கை கடன் என்று தன்மைந்தன்*
*மருமந்தன் தேர் ஆழி உறஊர்ந்தான் மனுவேந்தன்*
*அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோ தான்."*

மனுவேந்தனின் செயற்கரிய இச்செயலைக் கண்டு மண்ணவர்கள் கண்மழை பொழிந்தனர். விண்ணவர்கள் மலர் மழை பொழிந்தனர். திருவாரூர்ப் பெருமான் மனுவேந்தனுக்குக் காட்சி கொடுத்து ஆண்கன்றை உயிர்பெற்றெழச் செய்து,

மந்திரியையும் உயிர் பெற்றெழச் செய்து, மன்னவன் மகனையும் உயிர் பெற்றெழச் செய்து மனுவேந்தனின் உயர்ந்த தியாகத்தையும் உலகறியச் செய்தருளினான். இந்த நிலையில் பசுவின் துயரம் அகன்று கன்றின் மகிழ்ச்சியும் பொங்கியெழ நின்ற நிலையினை அங்கு காண்கிறோம்.

*"மடி சுரந்து பொழிதீம்பால் வருங்கன்று மகிழ்ந்துண்டு*
*படி நனைய வரும் பசுவும் பருவரல் நீங்கியதன்றே"*

இச்செய்தியின் மூலம் தமிழ் மன்னரின் நீதி வழுவா நெறிமுறையும் எவ்வுயிரையும் தன்னுயிர் போல் நேசித்து ஆட்சி நடத்திய சிறப்பையும் எம்மால் உணர முடிகிறது.

ஆனால் இவையெல்லாம் இன்று கனவாகி விட்டன. அடுத்தவனின் கண்ணீரிலே ஆனந்தங் காணுவோர் பலர்; பசுவை வணங்குவதை பகிடியாக்குவோர் பலர் ஏன்! பசுவதை புரிந்து பாதகஞ் செய்வோர் பலர்; இத்தகைய இழி தொழிலைத் தடுத்து நிறுத்தத் தயக்கங்காட்டுவோர் பலர். என்ன செய்வோம்!

*"அம்மா என அலறும் ஆருயிரைக் கொன்றருந்தி*
*இம்மானுடரெல்லாம் இன்புற்றிருக்கின்றார்*
*அம்மா எனுஞ் சத்தம் கேட்டகன்ற மானிடர்க்கும்*
*பொய்மா நரகமென்றால் புசித்தவர்க்கு என் சொல்லுவதோ!*

எங்கள் சைவசமயத்தின் பெருமையையும் அருமையையும் நாம் குறைத்துவிடக் கூடாது. மேன்மையுற வைக்க வேண்டிய கடமை எமக்கு உண்டு. திருக்கோயில்களில் பக்திமயமான சூழ்நிலை; அந்தணர்கள் அறங்காவலர்களின் தன்னலங்கருதாத் தொண்டு; வழிபடுவோரின் ஒழுங்கு முறைகள் என்பவற்றை நிலைநாட்டி நாட்டுக்கும் நமக்கும் நல்லன செய்வோம்

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

உ

# சிவானுபூதி வாசகமே திருவாசகம்

கலாநிதி, பண்டிதர் மு. கந்தையா அவர்கள்
ஏழாலை

ஆன்மீக இரகசியங்கள் மனித சாமானிய அறிவு சாதனங்களாகிய பொறிபுலன் கரணங்களுக் கெட்டாதவை. அவை பரம இரகசியங்கள். ஆன்மாவுக்குஞ் சிவனுக்குமிடையிலான அநாதிமுறையான தொடர்பின் அந்தரங்க பாவத்தில் அமைந்து கிடப்பவை. தத்துவ பரிபாஷையில் அநுபூதி என்ற சொல்லால் அது குறிக்கப்படும். இரகசியம், மறைபொருள் என்ற அளவுக்கு, குப்த வித்தை (மறைஞானம்) என்ற வடசொல்லும் Mysticimi என்ற ஆங்கில பதமும் அதைக் குறிக்கும் எனப்படுவதுண்டு. ஆனால் அநுபூதி என்ற பதப்பொருளில் அவற்றாற் கருதப்படமுடியாத உணர்வுப்பயன் ஒன்றிருத்தல் கவனிக்கத் தகும்.

பதப்பொருள் விளக்கமுறைப்படி (Etymologically) அநுபூதி, அநுபவம் என்ற சொற்கள், (அணுகித் தொடர்ந்து ஆதல் எனப்பொருள்படும். இரண்டும் அநு + பூ என்ற வினையடியில் தோன்றிய குணப்பெயர்கள் அநு என்றால் அணுகித் தொடர்ந்து எனவும் "பூ" என்றால் "ஆகு" "பவம்" என்றால் "ஆதல்" எனவும் தமிழில் அமையும் எனவே அநுபூதி ஆவது, ஆன்மா தன்னுடனாயுள்ள சிவனைத் தன்னுணர்வால் அணுகித் தொடர்ந்து ஆதல் என்றாகும். இனி இந்த ஆதல் என்றால் என்ன என விசாரித்தற்கிடமுண்டு பலனுறுதல், அதன் (சிவன்) வண்ணமாதல் என இருவகைப் பொருள் இதற்குண்டு. இந்த இரண்டும் இன்புறுதல், அல்லது ஆனந்தமுறுதல் என்ற கருதுநிலையைத்தரும் - எங்ஙனமெனில், தன் பொது வாழ்வில் சிற்றின்பம் என்றபெயரில் துன்பக் கலப்பான இன்பமொன்றை அதுவும் பெற்றும் பெறாத மாதிரியாகக் கண்டுகொண்டு, வெறும் இளைப்புங் களைப்புமே கண்டமிச்சம் என்ற அலுப்புணர்வளவில் இருந்த ஆன்மா, இந்த நிலைக்கு முற்றிலும் நேரெதிரான முற்றின்பப் பலன்பெறல் என்பது "ஆதல்" என்பதன் அர்த்தமாம். "சிவன்" என்றால் இன்பவடிவினை அவனோடு ஒன்றிச் சேர்தலே அவன் (சிவன்) வண்ணமாதல். ஆதலின் இரண்டும் இன்புறுதல் என்ற ஒரே கருது நிலைக்குரியனவே. தான் இன்பவடிவினனாய் இருப்பவன் தன்னைச் சேர்ந்த ஆன்மாவுக்கு இன்பத்தையல்லது வேறெதனைக் கொடுத்தல் சாலும். நிழல் மயமாயிருக்கும் மரம் தன்னையண்டினவற்கு நிழலையன்றி வெறெதனைக் கொடுக்கும்?

*"ஈறிலாப் பதங்கள் யாவையுங்கழந்த இன்பமே"*

*"பேராப் பிரியா ஒழிவில்லா மறவாநினையா அளவில்லா*
*மானா இன்ப மாகடலே"*

- இவை திருவாசகம்

*"ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றாதிவ் வணிநலமே"*
- இது திருக்கோவையார்.

இவற்றிலும் இவையல்லாத மற்றுந் திருமுறைகளிலும் ஏன்? மற்றுந் தமிழ் நூலுரைகளிலுமே சிவன் இன்பமளிப்பவனென்றும், அவனையடைந்த ஆன்மா இன்புறுமென்றும் பயிலவந்திருத்தல் காணலாம்.

"இணையடி பணிவார் நம்மை இன்பவீடடையச் செய்யும் துணைவனே, நெறிநின்றான் வந்தானென் றுந்தீபறநித்தியானந்தனென் றுந்தீபற, "எல்லையிலா இன்பத்தே அன்னை இருந்திடடா" என்பன போன்ற நற்சிந்தனை அநுபூதி வாசகங்களும் நாமறிவனவே.

சிவானந்த லஹரீ, ஆனந்த லஹரீ என்ற சமஸ்கிருத பக்தி நூல்களும் இதுவே ஞாபகமாக எழுந்தவை. வேத வேதாங்களிலும் இடம்பெற்றுள்ள உண்மை இது. வேதாந்த சார சித்தாந்தமாயுள்ள பிரமசூத்திரத்தில் அத். 1. பாதம் 1. பகுதி. 13. ஆனந்தமயாதி கரணம் எனப் பெயர் பெற்றுள்ளது. அதன் முதற் சூத்திரம் ஆனந்தம ணுப்யாசாத் - சிவன் ஆனந்தமயர், அப்பியாசத்தினால் (பல்வா ஒதஸ்மாத் விஞ்ஞான மயாத் அன்ய : அந்தராத்மா ஆனந்த மயம்- தைத். 2.5 - என்ற மந்திரத்தாலும், ஆனந்தோப்ரஹ் ஆனந்தம் பிரமம் - தைத். 3.6.1 என்ற மந்திரத்தாலும், "ஓஹி ஓவ ஆனந்தயாதி" - இவர் நிச்சயமாகவே ஆனந்தம் விளைக்கிறார் - தைத் 2.7 என்ற மந்திரத்தாலும் உதாரண விளக்கஞ் செய்யப்பட்டுமுள்ளது. இருந்தும், ஆனந்தமயம் என்பதிலுள்ள "மயம்" விகாரப் பொருளில் வந்ததென்று சொல்லிடும் சூத். 1.1-13இன் கருத்தையும் மீறி, அது பரப்பிஹ்மம் இலக்கணமாகாது என மறுத்தாருமுளர் ஆனந்தமற்றது எனநிறுவ அவர் விளைத்த செய்கை இதுவாகும். "ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே" என்ற திருவாசகம், கீழ்க்கீழ்ப் பதவிகள் எல்லாங் கடந்த பரப்பிரமம் இன்பவடிவினது எனத் தெளிவுறுத்தியிருத்தல் கொண்டே அவர் செயலின் பொருந்தாமை தெளியப்படும். மேலும் சங்கரனார் தம்மைப் போலத் தம்மடியார்க்கும் இன்பமளிப்பவர்" - திருஞானசம்பந்தர் தேவாரம் திரிசிபுரம், செய். 2 என்ற திருமுறை வாசகமுங் கருதத்தகும்.

இவ்வகையில் எல்லாம் சர்வசாஸ்திர சம்மதமாயுள்ள சிவபெருமான் ஆனந்த மயமானவர் தம்மையடைந்த ஆன்மாவுக்கு ஆனந்தமளிப்பவர் என்ற உண்மை, இவ்வுண்மையை, சிவஞானபோதம் பதினோராஞ் சூத்திரம், "அயரா அன்பின் அரன்கழல் செலுமே" என்பதன் மூலம் இலக்கணப்படுத்தியிருத்தல் கருதத் தகும். இதில் வரும் செல்லுதல் என்பது மேன்மேற் செறிதல். செறிதற்குக் காரணம் அன்பு. அந்த அன்பு நிகழ்தற்குக் காரணம் அயராமை. இம்மூன்றும் தத்துவ ரீதியான ஆன்ம இலக்கணத்துக் கொத்தனவாயிருத்தல் சுவாராஸ்யமானது. ஆன்மஇயல்பான அறிவிச்சை செயல்களில், அறிவு, அயராமை என்ற பண்பாகவும், இச்சை, அன்பு என்ற பண்பாகவும், செயல், செல்லுதல் என்ற பண்பாகவும் இங்கு இடம்பெறுகின்றன. பிரபஞ்சப்பற்று முற்றாக அற்றுச் சுத்தநிலை பெற்ற ஆன்மாவுக்கு அறிவு என இருப்பது முழுவதும் சிவனை அயராமை, அன்பு என இருப்பது முழுவதும் சிவனையே நினைந்து உருகும் உருக்கம் செயல் என்றிருப்பது முழுவதும் சிவன்கழலில் மேலும் மேலுஞ் செறிதல் சைவசித்தாந்தங் கூறும் அத்துவித முத்திநிலை இவற்றுக்கு இன்றியமையாததாகும். திருவாசகத்தில்

வரும் "புணர்ச்சிப் பத்து" முழுவதும் இவ்விலக்கணத்தை அச்சொட்டாகக் கொண்டுணர்த்தி நிற்கும்விதம் அறிந்து மகிழத்தகும்.

*"நெக்கு நெக்கு நினைந்துள் ளுருகி*
*நின்று மிருந்துங் கிடந்தும் நடந்தும்*
*நக்கும் அழுதுந் தொழுதும் வாழ்த்தி*
*நானா விதத்தாற் கூத்தும் நவிற்றிச்*
*செக்கர் போலுந் திருமேனி*
*திகழ நோக்கிச் சிலிர்சி லிர்த்துப்*
*புக்கு நிற்ப தென்று கொலோவென்*
*பொல்லா மணியைப் புணர்ந்தே*

*    *    *

*"ஊற்று மணல்போல் நெக்கு நெக்கு*
*உள்ளே யுருக ஓல மிட்டுப்*
*போற்றி நிற்ப தென்று கொலோவென்*
*பொல்லா மணியைப் புணர்ந்தே" - என்பன*

வாதி புணர்ச்சிப் பத்துப் பகுதிகள் குறித்த அயரா அன்பின் அரன் கழல் செல்லும் நிலையைத் துல்லியமாக விளக்குவனவாம்.

திருவாசகம் காட்டுஞ் சிவானுபூதி விலாசத்தின் மையக் கருத்தாக அமைவது இப்புணர்ச்சிப் பத்தெனலாம். திருவாசகப் பதிக எண்ணிக்கை ஐம்பத்தொன்றில் இது இருபத்தேழாவதாயமைந்திருத்தலுங் கருதத்தகும். இதனை மத்திய கேந்திரமாகக் கொண்டு முன்னும் பின்னும் வருபவையெல்லாம் இவ்வநுபவத்தின் முன்னிலைக் காரணங்களாகவும். பின்விளைவுகளாகவுங் கண்டு கொள்வதில் அர்த்தமுண்டு. அகத்தியச் சூத்திரங்கள் எனப்படுந் திருவாசகப் பதிகப் பொதுக் குறிப்புக்கள் இதனை மட்டிடுதற்குப் பெருமளவில் உதவக் கூடியனவாயுள்ளன.

ஆரம்பத்தில் வரும் சிவபுராணம் சிவனது அநாதிமுறையான பழமை என்ற அதன் பொருட்குறிப்புக்கிணங்கச் சிவமகிமை, திருவருள் மேன்மை, ஆன்மாவின் அடிமைத்திறம் ஞானப்பேறு என்ற உண்மைகளை உணர்த்தும் வகையால் திருவாசகம் முழுமைக்குமே சிறப்புப் பாயிரமாய் அமைந்துவிடுகிறது. "நமசிவாய வாஅழ்க" என்ற அதன் முதற்றொடரே ஆன்ம - சிவஉறவின் அந்தரங்கம் முழுவதும் அடங்கிய மஹாமந்திர குளிகையாய் வாய்த்திருக்கும் நிலை மனங்கொளத் தகும். ஐந்தெழுத்தை வாழ்த்திய தாகக் கொள்ளுமளவில் அமையாது அதன் தாற்பரியம். பின்னை என் எனில், நகரத்தாற் குறிக்கப்படும் திரோதானமாய் நீங்காது நின்று லௌகிகப் பேறளித்தும் மீள வகரத்தாற் குறிக்கப்படும் பராசக்தியாய் நீங்காது நின்று ஆத்மீகப் பேறளித்தும் உய்யக் கொள்ளும் முறையால் சிவன் தானாக ஆன்மாவுடன் அத்துவிதமாய் நின்றருளுந் தொடர்ச்சியை அநுபவிக்கும் மெய்யநுபவம் நீங்காதிருக்க என்பதே அதன் யதார்த்த விளக்கமாகும். பஞ்சாக்கரம் வாழ்க என்பது அதன் சொற்பொருளாக, இதுவே அதன் அநுபூதிப் பொருளாதலை அறிதல் நலம்.

இச் சிவபுராணத்தைத் தொடர்ந்து வரும் அகவற்பதிகங்கள் மூன்றும், எங்குமாயும் எல்லாமாயுந் தூலமாயுஞ் சூக்குமமாயும் - அன்பூற்றாயும் அருள்மேகமாயும், அநுபவச் சுரங்கமாயும் நின்றருளுஞ் சிவனது சர்வாதிபத்தியத்தன்மையைக் காணும் அநுபவத்தை எடுத்துரைப்பனவாகின்றன, தொடர்ந்து வரும் பதிகங்கள், அதிசயப்பத்து ஈறாக உள்ளவை திருவருள் தமக்குப் பல்வேறு வகையிலும் பரிபாக சத்தியாய் நின்றுதவுதலும், பிரபஞ்ச வைராக்கியம் வருவித்தலும், அதுவே ஒருகாலைக் கொருகால் பேறு, இழப்பு, நினைப்பு, மறுப்புக்களை நிகழ்த்தி வருதலும், அத்திருவருளே மீளக் குருவாய் எழுந்தருளி மாயா விஜயம், ஆன்மசுத்தி, திரோதான சுத்தி, ஆன்ம பூரணம் முத்தி வேட்கையாகிய நிலைகளை ஏற்படுத்தலும் பற்றிய அநுபவ விந்நியாசங்களாம். ஆன்ம அநுபூதிக்குக் காரணிகளாகிய குரு, அன்பு என்ற இரண்டு அம்சங்களும் இப்பகுதியில் நல்விளக்கம் பெறுகின்றன.

சிவகுருவே ஆன்மீகப் பேற்றின் விடிவெள்ளியும் சுத்தான்மாக்களின் பிராண யாத்திரையில் திசைகாட்டியும் ஆவர். சிவனே அவர், அவரே சிவன் அவர்தம் ஆளுகைக்குட்பட்ட பக்குவர்க்கு அவரே எல்லாம் “எனக்குள்ளே நீயிருக்கும் எழிலைத்தான் காட்டிடடா - உனக்குள்ளே நானிருக்கும் உண்மையிலே மாட்டிடடா” - என்பது நற்சிந்தனை யநுபூதி. மணிவாசகர்க்குக் குரு, சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான் ஆயினார். “தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னை” என்னுமாறு ஏற்பட்டிருக்கிறது, அவர்களின் பரஸ்பரக்கலப்பு நிலை. அவ்வகையில் குரு சீஷனை விட்டு நீங்காது அவனுள்ளத்திலேயே இருப்பவர். எனினும், வேளாவேளைகளில் குரு தன்னைப் பிரிந்து விட்டதாகச் சீஷன் உணர்தலும் அதுபற்றித் தவித்தலும், குயில் என்ற கூவுசாதனத்தின் மூலம் பிரிந்தவர் மீளச் செய்ய முயல்தலும், ஓரோவோர் உணர்வு நிலையில் அவரை மீளக் கண்டு பிடித்துவிட்டதாகக் களித்தலும் போன்ற அம்சங்கள் மணிவாசகர் அநுபூதி விலாசத்திற் பட்டுப்பட்டொளிருங் காட்சி மனோரம்மியமானது.

*“விடையவனே விட்டிடுதி கண்டாய்”*
*“கழலிணையாவை பிரிந்துங் கையனேனின்னுஞ் செத்திலே னந்தோ”*
*“சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்”*
*“பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்*
*ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்”*
*“இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்*
*எங்கெழுந் தருளுவ தினியே”* - என்ற திருவாசகப் பகுதிகள் நோக்கத் தகும்.

இது சம்பந்தப்பட்ட மட்டில், என்றும் நீங்காதிருப்பவர் விட்டுப் பிரிந்தார் என்பதன் அர்த்தம் என்ன? அவர்தாம் வேண்டும் போது சீஷனின் உணர்வெல்லைக் கப்பால் தம்மை ஒதுக்கிக் கொள்வதென்றே சொல்லலாமன்றி, அவர் விலகிப் போயினார் என்பதற்கில்லை. இது ஒரு வகையில் அவர் திருவிளையாடல் எனலும் ஆம். இந்தச் சூட்சுமம் துலாம் பரமாகுமாறு நற்சிந்தனை யநுபூதியில் சிவயோக சுவாமிகள் தமது புதிய கவிதைப் பாணியிற் சுளுவாகப் பொறித்து வைத்திருக்கும் நயம் வெகு அலாதியானது.

*"வேடிக்கை செய்கிறானே - பரமபிதா*
*வேடிக்கை செய்கிறானே*
*வேடிக்கை செய்கிறான் கூட இருக்கிறான்*

வேறா யிருப்பது போற் பாசாங்கு பண்ணுகிறான் - "வேடி" இங்ஙனம் சீஷர் விஷயத்திற் குரு பாசாங்கு பண்ணுதலும் சீஷர் உணர்வைமிகுவித்து அவரை வளர்த்தெடுக்குங் கருணையேயாம். எல்லாம் நன்மைக்கே!

இக்குருவரவும் அதன் பிரபாவமும் பற்றித் திருவாசக அநுபூதி தரும் விளக்கம் மிக அபாரமானது.

*"நானார் என் உள்ளமார் ஞானங்களார் என்னை ஆரறிவார்*
*வானோர் பிரான் என்னை ஆண்டில னேல்*

* * *

*"தான்வந்து நாயேனைத் தலையளித்திட் டென்னுடைய*
*ஊன்வந் துரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்த*
*தேன்வந் தமுதின் தெளிவின் ஒளிவந்த*
*வான்வந்த வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்"*

என்பன போன்ற திருவாசகப் பகுதிகள் அநேகம். குருவாராத வரைக்கும் நான், என்னுள்ளம், ஞானம் என்பவற்றுக்கு அர்த்தமே இல்லை. அம்மட்டிலன்றி நானொருவன் இருந்ததற்கே அத்தாட்சி இல்லையாம். மேலும் ஆன்மீக உள்ளொளி விளக்கம் என்பதொன்று முயற்கொம்பாயிருக்கும் என்ற தெளிவு இவ்வநுபூதி வாசகங்களால் ஏற்படுகின்றது.

இன்னும் இங்ஙனம் சர்வமுக்கியத்துவம் வாய்ந்த குருவாக்குப் பொய்த்து விடுமோ என்பது பற்றி மணிவாசர்க் கெழுந்தகிலேசம் குறிகளும் திருவாசக அநுபூதியில் ஆத்ம ரஞ்சகமானவை.

*"பெரியோன் ஒருவன் கண்டுகொள் என்றுன்*
*பொன்னடி யினைகாட்டிப்*
*பிரியேன் என்றென் றருளிய அருளும்*
*பொய்யோ எங்கள் பெருமானே"- என்ற*

கிலேசக் குரல் அவற்று ளொன்று. பொய்யோ! என்கையில் அது எப்படிப் பொய்யாக முடியும்? என்ற ஏக்கந்தொனிப்பதை உணர உளஞ்சிலிர்க்கும். இனி, இதற்குச் சமதையான ஒருவாசகம் நற்சிந்தனை யநுபூதியில் இடம் பெற்றிருத்தல் கண்டு மகிழத்தகும்.

*"அந்த வாக்கும் பொய்த்துப் போமோ*
*ஆசான் நல்லூர் வீதியி லருளிய - அந்த"* இங்ஙனம் திருவாசக அநுபூதியை நினைவூட்டும் அநுபூதிவாசகங்கள் பலவற்றைக் கொண்டிருக்கும் நற்சிந்தனையநுபூதி நம்மவர்க்குப் பெரும்பேறாதல் கருதத் தகும்.

இனி, மணிவாசகர் அநுபூதியின் செவிலியாக நின்றுதவும் அயரா அன்பின் ஆழ நீளங்களுங் கருத்திற் கொள்ள வேண்டியவையாம். இந்த அன்பும் குருதந்த பரிசு. மணிவாசகர் அநுபூதியில் இந்த அன்பின் பரப்பு எல்லையிறந்தது. பிறர் மதிப்பீட்டில், "அன்பே அன்பே என்று அன்பால் அழுதரற்றி அன்பே அன்பாக அறிவழியும்" அன்பு அவர் அன்பு. ஆனால், அவர் மதிப்பீட்டில் அதன் நிலை அதிமட்டம். கண்ணப்பர் அன்புடன் தமது அன்பை ஒப்பியலாய்வு பண்ணுகிறார் மணிவாசகர். தமது அன்பு கண்ணப்பர் அன்பு நிலைக்கு ஏணிவைத் தேறினாலும் எட்டாதென்கிறது அவர் மதிப்பீடு. "அன்பின் உயர் மட்டத்துக்குக் கண்ணப்பர் ஒருவர் வாய்த்து விட்டார். பரவாயில்லை : அடிமட்ட அளவுக்கும் ஒருவன் இருக்கட்டுமேன்" என்ற குறிப்பினால் தான் சிவன் தன்னையும் ஆட்கொண்டிருக்கிறார் எனத் துணிந்தே கூறுகின்றார் மணிவாசகர். அம்மட்டிலுமன்றி, தன் உள்ளம் முரட்டுக் கற்பாறையென்றும், சிவபெருமான் எவ்வளவோ பிரயத்தனத்தின் பேரில் தான், "கல்லைப் பிசைந்து கனியாக்குஞ்" சாதனையாகத் தன்னைக் கனிவித்ததாகவுங் குறிப்பிடுகிறார். முன்னொரு கால், சிவபெருமான் மேருமலையை வில்லாக வளைத்ததும் தன்னை (இவரை) வளைக்கலாமோ எனக் காண்பதற்குச் சிவன் செய்த ஒரு ஒத்திகையாகும் எனவுந் தெரிவிக்கின்றார். "வரைப்பால் நெடுஞ்சாலை யாண்டென்னை யாட்கொண்டவன்" - திருக்கோவையார். அன்றியும் தமதன்பு போதாக்குறையானது, பற்றாப் பணயமானது என்பதை ஆதாரங் காட்டி நிறுவுகின்றார்.

"வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமான் யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப் பள்ளந்தா முறுபுனலிற் கீழ்மேலாகப்
பதைத்துருகு மவர் நிற்க என்னை ஆண்டாய்க் குள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணா யண்ணா வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாங்

கண்ணினையும் மரமாந்தீ வினையினேற்கே" உச்சிநின் றுள்ளங்கால் வரை தமக்கு நெஞ்சாயிருந்துருகியிருந்தால், உடல் முழுவதுங் கண்ணாயிருந்து ஆனந்த "பாஷ்பம் பொழிந்திருந்தால் மட்டுமே அன்புடையனென்றும் தன்னை கிறுவமுடியும். அதற்கு நேரெதிர் விழுக்காடாக, உடலின் ஏகதேசத்தில் மட்டுமுள்ள சின்னஞ்சிறு நெஞ்சமே கல்லாய்க் கிடக்கிறது. முகத்தின் ஒரு பகுதியிலுள்ள கண்ணே நீர்ப்பசையின்றி மரத்துப்போயிருக்கிறது. இந்நிலையில், நானுமா அன்புடையவன்? என்பது அவர் நிலை. சரியான நிரூபணம்! இதை நோக்குகையில், மணிவாசகர் உண்மையாகவே சொன்னாரா? என்றது நம்மவர் ஆசங்கை நிலை.

அவர் ஏன் பொய் சொல்ல வேண்டும்? உண்மையையேதான் பேசியிருப்பார் என்பதற்குள்ளேதான் கிடக்கிறது அநுபூதியிரகசியம். எங்ஙனம்? தன்பெருமை தனக்குத் தெரியாமையே சான்றோன் இலக்கணம். அதே போல், தன்னளவு தனக்குத் தெரியாமையே மெய்யன்பின் இலக்கணம். அதற்கு மட்டுத்திட்டமோ, கொள்ளுமளவோ இல்லை. பெருக்கப் பெருக்கப் பெருகிக் கொண்டிருப்பதே மெய்யன்பினிலட்சணம். அது அவர் கண்டுகாட்டும் அநுபூதி விலாசங்களிலொன்று. இந்த அன்புக்கு முன்னிலையாய் நிற்கும் சிவத்தின்

எல்லையற்றவியாபகமும், மட்டற்ற கருணையுமே இத்தகைய அன்பு விருத்திக்கு உத்தரவாதிகளாம். பூரண சந்திரன் முன்னிலையிற் கடல் எல்லையிறந்து பெருகும். அப்பெருக்கிற்குச் சந்திரனே உத்தரவாதி. என உதாரணம் வேண்டுமானாற் காணலாம்.

முன் கண்டவாறு திருவாசக அநுபூதியின் மையநிலையாய்த் திகழும் புணர்ச்சிப் பத்தைத் தொடர்ந்து மேல்வரும் ஆன்மாநுபவ விளைவுகள் வாழாப்பத்து முதலாக அச்சோப்பத்து ஈறாகவிரவிக் கிடக்கின்றன. அத்துவிதப் புணர்ப்பாகிய அநுபூதி கிடைத்ததுமே இனி "உடலில் வாழேன்" என்ற குரல் எழுகின்றது. "வருகவென்றருள் புரிவாயே, அதெந்துவே (அதென்ன) என்றருளாயே என்ற வேண்டுதல்கள் மலிகின்றன. சிவயோக அநுபூதியில் நடராச தரிசனம் ஒரு முக்கிய கட்டமாகப் பேசப்பெறும். புறத்தில் தில்லையில் நிகழும் நடராஜ தரிசனத்துக்குச் சரிசமனாக அகத்திலே ஆன்மீக கோளத்தில் சிரசுப் பகுதியிலே சிவயோகிகளுக்கு வெளிக்குஞ் சிதா காயத்திலே நிகழ்வது அது. மணிவாசகருக்கு அது நிகழ்ந்த தன்மை கண்டபத்திலே வருகிறது. அக்காட்சியின் பிரத்தியேகத் தன்மையை, பதிகக் குறிப்பாகிய அகத்தியச் சூத்திரம், சுட்டறு சுட்டாற் கண்ட பத்து" என விமர்சித்திருத்தல் காணலாம். இச் சுட்டறு சுட்டு அநுபூதிக் காட்சியின் விசேட அம்சமாகும். இவ்வகையிலான நடராச தரிசனமும் குரு தரிசனத்தை முற்கொண்டே நடந்திருத்தல் குறிப்பிடத்தகும். இப்பத்துக்கு முன்னையது திருக்கழுக்குன்றப் பதிகம். அது பேசுவது முழுவதுங் குருதரிசனக்காட்சி பற்றியே. குருவின் இன்றியமையாமையே இங்கும் மேலிட்டுநிற்கக் காணலாம்.

அத்துவித அனுபவம் பெற்றோர், அறியாமை, அறிவகற்றி, அறிவினுள்ளே அறிவுதனைக் குறியாதே குறித்து அந்தக் கரணங்களோடுங் கூடாதே வாடாதே குழைத் திருக்கற் பாலர் - என்று சிவஞான சித்தியார் கூறும் இலக்கணம். அவ்வகையில் மணிவாசகர் பெற்ற அநுபூதிப்பேறு மேல் பருவங் குழைத்த பத்திற் காணப்படுகிறது. இனி, சிவானந்தத்துக்கு, "உயிருண்ணி" என்பது சுவாரஸ்யமான ஒரு பெயர். சம்பந்தப்பட்ட உயிரின் செயற்படு தன்மையை விழுங்கி ஏப்பமிட்டு நிற்குச் சிவானந்த மேலீட்டுநிலை அநுபூதியின்பத்தின் அசல் என்பர். இந்த அநுபவம் மணிவாசகர் பெற்ற நிலை உயிருண்ணிப் பத்திற் பேசப்படுகிறது. அவ்வகையில் மேல் மேல் நிகழும் அநுபூதிநிலைகள் தொடர்கின்றன. அவற்றுள், சென்னியில் திருவடிகள் மலரப் பெறும் அநுபூதியும் (சென்னிப் பத்து) சிவலோக யாத்திரை அக்களிப்பு அநுபூதியும் (யாத்திரைப் பத்து) மாயப்படைக் கெதிர் போர் தொடுக்கும். அநுபூதியும் (திருப்படையெழுச்சி) மஹத்தானவை மேல் வரும், திருப்படையாட்சியில் மனித வாழ்விலட்சியம் வீறுபெறக் காணும் அநுபஞ்சுவையானது. தன்னொத்த மெய்யன்பர்கள் பாற் கருணை முகிழ்த்துமணி வாசகர் யாத்திரைப் பத்தில் விடுக்கும் அறை கூவல் ஒன்றும் இத்தொடர்பிற் கவனிக்கத்தகும்.

*"பெருமான் பேரா னந்தத்துப்*
*பிரியா திருக்கப் பெற்றீர்காள்*
*அருமா லுற்றுப் பன்னைநா*
*அம்மா அழுங்கி அரற்றாதே*
*திருமா மணிசேர் திருக்கதவக்*
*திறந்தபோதே சிவபுரத்துத்*

*திருமா லறியாத் திருப்புயாங்*
*திருத்தாள் சென்று சேர்வோமே"*

அசட்டையாய்ச் சுரணைக் கேடாய் இருந்துவிட்டுப் பிறகு மட்டும், "வீடெங்கே நாமெங்கே" என முணுமுணுக்க இடம் வையாதீர்கள். இது நல்லதருணம். எல்லோருமாய்ப் போய் விடுவோம். வேளைக்கே வந்துவிடுங்கள் என்கிறது இவ்வநுபூதி வாசகம். என்னே கருணை!

*"கள்ளத் தலைவர் துயர் கருதித் தங்கருணை*
*வெள்ளத் தலைவர் மிக"* - என்பது திருவருட் பயன் தரும் சீவன் முத்தரிலக்கணம். இது அதற்குத் திருவாசந்தரும் சிவாநுபூதி இலக்கியம்.

இவ்வகையில் தொடரும் திருவாசக அநுபூதியின் முடிவு அச்சோப பதிகமாக மலர்ந்திருக்கின்றது. அத்தன் எனக் கருளியவாறு யார் பெறுவா ரச்சோவே என்றது அப்பதிகத் தொனி. அகத்தியச் சூத்திரம்,"அநுபவம் வந்த வழியறியாமை" என இதற்குக் குறிப்புரைத்திருக்கின்றது. சிவாநுபூதிக்கு முடிவென ஒன்றில்லை என்பதே இதன் தாற்பரியமாகும். சிவமஹிமைக்கு முடிவில்லை. சிவாநுபூதிக்கும் முடிவில்லை.

திருவாசகமே கண்ணாகக் கொண்டு நாமறியக் கூடுஞ் சிவாநுபூதி யிரகசியம் ஒன்றை இனிக் கவனித்து இக்கட்டுரை நிறைவுறுதல் தகும். மணிவாசகர்க்குப் புலப்பாடான சிவாநுபூதி அவர் அகக் கரணங்களை மட்டுந் தொட்டெழுந்ததாக இல்லை. அகில மளாவிய அளவில், அவர் காட்சியிற் பட்ட அனைத்தையுந் தொட்டு அது பிரதிபலித்திருப்பதாகவே திருவாசகங் காட்டுகின்றது. மார்கழி நீராடல் அம்மானை ஆட்டம் தொள்ளேணங் கொட்டல், கூவுங்குயில், பாடுங்கிளி, முரலும் வண்டு என்றிங்ஙனம் அனைத்தினூடும் அவர்க்குச் சிவாநுபூதி தன் சுவரூபத்தைக் காட்டியிருப்பதாகவே தெரிகிறது. நீராடப் போகும் மகளிர் பேச்சு, அம்மானை தெள்ளேண ஆட்டக் கல கலப்பு, குயில் தருங் "குக்கூ", கிளி மழலை, வண்டுசெயும் ரீங்காரம் என்பன அவர் செவிகளிற் சிவப்பிரபாவப் பிரசங்கங்களாகவே புலப்பட்டிந்திருக்கின்றன. அது அவர்க்கு வாய்த்திருந்த காட்சி விசேடம் சீவன் முத்தர் எங்குஞ் சிவமே கண்டிருப்பர் என்றிருக்குஞ் சீவன் முத்தர் இலக்கண விசேடம். நீராடு மகளிர் பாடியதாக அவர் திருவெம்பாவை பாடினார், அம்மனையாடுவார் உரையாடலாக அவர் திருவம்மானை பாடினார் என்பதன் தாற்பரியமிதுவே. அப்பாடல்களின் கரு சாமானியமாக நாம் கருதக் கூடுங் கற்பனையன்று சிவாநுபவக் காட்சியே அவற்றின் கருவாம் கற்பனையாற் பாடவல்லார் பாடுந் திருவெம்பாவையோ திருவெம்மானையோ திருமுறைத்தோத்திரமாக ஏற்கப்படாததன் இரகசியம் இதிலேயெ தங்கியிருக்கின்றது.

திருவாசகம் பிரதிபலிக்கும் அநுபூதி உண்மையும் உயர்தரம், அதனைச் சொல்லுஞ் சாதனமா யமைந்த தமிழும் உயர்தரம். அதனைச் சொல்லச் சொல்லத் தமிழ் குழைந்திருக்குங் குழையும் கனிந்திருக்குங் கனிவும் வேறெங்கும் பெறற்கரியவை. இது கிடைக்கப் பெற்றது தமிழ் செய்த தவம். இவற்றையுணர்ந்து போற்றுதல் தமிழர் தலைக்கடனாகும்.



# திருவாசகம் தந்த மணிவாசகர்

**திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்கள்**
சத்திரந்தை, களபூமி, காரைநகர்.

உலகமக்கள், வாழ்க்கையில் எழும் துன்ப அலைகளால் அலைக்கப்பட்டு பிறவிக் கடலில் ஆழாதபடி, இறைவன் திருவடிப் புனையைப் பற்றி நின்று இம்மை மறுமைப் பயனைப் பெற்றுய்தற் பொருட்டு, திருவருட் செல்வர்களால் அருளப்பட்ட திருமுறைகள் எமது அரும்பெரும் செல்வங்க்ளாகும். திருமுறைகள் பன்னிரண்டாக வகுக்கப்பட்டிருப்பினும் சிகரமாக விளங்குவது திருவாசகம். அதனாலன்றோ அதனைத் திருவாசகத்தேன் என்பர் ஆன்றோர். திருவாசகம் ஓர் பக்தி நனிதோய்ந்த நூல், இதனை அருளியவர் மணிவாசகர்.

மாணிக்கவாசகர் தமிழ் நாட்டிலுள்ள மதுரையம்பதிக் கருகாமையிலுள்ள திருவாதவூரில் அமாத்தியப் பிராமணர் குலத்தில் சம்புபாதாசிரியர் என்பவருக்கும் சிவஞானவதியாருக்கும் அஞ்ஞானமாகிய இருள் நீங்கவும், நரகமாகிய குழியில் தள்ளும் பரசமயங்களாகிய நட்சத்திரங்கள் ஒளிமழுங்கவும், சிவனடியார்களுடைய இருதய கமலங்களெல்லாம் மலரவும் சற்புத்திரராகிய ஞானசூரியராக அவதாரம் செய்தார். திருவாதவூரிலே அவதாரம் செய்தமையால் திருவாதவூரர் என்று நாமமிட்டனர். அவருடைய கல்வி, கேள்வி, ஒழுக்கம், அறிவு, ஆற்றல் ஆகிய சிறப்புக்களைப் பற்றிக் கேள்வியுற்ற பாண்டிய மன்னன் அவரைத் தன்னிடம் வரவழைத்து தனது மந்திரிமார்களில் ஒருவராக நியமித்துக் கொண்டான். மேலும் அவருடைய ஆட்சித் திறமையைக் கண்டு கொண்ட கோமகன் அவருக்குத் “தென்னவன் பிரமராயன்” என்னும் பட்டத்தையும் வழங்கினான்.

முதல் மந்திரியாகிய பெரும் புகழுடைய திருவாதவூரடிகள் இந்திரச் செல்வம் போலத் தமக்குக் கிடைத்த செல்வத்தினாலே இன்பங்களை அனுபவித்து நால்வகைச் சேனைகள் சூழ நடுநாயகமாக அரசசபையின் கண், இருத்தலால் நட்சத்திரங்களோடும் ஆகாயத்தினின்றும் இறங்கிப் பூமியின் கண் வந்திருக்கும் வெண்மையான பூரணசந்திரனை ஒத்து விளங்கினார். தருமம் செய்பவர்களுக்கு கவசமும் தண்களுமாகியும் பகைவர்களுக்குத் துன்பமாகியும், வழிபடுகின்றவர்களுக்கு இன்பமாகியும் ஏழைகளுக்கு அன்னையாகியும் பாண்டிய மன்னது ஆட்சியை சிறப்பாக நடாத்தி வந்தார். ஆட்சி நடாத்தி வரும்கால் அவர் மனம் பக்தி வெள்ளத்தில் தோய்ந்து உலக விவகாரங்களினின்று படிப்படியாக விலகுவதாயிற்று.

சோழநாட்டுக் கடற்கரையில் நல்ல குதிரைகள் விற்பனைக்காகக் கொண்டு வந்து வைக்கப் பட்டிருப்பதைக் கேள்வியுற்ற பாண்டிய மன்னன் அவைகளை வாங்கி வரும்படி அமைச்சர் திருவாதவூரரை அனுப்பினான். அவர் தனது பரிவாரங்களுடன் மதுரை

நோக்கிப் போகும் வழியில் திருப்பெருந்துறையில் திருவருளே திருமேனியாகக் கொண்ட ஞானாசாரியர் ஒருவரால் ஆட்கொள்ளப் பெற்றார். குதிரை கொள்ளக் கொண்டு சென்ற நாற்பத்தொன்பது கோடி செல்வமெல்லாவற்றையும் திருப்பெருந்துறையில் சிவ சேவைக்கு அர்ப்பணித்தார். தாம் வந்த பணியைப் புறக்கணித்து விட்டு சிவனடியார் இணக்கத்திலும் ஞானகுருவின் சேவையிலும் ஆனந்தப் பரவசமானர். இதனைக் கேள்வியுற்ற மன்னன் திருவாதவூரரை அழைத்து வரும்படி ஆணையிட்டான். தூதுவர் மூலம் மன்னனின் அழைப்பை உணர்ந்த திருவாதவூரர் தமது பிழையை உணர்ந்து பரமாசாரியாரிடம் பணிந்து இனித் தாம் செய்வது யாது என்று விண்ணப்பித்தார். ஆவணி மாதம் மூல நட்சத்திரத்தன்று குதிரைகள் வந்து சேருமென்று அரசனுக்குச் சமாதானம் சொல்லி அமைதியுறுவீராக என்று பரமனும் அனுக்கிரகம் செய்து தமது பக்தனை அனுப்பி வைத்தார்.

ஆவணி மூலத்தன்று குதிரைகள் வந்துசேருமென்று வாதவூரர் நேரில் சொன்னதைக் கேட்டுப் பாண்டியன் தமது ஐயத்தை அகற்றினான் திருப்பெருந்துறையில் குதிரைகள் வரக் காணாமையை ஒற்றர் மூலம் அறிந்த மன்னன் சீற்றம் கொண்டான் குதிரைகள் ஆவணி மூலத்தன்று வந்ததைக் கேள்வியுற்ற மன்னன் வாதவூரருடன் தாமும் சென்று அசுவ லட்சணம் பொருந்திய குதிரைகளை வாங்கி வந்து தமது லயத்தில் கட்டினான் பின்பு அன்றிரவு குதிரைகளெல்லாம் நரிகளாகி மாறி அங்கிருந்த குதிரைகளையும் கடித்துத் துன்புறுத்தி விட்டு மறைந்தன.

அரசனும் அளவிலாத ஆத்திரம் கொண்டான் இப்படி மாறிமாறிப் பாண்டியனது மனப்பாங்கு அமைந்தது. திருவாதவூரருக்குப் போற்றுதலும் தண்டனையும் மாறி மாறி வருவனவாயின பக்தியில் ஆழ்ந்து இருக்கும் ஒருவனுக்கு உலக வாழ்வில் உண்டாகும் இன்ப துன்பங்கள் அவரது பக்தியைக் கலைத்து விடுவதில்லை. உலகத்தவருடைய போற்றுதலை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. இதனால் பக்தனின் பக்தி தூய்மையடைகின்றது. தீயிலிட்டு உருக்குமளவு பொன் ஒளிவீசுவது போன்று துன்பங்கள் அதிகரிக்குமளவு பக்தியானது தீவிரபக்தியாக மாறுகிறது.

பாண்டிய மன்னன் திருவாதவூரரைச் சிறையிலிட்டுப் பல துன்பங்களுக்கு ஆளாக்கினான், வாதவூரர் பல இன்னல் வந்தபோதும் இறைபக்தியிலிருந்து மனம் தளர்ந்தாரில்லை "வாய்த்தது நந்தமக்கு ஈதோரர் பிறவி" என்ற வாக்கின்படி மணிவாசகர் இப்பிறவியினால் சிவசேவை செய்ய நேர்ந்ததே என்று நினைந்து தமக்கு மாறாத சிவபக்தியைத் தந்தருள வேண்டுமென்று இறைவனிடம் இடையறாது இறைஞ்சி நின்றார்.

இந்தநேரத்தில் வைகையாறு நீர்ப்பெருக்கெடுத்துக் கரையோரமிருக்கும் வீடுகளையெல்லாம் அரித்துக் கொண்டுபோகும் அறிகுறிகள் தென்பட்டன. பாண்டிய மன்னன் வைகைப் பெருக்கை நேரில் பார்வையிட்டு குடிமக்களுக்கு ஓர் ஆணைபிறப்பித்தான் அதன்படி வீட்டுக்கு ஓர் ஆள் கூடையுடனும், மண்வெட்டியுடனும் வேலைக்கு வந்து அணைகட்ட வேண்டியதாயிற்று. சிவனடி மறவாத செம்மனம் உடைய வந்தி என்னும் பிட்டு வாணிச்சி என்பவருக்கு கூலியாள் கிடையாமற் போகவே இறைவன் சொக்கநாதப் பெருமானிடம் முறையிட்டாள். இறைவனே "அடியவர்க்கு எளியவராகி"

ஓர் கூலியாள் வேடம் தாங்கி அவள்முன் வந்து முற்கூலியாகப் பிட்டு ஏற்று உண்டுவிட்டு வைகைக் கரையடைக்கத் தொடங்கினான். கூலியாள் வேலையை முடிக்காது ஆடியும் பாடியும் விளையாடி வீண் பொழுது போக்கிக் கொண்டிருந்தான். மன்னன் வந்து பார்வையிட்டபோது வந்தியின் பங்கு அடைபடாது இருப்பதைக் கண்ணுற்று கூலியாள் மீது பிரம்பால் அடித்தார். ஓங்கியடித்த பிரம்படி பிரபஞ்சமெங்குமுள்ள அண்டசராசரங்களிலெல்லாம் பட்டன. மதுரை வேந்தனும் அடிபட்டு வருந்தினான். கூலியாள் மாயமாய் மறைந்தான்.

மனிதன் தெய்வத்தோடு வைக்கிற பாசமானது எத்தகையதாயினும் அது நலத்தையே நல்குகிறது. பாண்டியன் செயல் இதற்கு அறிகுறியாகும். அடியுண்ட அரசனுக்கு நல்லறிவு பிறந்தது. மன்னன் திருவாதவூரரிடம் சென்று என்சொத்து என்று நான் எதைக் கருதினேனோ அது எல்லாம் உண்மையில் சிவன் சொத்து தாங்கள் அதனைச் சிவ சேவையில் செலவழித்தது தகும். ஈசன் எல்லாம் வல்லவன் தங்கள் பொருட்டு எம் பெருமான் குதிரைச் சேவகனாய் வந்தார் கூலியாளாய்க் காட்சி கொடுத்தார், மண்சுமந்தார், பாவியாகிய என்னிடம் அடிபட்டாரே. அவன் பக்தவத்சலன் அடியார்க்கு எளியவன் உமது நல்லிணக்கத்தினால் நான் இப்பொழுதே சிவபக்தன் ஆனேன் உமக்கு என்னால் செய்யக்கிடப்பது யாதோ? என மன்னன் வினவினான். திருவாதவூரர் தாம் துறவறம் பூண்டு வெளியேற விருப்பம் கொண்டதாகத் தெரிவித்தார்.

துறவறம் கொண்டு சிவநெறியில் தீவிரமாகச் செல்வதற்கான வாய்ப்பை வழங்கிய திருவருள் விலாசத்தை வாதவூரர் பெரிதும் வியந்தார். திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் குருநாதரும் சிவனடியார் கூட்டமும் பழையபடி வீற்றிருந்து. அடிகளுக்கு அளவிலா ஆனந்தம் ஊட்டியது. நல்லார் இணைக்கமும் நின்பூசை நேசமும் வாய்க்கப் பெற்ற மணிவாசகர் பல தலங்கள் தோறும் சென்று தரிசனம் செய்து திருவாசகம் பாடினார். அந்தணனாய் வந்து திருப்பெருந்துறையில் தம்மை ஆட்கொண்ட குருநாதரை மணிவாசகரின் மனம் எந்நேரமும் துதிகூறிக் கொண்டே இருந்தது. சிதம்பரம் வந்து புத்தரோடு வாதம் செய்து ஊமைப் பெண்ணை திருச் சாழல் பாடி வாய் திறந்து பாடவைத்தார். அவர் பாடிய திருவாசகங்களை கனகசபையிலே திருநடனம் செய்யும் இறைவன் கையினாலே எழுதிய பின்னர் பாவை பாடிய வாயால் கோவை பாடுக எனக் கேட்டுத் திருக்கோவையாரும் பாடுவித்தார். தாம் கையால் எழுதிய பாடல்களை திருக்களிற்றுப் படியிலே வைத்து மறைந்தருளினார் மறுநாட்காலையில் பூசை புரிய வந்ததில்லை வாழ் அந்தணர்கள் ஏட்டுச் சுவடியைக் கண்ணுற்று மணிவாசரை அழைத்துப் பொருள் கேட்டனர். திருவாசகத்தின் பொருள் "பொன்னம்பலக் கூத்துகந்தானே" எனக் கூறிக் கொண்டு மணிவாசகர் கனகசபையில் புகுந்து முத்தியடைந்தார். ஆனி மாதம் மக நட்சத்திரத்தில் மணிவாசகர் அத்துவித முக்திபெற்றார். இத்துணைச் சிறப்புக்களையும் ஒருங்கே உடைத்திருக்கும் மணிவாசகர் நடராஜனுக்கு உரியவர் ஆனார்.

**'ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி'**



சிவன் கோபுர கும்பாபிஷேகம்



ஐயனார்
கோபுர கும்பாபிஷேகம்



சிவன் கும்பாபிஷேகம்

ஐயனார் கும்பாபிஷேகம்



உ

சிவமயம்

# சிவதொண்டு செய்வார்கள்

சிவதொண்டு செய்வார்க்குச் செல்வமுண்டு கல்வியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சீருமுண்டு பேருமுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சிந்தை தெளிவுமுண்டு
சிவதொண்டு செய்வார்கள் சேருவரோ தீ நெறியில்

* * *

சிவதொண்டு செய்வார்கள் திசையெட்டு மாளுவார்
சிவதொண்டு செய்வார்கள் சென்மமல நீங்குவார்
சிவதொண்டு செய்வார்கள் தேவரையு மேவல் கொள்வார்
சிவதொண்டு செய்வார்கள் செத்துப் பிறவார்கள்

* * *

சிவதொண்டு செய்வார்கருச் சினமில்லை அச்சமில்லை
சிவதொண்டு செய்வார்க்குத் தீயவகங்காரமில்லை
சிவதொண்டு செய்வார்க்கிரவும் பகலுமில்லை
சிவதொண்டு செய்வார்க்குப் பழியூனுணவுமில்லை

* * *

சிவதொண்டு செய்வார்க்குச் சாந்தம் பொறுமையுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் திரிகால வுணர்ச்சியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் தீயபிணி நோயில்லை
சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்.

**சிவயோக சுவாமிகள்**

*நற்சிந்தனைப் பாடல்*



# திருவாதிரையின் சிறப்பும் மகிமையும்

**செல்வன் க. ஜெயந்தன் அவர்கள்**
க.பொ.த உயர்தரப் பிரிவு மாணவன் - யா/யாழ்ற்ரன் கல்லூரி - காரைநகர்

திருவெம்பாவை மார்கழித் திருவாதிரைக்கு முந்திய ஒன்பது தினங்களிலும் நடைபெறும். திருவாதிரை நாளோடு முற்றுப் பெறும். இந்தப் பத்து நாட்களும் தேவாலயங்கள், மடலாயங்களிலும், பிற இடங்களிலும் இவ்விழா மிகவும் சிறப்பாக் நடைபெறும். கார்த்திகை தீபத்திற்குத் திருவெண்ணாமலை எத்தகைய சிறப்பு வாய்ந்ததோ அங்ஙனமே திருவாதிரைக்குச் சிதம்பரம் சிறந்ததாகும்.

திருவருட் சக்தியை விதந்து மாணிக்கவாசகர் பாடியது திருவெம்பாவை. இது திரு - எம் - பாவை எனப்பிரிக்கப்படும். திரு என்பது அருள் எம் என்பது எங்கள் பாவை என்பது சித்திரப்பதுமை போன்ற பெண் எனப் பொருள்படும் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் "ஏல், ஓர், எம்பாவாய்" என்று முடிகின்றது. இவற்றை மாற்றிப் "பிரியமான தோழிப் பெண்ணே! ஏல்- ஏற்றுக்கொள் ஓர் - ஆராய்ந்து பார்" என மாற்றிக் கொள்ளல் வேண்டும்.

மனிதர்களாய நமக்கு ஒருவருடம் தேவர்களுக்கு ஒரு நாள். தை முதல் ஆனி முடியவுள்ள காலம் பகல் ஆடி முதல் மார்கழி இறுதியாகவுள்ள காலம் இரவு - இரவுக் காலத்துள் இறுதியானது மார்கழி. இது தேவர்களுக்கு விடியற் காலம். இக்காலத்திலே சந்தியா வந்தனம், பூஜை, வழிபாடு முதலியன செய்தல் தேவர்களுக்கு பிரீதியாகும். இக்காரணம் பற்றியே மார்கழி மாதம் முழுவதும் புலரிக் காலத்தில் நீராடி ஆலய் வழிபாடு செய்து வருகின்றனர். இக்காலத்தில் சிவாலயங்களிலே ஒரு காலைப் பூசை மேலதிகமாகச் செய்யப்பட்டு வருகின்றது. அங்கு சேமக்கல சங்கு, மணி ஒலியுடன் கிராம, நகர வீதிகளில் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி ஓதி வருவார்கள். பூசை முடிந்த பின்னர் புராணபடனஞ் செய்வர்.

திருவெம்பாவையில் குறிக்கப்பட்ட சக்திகள் ஒன்பது. அவையாவன மனோன்மணி சர்பூதணி, பலப்பிரதமணி, பலவிகரணி, கல்விகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை என்பனவாகும்.

ஆன்மாவானது மலமாகிய இருளிலே கிடந்துழலாமல் திருவருளிற் படிந்து மலபரிபாகத்தையடைதல் வேண்டும் என்பதே திருவெம்பாவையின் தத்துவப் பொருளாகும். இதனைப் "பைங்குவளைக் கார்மலரால்" என்னும் பாவில்,

*"தங்கள் மலங்கழுவுவார் வந்து சார்தலினால்*
*எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த*

*பொங்குமடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்*
*சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்*
*கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்*
*பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடே லோரெம் பாவாய்"*

எனக் கூறுவதனாலேயே அறியலாம் - மலத்தைக் கழுவுதல் நீராடுதலையும், திருவருட் பெருக்கு, தடாகத்தையும் நீரிற் பாய்ந்தாடுதல் திருவருட் பெருக்கிலே வீழ்ந்து திளைத்தலையும் குறிக்கும்.

*"மலவிருளுற் றுறங்காமல் மன்னுபரி பாகவருட்*
*செலமுழுக வருகவெனச் செப்பல் திருவெம்பாவை"*

எனத் திருப்பெருந்துறைப் புராணங் கூறுகின்றமையுங் காண்க. அருணாசலேஸ்வரர் மாணிக்கவாசகருக்குத் திருப்பெருந்துறையிலருளிய ஆசாரிய மூர்த்தமாகத் தரிசனங் கொடுத்தருள் புரிந்தருளினார்.

சூரியனுதிக்க ஐந்து நாழிகை முன்னரே வழக்கமாகத் துயில் விட்டெழுதல் வேண்டும். காலை விழிப்பின் அருமையும் பெருமையும் சாலச் சிறந்தது.

*"புத்தி யதற்குப் பொருந்து தெளி வளிக்குஞ்*
*சுத்த நரம்பினற் றூய்மையுறும் - பித்தொழியுந்*
*தாலவழி வாதபித்தந் தத்த நிலை நண்ணுமதி*
*காலை விழிப்பின் குணத்தைக் காண்"*

அதிகாலையில் விழித்தால் புத்திக்குத் தெளிவும், சரீரத்தில் உள்ள சுத்த நரம்பில இருக்கும் இரத்தத்திற்குப் பரிசுத்தமும், பித்தத் தணிவும், வாதபித்த சமனமும் உண்டாகும்.

மந்திரங்கள் பலவற்றுள்ளும் துயில் உணர்த்தும் மகா மந்திரமாய் விளங்குவது திருவெம்பாவை. எப்போதுமே உறக்கத்திற்குப் பேர் போனவர்கள் நம் தமிழ்மக்கள். அத்தகைய உறக்கத்திலிருந்து தட்டியெழுப்புவதற்காகவுமே இதனை மாணிக்கவாசகர் அருளினார் எனவும் கூறலாம். ஸ்ரீ ஆண்டாள் இயற்றிய திருப்பாவையும், மாணிக்கவாசகரது திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சியும் தமிழ்நாட்டு வீதிகள், தெருக்கள், வீடுகள், தோறும் கணீரென முழங்கிய காலம் ஒன்று உண்டு. இடைக்காலத்து இந்நிலைமை சோர்வடைந்து பிற்காலத்து மறுமலர்ச்சி அடைந்து மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டுவருகின்றது.


மார்கழியில் வருந் திருவாதிரை நட்சத்திரத்திலே சிதம்பரத்திலே நடராச தரிசன விழா நடைபெறும். திருவாதிரை நட்சத்திரத்திலே இவ்விழா நடைபெறுவதால் இது ஆருத்திரா தரிசனம் எனப்படும்.

ஆருத்திரா என்றால் திருவாதிரை என்பது பொருளாகும். இந்நாளிலே நடராசப் பெருமானின் அற்புத நடனத்தைக் காணத் தில்லைச் சிதம்பரத்திலே பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கூடுவர். இவ்வாறே இலங்கையிலும் இந்நாளில் ஈழத்துச் சிதம்பரம் என்று அழைக்கப்படுகின்ற காரைநகர் சிவன் கோவிலிலும் திருவாதிரை விழா சிறப்பாகக் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மார்கழித் திருவாதிரை கலந்த தினத்திலே இந்திராதி தேவர்களும், நாராதராதி மாதவர்களும் நிலைத்து வசிப்பவர். நாற்பத்தெண்ணாயிரம் இருடிகளும் அன்புடன் அணைவர். மகாமேரு முதலான பர்வதங்களும், கங்கை முதலான தீர்த்தங்களும், சப்த சமுத்திரங்களும் வெவ்வேறு வடிவு கொண்டனவாய் அத்தலத்தைப் பிரதட்சிணஞ் செய்வன. கிம்புருடர், கருடர், கின்னரர், நாகர் முதலானவர்களும் மறைந்து வசிப்பர். இதனாலே சிதம்பரத்திலிருந்து கொண்டு இவ்விரதத்தை அனுஷ்டிப்பது மேலானது. இவர்கள் யாவரும் மூன்று யுகங்களிலும் யாவருக்கும் தோன்றும் வண்ணம் வணங்கியிருப்பர். இழிவாகிய இக்கலியுகத்திலே ஒருவருக்கும் தோன்றாதபடி துதி செய்வர்.

முன்னொரு காலத்தில் அணுபட்சனமான ஒரு சுப்பிரமணியர் இத்தலத்தில் இவ்விரதத்தை அனுஸ்டித்து கையிலையில் எம்பெருமானைக் கலந்தருளினார். வியாக்கிரபாத முனிவர் அனுட்டித்து உபமன்யு முனிவரைப் பெற்றார். விபுலனென்னும் ஒரு ஞானி அனுட்டித்து சிவபெருமான் திருவடித்தாமரைகளை அடைந்தான்.

சைவ நன்மக்களாகிய நாம் வேண்டுவார் வேண்டுவதை வேண்டியாங்கு ஈந்தருளும் எம்பெருமானின் பஞ்சகிருத்திய தரிசனக் காட்சியைக் மார்கழித் திருவாதிரையில் கண்டுகளித்து வேண்டும் சித்திகளைப் பெற்றுய்வோமாக.



# வேண்டும் தமிழ் தழுவிய சைவம்

திரு. க. சிவராமலிங்கம் - M. A. அவர்கள்

“சைவநெறி தெரிந்திருக்கிறோம் தத்துவங்கள் பயின்றிருக்கிறோம் வேதம் ஆகமம் புராணம், இதிகாசம் என்பவை எல்லாம் எமக்குப்புதியனவல்ல. பூசை புனஸ்காரம் தவறவில்லை. கோயில்கள் புனருத்தாபனம் செய்யப்படுகின்றன. குடமுழுக்குகள் விதிப்படி நடந்து வருகின்றன. வழிபடுவோர் எண்ணிக்கையும் தானமும் பெருகி வருகின்றது.

“ஆனால் மக்கள் படும் துன்பம் குறைவதாக இல்லையே? என்று கேட்கிறார் ஒருவர். கேள்வி என்னவோ நியாயமாகப்படுகிறது. விடை சொல்ல முடியாது தவிக்கிறது உள்ளம்.

வினா எழுப்பியவரை, “இவர் ஒரு சமயவிரோதி” என்று தட்டிக்கழிக்க முடியுமா?

இவை எல்லாம் பிராரத்துவம், ஆகாமியம், சஞ்சிதம் என்று சாதாரணமாக விளங்கிக்கொள்ள முடியாத பதங்களை எடுத்து விளாசி கேட்டவர் வாயை அடைத்து விட முடியுமா?

அறிவியல் அசுரவேகத்தில் வளர்ந்து திணற வைக்கும் கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எதற்கும் அறிவியல் கண்ணோட்டத்தோடு விடை தரவேண்டியிருக்கிறது. இல்லையேல் ஏற்றுக்கொள்ள வளர்ந்து வரும் உலகம் மறுக்கிறது.

இன்றைய சமய சமுதாய பிரச்சனையே இதுதான். தீர்வுக்கு வழி தான் என்ன? வளர்ந்து வரும் உலகம்(இளைஞர்கள்) பற்றிய கவலை எமக்கு வேண்டாம். நாம் நமது ஆன்ம ஈடேற்றத்தைப் பற்றிச் சிந்திப்போம், செயற்படுவோம் என்ற முடிவுக்கு வரலாமா? இது நியாயமா?

சிந்தனை நெஞ்சை உறுத்துகிறதே! எமக்கு வழிகாட்டிய நால்வர் பெருமக்கள் உள்ளிட்ட அருளாளர்கள் செய்து காட்டியவை மனத்திரையில் ஓடும்போது நெஞ்சு சிலிர்க்கிறது.

இருந்த இடத்திருந்தே இறைவன் பாதங்களைப் பற்றி அன்பை பேசக்கூடவே ஆற்றல் அவர்களிடத்திருந்தும் அதை அவர்கள் செய்யவில்லையே! தாங்கள் பெற்ற இந்த இன்பத்தை எல்லோரும் பெறவேண்டும் என்ற “தமிழ்” வேட்கை, பயணம் என்பது

பயங்கரமானதான ஒரு காலகட்டத்தில் கால் தேய நடந்து, மாக்களை மனிதராக்கி, சிவனடியார்களாக்கிச் சிவம் பெருக்கிய அருட்செயல்களை நாம் நினைந்து செயல்படுதல் கடன் அன்றோ?

இன்று எமக்கு பெரிதும் வேண்டியது நால்வர் காட்டிய "தமிழ்" வழி தான்.

*"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே"*

என்ற திருமூலர் வாக்கை உச்சரிக்காத தமிழ் வாயே இல்லை எனலாம். ஆனால் திருமூலர் சொன்ன "தமிழ்" என்ன என்பது தான் புரியவில்லை!

திருமூலர் சொன்ன "தமிழ்" ஒரு மொழியின் பெயர் என்று கருதலாமா? அக்கருத்தையே ஏற்றுக்கொண்டால் இறைவன் மீது பாடல்கள் பாடுவதும், ஏலவே பாடப்பட்டிருக்கும் பாடல்களை இசையோடு பாடி மகிழ்வதும் பொருத்தமே. மறுப்பு இல்லை. பலனைக் காணவில்லையே!

அறிவுலகையே பிரமிக்க வைக்கும் அற்புதங்களைச் செய்த தெய்வப் பனுவல்கள் இன்று செயலிழந்து விட்டனவா? கண்டிப்பாக இல்லை. அப்போ என்று அத்தெய்வப் பனுவல்களோடு இரண்டறக் கலந்திருந்த "ஒன்று" இன்று அருந்தலாகிவிட்டது என்பதே உண்மை. அந்த "ஒன்று" எது?

அந்த "ஒன்று" எங்கோ தொலைவில் இல்லை. கிடைக்காததும் அன்று. அந்த ஒன்று வேறு எதுவும் அல்ல அன்புதான்.

எல்லாம் இருந்தும் அன்பு இல்லை. எனவே எதுவும் பயன்படுவதாய் இல்லை.

திருமூலர் குறிக்கும் "தமிழ்" அன்பே தான். கண்ணப்பரைச் சிவகோசரியாருக்கு அறிமுகம் செய்யும் போது குடுமித் தேவர் செப்பிய "என்பக்க அன்பு" என்ற சொற்பதரும், சுந்தரரை அறிமுகம் செய்த காலை "சால என்பால் அன்புடையான்" என்ற சொற்பதமும் சிந்தை கொள்க.

இதனால் பாடுவோர் எல்லாம். அன்பிலாது பாடுகிறார்கள் என்று கொளற்க. ஒரு சில சிவன் பால் சிந்தை தந்தவர்கள் இன்றும் நின்று பாடுவதால் தான் இவ்வளவானதால் இவ்வையகம் வாழ்கிறது.

சரி என்ன தான் செய்வோம்? இன்றைய இளைஞர்களே நாளைய மன்னர்கள் இதை முதலில் ஏற்றுக்கொள்வோம். அன்பு நெறி காட்டும் அருள் நிலையங்களான ஆலயங்களுக்கு அவர்கள் கவரப்பட வேண்டும். பெரியவர்கள் சிறிது ஒதுங்கி இளைஞர்களை ஆலய சேவையில் பங்குகொள்ளச் செய்ய வேண்டும். இளைஞர்கள்

செய்யும் சிறு தவறுகளை அதிகம் பொருட்படுத்தாமல் வழிகாட்டி ஊக்குவிக்க வேண்டும். உதாரணமாக தேவாரம் பாடும் போது தவறு விட்டால் எந்த பள்ளி? யார் வாத்தி? என்று அதட்டி அவர்கள் உள்ளங்களை ஒடிக்காமல் கனிவுடன் அணுக வேண்டும்?

ஆலயச் சுற்றாடல்களில் "அன்பு நிலையங்கள்" உருவாக்கப்பட்டு இளைஞர்கள் சமூகத் தொண்டு செய்ய ஊக்குவிக்கப்பட வேண்டும். "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்பது சைவத்தின் அஸ்திவாரம். ஒவ்வொரு ஆலயத்திலும் சைவ இளைஞர் மன்றங்கள் நிறுவப்பட வேண்டும். இம்மன்றங்களுக்கு ஆலய நிர்வாகத்தில் உரிய பங்கு கொள்ள வாய்ப்புத் தரப்படல் வேண்டும். அன்பினாலும், அதன் வழிப்பட்ட தொண்டினாலும் அகிலத்தையும் அடிமைப்படுத்தலாம் என்பதை காட்டியவர் உழவாரப்படையாளி அப்பர். இன்னோரன்ன அறிவுரைகளால் ஒரு அன்பே உருவான, தொண்டே தொழிலான இளைஞர் படையை உருவாக்க முடியும். தமிழ் தழுவிய சைவம் நிலைக்கும்.

**'வெல்க தமிழ்'**



# கும்ப அலங்காரம்


யாக ரட்சக வித்வசிரோன்மணி

**பிரம்மஸ்ரீ. ச.சர்வேஸ்வரசர்மா (சபாஜயா)**

மட்டுவில் தெற்கு


கடஸ்தாபனம் என்றால் கும்பம் வைத்தல் எனப் பொருள்படும். இக் கிரியையில் கருத்தை ஆராய முற்பட்டால் விநாயகப் பெருமானை நாம் வழிபடுவதற்கு நாம் கோமயம். மஞ்சள், சந்தனம், கூர்ச்சம், வாழைப்பழம் ஆகியவற்றால் உருவமைத்து உடன் பூஜை செய்கின்றோம். அங்ஙனமே ஆத்மார்த்த சிவபூஜை செய்யுமிடத்தில் சிவலிங்கத்திற்குப் பதிலாக உருத்திராக்கம், சந்தனம், கூர்ச்சம் என்பவற்றில் அவாஹித்து வழிபாடு செய்கின்றோம். அங்ஙனமே கடவுள் யாவரையும் தற்காலிகமாகப் பூஜிப்பதற்குக் கும்பங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன.

மகோற்சவத்திலோ, ஸ்நபனாபிஷேகத்திலோ, சங்காபிஷேகம், கும்பாபிஷேகம் முதலியவற்றிலோ, வேறு எப் பூஜையிலோ கும்பத்தில் மூல மூர்த்திகள் உருவாக்கப்பட்டு பூஜிக்கப்படுகின்றனர். வைதீகக் கிரியைகளும் இம் முறையே கையாளப்படுகின்றது. பாலஸ்தாபனத்திலும் கூட சில தினங்கள் வைத்துப் பூஜிப்பதற்கு கும்பங்கள் கலாகர்ஷணப் பொருட்களாக விதிக்கப்பட்டுள்ளன.

பூர்ண கும்பம் என்றால் மங்களம் அதாவது குடம், தேங்காய், மாவிலை, சந்தனம், குங்குமம், தானியம், வாழையிலை இப்படி எல்லாமே மங்களப்பொருள் அது எப்படியெனில் கும்பம் அறுத்தாய் (அசுத்தமாய்) இருத்தலின் சமஸ்காரனத்தினால் (சுத்தம் செய்வதால்) தேவாம்சமாய் ஆக்க வேண்டும் சமஸ்காரமில்லாத கும்பத்தை நீக்குதல் வேண்டும் சுத்தம் இல்லாத குடத்தை சுத்தம் செய்வதாக தெளித்தல், பார்த்தல், தொடுதல், அப்பியுக்ஷனம் முதலிய கிரியைகள் செய்வதால் சுத்தம் ஆகின்றன. கும்பமானது சமஸ்காரம் செய்வதால் குற்றங்கள் நீங்கப்பெற்று சிவ சம்பந்தம் உண்டாய் அதில் சிவ பெருமானை ஆவாஹனத்தால் இருக்க செய்தலும் விடத்துவநியாசத்தால் ஆறு குணங்கள் சர்வ தீர்த்தங்களை உடைமையாலும் சர்வதேவ சொரூபமாயிருத்தலாலும் சிவஸ்வதபமேயாகும்.

மஹா மண்டத்தில் கும்பஸ்தாபனத்தில் பொருட்டு நெல், அரிசி, பாசிப்பயறு, உழுந்து, கோதுமை, துவரை, எள்ளு முதலிய தானியங்களை ஸ்தாபித்து அதில் எட்டு இதழ், தாமரை பூ வரைந்து தர்ப்பை, நெல், மலர், புஷ்பம் வைத்து கர்த்தாவின் தகுதிக்கு ஏற்ப பரிபாலனசபையின் தங்கம், வெள்ளி, செம்பு, மண், இவைகளால் ஆன குடத்தை தெரிவு செய்து சுகந்த தூபப் புகை காட்டி நரம்புக்குச் சமமான நூல் சுற்றி. நூல் சுற்றும் பொழுது எள்ளுப் பிரமானமாகவும் நெல்லுப்பிரமானமாகவும் யானைக்கண் பிரமானமாகவும் சுற்ற வேண்டும்.

உள்ளே நெய்பூசி தீர்த்தம் நவரத்தினங்கள், தங்கத்தாமரைப்பூ, நீலோற்பலப்பூ, தங்கச் சிவலிங்கப் பிரதிமை, அந்தக் கூர்ச்சம், பட்டு வஸ்திரம், உத்திரீயம், பூணூல், மாதுளம்பழம், சந்தனம், குங்குமப்பூ, கஸ்தூரி, ஜவ்வாது, வெட்டிவேர், இலாமிச்சைவேர், தக்கோலம், கராம்பு, ஏலம், இலவங்கப்பத்திரி, சீதேவியார் செங்கழுநீர், சாதிக்காய், கோட்டம், நாகப்பூ, மகு, மருக்கொழுந்து விஷ்ணுக்கிராந்தி, ஓரிதழ்தாமரை, நீரோற்பலம், சண்பகமொட்டு, செண்பகப்பூ, சாதிப்பூ, புனுகு, பச்சைக் கற்பூரம், புஷ்பம், பத்திரம், மாவிலை, தேங்காய், லம்பக் கூர்ச்சம், சந்தனம், அச்சதை, குங்குமம், மாலை இலைகளை விதிப்படி அலங்கரித்துக் கொள்ள வேண்டும்.

கும்பத்தோடு சகஜமாக இருக்கும் மண். செம்புக்குடமானது உடலுக்குரிய அம்சங்களாகும். கும்ப உதகம் (நீர்) மேதை எனப்படும் இரத்தமாகவும் அந்தர்க் கூர்ச்சம் (உள் வைக்கப்படும்) முள்ளந்தண்டாகவும் கருதப்படும் எலும்பும் கும்பத்தைச் சுற்றியுள்ள நூல் எழுபத்தீராயிரம் நாடி நரம்புகளாகும். கும்பத்தினுள் இடப்படும் சுவர்ணம், புஸ்பம் சுக்கிலமும், மாதுளம்பழத் தந்தமும் (பல்லும்) மாவிலை சடையாகவும், தேங்காய் கபாலமாகவும் (சிரசும்) கூர்ச்சம் (குடுமி) மயிராகவும் வஸ்திரம் தோலாகவும் மந்திரம் (ஜீவன்) உயிருமாகும்.

சிவாசனம் :- பிருதுவி தத்துவம் முதல் குடிலா சத்ததியந்தமான முப்பத்தாறு தத்துவங்களையும் இருநூற்று இருபத்து நான்கு புவனங்களையும் உறுப்புக்களாக உள்ளது. அநந்தாசனம், சிம்மாசனம், யோகாசனம், பதுமாசனம், விமலாசனம் எனும் பஞ்சாசனங்களையுடையதும் இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த ஆசனம் சிவ மூர்த்திக்கு ஆசனமாம்.

விளக்கம் :-

பிருதுவி தத்துவம் தாமரைக்கிழங்கு அது தவிர்ந்த கலையால் வியாபிக்கப்பட்டு ஆதாரசக்தியின் சிரசில் இருக்கும் ஒன்று படுத்தி நீரை இழுக்கும். வாயுத்தத்துவம் இயக்கிக் கட்டும் ஆகாச தத்துவம் இடம் கொடுக்கும்.

சத்தம், பரிஷயம், ரூபம், இரசம், கந்தமெனும் ஐந்து தத்துவங்கள் தாமரையின் முளையாகும். வாக்கு, பாதம், பானிபாயு, உபதத்தம் என்னும் கன்மேந்திரிகள் ஐந்தும் சுரோத்திரம் துவக்கு, சுட்சு, ஜிக்குவா, ஆக்கிரானம் என்னும் ஞானேந்திரியம் ஐந்தும் ஆகப்பத்துத் தத்துவங்களும் நாளத்தினுள்ளாக இருக்கும் ஒன்பது துளைவடிவங்களாகும். மனம், அகங்காரம், புத்தி, என்னும் தத்துவங்கள் ஆகத்தில் நின்று தொழிற்படுத்தும் புத்தியின் பாவட்டங்கள் சிம்ஹ வடிவாயிருக்கும் பிரகிருதி தத்துவம் புருடதத்துவம் ராகதத்துவம் வித்யாதத்துவம், கலாதத்துவம், நியதிதத்துவம், காலதத்துவம் என்பன தாமரையின் நாளவடிவமாகும். இத் தத்துவங்களில் உள்ள புவனங்கள் நாளத்தின் முட்களாகும் அசுத்த மாயாதத்துவம் புறவிதழாகும்.

சுத்தவித்யா தத்துவத்தில் அட்டவித்தியேசுவர ரூபங்களாகிய எட்டுத் தளங்கள் இருக்கும். ஈஸ்வரன் சதாக்கியம் என்னும் இவ்விரு தத்துவங்களும் அறுபத்துநான்கு கேசர வடிவாய் இருக்கும். கிழக்கு முதலிய எட்டுத்திக்குகளிலுமுள்ள அறுபத்துநான்கு கேசரங்களில் வாமை முதலிய எட்டுச் சக்திகள் இருப்பர்.

சக்தி தத்துவம் அக்கேசங்களுக்குள்ளாகப் பொருந்திய பொருட்டு வடிவாம் சிவதத்துவம் ஐம்பது பீச வடிவாய் இருக்கும் ஐம்பது வர்ணாத்துவாவும் ஐம்பது பீசங்களுக்கும் அதிதேவதைகளாக இருப்பர். காணிகையின் நடுவில் பிரணவரூபமான சத்திய மண்டலம் இருக்கும். அதில் சிவபெருமான் எழுந்தருளியிருப்பர். இப்படிப் பரமசிவனுக்கு ஆசனமாகிய பதுமத்தை ஆதார சக்திக்கு மேல் பிருதுவி தத்துவம் முதல் குடிலைப் பரியந்தம் வியாபித்துள்ளதாக சிந்திக்க வேண்டும் இம் முறை அறிந்து தியானித்துக் கற்பிக்கும் ஆசனமே விவாசன கற்பனவாகும்.

*"பதுமானந் தாணுற வற்றிருப்பர் சதாசிவா*
*தத்துவ தவிசினுகந்தே"*

*- சிவதருமேத்தரம்*

ஆசன ரூபமாய் உள்ள சப்ததானியங்களில் விருஷபம், ஸ்கந்தர், வருணன், அக்கினி, சந்திரன், குபேரன், தேவி இந்த ஏழு தேவர்களும் கும்பத்தின் அடியில் ஆத்ம தத்துவம் தத்துவாதிபதி பிரமாவும் கும்பநடுவில் வித்தியாதத்துவம், தத்துவாதிபதி விஷ்ணுவும், கும்பநுனியில் சிவதத்துவம் தத்துவாதிபதி உருத்திரனையும் கும்பத்தில் சக்திகளையும் மூவிழை நூல்கலில் சரஸ்வதி, லக்ஷ்மி, ரௌத்திரி இவர்களையும் கும்பப் புகையில் ஹர்ஷனியையும் தீர்த்தத்தில் கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதா, சிந்து, காவேரி, குமாரி இவர்களையும் மத்தியில் வருணனையும் நவரத்தினத்தின் மத்திய ரத்தினத்தில் மனோன்மணியும் கிழக்கிலுள்ள வைரத்தில் வாமையும் தென் கிழக்கிலுள்ள வைடூரியத்தில் ஜேஷ்டையும், தெற்கிலுள்ள கோமேதகத்தில் ரௌத்திரியையும், தென்மேற்கிலுள்ள புஷ்பராகத்தில் காளியும், மேற்கிலுள்ள பத்ம ராகத்தில் கலவிகரணியையும், வடமேற்கிலுள்ள ரத்தினத்தில் பலவிகரணியையும், வடக்கிலுள்ள மாணிக்கத்தில் பலபிரமதனியையும், வடகிழக்கில் நீலத்தில் சர்வ பூத்தமணியையும் பூஜிப்பதாகும்.

தங்கத்தாமரைப் பூவில் சதாசிவத்தையும் வாசனைத்திரவியங்களின் ஒன்பது சக்திகளையும் அந்தக் கூர்ச்சத்தின் அடியில் பிரமாவும், நடுவில் விஷ்ணுவும், நுனியில் உருத்திரனையும், மாவிலையில் கங்கையும், தேங்காயில் உருத்திரனையும், வஸ்திரத்தில் கவசமந்திரங்களையும், லம்ப கூர்ச்சத்தின் அடியில் நடுநுனிப் பிரதேசத்தின் இச்சை, கிரியை, ஞானம், எனும் முச்சக்திகளையும் பூணூல் பச்ச பிரம மந்திரங்களையும் வர்த்தன் கழுத்தில் உள்ள திருமாங்கல்யத்தில் சிவனையும் பூஜித்தலால் கும்பம் சர்வ தேவதாஸ்வரூபமாக இருத்தல் காண்க இது ஆகமங்களின் துணைகொண்டு மேலும் விரியும் என்றும் அறிந்தவர் அறியும் வண்ணம் பார்வதி பரமேஸ்வரன் துணைகொண்டு பிரார்த்திக்கின்றேன்.

# சுகம்பெருகி வாழி

பார்பூத்த யாழ்ப்பாணம் பதியின் மேல்பால்
பயன்பூத்த காரைதிண்ண புரத்தில் ஞானத்
தேர்பூத்த சுந்தரேஸ் வரனார் மேவும்
சிவம்பூத்த ஈழத்துச் சிதம்பரத்தில்
நேர்பூத்த தெய்வீகக் காந்தம் வீசும்
நிறைபூத்த கோபுரகும் பாபிஷேகம்
சீர்பூத்த புவனியெலாம் தரும் பூக்கத்
தேன்பூத்த பொன்மழையாய்ப் பொழியக்கண்டேன்.

அணிபெருகும் அடியார்கள் அன்பர், தொண்டர்
அகம்பெருகு பெருமுயற்சி, அமரர் போற்றும்
பணிபெருகு கோபுரங்க ளாகி, தெய்வப்
பலன்பெருகு சோதியாய் மலரக் கண்டேன்
பிணிபெருகு துயர்நீங்கி நமச்சிவாயப்
பெயர்பெருகு சிவனருளால் அடியாரெல்லாம்
மணிபெருகு கோபுரங்கள் இரண்டும் கண்டு
மனம் பெருகு சுகம்பெருகி வாழி ! வாழி !

**அருட்கவி சீ. விநாசித்தம்பி**

# உருத்திராக்க மகிமை

காரை பிரம்மஸ்ரீ கு. சிவராஜ சர்மா
காரைநகர்

*பூணாமல் கண்டியினை பூசை புரிவார் கலத்தைக்*
*காணார் எனவே கழலுமறை நானாதே*
*பூண்டு சிவபூசை புரிவார் புகுந்து 'மேற்புறத்துக்*
*கண்டிருப்பார் ஈசன் கழல்*

*(உருத்திராக்க வசிட்டம்)*

சிவசின்னங்களில் மூன்று மிக முக்கியமாவை விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சர ஜெபம் மிகவும் சக்தியுடையது.

சிவதீட்சைப் பெற்றவர்களாகவும் நல்லொழுக்கம் உடையவராகவும், மது, மாமிச போசன வழக்கம் இல்லாதவர்களாகவும் உள்ளவர்கள் பஞ்சாட்சர ஜெபம் செய்வதற்கு உரியவராவர் உபதேசம் குரு முகமாகவே பெறவேண்டும் குருவை வழிபட்டு தட்சணை தந்து மகிழ்வித்தே பெறவேண்டும்.

பசுவின் சாணத்தை நெருப்பினாலே எரித்து எடுத்தலால் உண்டாகியதே "திருநீறு" எனும் விபூதியாகும். வெண்மையான நிறமுள்ள விபூதிதான் தரிக்கத் தகுந்தது. பிற நிறங்களில் உள்ளவை தரிக்க ஆகாதவை.

தேவர்கள் திரிபுரத்து அசுரர்களாலே தங்களுக்கு நிகழ்ந்த துன்பங்களை எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்க கேட்டுக்கொண்டிருந்த சிவபெருமானின் முக் கண்களிலிருந்தும் பொழிந்த நீரில் தோன்றிய மணியாம் உருத்திராட்சம். பாவங்களை கண்டிப்பதனால் உருத்திராக்கம் கண்டிகை எனப் பெயர் பெற்றது. உருத்திராக்கம் அணிபவர்களை பேய், பூதம், நோய் முதலியன வருத்தமாட்டா. நீராடும் போது உருத்திராக்கத்தின் மீது பட்டநீர் நம் உடம்பில் படுவதால் மிகுந்த நன்மையுண்டாகும். தீராத ஜுரத்திற்கு வைத்தியர்கள் உருத்திராட்சத்தை தேனில் உரைத்துக் கொடுத்து குணமாக்குவர். விபூதியானது சிலவேளை வியர்வை, மழை முதலியவற்றால் குலைந்துப் போனாலும் உருத்திராக்கம் இருந்தால் தோஷமில்லை. இதனால் இராக்கதரால் பீடிக்கப்படும் பாவம் அணுகாது.

உருத்திராக்கமரம் கிழக்கு ஆசியா, மலேசியா, அவுஸ்திரேலியா, பசுபிக்தீவுகள், நேபாளம், இந்தியா ஆகிய நாடுகளில் நிறையவும் வளர்கிறது. இவை இரத்தச் சிவப்பு,

வெண்மை, கறுப்பு, ஆகிய நிறங்களில் உண்டு. ஒன்றில் தொடங்கி இருபத்திஐந்து வரை உள்ள எண்ணிக்கையான முகங்கள் உண்டு.

இருபத்தியேழு உருத்திராட்சம் உள்ள மாலை சிறந்தது என்பர் இதனைக் கொண்டு செய்யப்படும் ஜெபத்தினால் மந்திரங்களுக்கு விஷேட பலன்கள் உண்டு. அடியார்கள் காதில் .3 மணி, மணிக்கட்டில் -12, முடியில் -36, கழுத்தில் -27 முதல் 32 வரையும் மாலையாக 108 உருத்திராக்கங்கள் அணிவார்கள் இதனை பட்டுநூல்,பவுண்கம்பி,பித்தளைக்கம்பி,வெள்ளிக்கம்பி மூலம் கோர்த்தோ கட்டியோ அணியலாம். பூணூலிலும் தரிக்கலாம். கோர்க்கும் பொழுது இடையிடை பவளம்,படிகமணி,பொன்மணி இவைகளைக் கோர்த்து அணிய வேண்டும். இவையுமன்றி வில்வப்பழ கொட்டையும் கோர்க்கலாம். இவ்வாறு சேர்க்காமல் உருத்திராக்கங்களை மாத்திரம் கோர்த்துத் தரித்துக்கொண்டால் எத்தனை மணி சேர்த்தாலும் ஒருமணி அணிந்தால் உண்டாகும் பலனே கிடைக்கும். இந்த உருத்திராக்கங்களில் ஒருமுகம் , பதினெட்டுமுகம், பதின்னான்குமுகம் உள்ள மணிகளை வைத்துக் பூசித்தாலும். சிவார்ச்சனை செய்வதால் உண்டாகும் பலன் கிடைக்கும்.

மலசலம் கழித்தல் , போகம் செய்தல் , சௌரம் செய்தல் போன்ற நேரங்களில் உருத்திராட்சமாலை அணியக்கூடாது உருத்திராக்கத்திலுள்ள முகங்களுக்குறிய அதிதேவதைகளை குறிப்பதாக தெரிவித்து அவற்றிற்கு வெவ்வேறு பலன்களும் கூறுவர். அவை வருமாறு :

| | | |
|---|---|---|
| 01 முகம் | - | சிவபெருமான் - சகல காரிய சித்தி |
| 02 முகம் | - | சிவபார்வதிக்கு - இச்சையைக் கட்டுப்படுத்தும் , இலட்சுமி கடாற்சம் கிடைக்கும். |
| 03 முகம் | - | அக்கினி பகவான் - வேலையில்லாதவர்களுக்கு வேலை தரும். |
| 04 முகம் | - | தர்ம தேவர் - சித்தபிரமையைப் போக்கும். |
| 05 முகம் | - | காலனை அழித்தசிவன், இருதய நோயை நீக்கும். |
| 06 முகம் | - | சுப்பிரமணியர் - மயக்கம்,இரத்தஅழுத்தம் நீக்கும் |
| 07 முகம் | - | ஆதிசேஷனுக்கும் - ஆயுளை அதிகரிக்கும். |
| 08 முகம் | - | விநாயகர் - செல்வத்தைத் தரும். |
| 09 முகம் | - | தாலபைரவருக்கு |
| | - | முத்திக்குவழிகாட்டும் இருதயபலவீனத்தைபோக்கும். |
| 10 முகங்கள் | - | விஷ்ணுவிற்கு - இருமலைக் குணப்படுத்தும். |
| 11 முகங்கள் | - | சிவன் - தொற்றுநோய்களை நீக்கும். |
| 12 முகங்கள் | - | சூரியனுக்கு - இந்திரிய பலத்தை வலுப்படுத்தும். |
| 13 முகங்கள் | - | காமதேனுவிற்கு - ஞானத்தைத்தரும். |
| 14 முகங்கள் | - | நீலகண்டசிவன் - உடல் தேஜ உண்டாக்கும். |

பாலில் உருத்திராட்சத்தைப்போட்டு சிறிது நேரம் கழித்து அருந்தினால் சளியும், கசமும் நீங்கும் உருத்திராட்சம் பொருள் கொடுத்து வாங்கியணியவேண்டும். இனாமாக வாங்கக் கூடாது. உருத்திராக்க மாலையை விரும்பியோ விரும்பாமலோ வேண்டியணிபவர்களுக்கு பலன் உண்டு. ஏக மணி உருத்திராக்கத்தை நீர் ஓட்டத்தில் விட்டால் எதிர்த்தோடும் . இரு முக மணியை அணிந்து நெருப்பில் இறங்கினால் உடல் வேகாது. மூன்றுமுகம் அணிந்தால் ஆயுதங்கள் ஊறுசெய்யாது. ஐந்து முக மணி நீரில் மூழ்க மாட்டாது, நான்கு முக மணி மூழ்கி பிறமும் மணியில் பவுண் தன்மையுண்டு இதனை நகை பரிசோதிக்கும் கல்லில் தேய்த்துப் பார்த்தால் பவுண் தன்மை தெரியும். பித்தளை ஒருசதம் வைத்து சுற்றினால் விழமாட்டாது. இவற்றை சிவமகா புராணம் கூறுகிறது

உருத்திராக்கம் இரத்த அழுத்தம், காமாலை நோய், இருதய நோய் கபம்,சளி என்பவற்றை நீக்குகிறதென்றும் விஞ்ஞானிகள் இப்பொழுது கூறுகிறார்கள். இதிலிருந்து இவை என்றும் அழகிற்கு மட்டும் அணியப்படவில்லை ஆத்மீக விஞ்ஞான பூர்வ பலன் உண்டு என்பதை உணரலாம். உருத்திராக்கம் அணிவதால் மனத்திடம் உருவாகின்றது.

உருத்திராக்கம் அணிந்து ஸ்நானம்,தானம்,ஜபம்,ஓமம்,வேத சுத்தியானம்,பிதுர் தர்ப்பணம்,சிவ விஷ்ணு பூஜைகள்,சிரார்த்தம்,புராணம்,தேவாரம் ஓதுதல் என்பன செய்தல் வேண்டும் எல்லோரும் உருத்திராக்கம் அணிந்து தேக பலமும் மனோபலமும் பெற்று பலகாலம் வாழவேண்டும் என்று எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பர சிதம்பரேஸ்வர சிவகாமி அம்பாளை வேண்டுகின்றேன்.



சிவன் அழகுமிகு தூபி





ஐயனார் அழகுமிகு தூபி



அம்மன் அழகுமிகு தூபி

நடராஜர் அழகுமிகு தூபி





# ஊனுண்ணலும் உயிர்ப்பலியும் சைவமக்கள் தவிர்க்க வேண்டியன

**வித்துவான். க. சொக்கலிங்கம் எம். ஏ.,**

சைவராகிய எமக்குக் கன்மம், மறு பிறப்பு என்பனவற்றில் அழுத்தமான நம்பிக்கை உள்ளது. மாணிக்கவாசக சுவாமிகளின் சிவபுராணத்தினைச் சைவராயுள்ள பாலர் தொடக்கம் முதியோர் வரை யாவருமே மனப்பாடம் செய்து ஒப்புவிக்கவும் ஆற்றல் பெற்றிருப்பதும் மறுக்கொணா உண்மை. வெள்ளிதோறும் பாடசாலைகளிலே சைவப்பிள்ளைகள் சிவபுராணத்தைப் பாராயணம் செய்துவரல் பரம்பரை பரம்பரையாக இடம் பெற்று வருவதே இதற்குக் காரணம் எனலாம்.

மாணிக்கவாசக சுவாமிகள், ஆன்மாக்களின் பிறவிகள் பற்றிக் கூறுவன இவை:

*புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்*
*பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்*
*கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்*
*வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்*
*எல்லாப் பிறப்பும்..............................*

உலகிலுள்ள உயிரினங்களைப் பலகோடி யோனிபேதங்களாய்ப் பகுத்து நோக்குவதும் சைவமரபேயாம். தொல்காப்பியம் உயிர்களை ஓரறிவுடையன தொடக்கம் ஆறறிவுடையன வரை ஆறுபகுப்புக்களுள் அடக்குகின்றது.

ஆக,உடலாலும்,உருவாலும்,அறிவாலும்,திறனாலும்,எறும்பும் மனிதப் பிராணியும் வேறுபட்டாலும் உயிர் என்ற வகைமையினுள்ளே இரண்டும் அடங்குவதால் ஒன்றுக்கு ஒன்று சமமானவையே. ஏனெனில் எறும்பு தனது மறுபிறப்பில் மனிதனாகலாம். மனிதன் தனது மறுபிறப்பிலே எறும்பாகலாம். பிரார்த்த, ஆகாமிய, சஞ்சிதவினைகளுக்கேற்ப பிறவிகள் நேர்கின்றன என்று நம்பும் சைவசமயி, எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணியிரங்கும் கடப்பாடுடையவன்: வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் தானும் வாடுகின்ற மனபக்குவம் அருளாட்சி ஆகியன அமைந்த உள்ளமே சைவ உள்ளம்.

இவ்வுண்மையை உணர்ந்தமையாலேயே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவசமயிக்கான வரைவிலக்கணத்துள்ளே மது மாமிச போசனம் செய்யாமையையும் உள்ளடக்கினார் மது அருந்தலாற் பிறப்பன மயக்கம்,வெறி என்பன மாமிசம் உண்ணலாற் பிறப்பன இரக்கமின்மை,கொடுமை ஆகியன இரண்டுமே சைவசமயிகளாலே தவிர்க்கப்பட வேண்டியன.

சைவத்திருமுறைகளுள்ளே தோத்திரம், சாத்திரம் என்ற இருகூறுகளையும் தன்னுள் அடக்கியது திருமந்திரம், இது பத்தாவது திருமுறை, ஒன்பது தந்திரங்களைக் கொண்டுள்ள இந்நூலின் முதலாம் தந்திரம் இருபத்து நான்கு அதிகாரங்களாய் வகைப்படுத்தப்பட்டு வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்கான வழிகளைப் பலபட விரித்துரைக்கும் அவற்றுள் ஒன்று புலாலுண்ணலின் இழிவுகளை இடித்துரைத்தல் காணலாம்.

"புலால் பொல்லாதது அதனை உண்பவர் கீழானவர், புலையர்கள் அவர்களின் பாவம் மன்னிக்க முடியாதது. இப்புலையர்களை எல்லாரும் காண இயமனின் தூதுவர் இறுகப் பற்றி எரிவாய் நகரிலே மல்லாக்கத் தள்ளுவர், அங்கிருந்து வெளிவர முடியாதவாறு மறித்தும் வைப்பர்" என்பதாகிய கருத்தமைந்த திருமந்திரப் பாடல் இது:

*"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை*
*எல்லோருங் காண இயமன்றன் தூதுவர்*
*செல்லாகப் பற்றித் தீவாய் நகரத்தில்*
*மல்லாக்கத் தள்ளி மறித்திருப் பாரே."*

இந்தக் கருத்துக்கு முன்னோடியாகவும், சாரமாகவும் பின்வரும் திருக்குறள் அமைந்திருத்தல் காணலாம்.

*"உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண*
*அண்ணாத்தல் செய்யாது அளறு."*

"ஒருசார் உயிர் உடம்பின்கண்ணே நிற்றல் ஊன் உண்ணாமை என்கின்ற அறத்தின் கண்ணது, ஆகலான் அந்நிலை குலைய ஒருவன் அதனை உண்ணுமாயின், அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ்தற்கு அங்காவாது" என்பது இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தந்துள்ள உரை. நிரயம் - ஒருவகை நரகம், அங்காவாது - வாயை(அண்ணாந்தி) திறவாது அஃதாவது புலாலுண்டவனை உண்ட நரகம், அவனை வெளியில் உமிழாது (இந்தக் குறட்பாவிற்கு நாமக்கல்கவிஞர், வே.இராமலிங்கம் பிள்ளை தமது புத்திரையிலே, "ஊனை உண்பதற்கு நரகங்கூட வாய் திறக்காது ஆகவே ஊனை உண்ணலாகாது என்று பொருளுரைப்பதும் நோக்கத்தக்கதே.

நான் ஒரு பாடசாலையிலே அதிபராய்ப் பணிபுரிந்த காலத்தில் அப் பாடசாலையிலே கற்ற மாணவர் சமய தீட்சை பெறுதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டேன். பெரும்பாலான மாணவர் தீட்சை பெறவிரும்பிய போதும் அவர்களும் அவர்களின் பெற்றோரும் மாமிசம் உண்போராயிருந்தமையால் பெற்றோர் அவர்கள் சமயதீட்சை பெறுவதற்கு இசைவளிக்கவில்லை.

ஞானஸ்தானம் பெறாதவனைக் கிறிஸ்தவ உலகம் கிறிஸ்தவனாய் ஏற்பதில்லை "சுன்னத்து" செய்துகொள்ளாதவன் முஸ்லிம் ஆவதில்லை ஆனால் சைவராவதற்கு இன்றியமையாத் தேவையான சமயதீட்சை பெறாதவரும் சைவர்களாகவே சைவஉலகால் ஏற்கப்படும் அவலநிலை உள்ளது. மாமிசம் உண்ணாதவரையே சிறப்பாகச் "சைவம்"

"பிறவிச்சைவம்" என்று மதித்துப் பிரித்துச் சிறப்பிப்போர், தம்மை எவ்வகைச் சைவர்களாய் எண்ணுகின்றனர் என்பதும் விடுவிக்கமுடியாத புதிராகவே உள்ளது (மனித உடற்கூறுகளிலே பற்களும், இரைக் குழாயும்,தாவர உணவிற்கு உகந்தனவாகவேயுள்ளன என்றும் மாமிசஉணவிற்கு உகந்தன அல்ல என்றும் சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார் தமது சைவ போதம் (மூன்றாம் வகுப்பு) நூலிற் கூறியுள்ளார் ).

ஊனுண்பதை தவிர்த்தல் இயலாது என்பதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

1. தமிழராகிய எம்முன்னோர் மாமிசம் உண்டமைக்குச் சான்றுகள் பழந்தமிழ் நூல்களான புறநானாறு முதலியவற்றிலே அந்தணரான கபிலரே இறைச்சியுண்டமைக்குப் புறநானாற்றிலே சான்று உண்டு. (புறநானூறு - 14 ஆம் பாட்டு)

   எனவே தமிழினத்தவரான நாம் மாமிசம் உண்பது மரபுவழிவந்த வழக்கம், அதனைத் தவிர்த்தல் இயலாது.

2. திருக்குறளிலே "புலாலுண்ணாமை" பற்றிய அதிகாரம் ஒன்றே உள்ளது. ஆனால் அந்த அதிகாரம், அறத்துப்பாலிலே, துறவறவியலிலேதான் அடக்கப்பட்டுள்ளது. இல்லறவியலில் புலாலுண்ணாமை சொல்லப்படவில்லை. எனவே புலன்களை அடக்கவேண்டிய துறவிகளைத்தான் திருவள்ளுவர் புலாலைத்தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தினாரேயன்றி இல்வாழ்வாரான எம்மையல்ல.

3. நோயினால் பீடிக்கப்பட்டோர் உடல் வலி குன்றியிருக்கும் காலங்களில் அவர்களுக்கு வைத்தியர்கள் முட்டை,மீன்,இறைச்சி என்பவற்றை உண்ணுமாறு ஆலோசனை பகர்கின்றனர். மீனெண்ணெய்க் குளுசைகள் வழங்குகின்றனர், சில மருந்துகளிலேயே மது,மாமிச சாரங்கள் சேர்க்கப்படுகின்றன.
   வைத்தியர்களின் ஆலோசனைகளை ஏற்காமல் உடல் மேலும் நலிந்து நாம் இறத்தல் வேண்டும் என்கின்றீர்களா?

4. மாமிசம் உண்ணல்,மீனுண்ணல் என்பவற்றைத்தவிர்த்து எல்லாருமே தாவரபோசனிகளாய் மாறினால் எல்லோருக்கும் வேண்டிய காய்கறிவகைகளை உற்பத்தி செய்வது இயன்றகாரியமா?

5. கடற்கரைச்சார்ந்த நிலங்களில் வாழ்பவர் தமது நிலம் பயிர்ச் செய்கைக்கு உகந்ததாயிராத போது காய்கறிகளை உற்பத்தி செய்யமுடியாது, அவற்றை விலைக்குப்பெறப் பொருளாதார வசதியற்றும் இருக்கையில் மீனையே தமது பிரதான கறியாகக் கொள்வதைத் தவிர்க்கமுடியுமா?

6. இன்று உலகெங்கும் மீன்,மாமிசம் உண்ணல் பெரும்பாலாரினரால் தவிர்க்கப்படாத ஒன்றாய் உள்ளது. சைவர் என்ற ஒரே காரணத்துக்காக நாம் மட்டும் தவிர்த்தல் வேண்டும் என்பது முறையா?

இவர்களுக்கு வழங்கக் கூடிய விடைகளாவன:

1. எமது முன்னோர் தோண்டிய கிணற்று நீர், உவர் நீர் என்பதால், புதிய கிணறுகள் தோண்டாமல், பாட்டன் கிணறு என்று அதன் உவர் நீரையே நாம் அருந்துவோமா? இல்லையே: மனிதன் பகுத்தறிவுடைய பிராணி "தக்கவின்ன தகாதனவின்ன" என்று பகுத்துக் காணும் பண்புடையோர், பாரம்பரியத்தினை இறுகப்பற்றும் அழுக்குகளாக வேண்டியதில்லை.

2. துறவறவியலிலே புலானுண்ணாமை கூறப்பட்டிருப்பது உண்மையே அதுபோன்றே பொருளதிகாரத்தில் ஆட்சியாளர்க்கென வகுக்கப்பட்டுள்ள அரசியலிலே,கல்வியின் சிறப்புப் பேசப்படுகின்றதே: அவ்வாறானால் ஆட்சியாளர் தவிர்ந்த (அரசர் தவிர்ந்த) மற்றவர்களுக்குக் கல்வி வேண்டியதில்லை என்று கல்வி கற்காமல் இருக்கின்றோமா? இல்லையே: இன்று பெரும்பாலான ஆட்சியாளர்கள், அரசியல் வாதிகள் கல்விகற்ற பேரறிஞர்களாய் இருப்பார்களானால் மக்கள் ஏன் இத்தனை அவலங்களுக்கு உள்ளாகவேண்டும்?

3. கிருமிகள் நிறைந்தும், நோய்வாய்ப்பட்டும், இறந்துபோய்க்காலந்தாழ்த்திப் பயன்படுத்தும் பொழுது நாற்றமெடுத்தும் பலவகையில் உண்போர்களைப் பாதித்து நோய்க்கும் மரணத்துக்கும் உள்ளாக்குவன மீன்களும்,இறைச்சிகளுமே என்பது அநுபவவாயிலாகப் பலராலும் உணரப்படுவதொன்று. அண்மையில் புங்குடுதீவிலே ஆமையிறைச்சி உண்டதால் மரணத்தைத் தழுவியர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் பற்றி என்ன சொல்வீர்கள்? அடிக்கடி உணவுப்பதார்த்தங்களில் நச்சுத்தன்மை ஏறியதால் அவற்றை உண்டுநோய்வாய்ப்பட்டவர்கள் மாமிசபட்சனிகளேயன்றி மரக்கறி உண்டவர்களா? (மரவள்ளிக் கிழங்கு தவிர்ந்த பிற கிழங்கு வகைகளுக்கோ, காய்கறிகளுக்கோ நச்சுத்தன்மை இருப்பதாகத் தெரியவில்லை கீரைவகைகள் முதலியன பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றால் நச்சுத்தன்மையடைவது இயற்கையானதன்று).

4. கற்பனைக்கும் அப்பாற்பட்ட வகையில் மிகவேகமாக அறிவியல் வளர்ந்து வருங்காலம் இது. பெருகிவரும் சனத்தொகையின் உணவுத் தேவையை நிறைவு செய்யக் கடற்பாசியிலிருந்து புதியவகை உணவை உருவாக்கும் ஆராய்ச்சியும் இன்று மேற்கொள்ளப்படுகின்றது. மாமிசமுண்பவர்கள் ஒவ்வொருதடவையும் தாம் உண்ணும் மீன், இறைச்சி என்பவற்றிற்காய்க் கொல்லும் உயிரினங்கள் அவை அழியும் அளவிற்கு மீள் உயிராக்கம் பெறுகின்றனவா என்பதை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். மக்களின் தொகை பல காரணிகளாலே எண்ணிக்கையிற் குறைந்து வருவதுபோலப் பிராணியினங்களும் குறைந்து வரும் சாத்தியம் உண்டு என்பதை மறுக்க முடியாது. எனவே மரக்கறி உணவோடு மேலதிகத் தேவைக்கு மீன், கோழி, ஆடு, மாடு, பன்றி முதலாம் பிராணிகளைப் பயன்படுத்துவதால் உற்பத்திச் சமநிலையும், தேவைச் சமநிலையும் உண்டாகின்றன என்பதும் ஏற்கத்தக்கதன்று.

5. கடற்கரைவாசிகளின் பொருளாதாரமும், உணவுத்தேவையும் மீன்களிலே தான் தங்கியிருக்கின்றன என்பது உண்மையே இவற்றிற்கு மாற்றீடுகள் கண்டுபிடிக்கப்படுவது கடினமென்பதை மறுத்தல் இயலாது. ஆனால் மனித முயற்சியும் திறனும் இவற்றிற்கு மாற்றீடு தேடுவதில் ஈடுபடுவது அவசியம்.

6. உலகம் பற்றிய பிரச்சினையல்ல இந்த உணவுப் பிரச்சினை. இது சைவசமயிகளின் உயர்நாடியான குறிக்கோட்பிரச்சினை அவர்களின் சமய அடிப்படை பற்றிய பிரச்சினை இரண்டையும் கலந்து குழப்ப வேண்டியதில்லை.

* * * * * * *

அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள சில கோயில்களிலே மீண்டும் உயிர்ப்பலி இடம் பெற்றதாக "உதயன்" பத்திரிகையிலே செய்திகள் வெளிவந்தன பலர் இக்கொடும் பாவத்தினைக் கண்டித்துக் கட்டுரைகளும், "வாசகர் திருமுகங்களும்" வரைந்திருந்தார்கள். யாழ்ப்பாணத்திலே சைவத்துக்கு எதிரான பாவச் செயல்கள் இடம்பெறுவதைத் தட்டிக் கேட்கவும் சிலர் உள்ளனர் என்பது ஆறுதல் தருகின்றது. ஒருவர், உயிர்ப்பலியை ஆதரித்து, கடந்த காலத்தில் சில ஆண்டுகளாய் உயிர்ப்பலி நேர்த்தி இடம் பெறாமையே இன்றைய குருதிவெள்ளம், கொலை, அமைதியின்மை, அவலம் யாவிற்கும் காரணம் என்று எழுதியிருந்ததும் கவனத்தை ஈர்த்து வியப்பையும் திகைப்பையும் ஏற்பத்தியது.

ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வேதங்கள் உருக்கொண்டன. நான்காகிய வேதங்களில் ஒவ்வொன்றும் பிராமணம், சங்கிதை, ஆரணியகம், உபநிடதம் என்ற நான்கு பிரிவுகள் கொண்டிருந்தது. பிராமணம் வேள்வி விதிகளை விரித்துரைத்தது. சங்கிதை மந்திரங்களின் தொகுதியாய் அமைந்தது. ஆரணியகம் உண்முகத் தியானங்களாய் உருக்கொண்டது. உபநிடதம் பிரபஞ்சம், ஆன்மா, பிரமம் பற்றிய பிரசாரங்களில் ஈடுபட்டது.

தொடக்ககாலத்தில் வைதிகர்களின் (வேதநெறி ஒழுகியோரின்) இல்லங்கள் தோறும் தீ வளர்க்கப்பட்டது. அத்தீயிலே அவர்கள் தாம் உண்ணும் உணவின் ஒரு பகுதியை இட்டு, தமது இஷ்டதெய்வத்திடம் தமது வேண்டுதலைக் கூறி இட்டபூர்த்தி பெற்றதே வேள்விக்குத் தொடக்கமாய் அமைந்தது. "காற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்றார்" ஆகிய மறையவர் வாழும் தில்லைத் திருப்பதி என்று திருஞானசம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந்ததையும் இவ்விடத்தில் நோக்கலாம்.

ஆனால் காலப்போக்கில் தமது ஆட்சி நிலைபெறவும் அதிகாரம் மேலோங்கவும், ஆட்சிப் பரப்பெல்லை விரிவாகவும், செல்வம் அதிகமாகப் பெற்றுச் சிறக்கவும், தேவர் உலகில் அவர்களோடு சம இடம் பெறவும் என அரசர்கள் பெரும் எடுப்பில் வேள்விகளை நிகழ்த்தலாயினர். அஸ்வமேதம், வாஜபேயம், இராஜசூயம் முதலாகப் பலவகை வேள்விகள் நிகழ்ந்தன. வேள்வி முறைகளும் சிக்கலும், பல வித முறைகளும் வாய்ந்து விரிவடைந்தன. வேள்வியிலே பெரும் எண்ணிக்கையிலே விலங்குகள் பலியிடப்பட்டன, தீயில் இடப்பட்டன. அஸ்வமேதத்தில் அரசனின் பட்டத்துக் குதிரை பலியிடப்பட்டது. வேள்வியில் பலியாகும் விலங்குகள் பிறப்பெனும் தலையிலிருந்து விடுபட்டுச் சுவர்க்கம் சேரும் என்று நம்பப்பட்டது.

உண்முகத் தியானத்தை வற்புறுத்திய ஆரணியகங்களும், ஆழ்ந்த தத்துவ ஆய்வு மிகுந்த உபநிடதங்களும், லௌகிக வாழ்வுத் தேவைகளுக்கெனச் செய்யப்படும் பெரிய யாகங்களையும் அவற்றின் பெயரால் வழங்கப்படும் உயிர்ப்பலியையும் கண்டித்தன. அவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று இடித்துரைத்தன.

வைதிக மார்க்கங்களுக்கு எதிராகப் பின்னாளில் தோன்றிய சமண, பௌத்த் சமயங்களின் முக்கியமான எதிர்ப்பே இந்த உயிர்ப்பலியையே தளமாகக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். வைதிகமார்க்கத்துக்கு இத்தகைய எதிர்ப்புக்கள் உள்ளிருந்தும் புறத்திருந்தும் உருக்கொள்ளத் தொடங்கிய பொழுதுதான் அது உயிர்ப்பலி வழங்குதலாகிய வேள்விமுறையைத் தவிர்த்துக் கொண்டு, நெய், நெற்பொரி, போன்றவற்றை அவிர்ப்பாகங்களாய் வழங்கும் கொலை தவிர் வேள்விமுறையினைக் கடைப்பிடித்தலாயிற்று. இது வரலாறு கூறும் செய்தி (ஆருகதர் என்பது சமணருக்கு வழங்கும் பெயர், இன்று காய்கறி உணவுவகைகளை ஆரதக் காய்கறி எனவும் அவ்வுணவினை ஆராதம் எனவும் வழங்குவது ஆருகதம் என்ற சொல் திரிந்து வந்ததனாலேயே என்பர். இதன்மூலமும், அவைதிகசமய எதிர்ப்பும் சைவரைத் தாவர உணவிற்கு உரியவராக்கின்றது என்னும் உண்மையை அறிந்து கொள்ளலாம். இன்று பாரத நாட்டில் மிகச் சிறுபான்மையராய் விளங்கும் சமணர் தாவரபோசனிகளே. ஆனால் பௌத்தர்களிற் பலர் சைவரிற் பலரைப் போலவே மாமிச உணவைத் தவிர்க்காதிருக்கின்றனர்.

தமிழ் நாட்டிலே இன்று மூன்று வகையான சமயநடைமுறைகள் சைவரிடையே நிலவுகின்றன.

1. வேத ஆகம முறைப்படி வேள்வியும் (யாகம்) பூசையும் கடைப்பிடிக்கப்படல்

2. தமிழரின் தொடக்ககால இயற்கைநெறிவழிபாட்டு முறைக்கேற்ப யாகமோ, மந்திரங்களோ இன்றி மௌன பூசை நிகழ்த்துதல் (உ+ம் : கதிர்காமம், சந்நிதி, முதலியவற்றில் இடம்பெறும் வழிபாடுகள்) இதனைப் பூதவழிபாடு எனவும் அழைப்பர்.

3. வேத ஆகமநெறிப்பட்ட தெய்வங்களோடு மதுரை வீரன்முதலாக உள்ள வரலாறோடு தொடர்புடைய வீரர்களுக்குத் தெய்வநிலையளித்துப் பழங்கால வீரக்கல்நாட்டு வழக்கத்தையொட்டி வழிபாடு நிகழ்த்தல் வைரவர், முத்துமாரி அம்மன் கண்ணகியம்மன் முதலாக வரலாறும் பௌராணிகளும் இணைந்த தெய்வங்களைக் கிராமிய தெய்வங்களாய் கொண்டு நடத்தும் வழிபாடும் இதனுள் அடங்கும் இத்தகைய தெய்வங்களின் கோயில்கள் சிலவற்றிலே கோழி, ஆடு முதலியவற்றைப் பலியிடவும் இடம்பெறுவதுண்டு

சைவ சமயத்தினை வேதாகம முறைக்கிசையக் கோயில் அமைத்து அவ்விதிகளுக்கமைய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து, வேதாகமம் விதிதவறாது நித்திய, நைமித்திய பூசைகள் நடத்துதல் வேண்டும் என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

அவர்களாலே அவர்தம் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தப்பட்டு வந்ததோர் அறிவுறுத்தலாகும். யாழ்ப்பாணத்திலே மிகப்புகழும் அற்புதமும் நிறைந்த கந்த சுவாமி கோயில் ஒன்று, அதற்குரிய குமாரதந்திர முறையினின்றும் விலகியதைக் கண்டு நாவலர் மனம் நொந்தனர். அதற்கு எதிராகக் கண்டனப் பிரசுரங்கள் வெளியிட்டார்.

*அதுகாலை சிலர்,*
*சிறுதினை மலரொடு 'விரைஇ' மறி அறுத்து*
*வாரணக் கொடியொரு வயின்பட நிறீஇ*
*ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்*

எனவரும் திருமுருகாற்றுப் பாடலடிகள் போன்ற சிலவற்றை எடுத்துக்காட்டித் தினைச்சோறும், மறிஅறுத்தலும் (ஆடுவெட்டிப் பலியிடலும்) ஊர்தோறும் முருகனுக்கு எடுத்த விழா அமிசங்களாய் இடம்பெற்றதாகக் கொண்டு, ஆகவே, முருகப்பெருமானை வேண்டினர் வேண்டியாங்கு எய்தி வழிபடலாம் என்றனர் அவர்களை நோக்கி, நாவலர் அவர்கள், நீங்கள் சொல்வது உண்மைதான். அத்தகைய வழிபாடு வேடர்கள் போன்ற காட்டுவாசிகளால் நடத்தப்பட்டது. நீங்கள் வேடர்களா? அம்பும், வில்லுங்கொண்டு விலங்குகளை வேட்டையாடுவதா உங்கள் தொழில்? என்று பொருள்பட வினாவினர்.

ஆகவே, சைவசமய கலாசாரத்தை உணர்ந்து அதற்கேற்ப நடக்கவேண்டிய சைவர்கள், அநாகரிகமானதும் கொடுமையானதும், இறைவனுக்கு உகவாததுமான உயிர்ப்பலியை இருபத்தோராம் நூற்றாண்டின் வாயிலில் நிற்கும் இக்கால கட்டத்திலும் கடைப்பிடிக்கவேண்டுமா என்பதுதான் கேள்வி.

இந்தக் கேள்வி எழுகின்ற அதே சமயத்தில் "ஆலயமகோற்சவ" காலத்தில் மட்டும் சைவஉணவுண்டு, விரதங்காத்து மகோற்சவம் முடிந்த அடுத்தநாளே மாமிசபோசனத்தை நாடுவதும் சரியானதா கேள்வி தொடர்ந்து எழுவதும் தவிர்க்க முடியாததே.

கோயிலில் மட்டும், எழுந்தருளி அருள்பாலிப்பதோடு இறைவன் நின்றுவிடுவதில்லை இருநிலனாய், தீயாகி, நீருமாகி, இயமானனாய் அட்ட மூர்த்தியாகிப் பிரபஞ்சம் எங்கனும் வியாபித்து நிற்கும் அவன், கோயிலில்லாத இடங்களிலே உயிர்ப்பலி செய்து, ஊனுண்பதை ஏற்பனா, சகிப்பான்ா என்பதையும் சிந்தித்துப் பார்ப்பது சைவராகிய எம் அனைவரதும் கடமையாகும்.



# இறைவனை நினைவூட்டும் இராஜகோபுரம்

திரு. நா. பொன்னையா அவர்கள்
(உப செயலாளர், காரைநகர் சிவன்கோவில் திருப்பணிச் சபை)

தென்னகத்தில் உள்ள பிரசித்தி பெற்ற சிவத்திருத் தலமான சிதம்பரம் போன்று இலங்கையிலும் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன்கோவில் அமைந்துள்ளது. ஓர் ஆலயத்தின் பிரதான அங்கங்களாக விளங்குவன விமானம், புனித தீர்த்தம் கலையம்சம் நிரம்பிய மண்டபங்கள், வீதிகள், தலவிருட்சங்கள், மணிக்கோபுரம், இராஜகோபுரம் என்பன இவற்றுள் இராஜகோபுரம் தனிச் சிறப்புடன் காட்சியளிக்கும். கோபுரம் வானளவாக உயர்ந்து மூலமூர்த்தியின் மகிமையை விளக்கும் முறையில் அமைதல் மேலும் மெருகூட்டுவதாகும். கோபுரம் பலமாடங்களைக் கொண்டதாக ஆழ்ந்து அகன்று ஒடுங்கி, உயர்ந்து நமது சமயத்தின் உயர்ந்த தத்துவத்தை எடுத்துக் காட்டுவனவாக அமைத்தல் பெரும் சிறப்பாகும். பண்டைய மன்னர்கள் கோபுரம் கட்டுவதை ஓர் புனித தெய்வக் கைங்கரியமாகக் கருதினர் என்பதை நமது சங்க இலக்கியங்கள் ஊடாக அறியக் கிடக்கிறது. நாயன்மார்கள் கோபுரத் தரிசனம் பற்றி விளக்கியுள்ளனர். சிதம்பரம் சென்று இறைவனை வணங்கிய சுந்தமூர்த்தி நாயனார் வான் நோக்கி உயர்ந்து பொன்மலை போன்று திகழ்ந்த ஏழு மாடங்களைத் தன்னகத்தே தாங்கின கோபுரத்தை முதலில் தரிசித்து பின் ஆலய வழிபாடு செய்தார் இதனைச் சேக்கிழார்.

*"நின்று கோபுரத்தை நிலமுற பணிந்து*
*நெடுதிரு வீதியை வணங்கி"*
என்று கூறியிருப்பது ஈண்டு நோக்கற்பாலது

மேலே குறிப்பிட்ட சிறப்புக்களை தன்னகத்தே இன்று தாங்கி நிற்கும் காரைநகர் சிவன் கோவிலின் மகா கும்பாபிஷேகமும் இராஜகோபுரங்களின் கும்பாபிஷேகமும் வைகாசி மாதம் 24ம் திகதி 1998-08-07 ஞாயிற்றுக்கிழமை காலை 7.10 மணி முதல் 8.22 மணிக்கும் இடையேயுள்ள மகா கும்பாபிஷேக முகூர்த்த வேளையில் கோலாகலமாக நடைபெற்றுள்ளதை நாம் அறிவோம்.

**இராஜ கோபுரத்தின் அமைப்பில் பல வடிவங்கள்**

இராஜகோபுரத்தின் அமைப்பிலே பல வடிவங்கள் காணப்படுகின்றன. மானிடவடிவங்கள் தேவர்களின் வடிவங்கள் சில அசுகியான வடிவங்கள், வனவிலங்குகளும் பறவைகளும் மற்றும் பற்பல சிற்றுயிர்களும் இருப்பதைக் காண்கிறோம்.

இவ்வடிவங்களை அலங்கார வடிவங்களாகக் கருதக்கூடாது. இவைகள் யாவும் பிரபஞ்சத்தில் ஆண்டவனின் படைப்புக்களை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. பேதம் எதுவும் இல்லை என்ற கோட்பாட்டை விளக்குகின்றது. கோபுரத்தின் வாசல்கள், தளங்கள் ஒற்றைப்படை எண்ணில்தான் அமைந்திருக்கும். ஏழுவாயிலமைந்த கோபுரத்தின் தத்துவ விளக்கம் யாதெனில் ஐம்பொறிகளையும் மனம், புத்தி என்ற இரண்டு தகைமையையும் கூடச் சேர்ந்தது. பலிபீடத்திலும், மூல லிங்கத்திலும் எப்பொழுதும் பிரசன்னமுள்ளவராக இருக்கின்றார் என்பதனால் ஸ்தூலலிங்கமான கோபுரத்தை வணங்கியே உட்சென்று ஈசனை வணங்கவேண்டும்.

**கலைகளுடன் ஆன்மீகச் சக்தி தொடர்புபடும் போது அவை ஆலயங்களைக் கருவாகக் கொண்ட வளர்ச்சி பெறுகின்றன!**

கலைக்கு உயிர் தருவது ஆன்மீக சக்தியாகும். கலைகளுடன் ஆன்மீக சக்தி தொடர்புபடும் போது அவை ஆலயங்களைக் கருவாகக் கொண்டே வளர்ச்சி பெற்றமை கண்கூடு. கலையினால் பண்பட்ட உள்ளங்களிலே தான் உண்மையான சமய பக்தி ஊற்று எடுக்கும். நுண்கலைகள் எனக் குறிப்பிடப்படும் சிற்பக்கலை, ஓவியக்கலை கட்டிடக்கலை, நடனக்கலை இசைக்கலை யாவும் கோயில்களையும் கோயிற் கிரியைகளையும் அடிப்படையாகக் கொண்டே வளர்ச்சியடைந்ததை நாம் உணரலாம். இந்துக் கட்டிடக்கலையின் வரலாறு அன்று தொட்டு ஆலயங்களுடன் செல்வாக்குச் செலுத்தி வருகிறது. இயற்கைக்கு தெய்வீக சக்தி கொடுத்து மானசீகமாக உருவமைத்து வழிபடத் தொடங்கி நிலையில் கடவுளர் உருவங்களாகத் தோற்றம் பெற்றன. இந்நிலையில் சிற்பக் கலையின் அம்சமாகிய விக்கிரக் கலை எழுச்சி பெற்றது. சோழர் காலத்தின் கலைப் பொக்கிஷம் தஞ்சை பெருவுடையார் ஆலயம் எனப்போற்றப்படுவதை நாம் அறிவோம். சோழர்காலத்துக் கோவில்கள் கலைக் கூடமாகச்சித்தரிக்கப் படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சோழர் காலத்தில்தான் சிவாலயங்கள் மிகுதியாகத் தோன்றின. இவற்றுள் தேவாரப் பதிகம்பெற்ற திருத்தலங்கள் 274இல் காவிரிக்தென்பால் 127 அமைந்தன.

*"பூவினுள் பதுமம் போலும்*
*புருடருள் திருமால் போலும்*
*காவினுள் கற்பம் போலும்*
*கலைகளுள் ஞானம் போலும்*
*ஆவினுங் சுரரான் போலும்*
*அறத்துள் இல்லறமே போலும்*
*நாவினுள் மெய்நாமம் போலும்*
*நாட்டினுள் சோழநாடு."*

என்று சோழர் ஆண்டநாடு போற்றப்படுகிறது.

**இராஜகோபுரங்கள் அமைத்த சிற்பவல்லுணர்களின் மகத்தான சிற்பவேலைகள்**

கோபுரத்திருப்பணி வேலைகள் யாவும் சிறந்த சிற்பவல்லுணர்களால் மேற்கொள்ளப்பட்டன. கருங்கல்லினாலான கட்டைக் கோபுரத்தையும் பண்டிகவேலைகளையும் சிறப்பாக அமைத்துத் தந்த சிற்ப வல்லுணர்களையும், விக்கிரகங்களையும் துவாரபாலகர்களையும் மெருகூட்டும் வகையில் செருக்கித் தந்த கலைஞர்களையும் பல ஆண்டுகளாக அத்திவாரத்துடன் இருந்து வந்த கோபுர வேலைகள் யாவும் திருப்பணிச் சபையினரது முயற்சிகளினால் நிறைவு பெற்றமையையும், காரை நாட்டுமக்கள் போற்றாமல் இருக்க முடியாது பகவானை கதியாகக் கொள்பவன் தர்மத்தை நிலைநாட்டுகிறான்! தர்மத்தை கையாள்பவன் எவனோ அவனுக்கு அழிவு இல்லை. அன்பும் அறநெறியும் யாரிடத்தில் இருக்கின்றதோ அவன் இறைவனுக்கு உகந்தவன் ஆகின்றான்.

# அம்பலக் கூத்தனுக்கு அபிஷேகம் ஆறு

**பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை அவர்கள்**
(பதில் அதிபர், யா/கலாநிதி ஆ. தியாகராசா ம. ம.வித்தியாலயம் - காரைநகர்)

ஆன்மாக்கள் மீது கொண்ட கருணையினால் இறைவன் தடத்தத் திருமேனி கொண்டு உருவம் தாங்கி வருவதைச் சிவாகமங்கள் விளக்குகின்றன சிவபெருமானுக்கு இருபத்தைந்து மூர்த்தங்கள் உள்ளன இவற்றில் நடராசா, சோமாஸ்கந்தர், கலியாணசுந்தரர், தட்சணாமூர்த்தி,லிங்கோற்பவர்,சந்திரசேகரர், பிச்சாடனார், அர்த்தநாரீஸ்வரர், உமாமகேஸ்வரர், ரிஷபாருடர் போன்ற மூர்த்தங்கள் சிறப்பானவை. இம் மூர்த்தங்களில் நடராசப் பெருமானது மூர்த்தமே ஒருகணப்பொழுதும் நில்லாது ஆடிக்கொண்டிருக்கும் மூர்த்தமாகும். இதனால் தான் இந் நடனம் அனவரத தாண்டவம் என்று கூறப்படுகிறது அணுமுதல் அண்டம் வரை இடைவிடாது அசைந்துகொண்டிருக்க முதற் காரணம் இவரது ஆனந்தத் தாண்டவமே ஆகும். இந்த ஆனந்தக் கூத்தைக் கண்டுகளிக்க மனிதப்பிறவி வேண்டும் என்கிறார் அப்பர் அடிகள்.

*"குனித்தப் புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே"*

எம் பெருமானின் ஆனந்தக் கூத்தினால் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைதல் என்னும் ஐந்தொழில்களும் நடைபெறுகின்றன. நடராசரது உடுக்கை ஏந்திய கை படைத்தல் தொழிலையும், அஞ்சேல் என்னும் அபயகரம் காத்தல் தொழிலையும், கையில் ஏந்திய தீ அழித்தல் தொழிலையும், ஊன்றிய திருவடி மறைத்தல் தொழிலையும், தூக்கிய பாதம் அருளல் தொழிலையும் உணர்த்தி நிற்கின்றன.

*"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமாய்
ஊன்று மலர் பாதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர் பதத்தே நாடு"*

நடராசப்பெருமானுக்கு நாள்தோறும் அபிஷேகம் செய்யப்படுவதில்லை சிவபெருமான் அபிஷேகப் பிரியனாக இருப்பினும் நடராசப் பெருமானுக்கு ஓர் ஆண்டில் ஆறு நாட்களில் மட்டுமே அபிஷேகம் நடைபெற்று வருவதை யாவரும் அறிவர்.

எமக்கு ஓராண்டாக அமைவது தேவர்களுக்கு ஒரு நாளாகும். எமக்குரிய உத்தராயண காலம் தேவர்களுக்கும் பகல் பொழுதாகவும் தட்சணாய காலம் இராப் பொழுதாகவும் விளங்குகின்றது.

திருக்கோயில்களில் நாள் தோறும் ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. சிறு பொழுதாகிய நாள் தோறும் ஆறு வேளையில் பூசை நடைபெறுவது போல பெரும் பொழுதாகிய வருடத்தில் ஆறு வேளை எம் பெருமானுக்கு அபிஷேகம் நடைபெறுகிறது.


திருவனந்தல், காலச்சந்தி, உச்சிக்காலம், சாயங்காலம், இரண்டாங்காலம், அர்த்தசாமம் என்பன ஆறு காலப் பூசை வேளையாகும். இவற்றுள் முதல் மூன்றும் பகற் காலமாகவும் பின்னய மூன்றும் இராக்காலமாகவும் விளங்குகிறது. இவற்றிற்கு உட்பட்டே நடராசப் பெருமானது ஆறு அபிஷேக காலங்கள் அமைகின்றன. மார்கழி, மாசி, சித்திரை, ஆனி,ஆவணி,புரட்டாதி என்னும் மாதங்களே அக்காலங்கள் ஆகும். இந் நிலையில் கூத்தப் பெருமானுக்கு மார்கழி திருவனந்தற் காலமாகவும் மாசி கால சந்தியாகவும் சித்திரை உச்சிக் காலமாகவும் ஆனி சாயங்காலமாகவும், ஆவணி இரண்டாம் காலமாகவும், புரட்டாதி அர்த்தசாமமாகவும் கொள்ளப்படுகின்றது. இவற்றுள் இரண்டாம் காலமும் அர்த்தசாமமும் நெருக்கமாய் அடுத்தடுத்து வருதல் போல ஆவணி புரட்டாதி மாதகால அபிஷேகமும் வருகிறது. ஆறு கால பூசையில் திருவனந்தற் காலமும், சாயங்காலமும் சிறப்பாதல் போல கூத்தப் பெருமானுக்கு மார்கழியும், ஆனியும் சிறப்புடையனவாக விளங்குகின்றன.

கூத்தப் பெருமானுக்குச் செய்விக்கின்ற அபிஷேகத்தை அந்தந்த மாதத்தில் வரும் மேலே குறித்த வேளையில் செய்தலே முறையும் ஒழுங்கும் ஆகும் ஆயினும் சில மாதங்களில் மேற்குறித்த நேரம் தவிர்ந்த பிற வேளையிலும் நடைமுறையில் நிகழ்வதைக் காண்கின்றோம் இந்த நடைமுறை உண்மை விளக்கத்திற்கு புறம்பாய் இருப்பதால் இது தவிர்க்கப் பட வேண்டும் அந்தந்த மாத அபிஷேகத்தை அந்தந்த நேரத்தில் செய்தலே மேன்மையும் மிக்க பலனுக்கும் உரிய வழிபாடாகவும் இருக்கும் என்பது தெளிந்தோர் வாக்காகும்.

நல்லெண்ணெய், மாக்காப்பு, நெல்லிமுள்ளி, பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன், கருப்பஞ்சாறு, பஞ்சபழம், பஞ்சரசம், இளநீர், அன்னம், விபூதி, சந்தனம், கும்பஜலம், அருகிய தீர்த்தம் என்னும் இவைகளால் அபிஷேகம் செய்யவேண்டும் என்று சித்தாந்த சேகரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

மார்கழி - திருவாதிரை,சித்திரை - திருவோணம்,ஆனி - உத்திரம்,நட்சத்திரங்களில் அபிஷேகம் அமைய மாசி,ஆவணி,புரட்டாதி மாதங்களில் வரும் அபிஷேகம் சதுர்த்தசி திதியாகும். இவ்வாறு ஆடும் அமலக் கூத்தனுக்கு ஆண்டொன்றிற்கு ஆறு அபிஷேகத்திற்கு மேல் அபிஷேகம் செய்விக்க எங்கும் விதி இருப்பதாக இல்லை என்பதனை உணர்ந்து கொள்வோமாக.

ஈழத்து சிதம்பரத்தில் அருள் பாலிக்கும் அம்பலக் கூத்தனுக்கு இந்த ஆறு அபிஷேகங்களும் முறையாக நடைபெற்று வருகின்றன. மார்கழி-திருவாதிரை அபிஷேகம் மிக விசேடமாக நடைபெற்று வருகிறது அறிந்தே இந்த விதிமுறைகளின் படி அப்பனின் அபிஷேகப் பணிக்கு உதவி புரிந்து அபிஷேகத்தை கண்டு களித்து அருள் பெறுவோமாக.



ஐயனார் கோபுர அத்திவாரத்திற்கு முன்பாக நடைபெற்ற
சங்காபிஷேக நிகழ்வின் போது முன்னாள் ஆதீனகர்த்தா
அ. ஆண்டிஐயாவுடன் திருப்பணிச்சபை செயற்குழு உறுப்பினர்
திரு. க. பொன்னம்பலம் அவர்கள்



*பிரதிஷ்டா சிரோன்மணி நவாலியூர்*
சாமி விஸ்வநாதக் குருக்கள் ஆசீர்வாதம் வழங்குகையில்




# அப்பர் கண்ட ஆடல் வல்லான்

**திரு. சி. பொன்னம்பலம் அவர்கள்**

உப அதிபர் யா / கலாநிதி தியாகராசா ம.ம.வி. காரைநகர்.

ஐந்தொழில் புரிந்திடும் அம்பலவாணனின் அருளில் திளைத்தெழுந்தவர் மாணிக்க வாசகர். சிவனது நடனவடிவே அம்பலவாணனாம் நடராஜர். மணிவாசகர் உட்பட சமய குரவர் நால்வரும் தில்லைச் சிதம்பரத்தை பாடாமலில்லை.

நடராஜர் வடிவம் தென்னாட்டிற்கே உரியது பொன்னம்பலம் வெள்ளியம்பலம் உட்பட பஞ்ச சபைகளில் நடராஜனது நடனவடிவம் கண்டு களிப்பெய்தற்குரியது. உத்தர கோசை மங்கை முதலான ஏனைய தமிழ் நாட்டுத் தலங்களிலும் அவனது வடிவம் அற்புதம், அற்புதம். கோயம் புத்தூரிலுள்ள உபயசிதம்பரத்திலும் ஆனந்த நடராஜனின் அழகு வடிவம் சிறப்புடையது. பர்மாவில் உள்ள நடராஜ வடிவமும் ஆடவல்லானுக் குவப்பானதே ஏனைய தேசங்களிலும் மேற்குலகத்திலும் நடராஜன் நடம் புரியாமல் இல்லை.

நடன தெய்வம், அழகுத் தெய்வம் நடராஜன் சிற்ப உலகிலே சிறந்ததோர் வடிவம் இவ்வடிவின் அழகிலீடுபடாதவரில்லை. மேல் நாட்டவர் கூட தம் இல்லங்களில் நடராஜ வடிவமைத்து அழகில் திழைக்கின்றனர். 20ம் நூற்றாண்டில் நடராஜ வடிவிற்கு பெரும் மவுசு. இவ்வடிவினை தென்னாட்டாலயங்களில் திருடிப் பக்தர்களிற்கு மன வேதனையை உண்டு பண்ணி மேல்நாட்டவருக்கு விற்பனை செய்யும் பகுத்தறிவற்ற கூட்டத்திற்கு நாம் என்ன செய்வது. இறைவனே எம் நாட்டையும், ஆலயத்தையும் சமயத்தையும் காப்பானாக.

ஈழத்திலும் நடராஜ வழிபாடு இல்லாமலில்லை. ஒவ்வோர் சிவாலயத்திலும் நடராஜர்வழிபாடு சிறப்புடன் கருதப்படுவதுடன் வடிவமும் அழகோவியமாகத் திகழ்கின்றது. மார்கழி மாதம் திருவெம்பாவை காலத்தில் ஈழத்திலெங்கும் ஒரே தெய்வமணம் அதுவும் சொல்லவும் வேண்டுமா? யாழ்குடா நாடெங்கும் மேன்மேலும் திருவெம்பாவைக் கொண்டாட்டம். இக்காலத்தில் நடராஜ வடிவம் எழுந்தருளல் கண் கொள்ளாக் காட்சியாகும்.

நடராஜனுக்கு ஏற்ற திருத்தலம் தில்லைச் சிதம்பர கோயில் என்னும் சிதம்பரமே. மார்கழி திருவெம்பாவைக் காலத்தில் உலகிலுள்ள சைவப் பெருமக்கள் தில்லைச் சிதம்பரம் நோக்குவர். சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலத்தில் இறைவன் கூத்தாடுவதை தானே விரும்பி கொண்டவர் என்பது மணிவாசகர் கருத்து "பொன்னம்பல கூத்துகந்தானே"

என்பது மணிவாசகர் வாக்கு. திருவாசகத்தில் நடராஜனது வடிவைப் பாடினார் என்பது ஆராய வேண்டியது. ஆனால் நடராஜனைப் பாடிப்பணிந்தார் என்பது உண்மையே.

நடராஜ வடிவினழகில் மனதைப் பறிகொடுத்து திளைத்தவர் அப்பரடிகள். மணிவாசகரை விட அப்பரடிகள் நடராஜ வடிவின் அழகில் திளைத்தார் போலும் சிதம்பர நடராஜர் வடிவம் உலகின் நடராஜா வடிவங்களுள் முதன்மையானதும் பழமையானதுமாகும்.

சிதம்பர நடராஜர் ஆலய மண்டபம் கி.மு. 150ற்கு முற்பட்டது. வியாக்கிரபாதர், பதஞ்சலி முனிவர் சிதம்பர நடங்கண்டு திளைத்தவர்களாவர்.

நடனத்தை கண்டு திளைத்தவர் பலராவர் எனினும் அழகை ரசித்தவரில் அப்பரடிகளே முதன்மையானவர் அவர் தம் தேவாரங்களில் இதனை நாம் காணலாம்.

கோயில் திருவிருத்தப் பதிகத்தில் நடராஜ வடிவினைப் போற்றிய அப்பரின் மனப்பக்குவம் போற்றற்குரியது.

*திரு நட்ட மாடியைத் தில்லை*
*சிறைச் சிற்றம் பலத்து*
*பெரு நட்ட மாடியை வானவர்*
*கோனென்று வாழ்த்துவனே*

தில்லைக் கிறைவன் நடராஜனே அவன் தில்லைச் சிற்றம்பலத்தே திருநடனஞ் செய்கின்றான் அதுதான் உலகில் ஐந்தொழில் புரிகின்ற பெரிய நடனம் என உலகத் தோருக்கு எடுத்தியம்புகின்றார்.

இத்தகைய திருப்பெரு நடனவடிவைக் கண்டு வாழ்த்தி வணங்கிய அப்பராம் திருநாவுக்கரச சுவாமிகள். சைவப் பெருமக்களை அடியார் கூட்டத்தோடு சென்று தொழுமாறு அறைகூவி அழைக்கின்றார். தில்லைச் சிற்றம்பலத்தே நடம்புரியும் நடராஜ வடிவம் வரவேற்று உபசரிப்பது போலமைந்துள்ளது.

நடராஜ வடிவின் மாட்சியைக் கருப்பொருளை தில்லைச் சிற்றம்பலத்தே தான் கண்டுகளிக்க முடியும். ஆண்டவனே வந்து மனிதனுடன் பேசும் அற்புதம் யாவரும் அறிந்ததே. இங்கே என்ன அப்பரடிகள் திருக் குறிப்பைக் கண்ணால் பேசுவதை எடுத்துக் காட்ட முயல்வது சிறப்புடைத்தே. தரிசனத்திற்காக செல்லும் அடியார்களை எல்லாம் எப்போது வந்தீர் என கேட்கின்றார்? என அப்பர் கூறுகின்றார்.

என்ன அழகு; என்ன இரசனை, என்ன அருள், என்ன விமர்சனம் அவர் கற்ற கல்வியின் சிறப்பு. இவற்றை எல்லாம் எடுத்து காட்டுகின்றது. அப்பர் கண்ட நடன வடிவின் அழகினை காணுமுன் அவர் தம் உள்ளக் குமுறலை உள்ளவாறு அவர் தம் தேவாரமே எடுத்துக் காட்கிறது. அடியார் கூட்டத்திற்கு அருட் பெரும் காட்சியை காட்டுவதை கண்டு நாமும் திளைப்போமாக.

எம்பெருமானின் திருக்குறிப்பு கண்சாடை எப்போது வந்தாய் என கேட்பது போல அமைந்துள்ளதை நாம் காண்போமாக.

*"ஒன்றியிருந்து நினைமின் களுந்தமக் கூனமில்லைக்*
*கன்றிய காலனைக் காலாற் கடிந்தானடியவற்காச்*
*சென்று தொழுது மின்கள் தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்*
*என்று வந்தாயென்று மெம்பெருமான் தன் திருக்குறிப்பே"*

(அப்பற் திருவிருத்தம்)

திருவாசகந்தான் தில்லை சிற்றம்பலத்தை படம் பிடித்து காட்டும் நிலை கண்ணாடி என ஏமாந்திருந்தோம். இல்லை தேவார திருமுறைகளும் தில்லையை படம் பிடிக்கின்றன அப்பரின் திரு விருத்தம் ஒரு படிவிஞ்சிநிற்கின்றது என்பதில் தவறில்லை.

*"பொன்மலையில் வெள்ளிக்குன்றது போலப்*
*பொலிந்திலங்கி"*

பொன்மலையை சிதம்பரமாலயத்திற்கு ஒப்பிட்டு நடராஜவடிவை வெள்ளி குன்றிற்கு ஒப்பிடுகின்றார். நடராஜ வடிவம் சிதம்பரத்தில் எத்தகையது. எப்படி அமைய வேண்டுமென ஆவலுற்றிருக்கின்றார். வடிவத்தினழகே அழகு சிதம்பரத்தில் மட்டுமன்றி ஏனைய இடங்களிலும் இவ்வடிவம் எப்படி விளங்க வேண்டுமென்பது அப்பர்தம் உள்ளக்கருத்து.

எதற்காக மனிதப் பிறவி வேண்டும் என்பது அப்பர் தம் கருத்தும் விளக்கமும் போலும். அதற்கப்பரடிகளே விளக்கமும் தருகின்றார். கோயிற் திருவிருத்தத்தில் அதற்குரிய பதிலுண்டு.

*"குனித்த புருவமும் கொவ்வை செவ்வாயிற்குமிண் சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்*
*இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே."*

வளைந்த புருவத்தையும், கொவ்வை பழம் போன்ற சிவந்த வாயின் புன்சிரிப்பினையும், பனித்த சடாமுடியினையும் பவளம் போலழகிய திருமேனியில் பால் போன்ற வெண்மையான திருநீற்றினையும், மகிழ்ச்சி தரும் சிறப்புடைய தூக்கிய திருவடிகளையும் காண இப்பிறவி வேண்டும் என்கிறார்.

சிதம்பர நடராஜ வடிவில் இவற்றை எல்லாம் காணவிழைகின்றார். அப்பர் சிதம்பர நடராஜ வடிவில் காலை தூக்கி ஆடுகின்றார். "ஒருவனே உலை உலகுவோம் தேடியும்காணேன்" எனும் திருமுறை வாக்கியத்திற்கேற்ப அப்பர் கூறும் எடுத்த பொற்பாதத்தினையும் எல்லாத் தலங்களை விட ஈழத்து சிதம்பர நடராஜன் எடுத்த பொற்பாதமான தூக்கிய திருவடி உடையோனாக விளக்குகின்றான்.

குனித்த புருவத்தினையும் கொவ்வைச் செவ்வாயிற் குமின்சிரிப்பினையும் ஈழத்துச் சிதம்பரத்திலே தான் கண்டு தெளிய முடியும். சிதம்பரத்து நடராஜனில் புன்சிரிப்பு இருக்கத் தான் செய்கிறது. என்று வந்தாய் என்னும் எம்பெருமான் நான் திருக்குறிப்பே என முன்னரே திருவிருத்தத்தில் கூறப்பட்ட இவ்வரிகள் சிவ தத்துவம் உண்மைகளை விளக்குகின்றது. கலைஞனின் கலைத்துவம் ஒளிவிடுகிறது. என்றைக்கு வந்தாய் என்று கேள்வி கேட்பதுபோல சிதம்பரவடிவத்தின் கண்ணமைப்பு கண்சாடை அமைந்துள்ளதை அங்கே தரிசனம் செய்யும் பக்தர்கள் கண்டு புளங்காகிதம் அடைகின்றார்கள். ஆனால் குமின்சிரிப்பினை ஈழத்துச் சிதம்பரத்தே கண்டு கண்ணீர் மல்குகிறார்கள் எல்லாம் இறைவன் தன் திருக்கூத்தே "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே"

இந்நிலை புன்சிரிப்பைத்தான் எங்கும் தொடர்கின்றார் "முடிகொண்ட மத்தமும் முக்கண்ணின் நோக்கும் முறுவலிப்பும் துடிகொண்ட கையும் துதைந்த வெண்ணீறுஞ் சுரிகுழலாள் படி கொண்ட பாகமும் பாய் புலித் தோலும் பாவி நெஞ்சில் குடிகொண்டவாதில்லையம்பலக் கூத்தன் குரைகழலே" இங்ஙனமெல்லாம் வடிவில் திளைந்த அப்பரடிகள் கூத்தினில் அடைக்கலமாவதில் வியப்பில்லையே கூத்தன் தன் குரைகழலை அடைக்கலமாக வணங்கிப் போற்றுவோமாக.

"படைக்கலமாகயுன்னாத் தெழுத்தஞ் சென்நாவிற் கொண்டேன் இடைக்கல மல் லேனெழுபிறப்பும் முனகாட் செய்கின்றேன் துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூநீறணிந்துன் அடைக்கலம் கண்டாயணிதில்லைச் சிற்றம் பலத்தானே.

# யாக அலங்காரம்

யாகரட்சக வித்வசிரோன்மணி
**பிரம்மஸ்ரீ. ச. சர்வேஸ்வரசர்மா (சபாஜயா)** மட்டுவில் தெற்கு.

யாக சாலா என்னும் சொல்லுக்கு பொருள் சிறந்த பூஜை செய்வதற்குரிய இடம் “ய” காரம் யக்ஞ்ஞத்தையும் “க” காரம் செல்லுதலையும் “ச” காரம் சுகத்தையும் “ல” காரம் லயத்தையும் குறிப்பதால் யாகசாலை என்ற சொல்லுக்கு ஞான யாகத்தால் லயஸ்தானத்தில் சுகத்தின் பொருட்டு செல்வது என்று பொருளாகும். எனவே ஞான யாகம் செய்வதற்குரிய “ஸ்தானம்” யாகசாலையாகும்.

யாகசாலை ருத்திர சூத்திரம், விஷ்ணு சூத்திரம், பிரம்ம சூத்திரம், கண சூத்திரம். மனு சூத்திரம், ரவி சூத்திரம், தச (பங்கி) சூத்திரம் என எண்வகைப் பேதங்களாகும் உருத்திர சூத்திரம் 64 அல்லது 44 கோடுகளும் விஷ்ணு சூத்திரம் 34 கோடுகளும் பிரம்ம சூத்திரம் 24 கோடுகளும், கண சூத்திரம் 18 கோடுகளும், கலா சூத்திரம் 16 கோடுகளும், மனு 10 கோடுகளும் ரவி சூத்திரம் தச சூத்திரம் பிரதிஷ்டைக்கு ஆகாதென சில ஆகமங்கள் கூறுகின்றன.

உருத்திர சூத்திரத்தில் 33 குண்டமும்
விஷ்ணு சூத்திரத்தில் 25 குண்டமும்
பிரம்ம சூத்திரத்தில் 17 குண்டமும்

கணம் , கலா , மனு இம் மூன்றும் சூத்திரங்களுக்கும் தனித்தனியே 9 குண்டங்களும்.

ரவி சூத்திரத்தில் 5 குண்டமும்
தச சூத்திரத்தில் 1 குண்டமும் போடுதல்

வேண்டும். யாக மண்டபமானது ஷடத்துவாக்களின் வடிவமாக உள்ளது. யாக சாலை எங்கும் சாந்தியத்தாகலா சொரூபமாய் கிழக்குத்துவாரம் சாந்தி கலையும் தெற்கு துவாரம் வித்தியாகலையும், மேற்கு துவாரம் நிவர்த்திகலையும், வடக்கு துவாரம் பிரதிஷ்டாகலையும், அணி செய்யும் கலாத்துவா வடிவாய் உள்ளன. மண்டபத்தில் நடுப்பாகம் ஐம்பத்தொரு வர்ணாத்துவா வடிவமாக உள்ளது. கும்பங்கள் பதினொரு மந்திராத்துவா வடிவமாகவுள்ளது ஓமத்திரவியங்கள் முப்பத்தாறு தத்துவாத்துவா வடிவமாக உள்ளது. மண்டபம் அமைக்கப்பட்ட இடம் இருநூற்றிருபத்து நான்கு புவனாத்துவா வடிவமாக உள்ளது இவை சைவ பூஷனத்தில் காணப்பட்டவை.

யாகத்தைப்பற்றிய கருத்துக்கள் பலவாறு விகற்பித்துக் கூறப்படுகின்றன அக்கினி முக: , தேவா:விப்ர முகா: பிதர: என்ற வேதவாக்கியத்தின் படி இந்த யாகம் அமையப்பெறும். அதாவது தேவர்கள் அக்கினியை முகமாகவும். பிதர்கள் அந்தணர் முகமாகவும் உடையவர்கள் என்பது கருத்து யாகமும், அக்கினியும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளது.

யாக சாலை கலாமயமாக விளங்குகின்றது. நான்கு கலைகளும் நான்கு பக்க நிலைகளாகவும், இதற்கு கலசமும் இவைகளுக்கு இரு புறங்களிலும் நந்தி முதலிய எண்மர் வாயில் காப்பாளராகவும், கிழக்கு முதல் 8 திக்குகளில் கீழ் மேல் ஆகிய 10 திசைகளில் இந்திரன் முதல் விஷ்ணு ஈறாக தசலோக பாலர்களும் அக்கினிக்கு வடக்கில் சிவசூரியனும் நிருதிக்கு கிழக்கில் யாகபலனைத் தரும், வாஸ்து, பிரம்மனும், வாயுவுக்கு தெற்கில் உத்தமபாக மண்டப ரூபமாகிய மகாலட்சுமியும், வாயுவிற்கு வலப் புறத்தில் யாகத்தில் ஏற்படும் விக்கினங்களை நீக்குவதற்கு விநாயகரும், ஈசானத்திற்கு மேற்கில் எதையும் உத்தரவு கேட்டு செய்ய சதாசிவம் முதல் சப்த குருமூர்த்திகளையும் பூஜிப்பதற்கு 27 கலசங்கள் வைத்து ஞானவாள் ஏந்தி யோகேஸ்வரன், யாகேஸ்வரியும் கலசத்தில் அமைத்து 9 குண்டலங்களோடு விளங்குகின்றமையால் யாகசாலை கலாமயமாகும். யாகசாலையிலுள்ள வேதிகை பிரதான கும்பம் வைக்கும் மேடை, நிலம் கர்மாசனம், அனந்தாசனம், சிங்காசனம், அதில் பரவப்படும் நெல் யோகாசனம் அதன் மேல் பரப்பப்பட்ட அரிசி பத்மாசனம் அதற்கு மேல் படிப்படியாக பரவி பயறு, உழுந்து, கோதுமை, துவரை, முதலிய தானியங்கள் தாமரையிலுள்ள உறுப்புகள், எள்ளு விமலாசனம், நெல் மலர் சத்தியாசனம், இதன் மேல் பத்மம் வரைந்த தர்ப்பை பரப்பி அதன் மேல் கடஸ்தாபனம் பன்னி கலாதர்ஷனம் முடித்துயாத்திராஹோமம். யாத்திராதானம் கொடுத்து பிரதான கும்பத்தை சகல வாத்தியங்கள் சகிதம் பிரதான யாகசாலைக்கு வரவழைத்து வேதிகையில் அமர்த்தி பஞ்ஷாரத்தி பன்னி இதன் பின்பு யாகபூஜை பன்னி குண்டசுத்தி, அக்கினி காரியம் செய்து வேதாகமங்கள் செய்வது மரபு.

**நவகுண்டம்.**

சிவபெருமானுக்கு சொரூபம்,நடத்தம் என இரு வடிவங்கள் உள்ளன. சொரூபத்திருமேனி சுயப்பிரகாசத்திருமேனி ஆகும். அது உலகத்தைக்கடந்த வடிவம். தடத்த வடிவம் என்பது உலகத்தோடுகலந்த வடிவமாகும் இந்த உலகம் நிலம், நீர். நெருப்பு, காற்று, நீள்விசும்பு, நிலா, பகலோன், இயமானன் என்னும் எண்வகைப் பொருளிலும் கலந்தது இதனால் இறைவனை எண் வகை உருவில் வைத்து வணங்க வேண்டும் என்பது மரபு. முதலில் நிலம் என்பது பிருதுவியாகும். அது சதுரமான வடிவம் அதைக் குறிப்பது கிழக்குத்திசையில் அமைந்த நாற்கோண வடிவமானகுண்டமாம்

நீர் என்பது அப்பு அதன் வடிவம் பாதிச்சந்திரனான பிறைவடிவம் அது தெற்கில் உள்ள பிறைவடிவமானகுண்டமாம்.

நெருப்பு என்பது தேயு, இதன் வடிவ முக்கோணம், இது தென்மேற்கு மூலையில் முக்கோண வடிவம்.

*வாயு* : *இது அறுகோண வடிவம், இது வடமேற்கு மூலையில் அமைந்திருக்கிறது.*

*ஆகாயம்* : *இது வட்டவடிவினது மேற்கு திக்கிலுள்ள குண்டலத்தில் அமைந்திருக்கிறது.*

*சூரியன்* : *இது தாமரைப் பூவின் வடிவினது. இது வடக்குத்திக்கில் அமைந்திருக்கிறது.*

*சந்திரன்* : *இது எண்கோண வடிவினது இது வடகிழக்கு மூலையில் அமைந்திருக்கிறது.*

இயமானன், ஆன்மா மாயாத்தத்துவத்தைக்குறித்து அரிசிலை வடிவாய் தென் கிழக்கு மூலையில் அமைந்திருக்கிறது. இவை எட்டுத்திக்கிலும் அமைய ஈசானத்திற்கும், கிழக்கிற்கும் மத்தியில் வட்டவடிவமான பிரதான குண்டலத்தில் சுயப் பிரகாச மூர்த்தியாய் அமைந்துள்ளதுதான் இறைவடிவம். இறைவன் மேலே குறித்து 8 வடிவமாகிய உலகத்தில் கலந்து இருக்கின்றான். ஆகவே அவரை அந்த 8 வகையான குண்டலத்தில் வைத்துப் பூஜித்து ஓமம் செய்து வணங்குகின்றோம். இது எப்படியெனில் நமது அருவமாக உயிரை உருவமான உடம்பில் வைத்து அனுமானித்துக் காண்பது போல இறைவனை வழிபாடு செய்தலே 9 குண்டலங்களின் அமைப்பாம். இன்னும் ஈசானம் முதல் சத்தியோகாசாதம் இறுதியாக உடைய பஞ்சப் பிரம்ம மந்திரங்களும் மூல மந்திரமும் சிவபெருமானுடைய எல்லாம் அறியும் தன்மை வரம்பில் இன்பம் உடமை இயல்பாகவே பாசங்களில் நீங்கிய தன்மை தன்வயத்தாகும் தன்மை பேரறிவுடமை பேர் அருளுடைமை அளவிலாற்றல் உடைமை தூய உடம்பினாதல் முதலிய என் குணங்களும் பிரதான குண்டலத்தில் இறைவனுக்குப்போல் அமைந்து விளங்கும் மேலும் பிரதான வேதிகையில் அனந்தானானம் முதல் உள்ள ஆசனங்கள் மேல் சர்வதேவதா சொருபமான இறைவனை வைத்து வணங்கும் இடமும் சிறந்த யாகசாலையேயாகும்.

இந்த யாகசாலையில் கிழக்குத் துவாரம் சாந்தி தோரணமும் தெற்குத் துவாரம் பூதி தோரணமும். மேற்கு துவாரம் பல தோரணமும், வடக்குத் துவாரம் ஆரோக்கிய தோரணமுமாம். அத்தோடி விதானம் வெள்ளைகட்டுதல், யாகத்தூண்களை வர்ண சீலைகளால் அலங்கரித்தலும் அஷ்டகஜம் 8 யானைக் கொடியும், அஷ்ட துவஜம் 8 கொடியும், இந்த 8 கொடிக்கும் ஒவ்வொரு நிறங்களும் உள்ளன. தர்ப்பை கயிறு மாவிலை மகரதோரணங்கள், யாழிகள் வாகை மாலைகள், வாழை, கமுகு , பூமாலைகள் எலுமிச்சை மரம், கரும்பு, இளநீர், தென்னம்பூ, கமுகு, வெற்றிலைக்கொடி இவற்றுடன் தசாயுதம் இந்திரா திலோகபாலகருக்கு உரிய ஆயுதங்களும் அஷ்டமங்கலப் பொருட்களான கண்ணாடி, பூர்ண கும்பம், இடபம் , சோடி சாமரை, ஸ்ரீவத்சம், ஸ்வஸ்திக சங்கு, தீபம், இவைகளையும் யாக சம்ரக்கஷ்கருடைய கல்லி அனுபவம் யுக்தியும், புத்தி மதிநுட்பத்துக்கேற்ப சிறப்பாக அலங்கரித்து அதாவது பிரதான சுவாமியின் மஹா யாகத்தை பொலிவு பெறச்செய்வது மரபாம். இது ஆகமங்களின் துனை இது மேலும்விரியும் என்றும் அறிந்தவர் அறியும் வண்ணம் பார்வதி, பரமேஸ்வரனைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

# மண்டல மஞ்சன அபிஷேகமும் சங்காபிஷேகமும்

**சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ. கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்**

கும்பாபிஷேக காலங்களில் நிகழ்த்தப்படும் பல்வேறு வித கிரியைகளின் மூலம் இறைவனுடைய சாந்நித்தியம் திருவுருவத்தில் நிலைநிறுத்தப்படும். அவ்வாறு நிலைநிறுத்தப்படும் திருவருள் தொடர்ந்து நடைபெறும் மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம், மகோற்சவம் அர்ச்சனை,ஆராதனை என்பவற்றால் இறை விம்பத்தில் பிரகாசிக்கின்றது.

கும்பம் ஒரு மனிதனின் உடம்புக்குச் சமமாக விளங்குவதாக ஆகமம் கூறுகின்றது. உடம்பில் எப்படி நாடி நரம்புகள் இருக்கின்றனவோ அதே போன்று கும்பத்தைச் சுற்றி இருக்கும் நூல் காட்சி தருகிறது. உடலுக்குள் ஓடும் இரத்தத்திற்குச் சமமாக கும்ப நீர் கூறப்படுகிறது. கும்பாபிஷேகத்தின் போது கும்ப தீர்த்தத்தை அருந்துவதன் மூலம் அடியார்கள் இரத்த சுத்தியும்,ஆன்ம சுத்தியும் அடைகின்றனர். வியாதிகள் தீர்ந்து போகின்றன கும்பநீரில் இடப்படும் மருந்துப் பொருட்களாகிய மூலிகைகள் உடலுக்கு வலிமையைக் கொடுக்க அங்கு ஜெபிக்கப்படும் மந்திரங்கள் ஆற்றப்படும் கிரியைகள் ஆன்மாவிற்கு (அருள் வலிமையை) ஆன்ம பலத்தைக் கொடுக்கும் என்பது உண்மையாகும்.

கும்பத்தில் காணப்படும் ஏனைய அங்கங்கள் ஏனைய மனித உறுப்புக்களுக்குச் சமமாகக் கூறப்படுகின்றது தலைக்குச் சமமாக தேங்காயும் (அன்றி சங்கும்),தலை முடிக்குச் சமமாகக் கூர்ச்சமும்,தேகத்திற்குச் சமமாக மாவிலையும்,தோலுக்குச் சமமாக வஸ்திரமும்,கும்பத்தினுள் இடப்படும் நவரத்தினம் முதலியன தாதுப்பொருள்களாகவும் ஓதப்படும் மந்திரம் உயிராகவும் உவமிக்கப்பட்டு அடியார்கள் உடல் நலமாக இருக்கவும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் கருப்பொருளாக விளங்க கும்ப-சங்கு வழிபாட்டை ஆகமம் மிக முதன்மைப் படுத்துகின்றது.

கும்பாபிஷேகங்கள் ஒரு ஆலயத்தில் அடிக்கடி நிகழ மாட்டாது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையே தான் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. தெய்வத் திருவுருவங்களில் ஒரு முறை ஆவாகனம் செய்து பதியப்படும் மந்திரங்கள் பன்னிரண்டு வருடங்களின் பின்னர் மீண்டும் புதுப்பிக்க வேண்டும்.

ஆலயத்திலே மூல மூர்த்திக்கும் பரிவார மூர்த்திக்கும் விதிப்படி கும்பாபிஷேகம் நிறைவேற்றிய பின்னர் தினந்தோறும் அபிஷேகமும் அலங்கார உற்சவமும் சிறப்பாக நடைபெறும். இதனைப் பொதுவாக மண்டலாபிஷேகம் என வழங்கப்படுகின்றது.

"மண்டலம்" எனும் பதம் பல துறை சார்ந்த பல கருத்துக்களைக் கொண்டது. எக்கருத்தில் வழங்கப்படினும் அளவைக் பொருளிலேயே அது பெரும்பாலும் கைக் கொள்ளப்படுகின்றது. இருக்கு வேதத்தை வகைப்படுத்தியோர் அதனைப் பத்து மண்டலங்களாக வகுத்தனர் வான சாத்திரத்தில் சூரிய மண்டலம் முதலியவை அளவைகளையே குறிக்கும். வைத்திய சாஸ்த்திரத்தில் மருந்து புடம் போடுவதற்கு மருந்து உண்பதற்கு மண்டலக் கணக்கு வழக்கில் உள்ளது. அரசர்களும் தம் அதிகாரத்திற்கு எல்லை வகுத்து மண்டலவர்த்தி,மண்டலேஸ்வரன்,மண்டலாபதி என்ற சொற்பதங்களால் பெருமை வகிப்பர். மாந்திரீகம் முதலியவற்றிலும் மண்டலம் என்ற சொல் வழக்கில் உண்டு ஆகமங்களிலும் தீனா மண்டலம் குண்ட மண்டலங்களும் வகுக்கப்பட்டுள்ளது.

மண்டலம் என்னும் சொல்பதம் 45 தினங்களையே பெரும்பாலும் குறிக்கும் ஆயினும் 48 தினங்களைச் சிறப்பாகக் கொள்ளும் வழக்கும் உண்டு.

கும்பாபிஷேகத்தின் முன்னர் 45 தினங்கள் யந்திர பூஜா கிரமமும் கும்பாபிஷேகத்தின் பின்னர் மண்டலாபிஷேகமுமாக மஞ்சன நீராட்டுவிழாவாக மண்டலம் வரை ஸ்நாபனம். உற்சவம் செய்து மண்டலத்தை பூர்த்தி செய்வர். மண்டல பூர்த்தியில் செய்யப்படும் அபிஷேகமும் சகஸ்ர சங்காபிஷேகமாக நிகழ்த்தப்பெறும் மண்டல பூர்த்தியில் தான் சுவாமிக்கு இராபந்தன (காப்பு அவிழ்த்தல்) செய்தல் ஆகம முறையாகும்.

கும்பாபிஷேகத்தில் கிரியை வழிபாடுகள் எவ்வளவு உயர்வானதோ ஆலய சூழலில் வாழும் மக்கள் சேமமாக வாழ வேண்டும் என்ற உண்மையான நோக்கத்தோடு செய்யப்படுகின்றதோ அதே நோக்கத்தோடு தான் மண்டலாபிஷேகமும் செய்யப்படுகின்றது.

கும்பாபிஷேகத்தில் அநேக சாந்தி வழிபாடுகள் உள்ளடக்கப்படுகிறது கும்பாபிஷேகம் அல்லது குடமுழுக்கு என்றும் பிரதிஷ்டையை இதனால் பெருசாந்தி என்பர்.

இப் பெருஞ்சாந்தியில் ஏற்படும் குறை குற்றங்களை நீக்கற் பொருட்டும் கும்பாபிஷேகம் செய்த பலனைப் பெறுதற் பொருட்டும் மண்டலாபிஷேகம் செய்யப்படுகின்றது.

கும்பாபிஷேகம் என்னும் பெருஞ் சாந்தியில் சாந்தியாக விளங்குவது மண்டலாபிஷேகம் மண்டலாபிஷேக பூர்த்தியில் இடம் பெறுவது சங்காபிஷேகம் இது தனிப்பெருமை வாய்ந்தது.

சங்காபிஷேகம் பெரும்பாலும் அஷ்டோத்தரமாக (108) அஷ்டோத்தர, சகஸ்ர (1008) மாக இரு வகைப்படும்.

*"மருத்குமாத் அதிகம சஹஸ்ர குணிதம்*
*தாம்பரம் ததோ ரௌப்பஜம்*
*கும்பஞ்சாப்யவுதம் ததோம் த்வி குணிதம்*

*லஷகம் சுவார்ணோத் பவம்*
*ஏதேம் யோ த்வி குனிதம் சரத்ண*
*கச்தம் சுருங்கம் சவேயஸ்யதத்*
*தஸ்மாத் கோடி குணம் சமுத்ர*
*ஜறிதம் சங்கம் சிவேனோதிகம்*

சங்கினால் செய்யப்படும் அபிஷேகமானது சிறப்பு மிகுந்த பலனைத் தரவல்லது. மேலே குறிப்பிட்ட பாடல் மூலம் மண்குடத்திலும் பார்க்க செம்பினால் செய்யப்பட்ட குடம் ஆயிரம் மடங்கு விஷேசமானது. அதனிலும் வெள்ளியால் செய்த குடத்தால் அபிஷேகிப்பது ஆயிரம் மடங்கு விஷேடமானது. அதிலும் பொன்னினால் செய்த குடம் இரண்டு லட்சம் மடங்கு சிறப்புடையது . இவைகளிலும் பார்க்க இரத்தினங்களினால் அலங்கரிக்கப்பட்ட காண்டாமிருகக் கொம்பினால் அபிஷேகிப்பது இரு மடங்கு விசேடமானது. இதனைக் காட்டிலும் கடலில் தோன்றிய சங்கு கோடி மடங்கு விசேடமானது. சங்காபிஷேகம் என்பது சங்கினால் செய்யப்படும் அபிஷேகம். சங்கின் தெய்வீகத் தன்மையை

*"த்வம் புர சாகரோகு பந்தா*
*விஷ்ணு நா வித்ருத் கரோ*
*பூஜித சர்வதேவைஸ்ச பாஞ்ச ஜந்ய*
*நமோஸ் து தே"*

என்ற சுலோகம் தேவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்தபோது சாகரத்திலே தோன்றியவைகளுள் ஒன்றாக அமைவுற்று மகா - விஷ்ணுவினுடைய திருக்கரத்தில் அமர்ந்திருக்கும். சிறப்புப் பெற்றது எல்லாத் தேவர்களாலும் போற்றப்படும் உயர்வுடையது. இத்தகைய சங்கே உனக்கு வணக்கம் என்றும்,

*"சங்கம் சந்த்ரார்க்க தைவத்யம்*
*மத்யே வருண தைவதம்*
*பருஷ்டே ப்ரஜாபதிம் வித்பாத்*
*அக்ரே கங்கா சரஸ்வதி*
*சங்காக்ரே சர்வ தீர்த்தாதி*
*தஸ்மாத் சங்கம் ப்ரபூயேயேத்,*

சங்கானது சூரிய சந்திரர்காண அதிதேவதை யாகக் கொண்டது. மத்தியில் வருணனும் பின் பகுதியில் பிரஜாபதியும் நுனியில் கங்கா நதியும், சரஸ்வதி நதியும் அடிப்பாகத்தில் பிரமனும், நடுப்பகுதியில் சரஸ்வதியும், சகல புண்ணிய தீர்த்தங்களும் வீற்றிருக்கின்றன என்பதையும் அறிகின்றோம்.

இறைவனின் கண்களாக விளங்கும் ஒளிர் பொருட்களான சூரிய சந்திரர்கள் தெய்வீகமான பாற்சமுத்திரத்திலே அருளினால் தோன்றிய சங்கில் வீற்றிருந்து

அருளுவதும், தனக்கோர் நிறமற்றிருக்கும் புனித கங்கைகள், ஜலத்தேவதைகளும் வருணனும் வெள்ளைத் தாமரையில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் சரஸ்வதியும் பிரமனும் உறைவதும், கண்ணுக்குப் புலப்படாத உருவத்தில் பூமியினடியில் சென்று உறைகின்ற சரஸ்வதி நதியும் அனைத்து புண்ணிய தீர்த்தங்களும் வற்ற மறந்து சங்கினில் நிறைந்து. அபிஷேகிக்கும் நீரில் ஆவாகித்து அருள் பொழிகின்றன எனில் சங்காபிஷேகத்தின் பெருமையை தெய்வீகத்தைச் சொல்லவும் வேண்டுமோ. சங்கு தீர்த்தம் தேவர்களுக்கும் பெரு விருப்பமானது. சங்கு ஒலி எங்கு உண்டோ அங்கு மகாலட்சுமி வீற்றிருப்பாள். எவன் சங்கு தீர்த்ததைப் பருகின்றானோ அவன் எல்லாத் தீர்த்தங்களையும் பருகிய ஸ்ஞானம் செய்த பலன் பெறுகிறான்.

விதிப்படி அமைக்கப்பட்ட யாகசாலையில் விருத்த (வட்ட) வீயூக - கிரம பதக்கிரமங்களின் பிரகாரம் சங்குகளை தாபித்து அவற்றில் மந்திரித்த நீருடன் சங்கில் திரவியங்களைக் கலந்து மேலும் கஸ்தூரி பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, லாமிச்சைவேர், ஏலம், பன்னீர், மஞ்சள் முதலிய வாசனைத் திரவியங்களைச் சேர்த்து ஒவ்வொரு சங்கிலும், மாவிலை, தர்ப்பை மலர் வைத்து பூசையை செய்து பஞ்ச குண்டமோ, நவகுண்டமோ அமைத்து அக்கினி வளர்த்து ஆகுதி செய்து பூர்ணாகுதி, தீபாராதனை நிறைவு செய்து கும்ப, சங்கு நீரினால் இறைவனுக்கு அபிஷேகம் செய்வர்.

இதனால் இறைவனுக்கு மூர்த்திகரமும் சாந்திகளையும் உண்டாக்கும். பக்தர்களுக்கும் அருள் கிடைக்கும் என்று ஆகமங்கள் வியந்து கூறுகின்றன.

யாகசாலை சடத்துவ ஆக்கங்களின் தத்துவத்தை விளக்குகின்றது. சாந்தீதகலை சொரூபமாக விளங்குவது, வாயில்கள் கலைகளின் வடிவம், ஆறு அத்துவாக்களின் சொரூபம் தத்துவ வடிவமாக யாகசாலை அமைத்து நடுவே வேதிகை ஸ்தாபித்து அதில் பிரதிவித்துவம் கூர்மாசனம், உபவேதிகை - அனந்தாவனம், மகாவேதிகை சிம்மாசனம், நெல், - யோகாசனம், அரிசி - பத்மாசனம் , எள் - விமவாசனம், நெல் மலர் - சந்தியாசனம், பிருதுவி முதல் குடிலை ஈறாகிய முப்பத்தாறு தத்துவங்களும் பீடமாக (ஆசனமாக) அமைகின்றது.

சங்காபிஷேகம் தொடர்பாக நிகழும் கிரியைகளில் யாகபூஜை நிறைவு செய்யப்பட்டு பிரதான வேதியையில் பிரதான கும்பத்திற்கு ஆதாரசத்தி முதல் - பஞ்சானம் - பஞ்சமாவரணம் எந்த தெய்வம் ஆவாகிக்கப்படுகிறதோ அதன் மூலமந்திரம் - தியானம் கூறி ஆவாகிக்கப்பட்டு வணங்குவர். இதன் அங்கமாக நியாசம் ஆவரண பூஜைகள் நிகழ்வு செய்யப்பட்டு ஓம குண்டலத்தில் அக்கினி காரியம் முதன்மையாகச் செய்து அக்கினியில் செய்யப்படும் ஓமங்கள் எல்லாம் எந்த தெய்வத்தின் பெயரால் ஆகுதி செய்கிறோமோ அந்தத் தெய்வங்களைச் சென்றடையும்.

சிவாலயங்களில் சிவனைப் பிரதானமாகக் கொண்டு மத்தியில் வைத்து அஷ்டவித்தியேஸ்வரர் (துதியாவரண தேவர்) என்போரை பரிவாரங்களாக வைப்பர். 1008 சங்குகளை வைத்து அவற்றில் மூர்த்திகளில் நாமங்களால், ஆவாகனம், மூர்த்தி,மூலம் ஆகியவற்றால் ஆவாகித்து வழிபாடு பூசனை செய்வர். அரசன் ஒருவன்

சபையில் வீற்றிருக்கும் போது மந்திரிமுதலாப் பிரதானிகள் சூழ அமர்ந்து இருப்பது போல ஜகத்-உலகத்திற்கு தலைவனாகிய இறைவனைப் பரிவாரத் தெய்வங்களுடன் அமர்த்திப் பூஜை கிரமமாக நிறைவு செய்து அபிஷேகம் செய்யும் போது இறைவன் மனம் குளிர்ந்து வேண்டிய இஷ்ட காமியார்த்தங்களை வேண்டுவார்க்கு வேண்டியவாறு அருளுவான் என்பது ஆகம முடிவு.

சங்கு வலம்புரி,இடம்புரி என்னும் அதன் இலக்கணங்களை சாஸ்த்திரங்கள் கூறுகின்றன. இத்தகைய சிறப்புக்களோடு கூடிய வலம்புரி இடம்புரிகளில் நீரில் நிரப்பி சிவாகமங்களில் கூறிய விதிமுறைப்படி பூசித்து இறைவனுக்கு நீராட்டினால் பக்தர்களுக்கு கிடைக்கும் பலன் எல்லையற்றது. பலவகை மூலிகைகளோடு கூடிய அபிஷேக தீர்த்தத்தை பக்த கோடிகள் சிரசில் தெளித்தும் உட்கொள்ளும் போதும் வைத்திய நாதன் ஆகிய இறைவன் அருளால் உடற்பிணி, உளப்பிணி, பாவங்கள் யாவும் நீங்கும்.

எங்கு சங்கு ஒலி கேட்கிறதோ அங்கு மகாலட்சுமி நீங்காது வாசம் செய்வாள். எவன் சங்கு தீர்த்தத்தை உட்கொள்ளுகின்றானோ (பருகுகின்றானோ) எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்த பலனைப் பெறுகின்றான். சங்கில் பால் நிரப்பி தெய்வத்தை அபிஷேகித்தால் - நீராட்டினால் ஆயிரம் யாகங்கள் செய்த பலனை அடையலாம். சங்கிலே கங்கா தீர்த்தம் கொண்டு இறைவனை நீராட்டுபவன் பிறவிப் பிணியில் இருந்து நீங்குவான். சங்கு தீர்த்தச் சிறப்புக்களைப் பதும புராணம், பிரமணவர்த்தி புராணம் முதலியன விஷேடித்துக் கூறுகின்றன. ஸ்ரீ வாசு தேவனின் ஆணையால் எல்லாம் உலக தீர்த்தங்களும் சங்கின் கண் இருக்கின்றன.

கும்பாபிஷேகம் என்னும் திவ்வியமான விழா ஒரு ஆலயத்தில் அடிக்கடி நிகழ மாட்டாது. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு தடவையே இக் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. தெய்வத் திருவுருவங்களில் ஒரு முறை ஆவாகனம் செய்து பதியப்படும் அருட்சக்தி பன்னிரண்டு வருடங்களின் பின்னர் மீள யந்திரத்திலும் விம்பத்திலும், ஆலய சூழலிலும் மந்திர ரூபமாக உரு ஏற்றி புதுப்பிக்க வேண்டும். அத்துடன் சுவாமிக்கு சாத்தப்படும் மருந்து (அஷ்டபந்தனம்) வலிமைகெடாது பாதுகாக்க, கட்டிட சீர்திருத்தம், வர்ணம் பூசுதல் என்பனவும் 12 ஆண்டுக்கொருமுறையே செய்தல் நல்லது. எனவே விதிப்படி இக்கால இடைவெளியை பயன்படுத்தி சகல ஆலயங்களும், புனராவர்த்தனப் பிரதிஷ்டையாக கும்பாபிஷேகத்தை செய்வதன் மூலம் இறை அருளை பெருக்க முடியும்.

மூல மூர்த்திக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் விதிப்படி கும்பாபிஷேகம் நிறைவேற்றி பின்னர் தினந்தோறும் அபிஷேகம், அலங்காரம், உற்சவம் சிறப்பாக நடைபெறும்

இதனை பொதுவாக மண்டலாபிஷேகம் என அழைப்பார்கள்.

# ‘முப்பொருள் உண்மை’

அருள் மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார்

அகில உலகங்களிலும் உள்ள எல்லாப் பொருள்களையும் மூன்று பிரிவில் அடக்கி விடலாம். ஒன்று தானே அறிகின்ற பொருள், மற்றொன்று அறிவித்தால் அறிகின்ற பொருள். அறிவித்தாலும் அறியாத பொருள் மற்றொன்று. இவற்றைப் பதி, பசு, பாசம் என்று நம் சைவசமய ஞானநூல்கள் கூறுகின்றன.

பதி : தானே அறிகின்ற பொருள்

பசு : அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள். இறைவனும் அநாதி ஆன்மாக்களும் அநாதி “ பதியினைப்போல் பசு பாசம் அநாதி என்கிறார் - திருமூலர்.

ஆனால் இறைவன் இன்ப வடிவினை நுகராது ஆன்மாக்கள் ஆணவத்துடன் கூடித் துன்பத்தை நுகர்கின்றன. “சதாபாரதா துக்க பவான் தீனபந்தோ” என்று சுப்ரமண்யபுஜங்கத்தில் சங்கரரும் கூறுகின்றார்.

ஆன்மாக்களின் துன்பத்தை நீக்குவதற்குத் திருவுளங் கொண்ட இறைவன் அருள் திருமேனி தாங்கி, ஆனமாக்களுக்கு உடம்பையும், கருவிகரணங்களையும் உலகங்களையும் படைத்துக் கொடுத்தருளினார். அவ்வாறு படைத்த எழுவகைப் பிறவிகளில் மனிதப் பிறப்பு உயர்ந்தது.

“அரிது அரிது மானிடராதல் அரிது”

- ஔவையார்

“எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதிலும் அரிதரிது காண்”

என்கிறார் - தாயுமானவர்

எண்ணில்லாத உலகங்களில் எண்ணில்லாத உடம்புகளை எடுத்து, எண்ணில்லாத காலமாகப் பிறந்து இறந்து மாறிமாறி வந்து இளைப்புற்றேன் என்கிறார்.

மணிவாசகர்.

ஏழு கடற்கரைகளின் மணல்களை எண்ணி அளவிட்டு இத்தனையென்று அறுதியிட்டு கூறினாலும் கூறி விடலாம். ஆனால், நாம் பிறந்த பிறப்பை எண்ணி அளவிட முடியாது என்கிறார்.

- அருணகிரிநாதர்

"எழுகடல் மணலை அளவிவிடி னதிகம்
எனதிடர் பிறவி அவதாரம்"

- திருப்புகழ்

ஒவ்வொரு பிறவியிலும் தாம் பருகிய தாய்ப்பால் அனைத்தும் ஒருங்கு கூட்டினாற் பாற்கடல் சிறிதாகிவிடும் என்கிறார்.

- குருநமசிவாயர்

எடுத்த பிறப்பெல்லாம் எனக்கு வந்த தாய்மார் கொடுத்த முலைப்பாலனைத்துங் **கூட்டின்.......**

**அடுத்துவரும்**

**பன்னா கணைத்துயிலும்** பாலாழி யுங்சிறிதாம் மன்னா சிதம்பர தேவா

- சிதம்பர வெண்பா

இத்தகைய பிறவிகளில் மனிதப் பிறப்பு உயர்ந்தது. என்கிறோம். மனிதன் என்ற சொல்லுக்கு நினைப்பவன் என்பது பொருள்.

மண் என்ற பகுதியடியாகப் பிறந்த சொல் மனிதன் நினைக்கின்ற கருவி மனம் அது இன்றியமையாத ஒன்று. மற்றப் பிராணிகட்கு மனம் இல்லை. தமிழில் மனிதன் வடமொழியில் மனுகா ஆங்கிலத்தில் மேன், இச்சொற்கள் யாவும் மன் என்ற பெயர்ச் சொல்லிருந்து தோன்றியவை.

மனம் என்ற கருவியில்லாமையால் விலங்குகளின் வாழ்வு ஒன்றுபோல் அமைந்திருக்கின்றன. மாடு அன்று உண்ட புல்லைத்தான் இன்றும் உண்ணுகின்றது மனிதன் உணவைப் பல்வேறு வகையாகப் பக்குவஞ் செய்து உண்ணுகின்றான்.

குருவி அன்று கூடு கட்டியதுபோல் தான் இன்றும் கட்டுகின்றது. மனிதன் வீடுகட்டும் முறை கணத்துக்குக் கணம் பல்வேறு விதமாகப் முன்னேற்றமடைந்திருக்கின்றது.

உணவினாலே, உடையினாலே நடையினாலே பேச்சாலே எழுத்தாலே வாகனங்களினாலே மனிதன் முன்னேற்றமடைகின்றான்.

இதனை இப்படி இப்படிச் செய்ய வேண்டும் என்று சிந்திக்கின்றான். இவ்வாறு சிந்திக்கினற மனிதன் சமயநெறியிலும் முன்னேற வேண்டும். தான் யார்? தானே வந்ததா? ஒருவன் தந்து வந்ததா? தந்தவன் தன் பொருட்டுத் தந்தானா? என் பொருட்டுத் தந்தானா? உடம்பு எடுக்குமுன் எப்படி நான் இருந்தேன்? எதற்காக உடம்பு தரப்பட்டது? நான் எங்கிருந்து வந்தேன்? எதன் பொருட்டு வந்தேன்? எங்கே போகவேண்டும்? நான் எங்கே போய்க் கொண்டிருக்கிறேன்? என்றவாறு சிந்தனைகள் சிந்திக்க வேண்டும். இந்தச் சிந்தனைகள் தாம் சிந்திக்கத் தக்கவை. இவைகளைச் சிந்திக்கிறவன் உண்மையில் மனிதனாகின்றான். அருணகிரிநாதர் பாடுகின்றார்.

*"சிந்திக்கிலேன் நின்று சேவிக்கின்றிலேன்*
*தண்டைச் சிற்றடியை*
*வந்திக்கிலேன் ஒன்றும் வாழ்த்துகிலேன்*
*மயில்வாகனனைச்*
*சந்திக்கிலேன் பொய்யை நிந் திக்கிலேன்*
*உண்மை சாதிக்கிலேன்.*
*புந்திக்கிலேசமுந் காயக்கிலேசமும்*
*போக்குதற்கே."*

ஏனைய சிந்தனைகள் பிறவியைத் தரும். அச்சிந்தனைகள் அற ஐந்தெழுத்தைச் சிந்திக்க வேண்டும்.

பஞ்சாக்கரத்தில் பல பிரிவுகள் உண்டு
"ஐம்பத்தொன்றிலெட்டாறில் மூன்றினில்
ஐந்தில் தங்கும் அப்பாலை வான் பொருள்"
- என்பது திருவகுப்பு

மூன்று என்பது திரியட்சரம், இதனைப் பரம ஞானிகள் ஓதுவார்கள்.

"சிவாய எனும் நாமம் ஒருகாலும் நினையாத
திமிராக ரனைவாவென் றழையாதே"
- திருப்புகழ்

ஆவயீ ரைந்தை அபரத்தே வைத்தோதில்
ஆவியீ ரைத்தை அகற்றலாம் - ஆவியீர்
ஐந்தறலாம் ஆவியீர் ஐந்துறலாம் ஆவியீர்
ஐந்திடலாம் ஓரிண்டடோ டாய்ந்து

ந - திரோநமலம்
ம - ஆணவமலம்
சி - சிவம்
வ - திருவருள்
ய - ஆன்மா
ஆன்ம எழுத்து ய ஈரைந்து பத்து
தமிழ் கணக்கில் பத்து - ய

இந்த யகரத்தை அவரது - பின் சிகரத்துக்கும் வகரத்துக்கும் பின் வைத்து சிவய என்று ஓதுவார்களானால்,

"ஆவயீரைந்தை அகற்றலாம்"
ஈரைந்து - பத்து பத்து என்ற சொல்லை ஆவி என்ற எழுத்துக்களுடன் சேர்க்க வேண்டும்.

ஆ என்ற எழுத்துடன் பத்து என்ற சொல்லைச் சேர்க்க - ஆபத்து
வி என்ற எழுத்துடன் பத்து என்ற சொல்லைச் சேர்க்க - விபத்து
ஆபத்து - உடலுக்கு வருந்துயர்
விபத்து - உயிருக்கு வருந்துயர்

உடலுக்கு வருந்துயர்கள் பசி, பிணி முதலியன உயிருக்கு வருந்துயர் பிறப்பு, இறப்பு என்பன இந்த ஆபத்து விபத்து என்ற இருவகைத் துயரங்களும் சிவாய என்று ஓதுவார்க்கு உண்டாக மாட்டா.

**ஆவியீர் ஐந்து அறலாம்.**
**ஆணவம், கன்மம்,** மாயை, திரோதம், மாயேயம் ஆகிய பஞ்சமலங்களும். அறும்

ஆவியீர் விளி உயிர் போன்றவர்களே! திவிர்த்திகலை, பிரதிஷ்டாகலை, வித்யாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை என்ற பஞ்சகலாமயமும் உண்டாகும்.

ஆவியீர் ஐந்திடலாம்
ஓரிரண்டோடாய்ந்து :
ஆவி - பிராணவாயு

ஈரைந்தோடு ஓரிரண்டு ஆய்ந்து இடலாம் - வெளியே அவமேகழிகின்ற பன்னிரு அங்குலம் பிராணவாயு அவ்வாறு கழியாது உள்ளே மீளும்.

இன்னும் ஒரு முறை அப்பாடலைச் சிந்திப்போம் :

*"ஆவியீ ரைந்தை அபரத்தே வைத்தோதில்*
*ஆவியீ ரைந்தை அகற்றலாம் - ஆவியீர்*
*ஐந்துறலாம் ஆவியீ ரைந்துறலாம் ஆவியீர்*
*ஐந்திடலாம் ஓரிரண்டோடாய்ந்து"*

என்ன அற்புதமான செய்யுள்? எத்துணை ஆழமான செம்பொருள்கள்? ஆதலால், **ஐந்தெழுத்தைச் சிந்திப்போமானால் துயர்கள் நீங்கும். தனியிழையை எளிதினில் அறுத்து விடலாம். இருபத்தையாயிரம் யிழைகளைக் கூட்டி முறுக்கி விட்டால், அக்கயிற்றால் தேரையேயிழுத்துவிடலாம்.** அதுபோல் பல லட்சம் முறை மந்திர ஜெபம் கூடுமானால் இறைவனைத் தெரிசித்து விடலாம். 96 கோடி ராம மந்திர ஜெபத்தால் தியாகராஜ சுவாமிகள் ஸ்ரீ ராமரை நேரில் தரிசித்தார். அண்மையில் வாழ்ந்த உண்மைத் துறவியாகிய பாம்பனடிகள் 36 நாள் பாம்பன் வலசையில் மயானத்தில் குழிவெட்டிக் கொண்டு, அக்குழியிலிருந்து இடையறாது சடக்கர மந்திரத்தைச் செபித்து இளம்பூரனை நேரில் கண்டு தரிசிக்கப்பெற்றார்.

இடையறாது கடைந்தால் பாலிலிருந்து வெண்ணெய் வெளிப்படுவது போல், இடையறாது தியானஞ் செய்தால் எம்பெருமான் வெளிப்படுவான்.

*"விறகிற் றீயினன் பாலில்படு நெய்போல்*
*மறைய நின்றுள்ள மாமணிச் சோதியான்*
*உறவுக் கோல்நட் டுணர்வுக் கயிற்றினால்*
*முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே"*

அப்பர் பெருமான்

உடம்பை உயிர் செலுத்துகின்றது உயிரை இறைவன் செலுத்துகின்றான். காரை டிரைவர் செலுத்துகின்றார் என்பது போல் உணர்க. உடம்புக்குள் உயிர் உயிருக்குள் இறை டயருக்குள் ட்யூப் ட்யூப்புக்குள் காற்று இறைவனுடைய உதவிகளை நாம் ஆழமாக நோக்கினால் மனம் உருகும் முடிவில் உயிர் உருகினால் உயிரில் உள்ள சிவம் உயிருடன் ஒன்றிவிடும்.

அரக்கின் இடையில் தங்கம் தங்கத்தின் இடையில் இரத்ன மணி.

அரக்கு உருகினால் தங்கம் உருகும் தங்கம் உருகினால் மணி அதில் பதிந்து விடும் அது போல் உள்ளம் உருகி உயிர் உருகி சிவத்துடன் ஒன்றுபட வேண்டும்.

நம் உள்ளமே உருகவில்லையானல் உயிர் எவ்வாறு உருகும்? இறையுடன் எவ்வாறு ஒன்றுபட முடியும்? ஆதலால், அன்பைப் பெருக்கி உள்ளத்தையும் உணர்வையும் உயிரையும் உருக்கி இறையுடன் கலந்து இன்புறுவதுவே சைவசித்தாந்தத்தின் முடிந்த முடிவாம்.

*முருகன் குமரன் குகனென்று மொழிந்*
*துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்*
*பொருபுங் கவரும் புவியும் பரவும்*
*குரு புங்கவ எண் குணபஞ் சரணே.*

என்று அனுபூதி இதனை நமக்கு உணர்த்துகின்றது.

உணவு தேடுகின்ற நாம் உணர்வுந் தேட வேண்டும். நித்த அறிந்த வேறுபாடுகளை உணர்வது தான் உணர்வுடைமைக்கு அழகாகும்.

"நேற்றிருந்தார் இன்றில்லை"

மகாபாரதத்தில் யட்சப் பிரச்சனை என்று ஒன்று உளது. அது மிக மிக அருமையானது. யட்சமூர்த்தி தருமரைப் பார்த்து வினாவுகின்றார் " தருமா? உலகிலே மிகவும் ஆச்சர்யமானது எது? தருமர்.

தினந்தோறும் இறக்கின்றவர்களைக் கண்டும் தனக்கு மரணம் இல்லையென்று எண்ணுகின்றானே! அதுதான் பெரிய ஆச்சர்யம் என்றார்

*"இறப்பெனும் மெய்ம்மையை இம்மை யாவர்க்கும்
மறுப்பெனும் அதனின் மேல் கேடு மற்றுண்டோ
துறப்பெனும் தெப்பமே துணை செய்யாவிடில்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ"*

என்று தயரதர் கூறுகின்றார்

ஆதலால் மரணம் வருமுன் இறைவன் சரணத்தை வழிபட்டு நலம்பெற வேண்டும். இது காலும் கூறியவற்றால், முப்பொருள் உண்மையும், இறைவன் தந்த அரிய பிறப்பு மனிதப் பிறப்பு என்பதும், இப்பிறப்பினால் இனியொரு பிறப்பு எடுக்காத வகையில் நாம் இறைவனுடன் ஒன்றி சிவாத்துவிதம் பெற வேண்டும் என்பதும், அதற்குரிய நெறி அன்பினால் உருகுவது என்பதும், ஐந்தெழுத்தை ஓதி உய்யவேண்டும் என்பதும், மரணம் நேருமுன் கரணம் பெற வேண்டும் என்பது தெரியப் பெற்றோம்.

*தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி*

நன்றி - வாரியார் கட்டுரை



# மாரியம்மன்

சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞான கிராமணியார்

ஆடி மாதத்தில் தமிழகத்தின் பட்டி தொட்டிகள் தோறும் மாரியம்மன் விழா நடைபெறுவது வழக்கம். அதுவும் காலரா அம்மை போன்ற தொத்து நோய்கள் கண்டுவிட்ட ஊர்களில் மிகச் சிறப்பாக நடைபெறும். ஆம், மாரியம்மன் தொத்து நோய்களைப் போக்கும் தெய்வமாகத் கற்பிக்கப்பட்டிருக்கிறாள். சிலர் தொத்து நோய்களைக் கொடுக்கும் தெய்வமாகவும் கருதுகின்றனர்.

இது எப்படியாயினும் தொற்று நோய்களுக்கும் மாரியம்மனுக்கும் தொடர்பு கற்பிக்கப் பட்டு விட்டது மட்டும் உண்மை.

மாரியம்மன் விழாக்களிலே பொன்னான மேனியைப் புண்ணாக்கிக் கொள்ளும் வகையில் அலகு குத்திக் கொண்டு ஆடுகின்ற அநாகரிகம் பல இடங்களில் தடை செய்யப்படுகிறது.

அப்படி இருந்தும் மாரியம்மன் பெயரால், அறிவுக்குப் பொருந்தாத நாகரிக வளர்ச்சியைக் கேலி செய்கின்ற பழக்க வழக்கங்களை இன்னமும் நாடெங்கும் நடை பெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.

இதற்கெல்லாம் காரணம் “மாரியம்மன்” என்ற பெயருடைய தெய்வத்தைப் பற்றி மக்களே சரிவரத்தெரிந்து கொள்ளாதது தான்.

“மாரி” என்ற தமிழச்சொல் “மழை” என்னும் பொருள் ஒன்றையே குறிக்கும். மழை வரம் வேண்டி நிகழ்த்தும் தெய்வவழிபாடுதான் “மாரி” விழா எனப் பெயர் பெற்றது. “அதுவும் பெண் தெய்வமாக இருத்தலால் மாரி அம்மன் விழா என வழங்கலாயிற்று.

அந்தப் பெண் தெய்வம் யார்?

சிலப்பதிகாரத்தை நன்கு கற்று, நாட்டில் நடைபெற்று வரும் மாரியம்மன் விழாவையும் கூர்ந்து கவனித்தவர்களுக்கு, சிலப்பதிகாரக் கண்ணகி தான் மாரியம்மன் எனப் பெயர் பெற்றாள் என்பது விளங்கும்.

தனது காதலனான கோவலன் கொலையுண்ட காரணத்தால் குற்றமற்ற அவனைக் கொன்ற பாண்டியனிடம் வாதிட்டு அவனுடைய அரசை அழித்தாள். மதுரையையும் எரித்தாள் கண்ணகி.

அதற்குப் பிறகு பன்னிரண்டு ஆண்டுகள் பாண்டிநாடு முழுவதும் மழை பெய்யாதொழிந்தது இயற்கையின் நிகழ்ச்சிகளுக்கு விஞ்ஞான ரீதியாக விளக்கம் பெறாத அந்நாளில் மழை பெய்யாதொழிந்ததற்குக் கண்ணகியின் கோபம் தான் காரணமென்று நம்பினர் பாண்டி நாட்டு மன்னனும் மக்களும்.

அதன் விளைவாக சிற்றங் கொண்ட கண்ணகித் தெய்வத்தின் சிந்தை குளிர நாடு முழுவதும், கண்ணகி விழா நடத்தினர். மழையில்லாக் காரணத்தால் பாண்டி நாட்டு மக்கள் உணவின்றித் தவித்திருந்தனர். பஞ்சகாலத்தும் கிடைக்கக் கூடிய கேழ்வரகுக் கூழ், முருங்கைக் கீரை உலர்ந்த மீன் (கருவாடு) முதலியவற்றை உணவாகக் கொண்டிருந்தனர். ஆதலால், அவற்றையே கண்ணகிக்கும் படைத்து விழாக் கொண்டாடி இருக்க வேண்டும்.

பன்னிரண்டு ஆண்டுகள் பஞ்சமும் பட்டினியும் தொடர்ந்த காரணத்தால் வெப்பு (காலாரா) குருவு (அம்மை) போன்ற தொத்து நோய்கள் தோன்றி மக்களைத் தொல்லைப்படுத்தின. அதனால் அந்தத் தொத்து நோய்கள் தொலைய வேண்டுமென்று கண்ணகி தேவிக்குப் பிரார்த்தனை செய்து கொண்டனர் மக்கள்.

பல்லாண்டுகள் பஞ்சம் நீடித்த காரணத்தால் உடுப்பதற்கு ஆடையின்றி மக்கள் கஸ்டப்பட்டிருக்க வேண்டும். அதனால வேப்பமரத்தின் இலைகளை இடையில் உடுத்திக் கொண்டு கண்ணகி விழாக் கொண்டாடி இருக்கலாம். பண்டு நிகழ்ந்த இந்த வழக்கங்களை ஒட்டி அன்று தொட்டு இன்று வரை ஆண்டாண்டு தோறும் நடைபெற்று வரும் கண்ணகி (மாரியம்மன்) விழாவில், கேழ் வரகுக் கூழும் முருங்கைக் கீரையும், உலர்ந்த மீனும் உணவாக சமைக்கப்பட்டு தெய்வத்திற்குப் படைக்கப் படுகின்றன.

கண்ணகி விழா துவங்கிய காலத்தில் பாண்டி நாட்டில் இருந்த பஞ்சமும் பட்டினியும் இன்றைய தமிழ் நாட்டில் எந்த ஊரிலும் இல்லை. ஆகவே நம் தமிழ்ப் பெண்கள் வேப்பஞ் சீரை எனப்படும் வேப்பந்தழைகளைக் கட்டிக் கொண்டு அரை நிர்வாணமாக மாரியம்மன் கோயிலை வலம் வரவேண்டியதில்லை.

தொத்து நோய்களைப் போக்கும் சக்தி கண்ணகித் தெய்வத்துக்கு இருப்பதாக மக்கள் நம்புவது மனதுக்கு ஆறுதல் அளிப்பதாக இருக்கலாம் மருத்துவத்தைப் புறக்கணிக்காதவரை இந்த நம்பிக்கையோ, அதையொட்டி நிலவும் வழி பாட்டையோ யாரும் எதிர்க்கத் தேவையில்லாமலிருக்கலாம். ஆயினும் கண்ணகி தர்ன தொத்து நோய்களைக் கொடுக்கிறாள் என்று யாரேனும் நம்பினால் அந்த அறியாமை அகல வேண்டும்.

பொதுவாக தாங்கள் மாரியம்மன் என்ற பெயரால் வழிபட்டு வரும் தெய்வம் தமிழ் இனத்தவர் பெருமைப் படக்கூடிய கண்ணகிதான் என்பதை மக்கள் உணர வேண்டும். உணர்ந்து மாரியம்மன் கோயில்களெல்லாம் கண்ணகி கோயில்களாகப் பெயர் பெற வேண்டும். மாரியம்மன் வழிபாடு நாகரிகமான முறையில் நடைபெற வேண்டும்.

இளங்கோவின் சிலப்பதிகாரம் கூறுகிறபடி பல மதத்தாரும் பல்வேறு நாட்டினரும் வழிபடக்கூடிய பொதுத் தெய்வமாக கண்ணகித் தெய்வம் கருதப்படவேண்டும். " தெய்வ வழிபாடே வேண்டாம் ஒருவனே தேவன் என்று சொல்லிக் கொண்டிருந்தாலே போதும் என வழக்காடுபவர்களுக்கு கண்ணகி வழிபாடும் தேவையில்லாமலிருக்கலாம்.

ஆனால் தெய்வத்தை நம்பி, அதை வழிபடுவதைக் கடமையாகக் கொண்டவர்களுக்குத் தமிழ்த் தெய்வமாம் கண்ணகி வழிபாடு தேவைப்படலாம்.

ஆனால் உயிர்ப்பலி தருவது ஒழிந்தது போன்று, வேப்பஞ் சீரை உடுத்தல், அலகு குத்திக் கொள்ளல், கருவாடு படைத்தல் போன்ற நாகரிக மற்ற பழக்கங்களை மக்கள் கைவிட வேண்டும்.

நோய் தரும் சிறிய தெய்வமாக அல்லாமல், விர உணர்ச்சி தரும் வீராங்கனையாக, கற்பரசியாக கருதி கண்ணகிக்கு ஆடித்திங்கள் தோறும் விழா நடத்த வேண்டும்.

**- மறுபதிப்பு**



# பெருஞ்சாந்தி

மகாவித்துவான் சி. தண்டபாணி தேசிகர்

உயர்நிலைக்கும் உயிர்நிலையாய் - உயிர்களுக்கு என்றும் மாறாத - பேறான பேரின்பத்தை அளிப்பதாய் - இருப்பன ஆலயங்கள்

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்பர் சிவயோகியராகிய திருமூலர். ஆகவே ஆலயம் வேறு பெருங்கோயில் வேறு ஆலயம் தூலமானது பெருங்கோயில் நுண்ணியது என்ற உண்மையை உவமையின் வாயிலாக உணரவைத்துள்ளார். ஆகவே பெருங்கோயிலாகிய நுண்ணிய ஆலயத்தின் (சூட்சுமாலயம்) உறைவிடமாய்ப் பருவுருவாய் இருப்பது ஆலயம் என்பது பெறப்படும். ஆலயம், கோபுரம், சுற்றாலை திருமதில்கள் முதலான வரையறைகளையுடையதாய் இடவரம்புக்குட் பட்டது. நுண்கோயில் பரந்ததாய் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் காட்டுவதாய், இடவரையறை கால வரையறைகளைக் கடந்ததாய் விளங்குவது.

எடுத்துக்கூறவதனால் பூசலார் புராணத்தில் பல்லவன்கண்டது ஆலயம். பூசலார் கண்டது பெருங்கோயில், பெருங்கோயிலுக்கு நாம் அன்றாடம் செய்யும் செப, தவ, தியான சமாதிகளே நாட்பூசையும் பெரும் சாந்தி முறைகளுமாம். அதனால் சிவம் என்னும் உயிரின்டமாகப் பிரகாசித்து நிற்கும். ஒருநாள் இருநாள் நமது தமோகுண ரசோகுண ஆதிக்கத்தாலோ, கன்ம வினையின் ஆட்சியாலோ செப தவங்களை நழுவ விடுதலே அகப்பூசனையில் நிகழும் தாழ்வு அத்தாழ்வு தீருவதற்காகச் செய்யப்பெறும் மணியின் கண் ஒளிபோல - தீயின் கண் சூடும் ஒளியும் போல, பூவின் கண் மணம் போலச் சீவனிடத்துச் சிவம் குணவடிவில் விளங்கி நிற்பதாகச் செய்யப்பெறும் பிள்ளையார் சதுர்த்தி - மாதசிவராத்திரி - மஹா சிவராத்திரி - கார்த்திகைச் சோமவாரம் முதலான நோன்பு நாட்களே விழாக்கள். இவைகள் அனைத்தும் விசேட தியானங்கள் இவை நித்திய தியானத்தில் நிகழ்ந்த குறைகளைப் போக்கவும் ஆன்மாவினிடம் சிவம் பிரகாசிக்கவும் செய்யப் பெறும் பெருஞ்சாந்திகள். இவை போலப் "புறம் பேயும் புண்ணியனைப் பூசிக்க" என்ற ஆணையின் வண்ணம் புறப்பூசை செய்வதற்காக அமைந்த இடங்கள் ஆலயங்கள். அங்கேயுள்ள மூர்த்திகளில் சிவம் பிரகாசிக்கிறது. அங்ஙனம் பிரகாசிக்கச் செய்யும் கிரியைகள், பூசைகள், அவற்றில் தெரிந்தோ தெரியாமலே விளையும் மந்திரக்குறைவு, கிரியைக் குறைவு, கரணக் குறைவு, திரவிக்குறைவு சிரத்தைக்குறைவு இவைகளை நீக்கவும் பரிபூரணமாகச் சிவம் பிரகாசிக்கவும் செய்யப் பெறுவன. விழாக்கள் இவற்றிலும் விளையும் குறைகளைப் போக்கிக் கொள்ளச் செய்யப் பெறுவன. பெருஞ்சாந்தியாகிய கும்பாபிஷேகங்கள் ஆகவே கும்பாபிஷேகங்கள் எவ்வளவு இன்றியமையாதன என்று எண்ணுதல் வேண்டும்.

சாதனங்கள் :- கும்பாபிஷேகத்திற்கு மண்டபம் கலசங்கள் குண்டங்கள், நெய் சமித்து, தானியம் அன்னம் நைவேத்தியங்கள் முதலான புறச்சாதனங்கள் மிகத்தேவையானவை இவைகளையும் பயன் தரச் செய்வனவாம், சிவத்தன்மை இவற்றினிடம் விளங்கச் செய்வனவாய் உள்ள சாதனங்கள் : நான்கு அவை ஆசாரியன். கும்பம் - பிம்பம் - அக்கினி என்பவை சோதியாய் விளங்கும் சிவத்தை கும்பத்திலும் அதிலிருந்து பிம்பத்திலும் நிலைபெறச் செய்பவன் ஆசாரியன். ஆகாயம், பராகாயம், பூதாகாயம், கடாகாயம் என மூவகைப்படும். பராகாயம் அதிலே வடிவாய் எங்குமாய் - என்றுமாய் நீக்கமற நிற்பது பூதாகாயம் மண் முதலான ஏனைய பூதங்கள் விரிந்து நிலைப்பெற இடந்தருவதாய் எல்லாவற்றையும் தன்கைத்தடக்கி நிற்பது பூதாகாயத்தின் ஏகதேசமாய்க் காணப்பெறுவது கடாகாயம் ' குடத்தின் அளவினதாய் மனிதனுடைய தேவைக்குப் பயன்படும் தரத்ததாய் விளங்குவது பராகாயம் அதன் தன்மை குறித்து ஞானாகாயம் - சிதாகாயம் சிற்சபை என்றெல்லாம் வழங்கப் பெறும். அந்த ஞானாகாய வடிவானது சிவம். அது இந்தப் பூதகாயத்திலும் நீக்கமறச் செறிந்துள்ளது. அதனை இன்னும் சுருக்கி நமக்குப் பயன்தரச் செய்யக் குண்டகாயத்தில் ஒளிப் பிழம்பாக ஒளிரச் செய்வதே அக்கினிக் காரியம். ஒளி தீயைப் பற்றியது. தீ - தேயு என்ற பூதவடிவினது உருவுடையது அருவான ஆகாயத்திலுள்ள பரசிவத்தை ஒளியான உருவாய் அமைய வேண்டிக் கொள்வதே அக்கினி காரியம்.

அதனை மேலும் பரம் பொருளாக்கித் தருவதே கடஸ்தாபனம். ஒளியாய் கட்புலனாய் கடவுளை நீராய்க் கண்ணுக்கும் ஊறுணர்ச்சிக்கும் உருக்கொள்ளச் செய்து அதில் நீரின் தன்மையாகிய தன்மையாய்ப் பிறவிவினைகளின் வெப்பத்தைப் போக்கும் இயல்பின தாய மந்திரஒலிகளாய்க் கலந்து நிற்கச் செய்வதே கடஸ்தாபன வழிபாடு. இங்ஙனம் கடத்தில் விளங்கும் கடவுளை அருவுருவத் திருமேனியாய சிவலிங்கத்திடமோ உருவத்திரு மேனியாகிய மகேசுர வடிவங்களிலோ விளங்கச் செய்வதே கும்பாபிஷேகம் அல்லது பெருஞ்சாந்தி.

விமானக் கோபுரங்களுக்குச் செய்யும் கும்பாபிஷேகம் மக்கள் ஆலயங்களையும் அரனெனத் தொழுவதற்காகச் செய்யப் பெறுவது.

பெருஞ்சாந்திக் காலங்களில் ஆறுகால வழிபாடும் நிறைவேறும்போது இடையில் செய்யப்பெறுவது நாடி சந்தானம் என்னும் கிரியை அது குண்ட கும்ப - பிம்ப - கோபுர விமானங்களோடு இணைக்கத் தருப்பைக் கயிற்றையிட்டு மின்னாற்றல் கம்பியின் வழியாகச் சென்று பயன்படுவது போல ஆசாரியனுடைய - அடியார்களுடைய - அன்பர்களுடைய தியான தரிசன விசேடத்தால் வெளிப் படும் சிவத்துவ சத்தி குண்டத்தினின்றும் கும்பத்திற்கும் அதனின்று பிம்பத்திற்கும் அதனின்று கோபுர விமானங்களுக்கும் வியாபித்து எங்கும் என்றும் விளங்கச் செய்யும் செயல்.

இங்ஙனம் செய்ய மிகமிகத் தேவையானவன் ஆசாரியன் என்பது பெறப்படும் அவன் தூய பிறப்பினனாய் - தூய ஒழுக்கத்தினனாய் - சதாசர்வகாலமும் தன்னைப்பற்றியோ - குடும்ப சேமலாபங்களைப் பற்றியோ - வருமான செலவுகளைப் பற்றியோ சிறிதும் சிந்தியாதவனாய் - சதாசிந்தனையோடு விளங்குபவனாக இருத்தல்

வேண்டும். இவன் அன்றாடம் கட்டும் உள்ளக் கோயில் பெருங்கோயில் அவன் செய்யும் செப, தவ, விரத தியானங்களால் சிவத்துவ வியாபகம் பெற்ற உள்ளம் பெருங்கோயில் அதில் செய்வதே நித்ய நைமித்திய - சம்புரோட்சண மகாகும்பாபிஷேகாதி கிரியைகள் ஆகவே இதனால் மகாகும்பாபிஷேகமாகிய பெருஞ் சாந்தி விழாவின் பெருமையும் இன்றியமையாமையும் பெறப்படும்.

காரைநகர்ப் பெருமக்கள் பெருஞ்சாந்தி விழாவைக் கண்டவர்கள் சிவம் தன் ஆயிரம் கலைகளோடும் ஈழத்துச் சிதம்பரத்தில் விளங்குவதைத் தரிசிக்கும் பேறு பெற்றவர்கள். குறைவும் நிறைவுமில்லாமல் என்றும் அஞ்சாத பூரணமாய் இருக்கும் இறைவனைக் கண்டு என்றும் தம்முள்ளத்துச் சிவம் பிரகாசிக்கச் செய்ய நாள் வழிபாடுகளையும் சிறப்பு வழிபாடுகளையும் இயற்றி இன்புறுவார்களாக.

**-மறு பதிப்பு**







நடராஜப் பெருமானதும், சிவகாமி அம்பாளினதும் அலங்காரத் தோற்றம்



பூரணை புட்கலை சமேத ஐயனாரின் அலங்காரத் தோற்றம்




முன்னாள் ஆதீன கர்த்தாக்கள், திருப்பணிச்சபை தலைவர்
செயலாளர் பொருளாளர் ஆகியோர் அலுவலக முன்பாக



ஆலய சமுத்திர தீர்த்தம்

# 'ஒப்பற்ற தர்மம் தானம்'

சுவாமி - அசலானந்தர்

தானம் என்பது பிறர்க்கு ஒருவர் தம்மிடத்துள்ள பொருளைக் கொடுத்தலாகும். இச்செயலை எப்படிச் செய்ய வேண்டும் என்பதைத் தைத்திரியோப நிஷதம் கட்டளையிடுவதாவது :-

"சிரத்தையுடன் கொடுக்கப்பட வேண்டும். அசிரத்தையுடன் கொடுத்தலாகாது. தேவையை அனுசரித்து தாராளமாகக் கொடுக்க வேண்டும். அதிகம் கொடுப்பதற்கு இல்லையே என்று வெட்கத்துடன் கொடுக்கப்பட வேண்டும். கொடுக்கத் தக்க இடத்தில் கொடாமலிருப்பது தவறு என்றும் அச்சத்துடன் கொடுக்கப்பட வேண்டும்" அசிரத்தையுடன் கொடுக்கப்படும் தானத்தை, அஸத் கர்மம் - பொருந்தாத, முறை தவறிய செயலாக கீதை குறிப்பிடுவதோடு நில்லாமல், அது இம்மைக்கும் உதவாது மறுமைக்கும் உதவாது என்கிறது. "சிரத்தையின்றிச் செய்யும் யாகமும், தானமும் தவமும் மற்றக்கர்மங்களும் அஸத் (வீண்)எனப்படும். அர்ஜுனா அது மறுமைக்கும் உதவாது இம்மைக்கும் உதவாது. தானம் ஏற்பவரைத் தாழ்ந்தவராகக் கருதக் கூடாது. ஏற்றத்தாழ்வு (பிரதிருதி) உலகம் முழுவதும் உண்டு. அதுவே இயற்கையின் அமைப்பு. எனவே தானம் கொடுக்கும் போது சிரத்தையுடன் கொடுத்தல் வேண்டும் என்பது தெளிவாகின்றது. இல்வாழ்வான் தன் குடும்பத்தைப் பேணுவதல்லாது சுற்றத்தாரையும், வறியவரையும், துறவியரையும் பேணுதல் கடன். இதனை அறிந்து தக்கார் தன்னிடத்தில் பொருள் வேண்டி வரும் போது தவறாது தானம் செய்தல் இன்றியமையாததாகும். அவ்விதமான சந்தர்ப்பத்தில் தானம் செய்யாது தொழுவானேயாகில் அவன் பெருங்குற்றம் செய்தவனாகின்றான்.

இரக்கத்தால் தூண்டப்பட்டு நல்ல மனப்பான்மையுடன் இன்னார்க்கு இவை கொடுப்பது பொருத்தம் எனக் கருதி அதற்கேற்பக் கொடுத்தல் வேண்டும். பொதுவாக் மக்கள் கெட்டுப் போன, பயன்படாத பொருட்களையே கொடுப்பதைக் காண்கிறோம். இவ்விதச் செயலால் ஒருவன் தன்னைக் கீழ்மைப் படுத்திக் கொள்கிறான். "தானம் எல்லாக் குற்றத்தையும் மறைத்து விடும்" என்று கூறுவதுண்டு. யாரேனும் ஒருவர் தாராளமாகத் தம்மிடத்துள்ள பொருளைக் கொடுத்துக் கொண்டே வந்தால் அவரிடத்துள்ள ஏனைய கீழான குணங்களை மறந்துவிட்டு அன்னவரைப் புகழ்ந்து பாராட்டுவதைக் காண்கின்றோம். கர்ணனிடம் குறைபாடு இருந்தது பாண்டவர்களிடம் அவன் நடந்து கொண்ட பாங்கு பாராட்டத்தக்கதன்று. ஆயினும் அவனுடைய கொடைத் தன்மையால் பின்நாளில் பாராட்டுதற்குரியனானான்.

ஐயம் ஏற்பவன் பொருளைக் கொடுப்பதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகின்றான் நம்முள் புதைந்துள்ள கொடைத்தன்மையை, இரக்க உணர்ச்சியைத் தூண்டும் தூண்டு

கோலாக அமைகின்றான். எனவே ஐயமிடுபவன் ஐயமேற்பவனுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனாகின்றான். ஐயமேற்பவன் நன்றி கூறுவது என்பது மேல் நாட்டு முறை. ஹிந்துப் பண்போ "அதிதி தேவோ பவ" விருந்தினனை ஐயமேற்பவனைத் தெய்வமாகத் தொழு என்கிறது ஐயமிடுவதால் ஐயமிடுபவன் தான் மன அமைப்பில் மேலோங்குகின்றான். ஆக உண்மையில் தானத்தால் தானம் செய்பவன் தான் நலமடைகின்றான். எனவே பொருளை ஏற்பவன் மறைமுகமாக உண்டாக்கும் நலன்கருதி ஐயமிடுபவன் வணக்கத்துடன் பொருளைக் கொடுத்தல் வேண்டும். புகழைக் கருதியோ, மண்ணுலக, விண்ணுலக பேற்றினைக் கருதியோ செய்யும் தானம் இழிந்தது. தானம் செய்தல் இயல்பாக உண்டான இரக்க உணர்வால் மனநெகிழ்ச்சியால் அமைய வேண்டும். தானம் மூன்று படித்தரங்களில் அமைகிறது.


1. அருட்டானம்
2. அறிவுத்தானம்
3. பொருட்டானம்

தானம் மனதைத் தூய்மைப்படுத்துவதால் அதனை அவசியம் செய்தே ஆகவேண்டும். சுயநலப் பற்றுதலால் ஏற்படும் பொருட்பற்றை நீக்கத் தானம் தக்க சாதனமாகும். மேலும் தானம் செய்வதால் பிறரும் நன்மையடைகின்றனர். இவ் பூவுலக வாழ்க்கை அதனால் மேன்மையடைகின்றது.

தங்களுக்கென்று தேடுபவர்களுக்குச் செல்வம் சேர்ந்து பிறகு அவர்களைவிட்டுச் சென்றுவிடுகின்றது. ஒன்றையும் எதிர்பாராது கொடுத்துக் கொண்டே இருப்பவர்களுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய பொருள் தானே வந்தடைகிறது. சிருட்டியின் மேலான திட்டம் இதுவேயாகும்.

ஆகதானம் சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் முத்தியீறாக அனைத்தையும் ஈனும் "தானம் சுருங்கில் வானம் சுருங்கும்" என்பதனால் ... தானம் என்னும் ஒப்பற்ற தர்மத்தை நாளும் செய்து மேலாம் பேறு எய்துவோமாக

*நன்றி* - **தர்மசக்கரம்**



# காரைநகரில் உள்ள திருக்கோயில்கள் விபரம்

### பிள்ளையார் கோயில்கள்

வாரிவளவுப் பிள்ளையார் கோயில்
புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் கோயில்
பக்தர் கேணிப் பிள்ளையார் கோயில்
இராசவின் தோட்டப் பிள்ளையார் கோயில்
துறைமுகம் சித்திரக்கூடம் பிள்ளையார் கோயில்
களபூமி தெருவடிப் பிள்ளையார் கோயில்
களபூமித் தன்னைப் பிள்ளையார் கோயில்
வலந்தலை மருதடி வீரகத்தி விநாயகர் கோயில்
அண்டவயற் பிள்ளையார் கோயில் - தங்கோடை

### சிவன் கோவில்கள்

திண்ணபுரத் சிவன் கோயில் (ஈழத்துச் சிதம்பரம்)
பண்டத்தரிப்பான் புலம் சிதம்பரேஸ்வரர் கோயில்

### அம்மன் கோவில்கள்

திண்ணபுரச் தேரடி பத்திரகாளி அம்மன்கோயில்
மணற்காடு மாரி அம்மன் கோயில்
தங்கோடை நாகம்மாள் கோயில்
நீலிப்பந்தனை துர்க்கை அம்மன் கோயில்
மடத்துக்கரை முத்துமாரி அம்மன் கோயில்
கரப்பிட்டியந்தனை காளி அம்மன் கோயில்
பாலாவோடை அம்மன் கோயில்
பலுகாடு இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில்
வலந்தலை கண்ணகி அம்மன் கோயில்
களபூமி மாதா அம்மன் கோயில்
மருதடி காளி அம்மன் கோயில்

### ஐயனார் கோவில்கள்

வியாவில் ஐயனார் கோயில்
திண்ணபுரம் ஐயனார் கோயில்

**முருகன் கோவில்கள்**

அரசடிக்காட்டு கதிர்காமசுவாமி கோயில்
பயிரிக்கூடல் சுப்பிரமணியர் சுவாமி கோயில்
புதுறோட்டு கதிர்காம சுவாமி கோயில்
இலகடி அத்திபுரம் கந்தசாமி கோயில்
திக்கரை முருகமூர்த்தி கோயில்
தோப்புக்காட்டு சுப்பிரமணியர் சுவாமி கோயில்
போசுட்டிச் சுப்பிரமணிய சுவாமி கோயில் - கருங்காலி
புகலிச் சுப்பிரமணிய சுவாமி கோயில் - மணற்பிட்டி

**வைரவர் கோவில்கள்**

தினகரன் பிட்டி வைரவர் கோயில்
திண்ணைக்களி அரசடி வைரவர் கோயில்
சிதம்பராமூர்த்தி கேணியடி வைரவர் கோயில்
சடையாளி வைரவர் கோயில்
கூனன் பருத்தி வைரவர் கோயில்
இலங்கைப் போக்குவரத்துச் சபைச்சாலை வைரவர் கோயில்
சந்திரந்தை வைரவர் கோயில்
ஆலங்கன்றடி வைரவர் கோவில் - சாம்பலோடை
கரப்பிட்டியந்தனை வைரவர் கோவில்

**சேவகர் கோவில்கள்**

வலந்தலை சயம்புவீதி சேவகர் கோயில்
புதுரோட்டு மல்லிகை சேவகர் கோயில்
நீலங்காடு சேவகர் கோயில்

# காரைநகர் சிவன் கோவில் (ஈழத்துச்சிதம்பரம்)
## நித்தியபூசை, விசேட அபிஷேக ஆராதனை விபரங்கள்

**காரைநகர் சிவன் கோவில் நித்திய பூஜை விபரம்**

தினமும் காலை சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தயாமம் என நான்கு காலப் பூஜைகள் கிரமமாக நடைபெறுகின்றன. மார்கழி மாதத்தில் மட்டும் இவற்றோடு உஷத்காலப் பூஜையுமாக ஐந்து காலப் பூஜைகள் நடைபெறுகின்றன. ஆடி மாதத்தில் அம்பாள் மகோற்சவமும், மார்கழி மாதத்தில் திருவெம்பாவை - ஆதிரை உற்சவமும் பங்குனி மாதத்தில் சுந்தரேஸ்சுவரர் மகோற்சவமுமாக வருடத்தில் மூன்று பெரிய திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

**விசேட அபிஷேக ஆராதனை உற்சவ நாட்கள் விபர அட்டவணை:**

01. சித்திரை வருடப்பிறப்பு விஷேட அபிஷேக ஆராதனை
02. சித்திரைத் திருவோணம் - நடேசர் அபிஷேகம்
03. சித்திரைச் சதயம் - திருநாவுக்கரசர் குருபூஜை
04. சித்திராபூரணை விரதம்
05. வைகாசி விசாகம் - தினகரன் பிட்டி வைரவர் பொங்கல்
06. வைகாசி மூலம் - திருஞானசம்பந்தர் குருபூஜை
07. ஆனி உத்தர தரிசனம் - நடேசர் அபிஷேகம் திருவீதி உலா
08. ஆனி மகம் - மணிவாசகர் குருபூஜை
09. ஆடி மாதப்பிறப்பு - சோமஸ்கந்தர் அபிஷேகம்
10. ஆடிப்பூரம் தீர்த்தாந்தம் - அம்பாள் மகோற்சவம்
11. ஆடி அமாவாசை - தீர்த்தம்
12. ஆடிச் சுவாதி - சுந்தரர் குருபூஜை
13. ஆவணி மூலம் - பிட்டுக்கு மண் சுமந்த திருநாள்
14. புரட்டாதி பூர்வபட்ச சதுர்த்தசி - நடேசர் அபிஷேகம்
15. புரட்டாதி நவராத்திரி விழா - மானம்பூத் திருவிழா
16. ஐப்பசி கந்தசஷ்டி - சூரசங்காரம்
17. ஐப்பசி தீபாவளி விசேட அபிஷேக ஆராதனை
18. ஐப்பசி பூரணை - அன்னாபிஷேகம்
19. கார்த்திகைத் சோமவாரத் திருவிழா
20. கார்த்திகைத் திருக்கார்த்திகை உற்சவம்
21. சுட்கப்பனை - சர்வாலயதீபம்
22. விநாயகர் சஷ்டி விழா

| | | |
|---|---|---|
| 23. | மார்கழி திருவாதிரை | - திருவெம்பாவை உற்சவம் |
| | ஆருத்திரா அபிஷேகம் | - ஆருத்திரா தரிசனம் |
| 24. | தை மாதப் பிறப்பு | - அரசடி வைரவர் பொங்கல் விழா |
| 25. | தைப்பூசத் திருநாள் | |
| 26. | மாசி சிவராத்திரி | - நான்கு சாம விசேட அபிஷேக ஆராதனை |
| 27. | மாசி அமாவாசை | - சமுத்திர தீர்த்தம் |
| 28. | மாசி பூர்வபட்ச சதுர்த்தசி | - நடேசர் அபிஷேகம் |
| 29. | பங்குனி | - பத்திரகாளி அம்மன் பொங்கல் |
| 30. | பங்குனி உத்தரதீர்த்தாந்தம் | - சுந்தரேஸ்வரப் பெருமான் மகோற்சவம் |
| 31. | பங்குனி | - ஜயனார் வேள்வி விழா |
| 32. | மாதாமாதம் பிரதோஷவிழா | - பூர்வபட்சம், அபரபட்சம் திரயோதசி திதியில் |

* * * * * *

## ஆறுகாலப் பூஜைகளுக்குரிய நாழிகைப்பிரமாணம்

| | |
|---|---|
| **உஷத்காலம்** | - சூரியோதயத்திற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகை |
| **காலசந்தி** | - சூரியோதயாதயத்திற்குபின் ஏழேமுக்கால் நாழிகை |
| **உச்சிக்காலம்** | - பகல் பதினைந்தாவது நாழிகை |
| **பிரதோஷகாலம்** | - சூரியோதயாதயத்திற்குபின் ஏழேமுக்கால் நாழிகை |
| **சாயங்காலம்** | - சூரியஅஸ்தமனத்தின்பின் மூன்றேமுக்கால் நாழிகை |
| **அர்த்தயாமம்** | - சூரியஅஸ்தமனத்தின் பின்னுள்ள மூன்றேமுக்கால் நாழிகை தொடக்கம் அடுத்த மூன்றே முக்கால் நாழிகை வரையேயுள்ள பொழுதாகும். |

# ஈழத்துச் சிதம்பரம் தொடர்பான நூல்கள்

1. **திண்ணபுர அந்தாதி (1897)**
   ஆசிரியர் : கார்த்திகேயப்புலவர்
   உரை : கலாநிதி சொ. சிங்காரவேலன்

2. **திண்ணபுரச் சுந்தரேசுவரப் பெருமான் ஊஞ்சல் (1910)**
   வித்துவான் மு. சபாரத்தின ஐயர்

3. **திண்ணபுரத்திருப்பதிகம், திண்ணபுர ஊஞ்சல் பக்திரசக் கீர்த்தனங்கள் (1926)**
   நாக முத்துப் புலவர்

4. **திண்ணபுர வெண்பா (1926)**
   பண்டிதர் ச. பஞ்சாட்சரக் குருக்கள்

5. **திண்ணபுர மான்மியம் (1960)**
   ஆசிரியர் : இ. வைத்தியலிங்கம் (முன்னை நாள் தலைமைக்காரர்)

6. **ஈழத்துச் சிதம்பரம் (1961)** - சிவஸ்ரீ - ச. கணபதீசுவரக் குருக்கள்

7. **ஈழத்துச் சிதம்பரம் ஸ்ரீ சுந்தரேஸ்வரன் திருப்பதிகம், திண்ணபுர இலிங்கப் பதிகம்** - அருட்கவி சி. வினாசித்தம்பி

8. **ஈழத்துச் சிதம்பர புராணம் (1970)**
   ஆசிரியர் : புலவர்மணி சோ. இளமுருகனார்
   உரை : பண்டிதர் இ. பரமேசுவரியார்

9. **திண்ணபுரச் சுந்தரத் தமிழ் மாலை, திண்ணபுரக் கவிமலர், திண்ணபுரச் திருச்சதகம், ஆண்டிகேணி ஐயனார் கவசம் :-**
   கவிஞர் - சி. பொன்னம்பலம்

10. **ஈழத்துச் சிதம்பரம் (1984)**
    திரு. சு. முருகேசு

11. **ஆண்டி கேணி ஐயனார் (1985)**
    வித்துவான் மு. சபாரத்தினம்

## காரைநகர்ப் பள்ளிக்கூடங்கள்.

01. (அ) கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்
(காரைநகர் இந்துக்கல்லூரி)
(ஆ) கலாநிதி ஆ. தியகாராசா மத்திய மகா வித்தியாலய கனிஸ்டபிரிவு.
(ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசலை)

02. (அ) யாழ்ற்ரன் கல்லூரி
(ஆ) யாழ்ற்றன் கல்லூரி கனிஸ்ட பிரிவு. (தங்கோடை அ.மி.த.க. பாடசாலை)

03. (அ) சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலை.
(ஆ) சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலை கனிஸ்டபிரிவு
(களபூமி ஆலடி அ.மி.த.க பாடசாலை)

04. பாலாவோடை இந்து த.க. பாடசாலை

05. வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை

06. வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை

---

07. வியாவில் சைவ வித்தியாசாலை

08. மெய் கண்டான் த.க பாடசாலை

09. வேரப்பிட்டி ஸ்ரீ கணேச வித்தியாசாலை

10. ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலை

11. இலகடி சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை

12. ஊரி அ.மி.த.க. பாடசாலை

13. தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாசாலை

14. காரைநகர் கிழக்கு அ.மி.த.க பாடசாலை

❖ தற்சமயம் மேலேயுள்ள ஏழு (7) பாடசாலைகள் மட்டுமே இயங்குகின்றன.

# தமிழ் இலக்க எழுத்துக்கள்

| வ<br>1/4 | இ<br>1/2 | ஔ<br>3/4 |
|---|---|---|

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க<br>1 | உ<br>2 | ங<br>3 | ச<br>4 | ரு<br>5 | சா<br>6 | எ<br>7 | அ<br>8 | சா<br>9 | ய<br>10 |
| கக<br>11 | கஉ<br>12 | கங<br>13 | கச<br>14 | கரு<br>15 | கசா<br>16 | கஎ<br>17 | கஅ<br>18 | கசா<br>19 | உய<br>20 |
| உக<br>21 | ஙக<br>31 | சக<br>41 | ருக<br>51 | சாக<br>61 | எக<br>71 | அக<br>81 | சாக<br>91 | ள<br>100 | ளக<br>101 |
| உள<br>200 | ஙள<br>300 | சள<br>400 | ருள<br>500 | சாள<br>600 | எள<br>700 | அள<br>800 | சாள<br>900 | கூ<br>1000 | கூக<br>1001 |
| உகூ<br>2000 | ஙகூ<br>3000 | சகூ<br>4000 | ருகூ<br>5000 | சாகூ<br>6000 | எகூ<br>7000 | அகூ<br>8000 | சாகூ<br>9000 | யகூ<br>10,000 | யகூக<br>10,001 |
| உயகூ<br>20,000 | ஙயகூ<br>30,000 | சயகூ<br>40,000 | ருயகூ<br>50,000 | எயகூ<br>60,000 | அயகூ<br>70,000 | சாயகூ<br>90,000 | ளகூ<br>100,000 | யளகூ<br>10,00,000 | க<br>1 |

| ளளகூ<br>கோடி<br>100,00,000 |
|---|


உ

சரணம் ஐயப்பா

# மகாகும்பாபிஷேகம் தொடக்கம் மண்டலாபிஷேகம் வரை உபயக்காரர் விபரம் :


1. **மகா கும்பாபிஷேகம்** - பொது உபயம்
2. **திரு. இ. திருவாதிரை** கொழும்பு
3. **திரு. எஸ். சிவஞானம்** கொழும்பு
4. **திரு. ந. பாக்கியராசா மல்லிகை** காரைநகர்
5. **பங்குனி 4ம் திருவிழா உபயகாரம்**
6. **திரு. எஸ். பாலசுப்பிரமணியம்** காரைநகர்
7. **பங்குனி 6ம் திருவிழா உபயகாரர்**
8. **திரு. கு. சுந்தரமூர்த்தி சத்திரந்தை** காரைநகர்
9. **திரு. எம். ஏ. கந்தையா குடும்பத்தினர்** பக்தர்கேணி காரைநகர்
10. **பங்குனி 8ம் திருவிழா உபயகாரர்**
11. **திரு. க. சிவபாலன், க.கு. கந்தையாபிள்ளை** களபூமி காரைநகர்
12. **திரு. ஆ. சிற்றம்பலம், திரு. சு. கந்தையா** விளானைகளபூமி காரைநகர்
13. **திரு. மு. வல்லிபுரம்**, சடையாளி, காரைநகர்
14. **திருமதி. த. இராசமலர்**, மாப்பானவூரி, காரைநகர்.
15. **திரு. தி. பரமசிவம்**, பக்தர்கேணி, காரைநகர்
16. **திரு. வே. இராசநாயகமும், சகோதரர்களும்**, மல்லிகை காரைநகர்
17. **ஆதினகர்த்தாக்கள்**,
18. **ஆதினகர்த்தாக்கள்**,
19. **திரு. க. தர்மராஜா குடும்பம்**, U.S.A
20. **திரு. எஸ். சிவனேசன்**, இலகடி, காரைநகர்
21. **பங்குனி 3ம் திருவிழா உபயகாரர்**,
22. **திருமதி. செ. சுப்பிரமணியம், மாப்பானவூரி** காரைநகர்
23. **திரு. வி. சுந்தரேஸ்வரன், வாரிவளவு**, காரைநகர்
24. **திரு. ப. காந்திதிலகர் இடைப்பிட்டி**, காரைநகர்
25. **செல்வி. பார்வதி சிவசிதம்பரம்**, சயம்பு வீதி, காரைநகர்
26. **ஆதினகர்த்தாக்கள்**
27. **திரு. செ. செல்வநாயகம் ச.நீ.** நந்தனகார்டின்ஸ், கொழும்பு - 04
28. **திரு. T. ஜெயராசா**, புதுரோட், காரைநகர்
29. **திரு. ச. குணநாயகம்**, களபூமி, காரைநகர்
30. **திரு. குலராசா**, மணற்காடு, காரைநகர்
31. **திரு. இ. இராசதுரை**, புதுரோட், காரைநகர்
32. **திரு. வே. நடராசா**, சடையாளி, காரைநகர்
33. **பங்குனி 2ம் திருவிழா உபயகாரர்**
34. **திரு. தி. நித்தியானந்தன்**, மல்லிகை, காரைநகர்.
35. **திரு. மு. அருணாசலம்**, இலகடி, காரைநகர்
36. **திருமதி முத்தம்மா சுப்பிரமணியம்**, 62A/2 வைமன் வீதி, யாழ்ப்பாணம்.
37. **திரு. வே. சுந்தரராஜா**, புதுரோட், காரைநகர்.
38. **திரு. நா. கனகசுந்தரம்**, வேதரடைப்பு, காரைநகர்.
39. **திரு. கந்தையா செல்வராசா**, புதுரோட், காரைநகர்
40. **திருமதி. சண்முகம் தாஷ்சாயினி**, மாப்பாணவூரி, காரைநகர்
41. **திரு. ச. தில்லையம்பலம் குடும்பம்**, 14, புதுரோட், காரைநகர்
42. **திரு. மு. மகேந்திரன்**, பயிரிக் கூடல், காரைநகர்
43. **திரு. ந. தர்மராஜா**, (M.G.R.) மல்லிகை, காரைநகர்
44. **திரு. க. லோகநாதன்**, 64 கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்
45. **மகாலெட்சுமி ஸ்ரோர்ஸ்**, 212, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஆலயத்தில் உள்ள திருவாகனங்களில் சில....
(கும்பாபிஷேகத்தின் போது தற்காலிகமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில்)









# அறுபத்துநான்கு சிவமுகூர்த்தங்கள்

செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் B.A.

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியாகிய சிவப்பரம் பொருள் அடியார்க்கு அருள் செய்யும் பொருட்டு அறுபத்து நான்கு திருவுருவம் எடுத்த அற்புத வரலாற்றை சிவன் மேல் எழுந்த அற்புதப் புராணங்கள் விளக்குகின்றன. இவ் அறுபத்து நான்கு சிவ முகூர்த்த வடிவங்களை அஷ்டாஷ்ட மூர்த்தமெனவும் சிவபராக்கிரமமெனவும் பல்வேறு நாமங்களால் விளக்குவர். சிவப்பரம் பொருள் ஆன்மாக்களைப் பக்குவப்படுத்துவதற்காகவும் தன் மீளா அடியவர்களை மீட்பதற்காகவும் அருவமாகிய இறைவன் உருவங் கொண்டு உய்வித்த வரலாற்றை வடமொழியில் எழுந்த சிவபுராணங்கள் செப்புகின்றன. இவ் உருவ வெளிப்பாட்டினை உலகுக்கு வெளிப்படுத்தியவர் நைமிசாரணியத்தில் வசித்த சூதமா முனிவர் என்பது நூல்கள் தரும் அரும் செய்தியாகும். குறிப்பாக பதினெண் புராணங்களில் ஒன்றாக விளங்கும் ஸ்ரீஸ்காந்த மகாபுராணத்தில் சநற்குமார சங்கிதையில் சிவனின் அறுபத்து நான்கு திருவுருவத் தத்துவமும் தோற்ற வரலாறும் விளக்கப்படுகின்றது. இப்புராணங்களை மையமாகக் கொண்டே ஆலயங்களில் இறைவனின் திருவுருவ பிரதிஷ்டையும் விழாக்களும் நடைபெற்றுவருகின்றன. மிகப் பழைமை வாய்ந்த தென்நாட்டுக் கோயில்களில் காணப்படும் வானுயர்ந்த விமானங்களிலும், கோபுரங்களிலும் சிற்பத் தேர்களிலும் சிவப் பரம் பொருளின் அறுபத்து நான்கு அருள் வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளது. அவ்வருள் வடிவங்களின் தத்துவத்தை ஒவ்வொரு சைவசமயத்தவரும் உணர்ந்து வழிபாடு செய்து பேணுதல் வேண்டும். ஆலயங்களில் அந்தணர்கள் அனுதினமும் சிவபரம் பொருளின் பூஜை வழிபாடுகளில் அஷ்டா ஷடமூர்த்தங்களின் நாமங்களை உச்சரித்து அர்ச்சிப்பதனை நாம் உணரலாம்.

அறுபத்து நான்கு சிவமுகூர்த்தங்களில் இறைவன் எடுத்த வடிவங்களையும் உணர்த்தும் தத்துவங்களையும் நோக்கின் முதலாவது வடிவமாகிய

**1. இலிங்கமூர்த்தி**

உலகம் இயங்குவதற்கு காரணமாக விளங்கும் சிவப்பரம் பொருள்களாகிய சிவபெருமான் தன் தத்துவத்தை விளக்கவும் ஆன்மாக்களை வழிநடத்தவும் நிட் கள சகளத்திருவுருக் கொண்ட நிலையே இலிங்கம் எனப்படும். இவ்இலிங்க வடிவம் ஆண்-பெண் என்னும் இருபேர் வடிவமே சிருஷ்டியின் கருவூலம் என்ற கருத்தை விளங்கும் பொருட்டு குறியீட்டு நிலையில் இலிங்கம் விளக்குகின்றது. லிங்கம் சிவனையும் பீடம் சிவசக்தியையும் குறிக்கிறது. இலிங்கம் ஞானசக்தி வடிவத்தையும் பீடம் கிரியா சக்தி வடிவத்தையும் விளக்கும். உலக சிருஷ்டியை விளக்க இறைவன் எடுத்த இலிங்க வடிவத்தை ஆலயங்களில் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்வர். இலிங் = லயம், கம் = தோற்றம், ஆகவே சிருஷ்டியையும் பஞ்சகிருத்தியமாகிய ஐந்தொழிலையும்

செயற்படுத்தும் இறைதத்துவம் இலிங்கமாகும்.

*"அகார முதலா வனைத்தமாய் நிற்கும்*
*உகார முதலா வுயிர்ப் பெய்தி நிற்கும்*
*அகார வுகார மிரண்டு மறியில்*
*அகார வுகார மிலிங்கம் தாமே"*

என்பது லிங்க தத்துவம் பற்றிய திருமூலர் சுவாமிகளின் திருவாக்கு ஆகும்.

**2. இலிங்கோற்பவ மூர்த்தி**

திருமால் நான்முகன் இருவரிடையேயும் ஏற்பட்ட சமரின் போது சிவப்பரம் பொருள் அச்சமரை தடுப்பதற்காக் சோதி வடிவில் தோன்றினார். சோதி வடிவில் தோன்றிய இறைவன் எல்லையற்ற நிலையில் வியாபித்த போது அசரீரி ஒலித்தது. எல்லையற்ற ஒளிப்பிழம்பின் அடிமுடியாகிய எல்லைகளை எவர்அறிகிறாரே அவரே மேலானவர் என. பிரமனும் விஷ்ணுவும் அடிமுடி தேடினர். எல்லை காணமுடியாது ஏங்கினர் சிவனை நினைந்து பணிந்து வணங்கினர். சிவப்பரம் பொருள் சோதி வடிவில் நின்று சுருங்கி பிரமனுக்கும் விஷ்ணுவுக்கு அருள்பாலித்து - பிரமனே நீ என் வலப்புறத்தின் பிறந்தாய் ! திருமாலே நீ என் இடப் பிறத்தில் பிறந்தாய் ! நீங்கள் இருவரும் எனக்கு கணபதியும் கந்தனும் போல்வீர். "பகைமறந்து வாழக்கட வீர்" என்றருள் செய்து திருவருள் நல்கினார். பெரும் சோதி சுருங்கி மலை வடிவாகியது. அம்மையே அருணாசலம் எனப்பெயர் கொண்டது அவ்வேளை உதித்த இறைவடிவே இலிங்கோற்பவ மூர்த்தி என வழிபடப்படுகிறது. குறிப்பாக சிவராத்திரி பூஜைநாளில் இப்புனிதத்தை நினைந்து வழிபடுவர்.

**3. முகலிங்க மூர்த்தி**

முகலிங்கமெனல் பெறுவது சிவலிங்கத்தின் மேற் பிரபாலத்திற் திருமுகம் கொண்டு அமைந்த லிங்கமாகும். இவ் அமைப்புப் பற்றி ஆகமங்களும் புராணங்களும் விளக்குகின்றன. சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் ஐந்தொழில்களையும் நடத்துமிடத்து பிரம-விஷ்ணு-ருத்திர-மகேஸ்வர-சதாசிவ பேதமே முகலிங்கமெனக் கூறப்படுகின்றது. இறைவனின் ஐமுகங்களாகக் கருதப்படும் ஈசானம், தற்புருடம், வாமம், அகோரம், ஸத்யோஜாதம் ஆகியவற்றின் தத்துவப் பொருளை விளக்குவதாகவும் முகலிங்க மூர்த்தித்தத்துவம் விளக்கும். முகலிங்க மூர்த்தி தலங்கள் தென்நாட்டில் காணப்படுகின்றன. இலங்கையில் முகலிங்கம் (ஒருமுகம்) அமைந்த தலமாக இணுவில் காரைக்கால் சிவன் கோயில் அமைந்துள்ளது.

**4. சதாசிவ மூர்த்தி**

படிகநிறமும், சடைமுடி - ஐந்து திருமுகம் பத்துக்கரங்கள்-ஒருதேகம் இரண்டு திருவடிகள்-வலக்கரத்தில் மூவிலைச்சூலமும், பராசக்தி ரூபமாக மருவும், வாளும், பீஜா பூரகமும், வச்சிரமும், பயத்தைப் போக்குவதான அபாயமும், நாகமும், மாயாரூபமாகிய பாசமும், நீலோற்பலமும், அங்குசமும், தமருகமும் போகத்தைத் தரும் பரதமும், நாதகுணமாகிய மணியும், சங்கார குணமாகிய அக்கினியும் பரிவட்டமும், அருளாகிய சுகந்தமும், கரையாகிய மாலையும், அநுக்கிரகாங்குரமான சிறுநகையும்

பொருந்தி தியான பூஜாநிமித்தம் சகளத் திருவுருக் கொண்டு - எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு இருப்பவர் என்ற கருத்தினை விளக்குவது சதாசிவ மூர்த்தமாகும்.

**5. மகாசதாசிவ மூர்த்தி**

இவர் நிவர்த்தி-பிரதிஷ்டை-வித்தை-சாந்தி-சாந்தியதீதை எனும் அபரவிந்து கிரியைகளாலும், இந்திகை-தீபிகை-ரோசிகை-மோசிகை-ஊர்த்துவ காமினி எனும் அபர நாதக்கிரியைகளாலும் பரநாத கலா பேதத்தாலும் இருபத்தைந்து திருமுகத்துடன் கூடி பரமசிவபேதமுற்ற திருவுருவத்தை உடையவர்.

மேலும் இவர் கணக்கிட்டு உரைக்கவியலாத கரம், சிரம் முதலிய திருவுறுப்புக்களையுடைய திருமேனியை கொண்டிருப்பவர் என "எண்ணில் பல் கோடி கோடி சேவடி முடிகள்" என ஆரம்பிக்கும் திருவிசைப்பா கூறுகின்றது.

**6. உமாமகேஸ்வர மூர்த்தி**

உலகமாதாவாகிய உமாதேவியார் பஞ்சகிருத்தியம் (ஐந்தொழில்) இயற்றி நெருப்பில் வெம்மை போலவும் மணியில் ஒலிபோலவும் அபிநய பாவத்துடன் இறைவனுடன் வீற்றிருப்பாள். கருணையுருவான சக்தியே ஐந்தொழில்களின் நிமித்தமாக பராசக்தி. ஆதிசக்தி, இச்சா சக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என ஐவகைப்படும். இவற்றுள் ஆதிசக்தி ஆன்மாக்களுக்கு நற்பயன்களையும் இச்சாசக்தி சிருஷ்டியாகிய படைத்தலையும் ஞானசக்தி சகல ஆன்மாக்களின் கன்மங்களையும் தனுகரண புவனபோகங்களையும் நல்கவல்லன. மேலும் பராசக்தி கருணையினால் ஆன்மாக்களுக்கு அருளாட்சி நிகழ்த்துவதுடன் ஆதி சக்தியானது ஆணவமலத்தினைக் கட்டுப்படுமாறும் செய்கின்றன. இப்பஞ்ச சக்திகளின் சேர்க்கையாலேயே சதாசிவமூர்த்தி தோற்றம் பெறுவார். இதனையே அருணந்தி சிவாச்சாரியார் "சக்தி தான் சிவத்தையீன்றாள்" எனவும் அபிராமிப்பட்டர் "கறைக்கண்டனுக்கு மூத்தவளே" எனவும் கூறுகின்றனர்.

**7. சுகாசன மூர்த்தி**

உமாதேவியாருக்கு வேத சிவாகமப் பொருளினது உண்மைத் தன்மையை விளக்குமிடத்து உமாதேவியாரை வாமபாகத்திலிருந்து ஒரு திருமுகமும் ஆறு திருக்கரங்களுமுடையவராக எல்லா ஆசனத்திலும் உயர்ந்த சுகாசனத்திலிருந்து விளக்குமாற்றலால் சுகாசன மூர்த்தி எனத் திருநாமம் பெற்றார்.

**8. உமேசமூர்த்தி**

விருத்தியாகாத பிரமனது படைப்புத்தொழிலை சீராக்கும் பொருட்டு ஆதி சிவபிரான் உமாதேவியாருடன் ஒன்றி நின்றதால் அகிலம் எல்லாம் விருத்தியாகும் இயற்கையை அடைந்தன.

சிவபெருமான் உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் படைத்துக் காத்து அருளும் வகையில் தமது உமாதேவியை வாமபாகத்தில் வீற்றிருக்கத் செய்தமையால் உமேச மூர்த்தி எனப்பெயர் பெற்றார்.

**9. சோமாஸ்கந்த மூர்த்தி**

கார்த்திகை நட்சத்திரத்தில் உதித்த ஸ்கந்தப்பெருமானையும் உமாதேவியாரையும் தமக்கருகே வீற்றிருக்கச் செய்த சிவபிரான் சோமஸ்கந்தர் எனத் திருநாமம் பெற்றார்.

**10. சந்திரசேகரமூர்த்தி**

தட்சனுடைய சாபத்தால் தேய்ந்து கொண்டிருந்த சந்திரனுக்கு அருள்புரியும் பொருட்டு சந்திரனைத் தமது சடாமுடியில் தரித்து அனுக்கிரகித்த சிவபிரான் தமது சடாமுடியில் சந்திரனைத் தாங்கியமையால் சந்திரசேகரமூர்த்தி எனப்படுவார்.

**11. இடபாரூடமூர்த்தி**

அருட்பெருங்கடலாகிய சிவபிரான் திருமாலின் அகந்தையைப் போக்கி திருமாலைத் தமது வாகனமாக ஆக்கினார். சிவனைத் தாங்கும் பேற்றினைப் பெற்ற திருமால் வெள்ளிய இடபமாக மாறினார். திருமாலாகிய இடபத்தை வாகனமாகக் கொண்டு அதன் பேரில் ஆரோகணித்த பெருமையினால் சிவனுக்கு இடபாரூடர் எனும் நாமம் விளங்குகின்றது.

**12. இடபாந்திக மூர்த்தி**

ஊழிக்காலத்தின் போது அறங்கள் ஒழிந்து சகலலோகங்களும் மகாமயானமயமான பொழுது தரும தேவதை கவலையுற்று சிவபிரானை சரணடைந்தது. அதற்கு அருள்புரிய எண்ணிய சிவபிரான் தருமதேவதையை இடபமாக அதாவது தனக்கு வாகனமாகும் பாக்கியத்தை அளித்தார். ஊழிக் காலத்தில் அறவுருவாகிய இடபத்தை அணுகி அருள் நல்கியதால் இடபாந்திக மூர்த்தி என சிவபெருமானுக்கோர் திருநாமம் வழங்கப்பட்டது.

**13. புஜங்கலளித மூர்த்தி**

திருமாலின் வாகனமான கருடன் நாகங்களைக் கொன்று துன்புறுத்தியதால் அல்லற்பட்ட நாகங்கள் சிவபிரானிடம் முறையிட்டதால் மனமிரங்கிய சிவபிரான் நாகத்தை ஆபரணமாக அணிந்து கொண்டருள் புரிந்தார். சிவபிரான் திருமேனியில் ஆபரணமாக நாகங்களை அழகு வீசும்படி அணிந்து கொண்டார். புஜங்கம்-பாம்பு, லளிதம்-அழகு செய்தல் எனவே தான் சிவபிரானுக்கு புஜங்கலளிதமூர்த்தி என நாம கரணம் ஏற்பட்டது.

**14. புஜங்கத்ராஸ மூர்த்தி**

தாருகவனத்து முனிவர்கள் சிவபிரானின் மீது கோபங்கொண்டு சர்ப்பங்களை ஏவினார். இவற்றை சிவபிரான் தம்மீது ஏற்று தமது திருக்கரம், திருவடி, அரை முதலிய இடங்களில் காலணி, கங்கணம், அரைநாண், கடிசூத்திரம் முதலியவாறாக அணிந்தார்.

தாருகவனத்து முனிவர்கள் ஏவிய சர்ப்பங்களை அச்சுறுத்தி தம் அணிகலன்களாக ஏற்றுக் கொண்டமையால் புஜங்கத்ராஸமூர்த்தி என நாமம் பெற்றார்.

**15. ஸந்தியாநிருத்த மூர்த்தி**

திரயோதசி திதியில் சிவபிரான் உமாதேவியாரை அருகே நிறுத்தி சூலத்தை சுழற்றி கையில் டமருகம் (உடுக்கு) ஏந்தி ஓர் ஜாம காலம் நிருத்தம் செய்தார்.

இக்காலமே பிரதோஷ காலம் எனப்படும். மகாசிவராத்திரியனாது வருடப்பிரதோஷம் எனவும் மாதப்பிரதோஷத்தை மாத சிவராத்திரி எனவும் கூறுவர். திருமால் முதலிய தேவர்கள் மிருதங்கம் முதலிய வாத்தியங்களை வாசிக்க உமாதேவியார் முதலானோர் காணும் வண்ணம் திருக்கைலாய மலையில் பிரதோஷ காலத்தில் நிகழ்த்திய நடனத்தை நிகழ்த்திய பெருமானே ஸந்தியா நிருத்த மூர்த்தி எனப்படுவார்.

**16. ஸதாநிருத்த மூர்த்தி**

சிவபெருமான் ஆன்மாக்களுக்கு முத்தி சித்திகளை திருவருள் செய்யும் பொருட்டு பஞ்சகிருத்தியத் திரு நடனத்தை இயற்றி அருள் புரிவார். இதனை உண்மை விளக்கமானது

*"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்*
*சாற்றிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாய்*
*ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதமூர்த்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு"* என விளக்குகிறது.

சிவனுடைய இவ்வருள் நடனம், ஊன நடனம், ஞான நடனம் என இரு வகைப்படும். ஐந்தொழில்களின் பொருட்டு சிவபிரான் எப்போது உமை அம்மையார் தரிசித்தபடி நிற்க திருமால், திருநந்திதேவர் பூதகணங்கள் முதலியோரது வாத்திய இசையோடு திருநடனம் புரிந்ததால் ஸதாநிருத்த மூர்த்தி எனப்பெயர் பெற்றார்.

**17. சண்ட தாண்டவமூர்த்தி**

அசுரர்களை அழிக்கும் பொருட்டு கோபவேசம் கொண்ட காளிதேவியின் உக்கிரத்தின் வன்மையை குறைக்கவென பைரவவடிவினரான சிவபெருமான் தேவர்கள் பக்க வாத்திய இசை வழங்க நவரசங்களும் அபிநயமும் விளங்க வாத்தியங்களுக்கு ஒப்பாக பாண்டரங்கமாகிய சண்ட தாண்டவத்தை செய்யும் போது கீழே வீழ்ந்த குண்டலத்தை தமது திருவடிகளினாலேயே எடுத்து தனது திருச்செவியில் தரித்து காளியைத் தோற்கடித்து திருநடனம் புரிந்தார். இக்காரணத்தால் இறைவன் சண்டதாண்டவ மூர்த்தி எனப் பெயர் பெற்றார்.

**18. கங்காதர மூர்த்தி**

உமாதேவியாரது திருவிரல் வியர்வையினால் உண்டாகிய கங்கை உலகத்தை அழிக்கும்படி இரைந்து வருகையில் அதன் வலிமை குன்றும் வண்ணம் இறைவன் தனது சடாமுடியில் தரித்தமையால் கங்காதரர் எனப் பெயர் பெற்றார்.

**19. கங்கா விஸர்ஜன மூர்த்தி**

பகீரத மன்னனால் கொண்டு வரப்பட்ட பகீரதியாகிய கங்கையை பூமியழியாத வண்ணம் சிவபிரான் தம்சடையில் ஏற்று அவன் பிரார்த்தனைக் கிணங்கி அதிலோர் துளியை பூமியில் விடுத்தார் ஆதலாலே கங்கா விஸர்ஜன மூர்த்தி என நாமம் எய்தினார்.

**20. திரிபுராந்தக மூர்த்தி**

தாரகாசுரனின் தனையரான தாரகாஷன், கமலாஷன், வித்யுன்மாலி என்போரது

முப்புரத்தையும் சிரித்தெரித்தலின் மூலம் அமரர்கள் துயர் தீரும்படி செய்தமையால் திரிபுராந்தக மூர்த்தி எனப்படுவார்.

**21. கல்யாண சுந்தர மூர்த்தி**

மலையரசன் மகளாகிய பார்வதி தேவியாரை சிவபெருமான் திருமணம் செய்ய எழுந்தருளிய திருக்கோலமே கல்யாண சுந்தரமூர்த்தி என அழைக்கப்படும்.

**22. அர்த்தநாரீஸ்வர மூர்த்தி**

பாதி சரீரம் வாமபாகத்தில் பார்வதியாரும் பாதிசரீரம் வலப் பாகத்தில் சிவபெருமானுமாக வீற்றிருக்கும் திருவுருவமே அர்த்த நாரீஸ்வரம் எனப்படும்.

**23 கஜயுத்த மூர்த்தி**

கயாசுரனாகிய யானையை இறைவனானவர் துயர்தீர்க்கும் பொருட்டு போர் புரிந்து சங்கரித்ததால் கஜயுத்த மூர்த்தி என்ற நாமம் வழங்கப்படும்.

**24. ஜ்வராபக்கின மூர்த்தி**

மூன்று சிரங்கள், நான்கு கரங்கள் ஒன்பது விழிகள் மூன்று கால்களுடன் விஷ்ணு விடுத்த சீதளசுரத்தை நீக்கும் பொருட்டு தோன்றிய சிவபிரான் ஜ்வராபக்கின மூர்த்தி எனப்படுவார்.

**25. சார்த்தூலஹர மூர்த்தி**

தாருகவனத்து முனிவர்கள் தம்தவ வலிமையால் பெற்ற கொடும் புலியை சிவனை எதிர்க்க ஏவினர். அவர்கள் ஏவலின் படி வந்த புலியைச் சம்கரித்து உடையாகப் போர்த்த கோலமே சார்த்தூலஹர மூர்த்தம் எனப்பெறும்.

**26. பாசுபத மூர்த்தி**

சிவபிரான் கிருஷ்ண மூர்த்தியும் அருச்சுனனும் வேண்டியபடி அவர்களுக்கு பாசுபதாஸ்திரம் அளித்தமையால் பாசுபதமூர்த்தி என நாமம் எய்தினார்.

**27. கங்காள மூர்த்தி**

வாமனது அகந்தையை அழித்து வாமனது முதுகெலும்பை ஆயுதமாக தரித்த கோலமே கங்காளமூர்த்தம் எனப்படும்.

**28. கேசவார்த்த மூர்த்தி**

திருமாலின் கடுந்தவத்தால் மனமகிழ்ந்த சிவபெருமான் அவரை தனது இடப்பாகத்திலே ஏற்றுக்கொண்ட கோலமே கேசவார்த்த மூர்த்தம் ஆகும்.

**29. பிட்சாடன மூர்த்தி**

தாருகவனத்து முனிவர்களின் தவத்தையும் அவர்தம் தவபத்தினிகளின் கற்பையும் அழிக்கும் பொருட்டு சிவபிரான் திகம்பரராய் பிரம கபாலந்தாங்கி பலியேற்கச் சென்ற கோலமே பிட்சாடன மூர்த்தி எனப்பெயர் பெறும்.

**30. ஸிம்ஹக்ன மூர்த்தி**

இரண்யகசிபனைச் சங்கரித்த நரசிம்ம மூர்த்தியின் இறுமாப்பை சரபரூபம் ஏற்று நாசஞ் செய்தமையால் சிவபிரான் ஸிம்ஹக்ன மூர்த்தி எனப்பெயர் பெற்றார்.

**31. சண்டேசுர அனுக்கிரக மூர்த்தி**

விசாரசருமருக்கு சண்டேசுரப் பதவியை அனுக்கிரகித்த காரணத்தாலே சண்டேசுர மூர்த்தி எனப்படுவார்.

**32. தட்சணாமூர்த்தி**

பிரம புத்திரர்களாகிய ஸனகர், ஸனந்தனர், ஸனாதனர், ஸனத்குமாரர் என்னும் முனிவர்கள் நால்வருக்குமாக ஞானோபதேசம் செய்யுமிடத்து இறைவர் தட்சிண திசையை நோக்கி அமர்ந்து ஞானோபதேசம் செய்த கோலமே தட்சிணா மூர்த்தி ஆவார்.

**33. யோக தக்ஷிணாமூர்த்தி**

சிவபெருமான் பிரமபுத்திரர்களாகிய சனகாதி முனிவர்கள் நால்வரும் எளிதிலுணரும் வகையாக யோக முறையைப் பயிற்றினமையால் யோக தக்ஷிணாமூர்த்தி என்பதோர் நாமம் பெற்றார்.

**34. வீணாதக்ஷிணாமூர்த்தி**

சிவபிரான் தம்மையணுகிய சுகர், முதலியோருக்கு வீணையினிலக்கணத்தை உணர்த்தி தமது திருக்கரத்து வீணையேந்தி வாசித்துக் காட்டிய திருக்கோலமே வீணாதக்ஷிணாமூர்த்தி

**35. காலாந்தக மூர்த்தி**

மிருகண்டு முனிவரின் மார்க்கண்டேயரைச் சிரஞ்சீவியாக்கி காலனை அடக்கிய கோலமே காலாந்தக மூர்த்தமாகும்.

**36. காமதஹன மூர்த்தி**

தன் மீது மலர்க்கணை தொடுத்த மன்மதனை நீறாக எரித்த சிவபிரான் காமதஹன மூர்த்தி எனப்பெயர் பெற்றார்.

**37. லகுளேசுவர மூர்த்தி**

பிரகாசமிக்க திருமேனி, சிம்மாசனத்துடன் வலப்புறம் மழுசூலமும் இடப்புறம் கலசமும் கொண்டு ஒவ்வொரு புவனத்தும் ஒவ்வொரு மூர்த்தியாக எழுந்தருளி அனுக்கிரகிக்கவென எழுந்தருளியுள்ள இறைவன் லகுளேஸ்வர மூர்த்தி எனப்பெறுவார்.

**38. பைரவ மூர்த்தி**

ஹிரண்யாட்சனுடைய குமாரனாகிய அந்தகாசுரனை சங்கரித்து தேவர் துன்பமகற்ற எழுந்தருளியுள்ள இறைவனே பைரவமூர்த்தி எனப்பெறும்.

**39. ஆபதோத்தாரண மூர்த்தி**

முனிவர்கள் ஆபத்துக் காலத்தில் தம்துயரை முறையிட அவர்களின் துன்பத்தைப் போக்க எழுந்தருளிய திருக்கோலமே ஆபதோத்தாரண மூர்த்தமாகும்.

**40. வடுகமூர்த்தி**

பிரமனைத் துன்புறுத்திய முண்டகாசுரனை அழித்த திருக்கோலமே வடுகமூர்த்தமாகும்.

**41. சேத்திரபாலக மூர்த்தி**

சேத்திரம்-பூமி, பாலகர் - காப்பவர் சேத்திரமாகிய உலகத்துக்கு ஊழிக்காலத்தில் ஏற்பட்ட துன்பத்தை நீக்கியதால் சேத்திர பாலகமூர்த்தி எனப்பெறுவார்.

**42. வீரபத்ர மூர்த்தி**

தேவர்களின் துயர் தீர்த்து அவர்களுக்கு சுகவாழ்வு கிட்டவும் வீரமார்த்தாண்டனை சங்கரிக்கவும் சிவபிரானால் அனுப்பிய கோலமே வீரபத்ர மூர்த்தமாகும்.

**43. அகோரஅஸ்திர மூர்த்தி**

சத்த தந்துவை சங்கரித்து அருள் புரிந்தமையால் அகோர அஸ்திரமூர்த்தி என சிவபிரான் நாமமெய்துவார்.

**44. தட்சயக்ஞஹத மூர்த்தி**

சிவபிரான் தன்னை பகைத்துக் கொண்டு செய்த தட்சனது யாகத்தை சங்கரிக்க எழுந்தருளிய மூர்த்தமே தட்சயக்ஞஹத மூர்த்தம் எனப்படும்.

**45. கிராத மூர்த்தி**

அருச்சுனன் சிவனை நோக்கி தவம் செய்கையில் அவனைக் கொல்லும்படி துரியோதனனால் விடுக்கப்பட்ட மூகாசுரனை சம்கரிக்க வேடுவன் வடிவில் சென்றமையால் சிவபிரான் கிராதமூர்த்தி எனப்பெறுவார்.

**46. குருமூர்த்தி**

பரி பக்குவம் அடைந்த மாணிக்கவாசகருக்கு திருப்பெருந்துறையில் வைத்து ஞானோபதேசம் செய்தவர் சிவபிரானாதலால் சிவபிரானுக்கு குரு மூர்த்தி எனும் நாமம் எய்தலாயிற்று.

**47. அசுவாருட மூர்த்தி**

சிவபிரான் அரிமர்த்தன பாண்டியனது அளவில்லாப் பொருளை சிவதொண்டில் செலவு செய்த மணிவாசகர் நிமித்தமாய் நரிகளை பரிகளாக்கித் தாமே பரித்தலைவராய்ச் சென்று புரவிகளை ஒப்படைத்தமையால் அசுவாருடமூர்த்தி எனும் திருநாமமெய்தினார்.

**48. கஜாந்திகமூர்த்தி**

சூரபன்மனின் மகனாகிய பானுகோபனால் கொம்பொடிந்த இந்திரனது யானையாகிய

ஐராவதம் சிவனைக் குறித்து தவம் செய்து தனது கொம்பை மீளப்பெற்றது. ஐராவதமாகிய யானைக்கு அருள் புரிந்ததால் சிவபிரான் கஜாந்திக மூர்த்தி எனப்பெயர் பெற்றார்.

**49. ஜலந்தரவத மூர்த்தி**

தேவர்களைத் துன்புறுத்தி வந்த சலந்தராசுரனைச் சக்கரம் ஒன்றினால் தலைவேறு முண்டம் வேறாகச் சங்கரித்ததால் சிவபிரான் ஜலந்தரவத மூர்த்தி எனப்பெயர் பெற்றார்.

**50. ஏகபாதத்ரி மூர்த்தி**

தேவர்களை கற்பங்கள் தோறும் சிருஷ்டித்தும் மீண்டும் தம்முள் ஒடுங்கியும் தாம் பிறப்பிலராய் மும்மூர்த்தி முதலாகிய தேவர்களுக்கும் பிறப்பிடமாய் தனித்து நிற்பராதலினால் சிவபிரான் ஏகபாதத்ரி மூர்த்தி எனப்பெறுவார்.

**51. த்ரிபாதத்ரி மூர்த்தி**

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்னும் மூவரும் ஒடுங்கும் சமயத்து சிவபிரான் மகேஸ்வரராக எழுந்தருளியமையால் த்ரிபாதத்ரி மூர்த்தி என அழைக்கப்படுவார். அதாவது மூன்று பதமாக நின்ற மும்மூர்த்திகளும் மகேஸ்வரரிடத்தில் லயமாதலாகிய காரணத்தால் த்ரிபாதத்ரி மூர்த்தி என நாமம் பெற்றார்.

**52. ஏகபாதமூர்த்தி**

சர்வஸங்கார காலத்தில் யாவரும் லயமுடைய எல்லாவுலகும் தமது திருவடியில் பொருந்த நிற்பதால் சிவபிரான் ஏகபாதமூர்த்தி என விளிக்கப்பட்டார்.

**53. கௌரீவரப்தமூர்த்தி**

உமையம்மையார் தமக்குண்டான கருமை நிறத்தால் எய்திய காளி எனும் பெயர் நீங்கப்பெற்று பொன்னிறமான திருமேனியும் கொண்டு கௌரி எனும் திருநாமமும் எய்த வரமருளிய காரணத்தால் இறைவர் கௌரீவரப்தமூர்த்தி என மொழியப்பட்டார்.

**54. சக்கரதானஸ்வரூப மூர்த்தி**

சிவபிரான் தம்மீது இடையறாது அன்பு கொண்டு அர்ச்சித்த திருமாலுக்கு சக்கராயுத்தை அளித்தருள் செய்தமையால் அவர் சக்கரதானஸ்வரூப மூர்த்தி எனப்பெறுவார்.

**55. கௌரிலீலாசமந்வித மூர்த்தி**

கௌரியாகிய உமாதேவியார் தாட்சாயணியாக தவம் செய்த வேளை கிழப்பிராமணராக வந்த சிவபிரான் லீலாமாத்திரையாக விளையாடிய மூர்த்தமே கௌரிலீலாசமந்வித மூர்த்தி என நாமங்கொண்டு விளம்பப்பட்டார்.

**56. விஷாபஹரண மூர்த்தி**

திருப்பாற்கடலில் அமிர்தத்தை எடுக்கும் வேளை ஏற்பட்ட ஆலகால விஷத்தால் சர்வான்மாக்களும் துன்புறாத வண்ணம் தேவர்களும் முனிவர்களும் விடுத்த வேண்டுகோளுக்கிரங்கி அதனை அருந்தியமையால் சிவபிரான் விஷாபஹரமூர்த்தி என இயம்பப்பட்டார்.

**57. கருடாந்திக மூர்த்தி**

தனது கர்வபங்கத்தால் நந்திதேவரால் துன்புறுத்தப்பட்ட கருடனுக்கு அருள் செய்த காரணத்தால் இறைவனுக்கு கருடாந்திக மூர்த்தி எனப்படுவார். இதனை 11ஆம் திருமுறையானது.

*"கார்மலி சிறகின் கருடனைக் காய்ந்தனை*
*அன்னவற்கிரங்கி பின்னருமருளினை"* எனக் கூறுகிறது.

**58. பிரம்மசிரச்சேத மூர்த்தி**

திருமூர்த்திகளில் முதன்மையுற்றோரும் ஆதியுமந்தமுமாய் அந்தர்யாமியாயுள்ளவரும் பிரமமாயும் உள்ளவர் தானே எனத் தருக்குற்று செருக்கடைந்த பிரமனது ஐந்தாவது தலையை நக நுதி (நுனி)யால் சங்கரித்தமையால் சிவபிரானுக்கு பிரம்மசிரச்சேத மூர்த்தி எனும் பெயர் வழுங்கப்படுகிறது.

**59. கூர்மஸம்ஹார மூர்த்தி**

கூர்ம வடிவேற்ற திருமாலின் கொடிய தன்மையை அழித்து கூர்மத்தை சங்கரித்த சிவபிரான் கூர்மஸங்கார மூர்த்தி என இயம்பப்படலானார்.

**60. மச்ச சங்கார மூர்த்தி**

திருமாலாகிய மச்சத்தின் மமதையை மாய்ந்து அதனைச் சங்கரித்தமையால் சிவபிரானுக்கு மச்ச சங்கார மூர்த்தி எனப் பெறுவார்.

**61. வராகசங்கார மூர்த்தி**

திருமாலாகிய வராகம் இறுமாப்புற்று உலகில் துன்புறுத்துகையில் தேவர் வேண்டுகோளுக்கிரங்கி அதன் அகந்தையை அழித்தமையால் மகாதேவருக்கு வராக ஸம்காரமூர்த்தி என அழைக்கப் பெறுவார்.

**62. பிரார்த்தனா மூர்த்தி**

இறைவன் லீலா மாத்திரையாக ஊடல் கொண்ட இமய வல்லியைப் பிரார்த்தித்த காரணத்தால் பிரார்த்தனா மூர்த்தி என நாமம் பெற்றார்.

**63. ரக்தமிஷா பிரதான மூர்த்தி**

இறுமாப்புற்ற தேவர்கள் பால் இரத்தத்தை பலியேற்ற அவர்கள் அகந்தையை அடக்கி வைத்தமையால் சிவபிரானுக்கு ரக்தமிஷா பிரதான மூர்த்தி எனும் பெயர் விளங்குகின்றது.

**64. சிஷ்ய பாவ மூர்த்தி**

முருகக் கடவுளிடம் பிரணவப் பொருளைக் கேட்டுக் கொண்ட போது சிஷ்யனாக நின்றமையால் சிவபிரானுக்கு சிஷ்யபாவமூர்த்தி எனும், நாமம் [illegible]குகின்றது.

'தேரோடி வீதி வலம்வர வேரோடு வினை அகலும்'



அச்சுப்பதிவு : காரைநகர் பாலா அச்சகம் - வத்தளை